# ஸ்ரீ வேங்கடேச மகத்துவம்

(திருவேங்கடத் தலபுராணம்—செய்யுள்)

ஆசிரியர் :

தஞ்சை-பெரிய அண்ணா என்னும்

**வேங்கடதாசர்**

பதிப்பாசிரியர்

**மு. அருணாசலம்**

காந்தி வித்தியாலயம்

திருச்சிற்றம்பலம்

மாயூரம் தாலுக்கா—609204

1983

முதல் பதிப்பு 1983
உரிமை பதிவு

விலை ரூபா எட்டு

திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தாரின்
பொருள் உதவியோடு இந்நூல் அச்சிடப்பெற்றது.

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
ராயப்பேட்டை சென்னை-14.

# பொருளடக்கம்


முன்னுரை 3
நூலாராய்ச்சி 9

ஸ்ரீ வேங்கடேச மகத்துவம் 1
கடவுள் வாழ்த்து 3
1. பாயிரம் 4

முதல் அத்தியாயம்

2. புராண வரலாறு 8
3. ஆற்றுப்படலம் 12
4. திருமலை தோன்று படலம் 16

இரண்டாம் அத்தியாயம்

5. வேள்விப் படலம் 36
6. திரு எழுந்தருளிய படலம் 40

மூன்றாம் அத்தியாயம்

7. சோலை காண்படலம் 50
8. தேவி தோன்று படலம் 55
9. நாரதர் சந்தித்த படலம் 59
10. தேவியைக் கண்ணுற்ற படலம் 64

நான்காம் அத்தியாயம்

11. வரலாறு கிளத்து படலம் 67
12. தூதுப் படலம் 72
13. அங்க விலக்கணப் படலம் 86

ஐந்தாம் அத்தியாயம்

14. மணச் சடங்குப் படலம் 97
15. எழுச்சிப்படலம் 108

## ஆறாம் அத்தியாயம்


| | |
|---|---|
| 16. பாணிக்கிரகணப் படலம் | 115 |
| 17. போது கொய் படலப் | 125 |
| 18. அரசருக்கருள் செய் படலம் | 129 |


## ஏழாம் அத்தியாயம்


| | |
|---|---|
| 19. விழா இயற்று படலம் | 138 |
| 20. கையடைப் படலம் | 149 |
| 21. பீமதாசனுக்கு அருளிய படலம் | 156 |
| பழைய பதிப்பின் சிறப்புப் பாயிரம் | 165 |
| அருஞ் சொல்லகராதி | 167 |
| அரும் பொருள் அகராதி | 168 |
| செய்யுள் முதற் குறிப்பகராதி | 169 |
| பிழைதிருத்தம் | 176 |

# முன்னுரை

உம்ப ருலகாண் டொருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலையில்குல் பெற்றாலும் ஆதரியேன்
செம்பவள வாயான் திருவேங் கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே.

—குலசேகராழ்வார்

## திருவேங்கடம்

ஸ்ரீவேங்கடேச மகத்துவம் என்பது, ஸ்ரீ வேங்கடேசப் பெருமான் எழுந்தருளியுள்ள தலமாகிய திருவேங்கடத்தின் மகிமையை உரைக்கும் தலபுராணம் என்று பொருள்படும்.

திருவேங்கடம் என்ற தலம், பல்லவர்கள் ஆட்சியில் புகழ் பெற்றிருந்த தொண்டை நாட்டில் உள்ளது. சோழ மன்னனுக்கு நாக கன்னிமூலம் பிறந்த பிள்ளை இங்கு ஆட்சி புரிந்தான் என்ற ஆதித்தொண்டமான் வரலாறும் இந்நூலுள் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு ஆறு பொன்முகரி. திருவேங்கடம், ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்தருளிய 108 திருப்பதிகளில் ஒன்றாகும். இது தொண்டரடிப் பொடி யாழ்வார் (மதுர கவி) தவிர மற்றைய ஆழ்வார் அனைவரும் மங்களா சாசனம் செய்தருளிய தலம். பிற்காலத்தில், அதாவது கடைச்சங்க காலத்திற்குச் சற்று முன்னதாகவே, தமிழ்நாடு எல்லையில் சுருங்கியபோது, அதற்கு வட வேங்கடமும் தென்குமரியும் எல்லையாகச் சொல்லப்பட்டுள்ளன. ''வேங்கடம் குமரி தீம்புனற் பௌவத்து-இந்நான் கெல்லையில் இருந்தமிழ்'' என்பது பழம் பாடல். திருவேங்கடத்தைச் சைவ மக்கள் முருகன் தலம் என்று கொண்டாடுவதுண்டு. மலைத் தலங்கள் எல்லாம் பெரும்பான்மை முருகன் தலங்கள் ஆதலால் இது பொருந்துவதே.

அருணகிரிநாதர் திருவேங்கடத்தைக் குறிப்பிட்டு எட்டுத் திருப்புகழ்ப் பாடல்கள் பாடியிருக்கிறார். திருவேங்கடம், ஏழு மலை, வடமலை என்ற பெயர்களை அவர் குறிப்பிடுகிறார். ஆனால் பண்டைய மரபு திருவேங்கடம் திருமாலுக்குரியது என்பதே. நெடியோன் குன்றம் என்று இதைச் சிலப்பதிகாரம் கூறும்.

நெடியோன் குன்றமும் கொடியோன் பௌவமும்—
தமிழ் வரம்பறுத்த தண்புனல் நாடு.
அன்றியும், வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலயத் துக்கி மீமிசை ........
செங்கண் நெடியோன் நின்றவண்ணமும்

என்பன முதலான அடிகள்காணத்தக்கன. இத்தலத்திற்கு ஏழு மலை என்ற ஒரு பெயரும் உண்டு. (ஏழு மலைகளாவன: அஞ்சனாசலம், நாராயணாசலம், வராகாசலம், இடபாசலம், சிம்மாசலம், கருடாசலம், சேஷாசலம் என்பன.) இதனால் இது சப்தகிரி. இவற்றுள் 1,4,7 என்ற மூன்றையும் வேங்கடாத்திரி என்ற பெயரையும் சேர்த்து இந்நூலாசிரியர் நான்கு யுகங்களுக்கு நான்கு பெயராகச் சொல்லுகிறார். ஏழு மலைகளை ஏறி இறங்கிச் சென்றால் ஆங்குள்ள ஒரு பள்ளத்தாக்கில் அமைந்திருப்பது இவ்வாலயம். தமிழ் நாட்டிற்கு எல்லையாக அமைந்த இந்தத் தலம் பல்வகையான அரசியல் மாறுதலுக்கு இலக்காகி, 1953-க்குப் பிறகு தெலுங்கு மொழிக்குரிய நாடாகிய ஆந்திரப் பிரதேசத்தில் சித்தூர் ஜில்லாவில் அமைந்துள்ளது. இங்குப் பூசை முறைகளும் சாத்துமுறைகளும் பூசிக்கும் பட்டாசாரியரும் எல்லாம் தமிழே. இதன் இன்றைய தெலுங்கு மொழிப் பெயர் திருமலை திருப்பதி என்பதே. இவ்விரு சொற்களும் தமிழே என்று சொல்லவேண்டுவதில்லை. ஆயினும் கால நிலையால் இங்கு தெலுங்கு ஆட்சி புரிகிறது. திருவேங்கடவனுக்குக் கணக்கிடமுடியாத ஆண்டு வருவாய் கிடைக்கிறது. அதைக் கொண்டு ஆந்திரப் பிரதேச அரசு ஸ்ரீ வேங்கடேசுவரா சர்வகலா சாலையையும் வேறு பல் வகை கல்வி ஸ்தாபனங்களையும், வைத்திய ஸ்தாபனங்களையும், தருமச்சாலைகளையும் நடத்தி வருகிறது.

### இந்நூல்—ஸ்ரீ வேங்கடேச மகத்துவம்

இப்பொழுது அச்சிடுகின்ற ஸ்ரீ வேங்கடேச மகத்துவம் என்ற இந்நூல் பின்னே குறிப்பிடப் பெறும் மற்றொரு திருவேங்கடத்

தல புராணத்திலும் வேறானது. அளவால் சிறியது. ஆனால் காலத்தால் அதனினும் முற்பட்டது. இது 667 பாடல் களே கொண்டது. கடவுள் வாழ்த்து, புராண வரலாறு, ஆற்றுப் படலம் என்று தொடங்கி மொத்தம் ஏழு அத்தியாயங்களில் 19 படலங்கள் உடையது.

## பழைய பதிப்பு

இந்நூலின் முதல் பதிப்பு 1867 பிரபவ வருஷம் வைகாசி மாதம் அச்சிடப் பெற்றது. (விவரம் இந்நூல் பக்கம் 165-6 இல் காண்க). அதில் முகப்பேட்டின் பின் 4 பக்கம் படங்கள்; மர அச்சு என்பது சொல்ல வேண்டியதில்லை.

முதல்பக்கம்: நடுவில் திருமால் ஆசனத்தில் ஶ்ரீதேவி, பூதேவி சமேதராக, மேலே சக்கரம், சங்கு இரண்டுக்கும் இடையில் ஒரு கட்டத்தில் ''ஹரி:ஓம்'' என்பது. (நாமம் போடுவது மரபாயினும் வடகலை தென்கலை என்ற சர்ச்சையை விலக்கி இவ்வாறு அமைக் கப்பட்டது போலும்.) கீழே கருடன்-அனுமன்.

இரண்டாம் பக்கம்: பொய்கை, பூதம், பேய், திருமழிசை ஆகிய ஆழ்வார் படங்கள்.

மூன்றாம் பக்கம்: நம்மாழ்வார், புளியின் கீழ் வீற்றிருந்த கோலம், குலசேகரர், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடி

நான்காம் பக்கம்: திருப்பாணர், திருமங்கை, மதுரகவி, ஆண்டாள். இவ்வாழ்வாருள் நம்மாழ்வார் ஒருவரே இருந்த கோலம். ஏனையோர் அனைவரும் நின்ற கோலம். எல்லோருக்கும் தலைமீது கிரீடம். திருமங்கைக்கும் ஆண்டாளுக்கும் விசேஷக் கிரீடம்.

படங்களின் இந்த வரிசையமைப்பில் எந்த வரலாற்று முறை யும் காணப்படவில்லை. ஆழ்வார் பதின்மர் என்ற கருத்துப்படி முதலில் பதின்மரும் இறுதியாக மதுரகவியும் ஆண்டாளும் அமைக்கப் பெற்றுள்ளனர். அயோனிஜர் என்று கருதப்பெறும் முதல் நால்வரையடுத்து நம்மாழ்வார் வைக்கப் பெற்றிருக்கிறார். இவற்றின் பின்னர் சாற்றுக்கவிகள் 18 பக்கம் (இந்நூல் 165-6 பக்கங்கள் பார்க்க.

## நூலாசிரியர்

இவர் தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னனாகிய சிவாஜி மன்னன் அவையில் சிறப்புமிக்க அமைச்சராக இருந்திருக்கிறார். "அமைச்சர்களில் திறத்தால் பெரியோன் ஆதலினால்பெரியண்ணா என்று பெயர்" என்பது விசாக பெருமாள் ஐயருடைய கூற்று. "அமைச்சர்தமில் முதல்மை சான்றான்" என்பது பிறர் கூற்று. இவர் திருப்பதி வேங்கடேசப் பெருமாள் இடத்தில் மிகவும் ஈடு பட்டு அவனுக்கு அடிமைப்பட்ட காரணத்தால் தம்மை வேங்கட தாசர் என்று கூறிக்கொண்டார். அந்தப்பத்தி மிகுதியால் இந்தப் புராணத்தைப் பாடுகிறார். இவருடைய தந்தை பெயர் கோவிந்த சாமி என்பது.

இவ்வாசிரியர் வடமொழி, மராத்தி ஆகிய மொழிகளும் நன்கு உணர்ந்தவர். இவர் நூல் செய்த காலம் சக ஆண்டு 1788 மேடமதி (1866 கி.பி.) அரசர் அரண்மனையில் இருந்த கண்ண பிரான் சந்நிதியில் இந்நூலை அரங்கேற்றினார். வடமொழி பவிஷ்யோத்தர புராணத்திலிருந்து இந்நூலை மொழி பெயர்த்த தாகச் சொல்லுகிறார். இது புராண கவிகளுடைய ஒரு சம்பிர தாயம். புராணகாரர்கள் அனைவருமே வடமொழியில் உள்ள காந்தத்தில் இருந்தோ பிரம்மாண்ட புராணத்தில் இருந்தோ பவிஷ்யோத்தர புராணத்திலிருந்தோ மொழி பெயர்த்ததாகச் சொல்லுவார்கள். இப்படி நூற்றுக்கணக்கான புராணங்கள் சொல்லுகின்றன. இக்கூற்று உபசாரமே அன்றி உண்மையன்று.

வடமொழியில் எந்த மூல புராணமும் இல்லை. வடமொழி யில் உள்ளது என்று சொன்னால்தான் தமிழ்ப் புராணத்திற்கு மதிப்பு என்று இவர்கள் கருதியமையால் இவ்வாறு சொல்லு கிறார்கள். அல்லாமலும் தமிழைப் பார்த்து வடமொழியில், மொழி பெயர்த்து வைத்துக் கொண்ட நிலைகளுடம் உண்டு. உதாரணமாக பெரிய புராணத்தின் மொழி பெயர்ப்பாகிய அகஸ் திய பக்த விலாசம் உபமன்யு பக்த விலாசம், பரஞ்சோதி திரு விளையாடலின் மொழி பெயர்ப்பாகிய ஹாலாசியமகாத்மியம் என்பவற்றை இங்குக் குறிப்பிடுதல் தகும்.

இவ்வாசியர் தமிழ் நன்கு கற்று இருக்கிறார் என்பதில் ஐய மில்லை. பலவகையான விருத்தங்களும் பாடுகிறார். சந்த விருத் தம் பாடுவதில் இவருக்கு விருப்பம் மிகவும் அதிகம். சந்தங்களை

நன் றாகவே பாடுகிறார். யாப்பு இலக்கணம் நன்கு தெரிந்து நூலைப் பாடியிருக்கிறார். ஆனால் இவரிடம் கவிதைப்பண்பு சிறிதும் அமையவில்லை. பாடல்புனையும் ஆற்றல் இருக்கிறதே ஒழிய கவிதைக்குச் சுவையூட்டும் ஆற்றல் அறவே இல்லை.

## நூல்

இவ்வாசிரியர் கவிதைத்தன்மை பெற்றவ ரல்லராயினும் மிகுந்த ஆர்வத்தோடு, பெருங்காப்பியச் செய்திகள் பலவற்றை இச்சிறு நூலில் அமைத்து இதை மிகவும் சிறப்பிக்க எண்ணுகிறார். தண்டியலங்காரத்திற் கூறப்பெற்ற செய்திகள் பலவற்றையும் காணலாம். மலை, (கடல் இல்லை) நாடு, வளநகர், பருவம் ஆகிய வருணனைகள் சிறப்பாக உள்ளன. சிறப்பாக, சூரிய உதயம் அத்தமனம் பல இடங்களில் சந்தர்ப்பத்திற்குப் பொருந்த அமைத்திருக்கிறார். தன்னிகரில்லாத் தலைவன் என்பது, வேங்கடேசப் பெருமானாதலால் பொருந்துவதாக உள்ளது. காப்பிய நூற்பொருள்களும் இதனுள் உள்ளன. விரிவாக இவற்றையெல்லாம் எடுத்துக் காட்டவில்லை. மணம் புரிதலே நூலின் முக்கிய பொருள். அலர்மேல்மங்கை வேங்கடேசப் பெருமானை மணம் புரிதலே கதை. போது கொய்தல் என்ற படலத்தில் பொழில் விளையாட்டும், புனல் விளையாட்டும் சொல்லப்படுகின்றன. சிறுவரைப் பெறுதலும் உண்டு. ஆகாய மன்னன் அலர்மேல் மங்கையைக் கண்டெடுத்துத் தன் பெண்ணாக வளர்க்கும் காலத்து அவனுக்கு ஓர் ஆண் மகவு பிறக்கிறது. மந்திரம் : பலரோடு—பகுளை முதலியோரோடு—அளாவுதல். தூது—பகுளை தூது· போரும் உண்டு. ஆகாயமன்னன் தம்பியும் மகனும் போரிடுகிறார்கள். வேங்கடேசன் போரில் ஈடுபட்ட பின்னர் சமாதானம் செய்கிறான்.

நூல் அத்தியாயம் படலம் என்ற பாகுபாடுகள் பெற்றிருப்பது இலக்கணத்துக்காகவே என்று சொல்லத் தோன்றுகிறது. இவ்வாறு நோக்கும்போது இவ்வாசிரியர் பெருங்காப்பிய இலக்கணங்களைத் தாம் அறிந்த வரையில் எவ்வாறு அமைக்க முயன்றிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

பெருங்காப்பிய இயல்பை மனத்துட்கொண்டு சந்திரோபாலம்பனம், மன்மதோபாலம்பனம், தென்றலைப் பழித்தல், குயிலைப் பழித்தல் முதலியன பாடுகிறார்.

நூலில் சில பாடல்கள் விட்டுப் போயினவோ என்றெண்ண இடமுண்டாகிறது; அந்தணன் அடைக்கலப் பொருளாகக் கொடுத்து விட்டுப்போன அவனது கருவுற்ற மனைவியையும் பிள்ளையையும் அரசன் கவனிக்காமையால் அவர்கள் இறந்து விடுகிறார்கள் என்ற பகுதி நூலில் சொல்லப்படவில்லை. (பாடல் 609 பார்க்க.)

குறத்தி வந்து குறி சொல்லுதல் பிற்கால இலக்கியங்களில் சிறப்பம்சம். தனிக்குறவஞ்சிப் பிரபந்தங்கள் 18 ஆம் நூற்றாண்டில் மிகவும் அதிகமாய்த் தோன்றியிருக்கின்றன. இவரும் இத்தன்மையைப் பெரிதும் விரும்பி, வேங்கடேசனே ஒரு குறத்தியாக வந்து குறி சொல்வதாகக் கதை அமைக்கிறார்.

சென்ற நூற்றாண்டில் புருஷசாமுத்திரிகாலட்சணம், ஸ்திரீ சாமுத்திரிகா லட்சணம் என்று விளக்கமாகச் சொல்லுவதில் பல ஆசிரியர் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். தம் நூலைச் சிறப்புடையதாக்க வேண்டு மென்று கருதிய இவ்வாசிரியரும் இங்கு அங்க இலக்கணப் படலம் என்று தனியே ஒரு படலம் அமைத்து அதில் ஆடவருக்கு 32 இலக்கணங்கள் பெண்டிருக்கு 32 இலக்கணங்கள் என்று தனித்தனி (330-334, 336.347) 5, 12, பாடல்களால் விரித்துரைக்கிறார்.

இவ்வாசிரியர் பாயிரத்தில் திருவேங்கடவன், ஆழ்வார் ஆசாரியர், பாகவதர் வரைக்கும் கூறுகிறார். எல்லோரையும் போலப் பாயிரத்துள் அவையடக்கம் கூறுவதோடு பின்னரும் ஆற்றும்படலத்தில் மீண்டும் (36) அவையடக்கம் கூறுகிறார்.

பீமதாசனுக்கு அருள் செய்த படலம் என்பது இந்நூலில் புதிதாயுள்ளது. ஒரு கால் இவ்வாசிரியர் திருமலையில் பெருமாளுக்கு மட்பாண்ட கைங்கரியம் செய்து வந்த குறும்பறுத்த நம்பி என்ற குயவர்குலப் பத்தருடைய கதையைக் கண்டு இப்படிச் சொன்னாரோ என்று கருதத் தோன்றுகிறது குறும்பாவது காமம் வெகுளி மயக்கம் என்ற முக்குறும்பு. இவர் வரலாறு குருபரம்பரை நூல்களில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இடபாசுரனைக் குறித்து இவர் சொல்லும் செய்தி சிறப்பானது. அவன் தன் தலையை அறுத்துத் திருமால் பாதத்தில் வைத்தான். கலிங்கத்துப்பரணியில் வரும் கருத்தை இவர் பார்த்திருப்பார் போலும்.

அடிக்கழுத்தினுடன் சிரத்தை அரிவராலோ
அரிந்த சிரம் அணங் கின்கைக் கொடுப்பராலோ

என்றபரணி வரிகள் காண்க. இவ்வசுரன் திருமாலை நோக்கி "உன்னாடு நான் போர் செய்ய வேண்டும்'' என்று வரம் கேட்பது மிக்க விந்தையாயுள்ளது. இது போன்ற விந்தையான செய்திகள் இதன் கண் பல உள்ளன. வேங்கடேசன் தனக்கென்று உறவினர் யாரும் இல்லை என்று ஏங்குதல், மங்கையின் சேடியரிடம் கல்லடிபட்டு நொந்து அரற்றுதல், போர்க்களத்தில் மன்னன் ஆயுதத்தால் அடிபட்டு மயங்கி வீழ்தல், அப்போது தேவி அங்கு வந்து அடிபட்ட கணவரைப் போர்க்களத்திலிருந்து அகற்றுதல், இது பெண்ணுலகின் யுத்த தருமம் என்று அகத்தியன் அவளுக்குச் சொல்ல, அவள் அப்பால் கொண்டு செல்லுதல் முதலியன சிலவாகும் தேவியின் யோசனைப்படி வேங்கடேசன் மன்னன் நாட்டைத் தம்பி, மகள் இருவருக்கும் பிரித்து அளித்தல் மற்றொரு விந்தை.

இவர் சொல்லியுள்ள சொல்லாட்சிகள் சிலவும் விந்தையாக உள்ளன. மனன் (மன்னன்) மினாள் (மின்னாள்) எணி (எண்ணி). எணற்க (எண்ணற்க), அனான் (அன்னான்)—சில வடிவங்கள், இவர் சொல்லும் சில அருஞ்சொற்களை ஒரு தனி அகராதியாகத் தந்து இருக்கிறோம்

வேங்கடம் என்ற சொல்லுக்கு இவர் கூறும் பொருள் ஒரு விசித்திரமானது; 'வெம்மை கடத்து காரணத்தினால் அம்மனையை வேங்கடம் என்று அந்நாள் பிரமன் வாழ்த்தினான் (119) என்கிறார்' இதே கருத்தை மற்றத் தலபுராணமும் கூறுகிறது.

அத்திரு மலைக்குச் சீரார் வேங்கடா சலமென்னும் பேர்
வைத்தன ரதுவே தென்னில் வேவென வழங்கெழுத்தே
கொத்துறு பலத்தைக் கூறுங் கடமெனக் கூறிரண்டாம்
சுத்தவக் கரங்கொளுத்தப் படுமெனச் சொல்வர்மேலோர்.
வெங்கொடும் பவங்களெல்லாம் வெந்திடச் செய்வ தால்நன்
மங்கலம் பொருந்துஞ் சீர்வேங் கடமலை யான தென்று
தங்களாச் சிரமந் தன்னில் தவத்தவர் அணுக லோடும்
சிங்கறீர் மாதவப் பேர்ச் சீர்மறை யாளன் தானே.

பாவியான அந்தணன் பாவத்தையும் பவத்தையும் வேகச் செய்தமையால் வேங்கடம், பல கதைகள் இந்நூலுள் சொல்லப்

பட்டுள்ளன. அஞ்சனை வாயுவைக் கூடி அனுமனைப் பெற்றது' அனுசூயா தேவி முத்தேவர்களையும் குழந்தைகளாக்கியது முதலியன சில. வேதவதி வரலாறு முழுமையும் புதுமையானது. இவளே அலர்மேல் மங்கையாகப் பிறந்து வேங்கடேசனை மணம் புரிகிறாள்.

## சில நூற்செய்திகள்

திருமலை முறையே இடபாசுரன் பூசித்ததால் இடபகிரி, அஞ்சனை பூசித்ததால் அஞ்சனாத்திரி, ஆதிசேடன் பூசித்ததால் சேஷாத்திரி, ''மறையோன் வெம்மை கடத்துகாரணத்தினால்'' வேங்கடாத்திரி என்று நான்கு பெயர்களை விளக்குகிறார். மேலும் நான்கு யுகந்தோறும் அஞ்சனாத்திரி நாாரணாத்திரி, நரசிங்காத் திரி, வேங்கடாத்திரி என்று பெயர் பெற்றதையும் கூறுகிறார் (41). அப்படியே ஐந்து சீனிவாசன்—உற்சவத்தன்று காலை உற்சவ சீனிவாசன், பகைவரைத் தண்டம் செய் உக்கிரசீனிவாசன்' பக்தருக்குக் காட்சி கொடுக்கும் போக சீனிவாசன், கணக்கர் பால் வேலை கொள்ளும் கணித சீனிவாசன், தொண்டர்க்கு உபதேசிக் கும் உபதேச சீனிவாசன் என (588-589). இத்தலத்தில் ஏழு தீர்த் தங்கள் உண்டென்பர். இந்நூல் சிலவற்றையே குறிப்பிடுகிறது,

இப்படியே திருவிழா இயற்றுதலைச் சொல்ல வரும்போது, பத்து நாளும் பெருமான் எழுந்தருளி வரும் வாகனங்களைச் சொல்லுவதும் ஒரு சிறப்புச் செய்தி (590-592) மற்றொரு சிறப்பான செய்தி மாமாயை கடந்தவனாகிய நாரதன் அலர் மேல் மங்கையைக் காணவருகிறான். வருபவன் ''அரியின் நாமம் செபித்துக்கொண்டு'' வருகிறான். ஆனால் தோற்றம் அணிபூண் யாவை? ''உடலில் பூதிபூசியிருக்கிறான். சடைமுடி இலங்குகிறது'' (214) அதாவது சிவபிரான் சின்னங்களான சடைமுடிபூண்டு விபூதி அணிந்திருக்கிறான். இது ஒருண்மையைக் காட்டுகிறது. பிற் காலத்தில் வைணவத்துக்குத் திருமண்காப்பை இராமானுசர் முக்கிய சின்னமாக ஆக்கிவிட்ட போதிலும்கூட, பண்டைக் காலத்தில், வைதிகக் கோலத்துக்குரியது விபூதி சடை ஆகிய சிவ சின்னங்களேயென்று இவ்வைணவ ஆசிரியர் கூற்றால் தெளிவாய்ப் புலப்படுகிறது.

இங்கு நாரதனும் வந்து அலர்மேல் மங்கையின் கைரேகையைப் பார்க்கிறான் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் மணமாகவேண்டுமானால் சிவபிரானை (அல்லது உமாதேவியை)ப்பூசிப்பது ஒரு புராண மரபு ருக்குமணிதேவி சண்ணனை மணம் புரியவேண்டுமென்று தேவி கோயில் சென்று பூசித்ததாகப் பாகவதம் கூறும். நம் ஆசிரியரும் அவர்மேல் மங்கைக்குத் தன் துயர்தீரவேண்டி ''உமாபதியை முறை செய்'' என்று பிருகஸ்பதி மூலமாக உணர்த்துகிறார் (287—288).

மணவினையில் முக்கியமாக, குலதெய்வ வழிபாடும் (398-400), பின்னர் வந்தோருக்கு உணவு அளிக்கவேண்டிச் சமையல் ஏற்பாடும் சிறப்பாய் வருணிக்கப்படுகின்றன.

அரங்கதாசன் பீமதாசன் என்ற தாழ்ந்த குலத்தினரான இரு பக்தர்களுக்காக இருபடலங்கள் ஒதுக்கியிருப்பது, பாகவதர்களில் சாதிவேற்றுமை தலைகாட்டலாகாது என்ற உயர்ந்த வைணவப் பண்பை இலக்கியத்தில் வைத்துக் காட்டுகிறது.

## வேறு தலபுராணம்

திருவேங்கடத்துக்கு இப்போது அச்சிடுகின்ற ''மகத்துவம்'' என்ற நூல் அல்லாமல் மற்றொரு தலபுராணமும் திருவேங்கடத் தலபுராணம் என்ற பெயரில் அச்சிடப்பட்டுள்ளது, அப்புராணம் தேவாரநகரப் மதுரகவி வீரராகவ அய்யங்கார் சுவாமிகள் பாடியது. அந்நூல் செய்த காலம் 1887. அந்த நூல் வடமொழியில் இருந்த மூலப்புராணங்களில் சொல்லப்பட்ட பிரபாவங்களைத் தொகுத்துத் தமிழ் வசனமாக வெளியிடப்பட்ட ஒரு நூலைச் செய்யுளாக அமைத்ததாகும். அது 59 அத்தியாயங்களும் 1589 விருத்தப் பாடல்களும் உடையது. அது முதன் முதலாக அதே ஆண்டில் கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளையால் பார்வையிடப்பட்டு சென்னையில் அச்சிடப்பட்டது. அதன் இரண்டாம் பதிப்பு வித்துவான் தி. பொ. பயனியப்பபிள்ளை குறிப்போடு திருமலை-திருப்பதி தேவஸ்தானத்தாரால் 1949இல் வெளியிடப் பட்டது.

## இம்மகத்துவமும் மற்றத் தலபுராணமும்

அலர்மேல் மங்கையின் அவதாரம், வேங்கடேசன் வந்து மணம் புரிதல், விழா இயற்றுதல் ஆகிய வேங்கடேசன் வரலாறுகளையே இந்நூல் விரிவாய் 19 படங்களால் கூறி, அரங்கதாசனே ஆகாய மன்னனாய்ப் பிறந்தானென்பதும் தாழ்ந்த குயக்குலத்தானான பீமதாசன் பக்திச் சிறப்பு இன்னது என்பதும் கடைசி இருபடலங்

களால் கூறி முடிக்கிறது. ஆனால் மற்றய புராணமாகிய திருவேங்கடத் தலபுராணமானது தன் 59 படலங்களில் 5 படலங்களால் மட்டும் வேங்கடேசன்மணத்தைக் கூறிப் பிற அனைத்தினாலும், திருவேங்கடத்தில் பேறு பெற்றோருடைய செய்திகளை விரிவாய்க் கூறுகிறது. இவைபோக இரண்டுக்கும் பொதுவாய் உள்ளவை திருமலைத் தோற்றம், இடபாசுரன்வதம், தொண்டமான் பிறப்பு, அரங்கதாசன் வரலாறு என்பன மட்டுமே. இவர் சொல்லும் பகுளை மற்றப் புராணத்தில் வகுளமாலிகை எனப் பெறுகிறாள்.

சிவ ஸ்தல புராணங்கள் எண்ணிக்கையில் மிகவும் அதிகம் அவற்றில் பெரும்பாலன காலத்தால் மிகவும் பழமையானவை. ஆனால் விஷ்ணு தலபுராணங்கள் மிகவும் குறைவு. பாகவத புராணங்கள் (இரண்டு அவைகளும் பெரியவை, கந்த புராணம் போன்ற இதிகாசங்கள்), கூடலழகர் புராணம் (16ஆம் நூற்றாண்டு). பிற உள்ளவை இரண்டொன்றே. அவையும் 19ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டன. திருவேங்கடத்துக்குப் பழமையான தமிழ்ப் பு ரா ண ம் இல்லை. எழுந்த இரு புராணங்களும் 19ஆம் நூற்றாண்டே. இவற்றுள் இந்த நூல் காலத்தால் முந்தியது கி.பி. 1866. மற்றது பிந்தியது கி.பி. 1887 பொடிந்து போன ஒரு பிரதியின் துணைகொண்டு செப்பம்செய்து திருவேங்கடவன் அருளால் இந்நூல் இப்போது வெளியிடப் பெறுகிறது. இத்தலத்துக்கு வடமொழியிலும், தெலுங்கிலும் தல புராணங்கள் உள்ளன என்பர். அம்முறையில் பழைய தமிழ்ப் புராணம் நன்முறையில் இப்போது மீண்டும் வெளியிடப் பெறுதல் பொருத்தமுடையதே.

பயன் கருதி ஒவ்வொரு படலந்தோறும் கதைச் சுருக்கம் சேர்க்கப் பெற்றுள்ளது. இறுதியில் அருஞ்சொல்லகராதியும் அரும்பொருளகராதியும் உள்ளன.

இவ்வெளியீட்டுக்குப் பொருள் உதவி செய்த திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தாருக்கு மிக்க நன்றியுடையேன். சமய நூல் வெளியீட்டுக்கு உதவி செய்கின்ற தேவஸ்தானத்தாருடைய கொடைத்திறம் பெரிதும் போற்றற்குரியது.

திருச்சிற்றம்பலம்

31-7-1983

**மு. அருணாசலம்**

# ஸ்ரீ வேங்கடேச மகத்துவம்

# ஸ்ரீ வேங்கடேச
# மகத்துவம்

ஸ்ரீ:

# ஸ்ரீ வேங்கடேச மகத்துவம்

## கடவுள் வாழ்த்து

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

### திருவேங்கடவன் அருள்

கார்பூத்த திருமேனி நயனமுகம் கரம் நாபி
கமலப் பூவில்
சீர்பூத்த அருள்வேங்க டப்பெருமான் சேவடித்தூள்
சென்னி சேர்த்தான்
பார்பூத்த வடமொழியென் நாவால்தென் மொழிவிருத்தப்
பாட லாக்கி
ஏர்பூத்த தன்புகழை நனிவளர்க்க வேண்டுமென
இதயங் கூர்ந்தே.

குறிப்புரை. 1 கார்பூத்த திருமேனி — திருமால் நீல மேனியன். நயனம், முகம், கரம், நாபி — இவை கமலம் போன்றவை. 'கார்வண்ணம் திருமேனி கண்ணும் வாயும் கைத்தலமும் அடியிணையும் கமல வண்ணம்'— திருமங்கையாழ்வார், திரு நெடுந்தாண்டகம் பாடல் 18. வேங்கடப் பெருமான்- திருவேங்கடத் திருமலையில் கோயில் கொண்டு எழுந்தருளி யுள்ள திருமால். சென்னி சேர்த்தான் — அவனே தன்திருவடியை என் தலையில் சூட்டினான். ஏர்—சிறப்பு. வடமொழி நூலை நாவால் தமிழாக்க வேங்கடப் பெருமான் இதயங்கூர்ந்து, தன் சேவடி என் சென்னியில் சேர்த்தான் என்க.

# 1. பாயிரம்

## திருவேங்கடவன் வணக்கம்

நிலைமருவும் உளமனனம் தவறாத திருமகள் தன்
நினைவீ டேற
அலைமருவு கடல்கடைந்து கரம்பிடித்த வேங்கடனை
அகத்துட் கொள்வாம்
வலைமருவு முழையில்நிலம் முதலியமூ வாசையினால்
மதிம யங்கிப்
புலைமருவு பவக்கடலில் ஆழாமல் பாணிபற்றிப்
புரக்கும் என்றே. 2

சேற்றொடுசேர்ந் தறக்குழம்பிப் பயனிலவாய் உறைகின்ற
தெளிவில் நீரை
மாற்றுபுனல் உண்ணீராய் வளனுறச்செய் விக்கின்ற
மறுவில் தேற்றில்
ஏற்றியமா மாயையினால் இடர்கூரும் மலக்குழப்பம்
இரியும் வண்ணம்
ஆற்றியருள் தரும்அமல வேங்கடத்தோன் அடிமுடிமீ
தணியிற் கொள்வாம்.

2. நெஞ்சுக்கு அறிவுறுத்தல். நிலை ... திருமகள்—திருமகள் தன் மனத்தில் ஒரு போதும் தவறாமல் திருமாலையே தியானிக்கிறாள் என்பது கருத்து. நிலம் முதலிய மூவாசை—மண், பெண், பொன் ஆகிய மூவகையாசை. புலை மருவு பவக்கடல்—இழிவான பிறவியாகிய கடல். பாணி—கை பவக்கடலில் ஆழாமல் கரம் பற்றிப் புரக்க, பாற்கடலில் தோன்றியதிருமகளைக் கரம் பற்றிய வேங்கடவனை நினைக்க என்று நெஞ்சுக்குக் கட்டளையிடுகிறார்.

3. மாற்றுபு-மாற்ற. மறுவில் தேற்றில்—குற்றமற்ற தேற்றுங் கொட்டை போல இரியும்—நீங்கும் அமல வேங்கடத் தோன்—மலங்களற்ற திருமால். மனக் குழப்பத்துக்குக் காரணம் மாயை என்கிறார். குழம்பியுள்ள தெளிவில் நீரை உண்ணீராக்கும் தேற்றாங் கொட்டை போல மனக்குழப்பம் நீக்கியருள் புரியும் வேங்கடவன் அடியை முடிமீது அணியாகக் கொள்வோம் என்க. குழம்பலான ஆற்றுநீரைத் தெளிவிக்கும் பொருட்டு தேற்றாங் கொட்டையை உரைத்திடுதல் காவிரி நாட்டில் இன்றுமுள்ள வழக்கு.

சுழறருநற் சாணையிடை யீந்து விரை வாய்க்கடையத்
துன்னு மாசு
கழறரப்பே ரொளிபரப்பி இலகுறும்அம் மாபடிகக்
கல்நே ராக
அழறருசெம் மணிநாக அணைதுயில் வேங் கடவாம
அருட்சா ணைக்கண்
நிழல்தரஈந் துரிஞு றின்மா சொருவி உளம் அமலஒளி
நிலையம் ஆமால். 4

## ஆழ்வார் பதின்மர் வணக்கம்

பொய்கையிடை அங்கமல மிசையுற்றோன், மாதவித்தண்
பூவின் மைந்தன்,
செய்யசய மலருதித்தோன், பிருகுமுனி அரமகளைச்
சேர வந்தோன்,
மையலொடு காரியுறு வறுமையறக் குருகூரில்
வந்த நாதன்,
துய்யதிட விரதனெனும் அரசனுயர் குலம்விளக்கத்
தோன்று மேலோன்; 5

4. படிகக் கல்லைச் சாணையில் ஈந்து விரைவாய்க் கடைய அதில் பொதிந்துள்ள மாசு கழன்று ஒளி விடுவது போல, நாகணையில் துயில் கூரும் வேங்கடவனாகிய அருட் சாணையில் உள்ளத்தை ஈந்தால், அதன் மாசு நீங்கி சுத்தஒளி நிலையம் ஆகும் என்க. சுழல் தரு—சுழலுகின்ற. துன்னும்—பொதிந்துள்ள. கழல்தர—நீங்க. நாகணை—ஆதிசேடசயனம். உரிஞு றின்—கடையப்பெற்றால். அமல—அழுக்கில்லாத.

5, 6. பாடல்கள் குளகம். பொய்கை—குளம். கமலம்—தாமரை. பொய்கையிடை அங்கமல மிசையுற்றோன்—கச்சியில் பொற்றாமரைப் பொய்கையில் உதித்த பொய்கையாழ்வார். மாதவி...மைந்தன்—பின் கடல் மல்லையில் மாதவிப் பூவில் உதித்த பூதத்தாழ்வார். செய்ய சய மலருதித்தோன்—மயிலையில் செவ்வல்லிப் பூவில் உதித்த பேயாழ்வார். பிருகு... வந்தோன்—திருமழிசையில் பிருகு முனிவருக்கு அரமகளிடமாகப் பிறந்த திருமழிசையாழ்வார். மையல்... நாதன்—குருகூரில் காரிப் பிரானிடமாகப் பிறந்த நம்மாழ்வார் வறுமை—புத்திரப் பேறில்லாத வறுமை. துய்ய...மேலோன்—கொல்லி நகரில் திடவிரதனெனும் அரசனுக்குப் புதல்வராய்த் தோன்றிய குலசேகராழ்வார்.

வில்லிபுத்தூ ரிடைப்பிறந்து வழுதிஉயர் கிழியறுத்த
விமல மூர்த்தி,
துல்லியமார் திருமண்டங் குடிதனிலே அவதரித்துத்
துலங்கு கின்றோன்,
நெல்லின்வ ளைகதிரினிடைப் பிறந்தரிதன் மலர்க்கழற்கண்
நேயம் உற்றோன்,
மல்லினுயர் நீலனருள் மைந்தன் முதல் பதின்மர்பதம்
மனத்துள் கொள்வாம். 6

## ஆசாரியர் வணக்கம்

தொடைதிகழும் நாதமுனி முதலாய தேசிகர்தந்
தொகையோர் தாளும்,
உடையவர்தம் திருத்தாளும் அனுதினமும் உவப்பினுடன்
உளத்திற் கொண்டு

6. வில்லி... மூர்த்தி—சீவில்லிபுத்தூரில் பிறந்து பாண்டியனுடைய பொற்கிழி அறுத்த விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வார் உயர்கிழி—உயரத்தே கட்டிய பொற்கிழி. மண்டங்குடி துலங்குகின்றோன்—திருமண்டங்குடியில் அவதரித்த தொண்டரடிப் பொடியாழ்வார். நெல்லின்... உற்றோன்—நெல் வயலிற் கதிரிடைப் பிறந்த திருப்பாணாழ்வார். அரி—திருமால். மல்லின் : தோள் வலி மிக்கவன் நீலன்—திருவாலி நாட்டில் குறையலூரில் அவதரித்த நீலன் என்ற திருமங்கையாழ்வார்.

இவ்விரு பாடல்களாலும். முறையே பொய்கை பூதம் பேய் மழிசை குருகைநாதன் குலசேகரன் பெரியாழ்வார் தொண்டரடிப்பொடி பாணர் ஆலி நாடன் என்ற ஆழ்வார் பதின்மர் வணக்கம் சொல்லப்பட்டது மதுரகவி ஆண்டாள் நீக்கி ஆழ்வார் பதின்மர் என்பது ஒரு மரபு. இங்குச் சொல்லப்பட்டமுறை வரலாற்று முறைக்கு ஒத்ததன்று.

7. தேசிகர்—ஆசாரியர் தொகையோர்—கூட்டத்தினர்; அவராவார் உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரியநம்பி முதலாயினோர். உடையவர்—இராமானுசர். நல்திருமண்க ப்பு ஆகம்முதல் ஈராறு தலத்திற்கொள்வோர்—உடலில் துவாதச நாமங்களையும் அணிவோர். இப்பாடல் 'குலந்தாங்கு சாதிகள் நாலினும் கீழ்இழிந்து' என்ற

தடையறநல் திருமண்காப் பாகமுதறுலீரா
தலத்திற் கொள்வோர்
கடையவரா யினுமவர்தங் கழல்முடிக்கு மகுடமெனக்
கருத்திற் கொள்வாம். 7

## பாகவதர் வணக்கம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்—வேறு

ஆனிரை விரும்பி மேய்த்தோன் அன்புடன் நாளும் வாழும்
தீநிற மணியும் பொன்னும் செறிகதிர் விரிக்க ஓங்கும்
தூநிற வேங்க டப்பேர் சொல்லுவோர் அடிகள் மேலாம்
நீல்நிறக் கடவுள் தாட்கு நிகரென நினைவுட் கொள்வோம் 8

## அவையடக்கம்

பொங்கிய வாள்நேர் முள்ளும் பொருந்து கேதகையின் பூவில்
தங்கிய மணத்திற் காகச் சார்ந்திடும் இளைஞர் என்னக்
கங்கிலா அறிவின் மிக்கோர் கைக்கொள்வர் எனது பாவைப்
பங்கமுள் ளனவென் றோர்ந்தும் பத்திவா சனையுட் கொண்டே. 9

பாயிரம் முற்றும்

நம்மாழ்வார் பாசுரத்தையும், 'பாதியாய் அழுகிய கால் கைய ரேனும்' என்ற பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் திருவரங்கக் கலம்பகப் பாடலையும் கருத்திற் கொண்டது.

8. ஆனிரை—பசுக்கூட்டம். விரும்பி மேய்த்தோன்—கண்ணனாக அவதரித்தபோது இடையனாய்ப் பசு மேய்த்த திருமால். தீநிறம்—சிவந்த நிறம். வாழும், விரிக்க ஓங்கும் வேங்கடம் என்க. ஆனிரை மேய்த்தோன் வாழும் வேங்கடப் பெயரைச் சொல்லுவாரின் அடிகள் திருமாலின் அடிகளுக்கு நிகர். நீல்நிறக் கடவுள்—திருமால். "திருவுடை அடியாரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்"— நம்மாழ்வார்.

9. வாள் நேர் முள். கேதகை—தாழை. கங்கு—கரை, எல்லை. பங்கம்—குற்றம். முள்ளிருப்பினும் மணத்துக்காகத் தாழையை விரும்புவார் போல, குற்றமிருப்பினும் பக்தியால் என் பாவை விரும்புவர் என்றார்.

## 2. புராண வரலாறு

### கலி விருத்தம்

புகழ்பவி டோத்தர புராணம் தன்னிடை
திகழ்பல காதைகள் நிறைந்த சூதனை
மகிழ்வொடு சவுனகர் வாழ்த்தி வேங்கடன்
திகழ்கதை கூறெனச் செப்பல் மேயினான். 10

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

கலியிடை வேங்க டேசன் காதையைக் கழறி னோர்மேல்
நலிவறக் கேட்டோர் வாழ்ந்து பின்னர்நண் ணுவர் வீடென்ன
ஒலிமிகு மறைகள் ஆர்க்கும் உண்மைஇவ் வுலகில் இன்று
பலிதமாய் விளங்கச் செய்து பலனைநீர் அடைந்தீர் என்றான். 11

பலவித புராண முற்றும் பரிவுடன் எனக்கு ரைத்த
துலமிலா வியாதன் செய்ய துணைமல ரடியை வாழ்த்தி

10. பவிடோத்தர புராணத்துப் பல புராணக்கதைகளைக் கூறிய சூதனைச் சவுனகாதி முனிவர் வாழ்த்தி வேங்கடவன் கதை கூறுமாறு கேட்கின்றனர். பவிஷ்யோத்தர புராணம் என்பது 18 புராணத்துள் ஒன்று; பத்துப் புராணத்துள் ஒன்றும் ஆகும். (பவிடியம் என்பது புராணம்; உத்தரம் என்பது அதன் பிற்பகுதி. பவிடியம் என்பது எதிர் காலச் செய்திகளைக் கூறும் புராணம்.) சூதன்—சூதமுனிவர்! வியாசருக்கு க்ஷத்திரிய மனைவியிடமாகப் பிறந்தவர். இவரது தொழில் புகழ்பாடுதல். சூதர், தரணிபுகழ் பாடிக்காலையில் துயிலெழுப்புபவர் என்று தமிழ் நூல்கள் கூறும். வியாசருடைய சீடரென்றும் இவர் சொல்லப்படுவார். நைமிசாரணிய வனத்துள் முனிவர் இவரை அணுகிப்புராணம் கேட்டனர், இவர் எல்லாப் புராணங்களையும் கூறினார் என்பதே புராண வரலாறு. கேட்ட முனிவர் சவுனகர் முதலானோர். இம்முனிவர் முனிவருள் தலையானவர்; வேதப்பிராதிசாக்யையும் சில வேதப் பகுதிகளையும் செய்தார் என்பது வடமொழி வழக்கு.

11. கழறினோர்—சொன்னவர்; சொனனவர், கேட்டவர் வீடடைவர் என்பதால் சொல்லும்படி கேட்டவர்களுக்குரிய பலனை நீரடைந்நீர் என்று சூத முனிவர் கூறினார். நலிவு அற—துன்பமின்றி. வீடு—பரமபதம். மறைகள்—வேதங்கள்.

12. துலமிலா—தனக்கு இணையில்லாத. நவை—குற்றம். மலம்—குற்றம். கலி—குற்றங்களுக்கு இடமான கலி காலம்.

நலமுற உணர்த்து வல்யான் அறிந்தன நவையின் றாகி
மலமிகு கலியின் எல்லை மாந்தர்வாழ் வடைக என்றே. 12
மலைகளின் மாண்பு மேய மாசில்மா மேருப் போல
அலைவறு நகர மாய தனைத்திற்கும் சிகர மென்று
கலைவளர் புலவ ரேத்துங் கடிமதில் மிதிலை என்னும்
நிலைகிளர் நகர மொன்று நீணிலத் துளது மாதோ. 13
அப்பெரு நகரத் தெங்கும் ஆதுலர் இன்மை யாலே
செப்பமார் தருமம் செய்வான் சிந்தையில் உவந்த மாந்தர்
சுப்பிர வன்னம் செய்ய சூரனுக் கீந்து பின்னர்
ஒப்பிநல் லசனம் கொள்வர் உவப்பினாள் தோறும் மன்னோ. 14
மறையவர் முதலி னோர்தம் மரபினுக் குரிய செய்கை
முறைவழு வாம லொன்றி முயல்தரு நெறியில் என்றும்
குறைவற இல்ல றத்தில் கூடிநின் றின்ப வாழ்வு
நிறைவுறச் செங்கோல் ஒச்சி நேரற உலகை ஆள்வோன். 15
ஆதியில் அரியின் பாதம் அருச்சனை புரிந்து வந்த
கோதிலாச் சனகன் பின்னோன் குசத்துச னுடன்அ ளாவி
மதினி ஆளுங் காலை விதிவலி யதனால் தன்னின்
நீதியார் பிறரின் றென்னா மனத்திடை நினைத்தா னன்றே. 16

வியாசர் பதினெண் புராணங்களையும் செய்தார் என்பது ஐதிகம். வாழ்வடைக என்று, வாழ்த்தி, உணர்த்துவல்யான் என்க.

13. மாசுஇல்—குற்றமற்ற; மலைகளில் சிறந்தது மேரு மலை. அது போல நகரங்களுட் சிறந்தது மிதிலை. நீள் நிலத்து—பூவுலகில்.

14. ஆதுலர்—வறியவர். சுப்பிர அன்னம்—வெள்ளன்னம் செய்ய- செந்நிறம் பொருந்திய. சூரன்—சூரியன். அசனம் கொள்வர்—உண்பர். உவப்பில் நாள்தோறும் என்க.

15, 16 பாடல்கள் குளகம். முயல்தரு நெறி—முயலத் தக்க வழி. நேர் அற—இணை யாரும் இன்றி. மறையவர் முதலோர் ஒன்றிகூடி நிறைவுற ஆள்வோன் நினைத்தான் (16) என்று முடிக்க.

16. அரியின் பாதம்—திருமாலின் திருவடி. பின்னோன்—தம்பி; இவன் குசத்துவசன், இவன் பெண்களை இராமன் தம்பியர் மணந்தனர். அளாவி—கலந்து ஆலோசித்து. மேதினி—உலகு. நீதியார்—நீதி நெறியில் ஆள்பவர்.

அகமுறு மரையன் பானின் றரியருள் ஒருவ மும்மைச்
சகமெடுத் தேத்து மாற்றந் தவறிலா அனுசன் மாயச்
சுகமெனும் பேறு நீங்கித் துயருறு காலை ஞான
நகசதா னந்தன் மிக்க நசையுடன் எய்த நோக்கி. 17

எந்தகை பிரானே எம்பி இறந்தது பெரிதென் கோயான்
சிந்தைநோய் பெருக்கு மூப்பின் செயலது பெரிதென் கோயான்
சந்ததம் பகைஞ ராற்றும் சமரது பெரிதென் கோயான்
சநொந்தனன் சால என்னா நுவன்றடி மீது வீழ்ந்தே. 18

எங்கள் தம் மரபு காக்கும் ஈசனே நின்னை அன்றிச்
சங்கடம் நீக்க இந்தத் தரணியில் வேறு காணேன்
பொங்கமாம் இகவின் பத்தைப் புகழுடன் அனுப வித்துப்
பங்கமில் வீடு நாயேன் பெறவகை பகர்க என்றான். 19

இன்னணம் குறைபு கன்ற ஏந்தல்தன் தவறு ணர்ந்து
வன்னமாம் கமல யோனி வானவர் முனிவர் மற்றோர்
நன்னய சுகம டைந்த நற்கதை கேட்பை யாகின்
மன்ன நின் னிடரும் நீங்கி மறுவில்வாழ் வடைவாய் என்றான். 20

17. 19 பாடல்கள் குளகம். அகம் உறும்—அகங்காரங் கொண்ட. அரையன்—சனகன். அரி அருள் ஒருவ—திருமாலின் அருள் அவனை விட்டுநீங்க. மும்மைச் சகம்—பூவுலகு கீழுலகு மேலுலகு. மாற்றம் தவறிலா—சொன்ன சொல் தவறாத. அனுசன்—தம்பியாகிய குசத்துசன். மாய—இறக்க. ஞான நக சதானந்தன்—ஞானமலை யொத்த குருவாகிய சதானந்த முனிவன். இவன் கம்பராமாயணத்திலும் சொல்லப்படு கிறான். சதானந்தன் வருவது கண்டு மிக்க விருப்பத்தோடு நோக்கி என்க.

18. பிரானே—சதானந்தனை நோக்கிய விளி. எம்பி—என் தம்பி. சனகன், தம்பி யிறந்த துயர், மூப்பின் துயர், பகைவர் போரினால் வருந்துயர் இவற்றால் தான் நொந்தமை கூறி அடியில் வீழ்ந்தான். நுவன்று-சொல்லி.

19. பொங்கம் ஆம்—மிகுதியான. இக இன்பத்தை—உலக சுகத்தை. அனுபவித்தபின் இனி, வகைபகர்க என்க. வீடு—மறுமை யுலகு. நோக்கி (17) வீழ்ந்து (18) பகர்க என்றான்.

20. ஏந்தல்—சனகன். வன்னமாம்—சிறப்புமிக்க, கமல யோனி—பிரமன். பிரமன் முதலியோர் சுகமடைந்த நற்கதை கேட்பை யாயின் வாழ்வு அடைவாய் என்றான்.

அந்தநல் லுரைசெ விக்கண் அணுகுறா முனமெ மூந்து
வந்தனை புரிந்து ஞான மானபூ டணனை வாழ்த்திப்
பந்தனை அகற்றி நாளும் பாலிக்கும் சரிதை கூறிச்
சந்ததம் மனத்தை வாட்டும் சஞ்சலம் தவிர்க்க என்றான். 21

காவலனுரைகேட் டுள்ளக் களிப்புடன் அருளின் நோக்கி
'ஆவலாய்க் கேட்கை யாலே ஆதியோ டந்த மாக
நாவல ரேத்துந் துய்ய நற்கதை உரைத்து ளத்தைத்
தாவர நிலைமை செய்வல்' எனச்சதா னந்தன் சாற்றும். 22

## புராண வரலாறு—கதைச்சுருக்கம்

சூத முனிவரைச் சௌனகாதி முனிவர்கள் போற்றி, திருவேங் கடவன் கதை கூறும்படி வேண்ட, அவர் கூறுவார். "மிதிலை என்னும் நகரத்தில் சனகன் ஆட்சிபுரிந்தான். நீதி வழுவாது தன் தம்பி குசத்துசனோடு அவன் ஆட்சி புரிந்த காலை, தன்னை யொப்பார் இல்லை என்ற செருக்கடைந்தமையால், அவனிடமிருந்து திருமால் அருள் நீங்கத் துன்பமுற்றான். தம்பி இறந்தான். குருவாகிய சதானந்த முனிவரை வணங்கித் தான் தம்பியின் மரணத்தாலும் மூப்பின் தளர்ச்சியாலும் பகைவர் செய்த போராலும் துன்புற்றமை கூறி, துன்பம் நீங்க வழிகாட்டுமாறு வேண்ட, அம் முனிவன் அவனைத் தேற்றிக் கூறுவானாயினான்".

புராண வரலாறு முற்றும்

21. ஞானபூடணன்—ஞானமே அணிகலனாகக் கொண்ட சதானந்த முனிவன். பந்தனை —பாசம், கட்டு. பாலிக்கும்—காப்பாற்றும். சந்ததம்—எந்நேரமும். வாட்டும்—துன்புறுத்தும். என்றான் சனகன்.

22. காவலன்—சனகன். துய்ய—தூய்மையான. தாவர நிலைமை—இன்ப துன்பங்களால் சலனமுறுது ஒரு நிலையாக இருத்தல்.

## 3. ஆற்றுப் படலம்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்—வேறு

சுத்தப் பிரமம் நிறையுலகத் தோற்றம் செய்ய அருள்சுரந்து
நித்த உளத்து நீர்கொளுங்கால் நீல நிறம்மே வியவாபோல்
சுத்த மிலாவெண் முகில் ஈரந் தன்னை விரும்பித் தடங்கடல்நீர்
துத்தக் கரிய நிறமடைந்து தோன்றி விண்மீப் பரந்தனவே. 23

கடுத்த தமது தொழில் தடுப்பான் கருதி முன்னர்க் கண்ணபிரான்
எடுத்தபொழுதில் இடரிழைத்த ஓங்கற்கினமாம் இதுவெனவான்
அடுத்த நார ணக்கிரிமேல் அடர்ந்து சினந்து கருச்சித்து
தொடுத்த சமரான் முதுபகைமை தொலைத்தல் போன்று
சூழ்ந்தனவே. 24

வான தனுவைக் கரங்கொடுபு வளைத்துக் கொடிமினாண்பூட்டித்
தானு ணாரக் கணை தொடுத்துத் தரணி நடுங்க இடித்துரப்பி
ஆன பகைஎயச் சாருயிர்கள் அனைத்தும் மருவி உடனோடக்
கானம் சிகரம் எங்கும்அம்பு கலக்க அமர்செய் காலையிலே. 25

23. பிரமம்—பரம்பொருள். நீர்—கருணை. நீலநிறம்—நிறமில்லாத பிரமம் நீல நிறமடைந்து திருமாலானவாறு போல. வெண்முகில்—வெண்ணிற மேகம் கடல் நீரைச் சுமந்து சூல் கொண்ட மேகமாகிக் கரிய நிறம் பெற்று விண்ணெங்கும் பரந்தது. துத்தம்—துரிசு; நீலம் இங்குக் கரிய நிறமெனப் பட்டது.

24. கண்ணன் கோவர்த்தன கிரியை எடுத்து ஆயரையும் ஆனிரைகளையும் இந்திரன் பெய்வித்த கல்மாரியினின்றும் காத்த கதைசுட்டப்படுகிறது. தமது—மேகங்களது ஓங்கல்—கோவர்த்தனகிரி. இனம், இந்த நாரணக்கிரி என்ற வேங்கட மலை. கருச்சித்து—கர்ச்சனை செய்து. சூழ்ந்தன மேகங்கள்.

25. மேகங்கள் மழை பெய்தல் முற்றுருவகமாகச் சொல்லப்படுகிறது. வானதனு—இந்திரவில். கரம் கொடுபு—கையிற்கொண்டு. மின் நாண்—மின்னலாகிய நாண். நாரக் கணை—மழைத்தாரையாகிய அம்பு. தரணி—பூமி, கானம் சிகரம்—காடு மலை, அம்பு—நீர். அமர்—போர் மேகங்கள் மழை பெய்ய.

சேணின் நெருங்கி மிக ஆற்றல் செய்த காரங் கைப்பிடித்த
நாணி வில்லத் திரமுழக்க நைந்து கழிந்தோய்ந் தடங்கிநின்று
பேணி வரைக்குக் குறைநீர்கை யுறையிற் பிரிய முறஊந்து
பாணி குவித்து நேயமொடு பரவு மரசிற் படிந்தனவே. 26

பலவாம் கருமம் அதனிலொரு பயனு மிலவென் றற உணர்ந்து
துலமே வாதபஜனை செயும் தொண்டர் தொகைபோல் வரைமீது
சலமே யருவி பலவாகத் தாழ்ந்து வெவ்வே றாயொழுகி
நிலமே வுறவே ஒன்றுபட்டு நெடிய நதியாய் விரிந்தனவே. 27

கடிமா மலரார் தருவான் தோய் கனமால் வரைமீ மிசைமேய
வடிவார் பசிய ஒளியசொன மணலை வாரிக் கொடுபோந்து
நெடுமா நிலத்திற் படர்கின்ற நீத்த முகத்தின் நிலைநோக்கி
முடியார் அமரர் இதுசொன்ன முகியென் றெடுத்து மொழிந்
தனரே. 28

நோகத் தன்னை மிகவருத்தி நொய்தின் எடுத்து நெடுந்தொலை
போய்
மாகத் துயர்ந்த வரைமீது வலியால் எறிந்த கொடும் பகையாம்
மேக ராசி கிடைத்த தின்னே வீப்பல் என்னாச் சேவகத்து
நாகக் குழுவைக் கைக்கொடுபு நடக்குங் கடலை நிகர்த்ததுவே. 29

26. இதுவும் மேகங்களின் செயல். சேணின்—தொலை விலிருந்து. அத்திரம்—அம்பு, பாணி—கை.

27. மேகங்கள் மழை பெய்ய நதியாய்ப் பெருக்கெடுத்த நிலை. துலம் மேவாத—ஒப்பில்லாத. தருமத்தால் பயனில்லை என்றுணர்ந்து பக்தி செய்யும் தொண்டர்களைப்போல, மேக நீர் தாழ்ந்து அருவியாக ஒன்றுபட்டு நதியாய் ஓடிற்று.

28. கடிமலர்—மணமிக்க மலர். சொன்ன மணலை— பொன் போல் ஒளி விடும் மணலை. நீத்தம்—நதியாய் ஓடி வரும் மழை நீர். சொன்னமுகி—திருவேங்கட மலையருகே ஓடும் ஆறு. இது கண்ணப்பர் சரிதத்தின் வரலாற்றால் புகழ் பெற்றது.

29. ஆறு பாறைகளை உருட்டி வருவது, தன்னை வருத்திக் கொண்டு போய் மலைகளின் மீது பொழிந்த மேக ராசியை அழிக்க எண்ணிக் கைக்கொண்டு நடக்கும் கடல் போலிருந்தது. மாகத்து—பூமியில், மேகராசி—மேகக்கூட்டம், வீப்பல்—அழிப்பேன், நாகம்—மலை, பாறைகள்.

கிரிநின் றிழிந்து மேதினியிற் கிளருந்திரையார் வெள்ளமிசை
க்ரியின் திரள்வெண் மணிவிளங்கக் கண்டு தமது புழையில்இட்ட
பெரிய கருவி தெனஅதிகப் பிரிய மொடுகொண் டடைகிடக்கும்
வரிகொள் நெடிய பேர்யாக்கை வலியார் வன்மீன் கணமம்மா. 30

பருமா மணிநித் திலநீலம் பத்தி யொழுங்கிற் படர்நதியில்
வருமா லவைவான் தனுநிகர்ப்ப மாழை மணல மினலேய்ப்ப
இருமா வரம்பின் மோதுமலை இடியின் முழக்கம் இணையாகப்
பெருமே தினியின் முகில்பயிலும் பெற்றித் தாகப் பிறங்கியதே. 31

மங்கை மார்கள் பஞ்சிகொட்டும் வளைவில் லோடு நாளமுறு
செங்கு முதவீ திரண்டுவரு திரையாம் நெடிய கரம் தாங்கித்
தங்கும் விலங்கின் இனங்கள்தமை ஈர்த்துச் சாரும் தன்மையினாற்
புங்க மாரச் சிலையேந்திப் பொருதும் வேடர் போன்றதுவே. 32

கன்னல் சுரும்பு மலரும்அலைக் கரத்திற் றாங்கிக் கரியநிற
அன்னிய புட்ட மவைகூவ அருகு குளிர்தென் றலும்பாயத்
துன்னு மகரக் கடற்கிறைமீத் தொடர்ந்து சமரம் புரிவதற்கு
மன்னும் வேனிற் கிறையவனை வாரி நிகர்த்து வயங்கியதால். 33

30. கிரி—மலை. கரி—யானை, மீன்கணம் நீரிற்படிந்த யானைகளின் வெண்மணி (கொம்பு)கண்டு பொந்துகளிலிட்ட தமது முட்டைகள் என அடைகிடக்கும்.

31. மணி நித்திலம் நீலம் நதி அடித்துவரும் தோற்றம், இந்திரவில் ஒப்பவும், பொன்மணல் மின்னல் ஒப்பவும். கரையில் மோதும் அலை இடி யொப்பவும் வர, ஆற்றின் செலவு பூமியில் முகில் பயில்வது போன்றது. நித்திலம்—முத்து. பத்தி—வரிசை. வான்தனு—இந்திரவில். மாழை மணலம்—பொன்னிற மணல். மேதினி—பூமி. பெற்றித்து—தன்மை உடையது,

32. பஞ்சி கொட்டும் வில்லும், குமுத மலரும் ஒத்த அலைகள் திரண்டு விலங்கினங்களை ஈர்த்துச் செல்லுதல், பொரும் வேடன் போன்றது. வீ—மலர். ஆரம்—சிலை. சந்தனக் கொம்பாலான வில்.

33. கடல் மன்மதனை யொத்தது, கன்னல்—கருப்பு வில், சுரும்பு—வண்டு, அன்னிய புட்டம்—காக்கையினத்துக்கு அன்னிய மான குயில், பாய—வீச, மகரம்—மீன், சமரம்—போர்; வேனிற்கு இறைவன்—மன்மதன், வாரி—கடல்

பிரிவாற்றாத நிலைமையவாய்ப் பிறந்த அகத்தின் நிறைவுற்ற
விரிவா மணிரா சிகளோடு வேண்டு பொருளைக் கைக்கொண்டே
உரியநெறியால்புக்ககத்துக்கொதுங்கும் இணையில்கற்பினள்போல்
கிரியார் பொருளை வரன்றி வெள்ளம் கிளர்தண் கடலை அடைந்
ததுவே. 34

கந்த மமரும் நதிவாடை பயிலும் பாரில் கதித்தெழுந்த
பந்த மேய சராசரமாம் பயிர்கள் தம்மை மிக வெதுப்பி
நந்த வாற்றும் ஊழ்வினைநோய் நாடா தகற்றிக் கதிர்பொருத்திச்
சிந்தைமகிழ்ந்து நட்டவன்தன் சேவைக்கிசையச்செய்திடுமால். 35

இன்ன நதிக்கு நாடுநகர் பலவுண் டிதனுக் குரிய வெற்பின்
மன்னு வளங்கள் மொழிதரநான் மறையோன் மயங்கும் அவை
யுணர்ந்தும்
துன்னு மாசை மிகையால்நான் உறவோ ராமற் சொலத்துணிந்த
என்னை அறிவின் மிகச்சிறந்தோர் இகழா தெடுத்துப்புகழ்
வாரோ. 36

ஆற்றுப் படலம் முற்றும்

34. புக்ககம் செல்லும் கற்புடைப் பெண்ணும் நதியும் கடல் புக்ககம். கிரியார்—மலையளவான, மலையிலிருந்து கொண்டு வந்த.

35. கந்தம்—மணம், வாடை—வடக்குக் காற்று. நதியும் பயிர் செய்பவனும்.

36. அவையடக்கமாகச் சொல்லியது. நான்மறையோன்—பிரமன். அவனும் வளங்கள் கூற அஞ்சுவான். ஓராமல்—சிந்தனை செய்யாமல்.

## 4. திருமலை தோன்று படலம்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்—வேறு

ஆதியாம் பிரமம் முன்னர் அவ்வினயப் படைத்துக் காக்கும்
பூதியார் தனது தொண்டு புரிதரு தன்மை யென்னும்
நீதியை இழந்தோர் தம்பால் நெடிய ஆதரவு பூண்டு
சோதியாம் உருக்கொண் டாளத் தோன்றிய சரிதம் சொல்வாம். 37

அண்டர்பூ உலகோர் தங்கள் நிலைமையோர்ந் டதவர்கள் தம்மை
கொண்டபே ராவ லோடு குழுவச் செய் தடிமை கொள்வோன்
வண்டுளர் அலங்கல் பூண்ட மாதவன் கருத்துட் கொள்ளக்
கண்டுவை குண்டம் சாலக் கருத்திடைக் கனிவு பூண்டு. 38

ஒலிகிளர் துளவத் தாரான் தனைப்பிரிந் தொடுபோ தாற்றேன்
நலிவறப் புவியின் முன்போய் நானிடம் ஆவே னென்று
வலியஆந் நிமித்தம் கொண்டு வறுமை நோய் அகற்றிக் காக்கப்
பொலிவுறும் மலைய தாகிப் புவியிடைப் போந்த தன்றே. 39

பரிதிஆ தியகோள் யாவும் மேகமும் பாரை ஓம்பக்
கருதிவான் நெறியில் எய்தும் கதியினால் தளர்வ டைந்த
திருதயம் கவிக்கத் தங்க ஈசனல் இரக்கம் எய்தி
ஒருமையாம் தனது வீட்டை உதவிய தென்ன ஓங்கும் 40

37. பிரமம்—பரம்பொருள் (ஆகிய நாராயணன்). அவனி—உலகு. பூதி—செல்வம்.

38-39. குளகம். அண்டர்—வானோர். குழுவ—தன் திருவடியில்திரள. அலங்கல்—மாலை. கனிவு—கருணை, வைகுந்தமே உயிர்களிடத்துக் கருணை கொண்டது.

39. துளவம்—துளசி. தனை—திருமாலை. நலிவற—துன்பம் நீங்க. இடம்—தங்குவதற்குரிய இடம். நிமித்தம்—நோக்கம். போந்தது—வைகுந்தம், மலையாகிப் பூமியினில் வந்திருந்தது.

40. பரிதி—சூரியன். கோள்—கிரகம். ஓம்ப—பாதுகாக்க. ஒருமையாம் தனது வீடு—ஒன்றேயாகிய தன் இருப்பிடமான வைகுந்தம்.

ஈங்குற ஒளிரும் மேலாம் எழிற்கிரி தனக்கி யைந்த
நான்குகந் தமில்வெவ் வேறுய் நவிலுதற் குற்ற நாமம்
தாங்கிய சரிதம் தன்னைச் சாற்றுவல் சரத மாக
வீங்கிய திரள்தோள் ஞான வேந்தெனப் புகல லுற்றான். 41

கிஞ்சமும் பாவம் பற்றாக் கிரேதமாம் உகத்தில் எங்கும்
விஞ்சுறு கொடுமை செய்யும் விடைப்பெய ரசுரன் தோன்றி
வஞ்சகம் அகற்றும் துய்ய வைகுண்ட கிரிமீ தேறும்
நஞ்சென உலாவும் எல்லை நடுங்கினர் முனிவ ரம்மா. 42

பாதக அசுரன் செய்யும் பலவித இடரால் நொந்து
சாதக நெறியின் நீங்கித் தயங்கிய முனிக்கு ழாங்கள்
மாதவன் தாளை வாழ்த்த மனத்திடை மிகக்க ளித்தங்கு
ஆதவ னென்னத் தோன்றி ''அல்லல்நீர் அகன்மின்'' என்றான் 43

கடவுள்தன் உரைகேட் டுள்ளக் கவையெலாம் நீத்தோ ராகித்
தடமிகும் மதியோ டுற்ற தாபதர் அளப்பி லாத
திடமொடு தமது செய்கை செழித்திட இருக்கும் எல்லை
அடல்பெறும் அசுரன் ஆண்டவ் விடத்தினின் றகன்று மாதோ. 44

41. நான்கு உகம் - கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் கலியுகம் என்ற யுகங்கள் நான்கும்; வெவ்வேறு பெயர் பெற்ற சரிதம். சாற்றுவல் - சொல்வேன். சரதமாக - உண்மையாக.

வெவ்வேறு பெயர்களாவன : கிருதயுகத்தில் அஞ்சனாத்திரி, திரேதாயுகத்தில் நாரணாத்திரி, துவாபரயுகத்தில் நரசிங்காத்திரி, கலியுகத்தில் வேங்கடாத்திரி. (அத்திரி - மலை.)

42. கிஞ்சமும் - சிறிதும்; கிஞ்சித் என்ற வடசொல், கிரேதம் முதல்யுகம், மலையின் நான்கு முகத்தில் ஒன்று. விஞ்சுறு - அளவற்ற; விடைப்பெயர் அசுரன் - இப்பெயருடைய அசுரன்; இடபாசுரன். அசுரன் வைகுந்தமலை மீது ஏறி உலாவ, முனிவர் நடுங்கினர்.

43. குழாங்கள் வாழ்த்த, மாதவன் களித்துத் தோன்றி என்றான். சாதகநெறி - தவநெறி. மாதவன் - திருமால். ஆதவன்- சூரியன்.

44. கவை - துன்பம். தாபதர் - முனிவர். அடல் - வலிமை;

எம்பிரான் பத்தி முன்னர் இழைத்ததால் இப்பி றப்பில்
தும்புரு தீர்த்தம் நண்ணித் தோய்ந்தனன் தோய்த லோடு
நம்புறு பத்தி யெய்தி நரகிரி தன்னைப் போற்றி
அம்புய மலரில் சென்னி அறுத்தவன் அடியில் வைத்தான். 45

வைத்தவன் சென்னி மேலை வரத்தின் முன்போற் பொருந்த
இத்திறம் விடாது பூசை இயற்றிய இடபன் தன்மேல்
அத்தன்நல் விரக்கத் தோடை யாயிரம் பகலின் பின்னர்
ஓத்தவன் முன்னர்த் தோன்றி உனக்குவேண் டுவகேள் என்றான். 46

**அசுரன் வேண்டுகோள்**

''இந்திர பதவி வேண்டேன், இமையவர் நாட்டி லுள்ள
சுந்தர மிகுந்த மாதர் சுரதமும் வேண்டேன், ஐய,
தொந்தமாய் உன்ற னோடு சோர்விலா அமரி ழைக்க
வந்தஎன் கருத்து முற்ற வரமருள் செய்க'' என்றான். 47

வரந்தரக் கேட்டு நின்ற மதியிலா அவுணன் கொண்ட
திரந்தனை அறிதும் என்னாச் சிறிதுநாள் அமரி யற்றி
உரந்திகழ் அவன்சி ரத்தை உகுத்திடக் கருதி எந்தை
கரந்தனில் திகிரி கொள்ளக் கண்டுகை தொழுது சொல்வான். 48

45. முன்னர் - முற்பிறப்பில். தும்புரு தீர்த்தம் - திருமலையில் உள்ள ஒரு தீர்த்தம். அறியாமலே தீர்த்தமாடலும், பக்தி எய்தினான். நரகிரி - நரசிங்ககிரியாகிய இம்மலை.

46. இடபன் பெற்ற வரத்தினால் அவன் தலை மீண்டும் உடலோடு பொருந்திக் கொண்டது, இடபன் - இடபாசுரன், ஐயாயிரம் பகல்-ஐயாயிரம் நாள்கள். அவன் தவம் செய்த பின்னர், அத்தன், கேள் என்றான் என்க.

47. இடபாசுரன் கூற்று. சுரதம் - போகம், தொந்தமாய்: துவந்தயுத்தம், அமர் - போர்.

48. அவுணன் - இடபாசுரன்; திரம் - வலிமை. என்னா- என்று கருதி. உரம் - வலிமை. உகுத்திட - கொய்ய, எந்தை; திருமால். திகிரி - சக்கராயுதம்.

''துப்பிலா அமர துன்மேல் தொடங்கிய பாவி யேனுக்கு
ஒப்பிலா வீடு நல்க உற்றநின் கிருபை கண்டேன்
இப்பொருப் பினுக்கென் நாமம் இட்டனைத் துலகுங் கூற
அப்பனே அருள்வாய்'' என்னா அடிமிசை முடிபு னைந்தான். 49

**இடபகிரி**

ஐயனும் உளம்ம கிழ்ந்தவ் அவுணனுக் கழிவில் வீடு
வையக மேத்த ஈந்தவ் வரையினுக் கவன்றன் நாமம்
வெய்யவன் விளங்கு காறும் விளங்குக என்ற கன்றான்,
பையுள்தீர் அரச, என்னாப் பகர்ந்தனன் தவத்தின் மிக்கான். 50

செப்பிய முனிவன் செய்ய திருவடி சென்னி சூடி
''ஒப்பிலாச் சரிதை நாயேன் உளமிசை உறையு மாறு
தப்பிலா துனைப்போற் கூறத் தரணியி லுளரோ ஐய,
அப்புறம் நடந்த யாவும் அறைக'' என அறவோன் கூறும். 51

**அஞ்சனாரத்திரி**

கேசரி மனைவி பன்னூற் கேள்வியிற் சுதரி லார்க்கு
நீசமாம் நரக மன்றி நெடியவீ டில்லை யென்ற
வாசக முணர்ந்து நொந்து மைந்தனை விரும்பி ஞான
ஈசனேர் மதங்க னென்னும் இருடிதாள் தொழுதி சைத்தாள். 52

49. இடபாசுரன் வேண்டுகோள். துப்புஇலா-அறிவில்லாத. வீடு: சக்கராயுதம் பிரயோகம் செய்தால் பரமபதம் கிடைத்தல் உறுதி என்றவாறு. இம்மலைக்கு என் பெயரிடுக என. பொருப்பு-மலை, அடிமிசை - திருமாலின் அடிமிசை.

50. வெய்யவன் விளங்குகாறும் - சூரியன் உள்ளவரையும், பையுள் - துன்பம், அரச: சனகனை விளித்தது. என்றான் சதானந்த முனிவன்.

51. ஐய: விளி, முனிவனை விளித்து, என - என்று சனகன் கேட்க. அறவோன் - முனிவன்.

52. கேசரி - ஒரு வானர வீரன், அனுமன் தாயாகிய அஞ்சனையின் கணவன். மனைவி - அஞ்சனை, சுதர்இலார்க்கு - புதல்வர் இல்லாதார்க்கு, மதங்கன்: ஓர் இருடி, இசைத்தாள் - சொன்னாள்.

வெம்பிய நினைவோ டுற்ற மின்னனாள் குறிப்பு ணர்ந்து
''கம்பித மாநின் றுள்ளக் கவையறற் குபாயங் கேண்மோ
பம்பையின் பூர்வ திக்கைம் பானியோ சனைக டக்கின்
நம்பினோர்க் கருளும் நார சிம்மனா லயமாம்'' நங்காய்.

''அந்தநல் லால யத்துக் கடுத்ததென் திசையிற் றோன்றும்
நந்தலை யகற்று மேலாம் நாரண கிரிக்கு தக்குக்
கந்தமே மிகும்ஆ காய கங்கைநீ ராடி ஆங்கு
விந்தையா யீரா றாண்டு விரதம் நீ புரிக மாதோ. 54

''குறையுறும் இடையூ றின்றிக் கொண்டநின் விரத முற்றின்
மறையவன் துதித்தற் கொத்த மாண்புடை யறிவும் மூன்றாம்
பிறையணி பரற்குங் கூடாப் பீடுடை வலியும் வாய்ந்த
நிறைமகப் பெறுவாய்'' என்ற இருடிசொல் நெஞ்சுட் கொண்டாள்.

நெஞ்சிடை நினைந்தவ் வாறே நெறிக்கொளத் தீர்த்த மாடிச்
குஞ்சரா சனத்தை முக்காற் கோலியந் நிழலின் கண்ணே
விஞ்சுறு தவமி ருந்து மெலிந்தவள் அங்கை தன்னில்
வஞ்சமாய் மருந்து வானோன் வனக்கனி தினமொன் றீவான். 56

53. வெம்பிய - துன்புற்ற. மின்னனாள் - அஞ்சனை. கம்பிதம் - நடுக்கம். கவை - வருத்தம். கேண்மோ - கேட்பாயாக பம்பை - ஒரு நதி. பூர்வதிக்கு - கிழக்கு. ஐம்பான் யோசனை - ஐந்து யோசனை. நரசிம்மன் ஆலயம் - துவாபரயுகத்தில் நரசிம் மாத்திரி என்று பெயர் பெற்ற இம்மலையிலுள்ள கோயில். இப் பாடல் மதங்க முனிவன் கூற்று.

54. நந்தல் - துன்பம். நாரணகிரி - திரேதாயுகத்தில் இப் பெயர் பெற்றது. உதக்கு - வடக்கு, ஆகாய கங்கை - அங்குள்ள ஒரு தீர்த்தம். கந்தம் - மணம், ஈராறு ஆண்டு - பன்னிரு வருடம்.

55. மறையவன்-பிரமன். பரற்கும்: சிவபிரானுக்கும். பீடு - பெருமை. 53-55 மதங்க முனிவன் கூற்று.

56. குஞ்சராசனம் - அரசமரம். விஞ்சுறு - மேலான, மெலிந்தவள் - தலத்தால் உடல் மெலிந்திருந்த அஞ்சனாதேவி. வஞ்சமாய் -வஞ்சநோக்கோடு. மருத்துவானோன் - வாயுதேவன். அவள் கையில் வாயுதேவன், உண்பதற்காகத் தினமொரு கனியை இட்டு வந்தான்.

இனிமையாங் கனியொன் றென்றும் ஈந்தருள் வாயு தேவன்
தனிமையில் தவம்மு டித்த தையல்தன் தடக்கை மீது
புனிதமாந் தனது விந்து புகட்டியோர் கனியை யீயப்
பனிமொழி முனம்போ லுண்டு பண்புறு கருப்ப முற்றாள். 57

அக்கிரி மீதிற் றானே அஞ்சனை பொறையு யிர்த்த
தக்கசேய் வரவை யோர்ந்து தவத்தினர் யாரும் ஈண்டி
புக்கனர் சிசுவை நோக்கிப் புகழ்ந்தனர் அனுமா னென்னும்
மிக்கநல் நாமஞ் சாத்தி வினம்பினர் ஆசி மன்னோ. 58

சீர்பொறை யடிநி றைந்த திரேதமாம் உகத்தில் இந்த
வார்தலைச் சிகரமீது மாருதி தனைப்ப யந்த
கார்குழல் அஞ்ச னாளின் காரண நாம மேகொண்டு
ஏருறச் சிறந்த தாமால் இப்பெருங் கிரிய தென்றான். 59

**சேடாத்திரி**

அகமலர் தரவே கேட்ட அரசனம் முனியைப் போற்றி
உகமது மூன்றிற் சேடாத் திரியென நாம முற்ற
நகமதன் வரலா றைய நானறி வுறக்கூ றென்ன
முகமலர்ந் தறிவின் மேலோன் களிப்பொடு மொழிய லுற்றான். 60

கடையிடைக் காவ லாகக் கட்செவிக் கரசை வைத்தைம்
படையுடைப் பரமன் தேவி பாலுற வதியுங் காலை
இடையினில் வாயு வானோன் ஈண்டியுள் ளேக நோக்கித்
தடைசெய வெகுண்டு நின்று சதாகதி யினைய சொன்னான். 61

57. வழக்கம் போல் கனியை ஈந்த வாயு ஒரு நாள் தனது விந்துவைப் புகட்டிய கனியை இட்டான்; தெரியாமல் அவள் உண்டு கருவுற்றாள்.

58. பொறை உயிர்த்த - மகவைப் பெற்ற. சேய்-மகவு மகவுக்கு அனுமன் என்று நாமம் சாத்தினர்

59. மாருதி - அனுமன். காரண நாமம் - அஞ்சனாத்திரி என்ற பெயர். என்றான் சதானந்தன்.

60. அகம் மலர் தர என்க. அரசன் - சனகன். முனி-சதானந்தன். நகம் - மலை, ஐய - விளி, மேலோன் - சதானந்தன்.

61. கடை-வாயிற்கடை. கட்செவிக்கரசு-பாம்பாகிய ஆதி சேடன் ஐம்படை-திருமாலின் பஞ்சாயுதங்கள்; சங்கு சக்கரம் வில் வாள் தண்டு. பிரமன்-திருமால், தடை செய சேடன் தடுக்க. சதாகதி-எப்போதும் சரிப்பவனாகிய வாயு. வாயு-காற்று.

''சித்திர வாயில் சாக்குஞ் செயவிச யாதி யோரை
முத்திரப் பகையை வென்றோர் முனிந்ததை யறிந்தி ருந்தும்
எத்திரத் தால்நீ என்னை எய்திடாய் எனத்த டுத்து
மித்திர பாவம் நீத்தாய் மிகுபணா டவியோய்'' என்றான். 62

''செயவிச யாதியோர் போற் சேடனை நினைத்த தேதம்
சுயவலி மிக்கோன் என்று சோர்விலா தறிவா யாகப்
பயனிலா மொழிகொண் டென்பாற் பகட்டலை, காலே, உன்றன்
புயவலி அறிவல்'' என்னாப் புகன்றனன் உரக வேந்தன். 63

குரன்மிக அதிரச் சொன்ன குண்டலி யிசையு ணர்ந்த
அரண்மிகு தேவி யண்ணற் கறையஅஃ தறிந்த ஐயன்
உரமிகப் பேசற் கேது உற்றதென் னெனவி னாவத்
திரமிகு வாயு வானோன் சினந்திவண் அடைந்தான் என்றான். 64

சருத்துற அன்பி னோடங் கமலைநா யகன்பொற் றாளை
மருத்துவ னிறுத்தி யேத்தி வந்தனை புரிந்து நின்றான்
பெருத்தகி சினந்து வாயாற் பிதற்றுதல் உணர்ந்த எந்தை
''திருத்தமா நினது வாக்காற் றிறம்வெளி யாவ தின்றால் 65

''ஆகையால் உரக வேந்த, அமரர்க ளொடுநீ யேகி
ஓகையாய் மேரு வீன்ற வொளிருமா னந்த மென்னும்
வாகையாம் மலைபே ராது வளைகுதி'' என்ன லோடச்
சாகையுற்ற தனைச் சுற்றித் தழுவியாண் டிருந்தா னன்றே 66

62. சய விசயர்-வைகுந்தத்தில் உள்ள துவார பாலகர். வென்றோர்-முனிவரான துருவாசர். முனிந்தது இவரைத் தடுத்த காரணத்தால் சய விசயர் அசுரராகும்படி சாபம் பெற்றனர். முத்திரப்பகை- காமம் வெகுளி மயக்கம். எத்திறத்தால்-எந்தப்பலத் தால்-மித்திர பாவம்-நட்பு என்ற நிலை. பணாடவி-படங்களாகிய காடு; ஆயிரந்தலையுடையவன் ஆதலால்; ஆதிசேடன்.

63. ஏதம்-பிழை. மிக்கோன்-நான் என்க. காலே-வாயுவே. உரக வேந்தன்-சேடன்.

64. அதிர-வாயு சேடன் இருவர் வாக்கு வாதம் உரத்த குரலாயிருந்தபடியால். குண்டலி-பாம்பு; சேடன். இசை-சத்தத்தை. அண்ணற்கு-திருமாலுக்கு. என்றான் ஆதிசேடன்.

65. கமலை - இலக்குமி. மருத்துவன்-வாயு. அகி-பாம்பு, சேடன்.

66. உரக வேந்த-விளி; ஆதிசேடன். மலை-ஆனந்தகிரி. என்னலோடு - திருமால் இவ்வாறு சொல்லுதலும். சாகை யுற்றதனை-கிளைகளோடு கூடிய அம்மலையை.

தழுவிய சேட னோடச் சைலத்தை எடுவென் றெந்தை
முழுவிடை யருள வேயம் மொழிவலி கொடுகி ளப்பி
வழுவிடா தெடுத்துப் பல்கா வதங்கடந் தெய்து போழ்து
குழுமிய மேரு வென்றன் குமரனைக் காவென் றன்றே. 67

மேருவும்நிலை தளர்ந்து மெலிவொடு வேண்டல் நோக்கிக்
காருத லாறி வேகக் காற்றிறை கருணை கொள்ள
ஒருத லுற்ற சேடன் உவப்புடன் வியப்படைந்து.
சாருத லுடனன் னானைச் சாலவுந் துதித்து நின்றான். 68

மகிமையார் துவா பரத்தில் வைகுண்ட மலையி னும்பர்
அகிலமீ துள்ளோ ரேத்த ஆனந்த மலையைச் சேடன்
சகிதமாய்க் கொடுசேர்ப் பிக்கத் தளர்வுறு சேட னுள்ளத்
திகிலினை யகற்றி யப்பேர் தெரிதரப் புனைந்த தென்றான். 69

**வேங்கடாத்திரி**

பவமலி கலியு கத்திற் பாருளோர் துயர கற்றிச்
சிவமலி தரநின் றோங்கும் சிலம்பினுக் கவ்வு கத்தின்
நவமலி வேங்கடப்பேர் நண்ணிய திறமை தன்னைத்
தவமலி முனிவ, எற்குச் சாற்றெனத் தக்கோன் கூறும். 70

கரியதள் தரித்தோன் வாழுங் காளத்தி நகரந் தன்னில்
அரிதிரு வடியர் தம்மில் ஆதியாம் புரந்த ரப்பேர்
விரிதர வுடையோன் வேத விதிமுறை தவறா னென்றும்
எரியிடை ஆவி னெய் வார்த் தேகமாய் மகம்வ ளர்ப்போன். 71

67. சைலம்-மலை, அருள-வாயுவுக்கு உத்தரவிட, எந்தை திருமால். குமரனை:மேருவின் குமரன் ஆனந்தகிரியை.

68. காருதல் ஆறி-சினந்தணிந்து. காற்றிறை-வாயு.

69. உள்ளத்திகில்-ஆனந்த மலையைச் சூழ்ந்திருந்ததாலும் வாயுவால் எரிக்கப்பட்டதாலும். அப்பேர்-சேடகிரி. என்றான் சதானந்த முனிவன்.

70. பவம்-பிறப்பு. சிவமலி-இன்பம் பொங்க. முனிவ-விளி. தக்கோன்-சதானந்தன்.

71. கரியதள்-யானைத்தோல், தரித்தோன்- சிவபிரான், புரந்தரன்- இந்திரன், என்றும் தவறான் என்க. மகம்-யாகம்.

மறையவர் மரபுக் குற்ற வரன்முறை வழுவி டாமல்
முறைமையின் ஒழுகி நீர்வாழ் முளரி நாயகனை ஏய்ப்ப
நிறைதரும் இல்ல றத்தின் நெறிவழி வாழு கின்றோன்
அறைதரு மசவி லாபல் அல்லலுற் றழுங்கி னானால். 72

குறையுறும் உளத்தான் என்றுங் கொண்டபே ரவாவி னாலே
கறையுற வெதும்பு போழ்து காதலன் தோன்றக் கண்டு
மறையவன் மனங்க ளித்து மாதவன் எனப்பே ரிட்டு
நிறையுறு மறைக ளோடு நீதியும் உணரச் செய்தான். 73

வேதபா ரணனல் வைகை விழுநதி பரந்து லாய
சாதமார் வழுதி நாட்டிற் சந்திர விலேகை யென்னும்
பேதைமை நாணம் அச்சம் பிறங்கிய மாதை நோக்கிக்
காதலாய்ப் புதல்வ னுக்குக் கடிமணம் முடித்தானன்றே. 74

குணவதியான துய்ய கோதையங் கரத்தைப் பற்றித்
தணவிலா தவள்தன் னோடு தழுவிவா ழுறுசில் நாளில்
உணர்வினிற் படல மூடுற் றூழ்வலி வசத்தி னாகிப்
பணமத மீறி எல்லிற் பாவையைப் புணர்தற் குற்றான். 75

அறிவினிற் சிரேட்ட மான அவன்மனை யாளப் போழ்து
''நெறிதவ றாமல் வேள்வி நித்திய மியற்றும் நாதா,
சிறியவர் தமைப்போற் புத்தி சிதைந்திடல் எவன்கொல் அந்தோ
பொறிவச மான பேர்க்குப் புகழணு கிடுமோ யாண்டும்?'' 76

72. நீர்வாழ்-பாற்கடலில் உள்ள முளரி நாயகனை-தாமரையிலுள்ள இலக்குமி நாயகனை. ஏய்ப்ப-ஒப்ப.

73. காதலன் தோன்ற-மகன் பிறக்க. மறைகள்-வேதங்கள். நீதி-தரும சாத்திரங்கள். உணரச் செய்தான்-கற்பித்தான்.

74. வேதபாரணன்-வேதம் கரை கண்டவனாகிய இந்திரன் என்ற பெயருடைய அவ்வந்தணன். வழுதி நாடு-பாண்டி நாடு. பேதைமை நாணம் அச்சம் - பெண்ணுக்கியல்பாய் அமைய வேண்டிய (பயிர்ப்புடன்) அருங்குணங்கள். பிறங்கிய-சிறந்து விளங்கிய.

75. படலம்-இங்கு அறிவின்மை. பணமதம்-காம உணர்வு எல்லில்-பகலில்.

76. சந்திரலேகை கேட்கிறாள்.

''மாமனார் மாமி உற்றோர் மற்றையோர் நிறைந்தி ருப்ப
நாம நாள் மறையோய் இந்த நண்பகல் தழுவச் சிந்தை
தாமத முற்ற தென்னோ, சாற்றுதி'' எனவி னாவ,
''வாமமே கலையாய், காமம் வகிக்கொணா தென்னால்''
என்றான். 77

''கற்புடை யார்க்குத் தெய்வங் கணவனை யனறி உண்டோ?
அற்பரா யினும்அன் னார்தம் அகம்வெறுப் பனசெய் வாரோ,
விற்பன மாதர்?'' என்று விதிவழி யதனை ஓர்ந்து
பற்பல வகைதெ ளிந்து பார்ப்பனி பதிக்குச் சொல்வாள். 78

கலி விருத்தம்

ஏர்திரட்டு முருவுடை யேந்தல் யான்
நீர்திரட்டு தற்கேகும் நெறிக் கொளீ இச்
சார்திரட்டலைத் தண்டலை முந்தெனாக்
கார்திரட்டு குழன்மின் கழறினாள். 79

ஊனி லைக்கொளும் என்பும் உருகுறத்
தேனி லைக்கொள் மதன்கணை தீத்தலால்
தானி லைக்கொள் தரத்தினன் அன்மையால்
வானி லைக்கொள் பொழிற்றுறை மன்னினான். 80

77. நாமம்-புகழ். தாமதம் உற்றது-வழுவியது. சாற்றுதி-சொல்வாயாக. வாமம்-அழகு. வகிக்க-தாங்க.

78. அப்பார்ப்பனி கூற்று. அகம்-மனம். விற்பன மாதர்-அறிவுடைய பெண்டிர். பதி-கணவன்.

79. பார்ப்பனி அவன் காமத்துக்குடன்பட்டு ஒரு சோலைக்கு வருமாறு கூறுகிறாள். ஏர்-அழகு. ஏந்தல்-விளி; ஆடவரிற் சிறந்தோன். நெறிக் கொளீஇ-அந்த நெறிக் கொண்டு. சார்- அழகு. தண்டலை முந்து-சோலையின் கண் நீ முந்திவருவாயாக. கார் திரட்டு குழல்-மேகங்கள் திரண்டா லொத்த கூந்தலையுடைய அப் பெண். கழறினாள்-சொன்னாள்.

80. மதன் - மன்மதன். தீத்தலால் - எரித்தலால். நிலைக் கொள்தரத்தினன்-மனத்தை அடக்கும் தன்மையன். வான் நிலைக் கொள்-வானுற வோங்கிய.

ஆங்கோ ரால்நிழ லின்க ணங்குற
ஓங்குமா முலை யாளுரு நோக்குபு
வாங்கு ருத மயற்கடல் ஆழ்ந்தனன்
வீங்கு மாதி விதிவலி யாலரோ. 81

அன்ன காலையில் அந்தணன் இல்லவள்
சொன்ன வாறு தொடர்ந்தவண் எய்துறத்
தன்ன தாதரந் தாழ்குலத் தாளிடை
மன்ன நின்ற மறையவன் கூறுவான். 82

''மாத ரிற்சிறந் தாய்,உன் மனநிலை
யாது கொல் லென்ற றிதற் கிழைத்தனன்
பேத மென்றுண ரேல்பிழை காத்தி'' யென்று
ஓத அன்னவள் உண்மை எனக் கொளா. 83

நேரு றுங்குளிர் நீரந் திரட்டுபு
வாரு றும்முலை மாது மணாளனின்
ஏரு றுங்குண வன்மையை யெண்ணுறாத்
தேரு றும்முளத் தாளகஞ் சேர்ந்தனள். 84

சோலை வாயிடைத் தோன்றும் மினாள் மயல்
வேலை வாயிடை வீழ்ந்தவன் மென்கழை
ஆலை வாயி லகப்படல் போலஅக்
காலை வாயவன் செய்தல் கழறுவாம். 85

81. அங்கு ஓர் ஆல் நிழலின் கண் உற்றபோது அங்கிருந்த குறப்பெண் உரு நோக்க. வாங்குருத-மீட்க வியலாத. மயற்கடல்-காமக் கடலில். வீங்கும்-வலிமிக்க.

82. இல்லவள்-மனைவி எய்துற-வர. தன்னது ஆதரம்-தன் காமம். தாழ் குலத்தாளிடை-அக்குறமாதிடை. மன்ன-பொருந்த.

83. சிறந்தாய்-மனைவியை நோக்கிய விளி. பேதமென்று-தவறாக. காத்தி-பொறுப்பாயாக. கொளா-கொண்டு.

84. நீரம்-நீர். மாது-அவன் மனைவி. எண்ணுறுத் தேருறும்-எண்ணித் தேறிய.

85. இப்பாடல் கவி கூற்று. மினாள்-மின்னாள்; மின்போன்றவள், மயல்வேலை-காம சமுத்திரம். மென்கழை-மென்மையான கரும்பு.

86 முதல் 93 வரை சந்த விருத்தம்,

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியச் சந்தவிருத்தம்

பனிய டர்ந்து பரம்பி மூடுறு பரிதி தன்னொளி யினிலிர
வினிென ருங்கிய இருளி னுள்ளுற மேவு செம்மணி தனிலெழில்
நனியி லங்குற எதிரி னிற்புறு நாரி மேல்நசை மிகுதியால்
கனிவு தங்கிய மனதி லின்னல் கலந்து ளானிவை கழறுவான். 86

படிபெ றும்பய னெனவி ளங்கிய பாவை தன் முகம் நோக்குறு
முடிப டும்படி யடிவ ணங்குறு முனந கங்கள்அழுந்தியோ
துடிகொ ளிங்கித வழகு தங்குறு துணையிலென்றகம் நொந்ததோ
வடிகொள் வெண்சுதை நிகர்த ருங்கதிர் மதிக ளங்கமடைந்ததே.87

தந்தி கொம்பு குவிந்த திங்கிவள்தனத டத்தினை நோக்கியோ
விந்தை விற்கழை நொந்து கூறுதல் விழைதுதற்கிணை யின்றியோ
வந்த மின்னல் மறைந்த னங்கனை மறுவி டைக்கற வெட்கியோ
எந்த மைந்த ரினந்தெ ரிந்திவ ளெழில் துலங்க இசைப்பரே. 88

கொங்கு யிர்த்தவர் சோலை மேவுறு கோல மாமயில் போல்திரி
சங்கு சொர்க்க நிலாவு சேயவள் தானினா ளெனவுட் கொளீஇ
இங்கு நிற்புறு மாறி மேதினி யாவ ரங்க ளிழைத்தவோ
மங்கை யர்க்கர சாம்இ மாதென மாதர் கூறவ ழுத்துறா. 89

வரிசை மிஞ்சிய நிறவி ரஞ்சித மதியி னாளிடை யணுகுறு
இரச மிஞ்சிய கனியுறுஞ் செய லினிய வாகிய மொழியொடுஞ்
சரச மிஞ்சிய குறியொ டுஞ்சில சனைத ராவொரு கரமதாற்
பரிசமுஞ் செயவுருகு நெஞ்சொடு பதறு வானொடு பகருவாள். 90

''மாசு றாத முதற்கு லத்தினில் வந்து தித்தருண் மறையவா,
ஆசு றாத படிக்கு நீயகல் வாய்''எனா அவள் தடைசெய.
''ஏசு றாத துடிக்கு நேரிடை யாய்,உ னூரெது பெயரெது
கூசு றாத விதத்து நின்குல மேது கூறு'' என அறைகுவான். 91

86. பரம்பி-படர்ந்து, பரிதி-சூரியன், நாரி-அப்பெண், நசை-விருப்பம், இன்னல்-துன்பம்.

87. படி-பூமி, பாவை-அப்பெண். நோக்குறு-நோக்கி, கதிர்மதி களங்கம் அடைந்தது - ஒளிபொருந்திய உன்முகம் வாடிற்று.

88. தந்தியின் கொம்பு-யானையின் கொம்பு.

89. கொங்கு-தேன், சேயவள்-இலக்குமி.

90. மதியினாள்-மதிமுகமுடையாள், சனை-சன்னை; குறிப்பு. பரிசம்-மெய்தொட்டுப் பயிலுதல், பதறுவான், மாதவன். பகருவாள்; அப்பெண் கூறுவாள்.

91. முதற்குலம்-பிராமணகுலம். மறையவா-பிராமணா, அவள் தடை செய, அவன் எது என்று வினவ அவள் கூறுவாள்.

''தேவர் மாதவர் ஏத்து மத்திம தேய மென்னது தேயமே,
ஆவ லாய் எவ ரோடும் உற்றுற வாடும் வேசிஎன் அன்னையே
மேவ லாத புலைக்கு லத்திடை மேரை யற்றவன் எந்தையே,
ஏவ லாய்சுருள் குழலிற் குந்தலை யெனஅ ழைப்ப ர்கள்
என்னையே. 92

ஒப்பில் ஊன்நறைஉண்பதென்றகை, உத்தமா,உணர்க'' என்னவே.
''தப்பிஆ ரணன் ஈன மாம்வழி தன்னி லுன்னை யமைக் கிலென்,
சிப்பி யால்வரு முத்து வானவர் சென்னி மீதுற வில்லையோ,
துப்பி லாரிகழ் வார லாதெவர் தூறு வார்'' எனக் கூறினான். 93

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

மறையவன் றன்மேற் கொண்ட மையலை யுணர்ந்த மாது
முறைபிறழ் காலம் வந்து மூண்டதென் றுள்ளம் நைந்து
சிறையிடைப் பட்ட மானில் தியங்கிமேல் தேறி நின்றக்
குறைமதி யோனை நோக்கி அறநெறி கூற லுற்றாள். 94

'அன்னிய மாதர் தம்மை அணைவதே பாவம், மேலுந்
தன்னிக ரில்லா ஈனத் தையலைப் புணர்ந்தோர் என்றும்
இன்னலாம் நரகம் நண்ணி ஏங்குவ துண்மை யன்றி,
உன்னத வீடு பேறன் னோர்க்கொரு போதும் இன்றே. 95

''ஐயதூய் தன்மை யென்ன அறைந்தவை உணர்ந்தி லாயோ,
தையலார் வடிவிற் கொள்ளத் தகுவன உளவோ, காணில்
மெய்யறி புலவர் அங்க விலக்கணம் மேவு மாறு
பொய்யுற வுரைத்தார் கேட்டி'' எனப்பினும் புகலும் மாதோ. 96

92. மேரை-பெருமை, மத்தியதேயம், என் அன்னை வேசி, புலைக்குலம், என் தந்தை மேரையற்றவன், என் பெயர் குந்தலை.

93. ஊன் நறை-புலாலும் தேனும், தகை-தன்மை. உத்தமா விளி. ஆரணன்-வேதியன். ஈனம்எம்வழி-கீழ்ப்பிறப்பு. துப்பிலார்-அறிவில்லாதவர். தூறுவார்-இழித்துச் சொல்வார்.

94. தியங்கி-கலங்கி, குறைமதியோனை-அறிவில்லாதவனை.

95. ஈனம்-கீழ்ச்சாதி, வீடுபேறு-மோட்சம், இன்று-இல்லை.

96. ஐய-விளி; கொள்ளத்தகுவன-போற்றத் தகுந்தவை, உளவோ: இல்லை என்றபடி. பொய்யுரை-புனைந்துரையாக, கேட்டி-கேட்பாயாக.

‘‘அந்தமில் புலவுஞ் சிக்கும் அடைந்ததோ ரளக பந்திக்
கிந்தநல் லுலகில் வேறோர் இணைபெறு பொருளி லாமற்
சிந்தையிற் றளர்வோ டெங்குந் தேடிமேற் சைவ லத்தைத்
தந்தனர் உவமை யாகப் பலகலை யுணர்ந்த சான்றோர். 97

‘‘இளமையாம் பருவம் வாய்ந்த ஏந்திழை முகத்தில் தோன்றும்
வளமைகள் நிலைநி லாது மாறுறும் இயல்பு நோக்கி
உளமதிற் கனிந்தி தற்கோ உவகையாய்ந் தறைய எண்ணி
அளமிகும் அறிவி னோர்கள் அழிமதி நிகர்என் றாரால் 98

‘‘குவிதலோ டலர்த லுற்றுக் குலவுநன் னீரின் நீங்கில்
அவிதலாய் மாறுஞ் சால ஆசுடை விழிகட் கொப்பு
விவிதமாங் கலையு ணர்ந்த மிகுமதி யுடைய வல்லோர்
புவிதனி லாய்ந்து கஞ்சப் பூவெனத் தெளிந்தா ரன்றே. 99

‘‘தசையுடன் ஊத்தை நாறுந் தந்தநேர் பொருள்யா தென்று
திசைதொறும் நாடித் தேடித் தெரிந்தனர் இப்பி முத்தை
இசையிகு மதர நேரி இகத்திடை யாய்ந்து சொத்தை
வசைதிகழ் பவளங் கண்டு மனத்திட்ட மதித்தா ரன்றே. 100

‘‘கடினமா மொழிவ ழங்கு கந்தர மகற்கு நேராய்
இடியென அதிரும் நந்தை இயம்பினர், எழுந்து விம்மி
வடிவுடன் இலகுஞ் சொன்ன வனநிறை குயத்துள் உற்ற
குடிலவெவ் விரசங் காணக் கூறினர் சம் பீரத்தை. 101

97. பெண்ணின் உறுப்புக்களுக்கு உவமையாகச் சொல்லப் படுவனவற்றைப் பழித்துக் கூறுகிறாள். புலவு - முடை நாற்றம் அளகபந்தி - குழற்கற்றை, இணை - ஒப்பு, சைவலம் - பாசி.

98. அளம் மிகும் - கூர்மைமிக்க. அழிமதி - தேய்கின்ற சந்திரன்.

99. குவிதல் அலர்தல் - கூம்பலும் மலர்தலும், அவிதலாய் - அழிவதாய், ஆசு - குறைபாடு. விவிதமாம் - பல்வேறு வகைப் பட்டது.

100. தந்தம் - பல், இசைஇகும் - புகழ் நீங்கிய. அதரம் - வாயிதழ், நேரி - ஒப்பது.

101. கந்தரம் - கழுத்து, நந்து-சங்கு, குயம் - முலை, குடில- வஞ்சகமான. சம்பீரம் - எலுமிச்சை.

''மிதமறு குமரர்க் குற்ற மேனியின் செருக்கு மாற்றிப்
பதமுறச் செயும்உ ரோம ரேகையைப் பார்த்தீ டாக
மதமுறு கரித்தாள் தன்னின் மருவுபு கருவந் தன்ன
அதமிகு மந்துகத்தை அறைந்தனர் அறிவின் ஆன்றோர். 102

''சடமதிற் செருக்க டைந்த காலமா மிளைஞோர்க் குற்ற
திடமுடன் உயிரை நீக்கச் சின்னஞ்செய் கொடுமை நோக்கி
விடமுறு நகையி னோடு விளங்கிய கோர நாகப்
படமிணை யென்றார் நல்லோர் பிறவும் இத்தகைய பண்பே. 103

''பாக்கிய மடைந்த கன்னம் பலவித சரிதை கேட்டு,
தேக்கிய நலத்த துன்கை தேவபூ சனையி யற்றி,
ஊக்கமுற்றது நின்குக்கி உயர்நிவே தனம் அருந்தி.
வாக்கி லங்கியது நாமம் வரன்முறை தினம் பசித்து. 104

''கொடியன பலவா றாய கொலைத்தொழில் புரிந்த தென்கை,
அடிமையேன் இழிவூ னுண்ண அளவில்நோய் அடைந்த துந்தி,
கடியன பலசொற் கேட்டுக் கனவச டடைந்த காது
நெடியவாங் குலத் துதித்த நிகமநூல் ணர்ந்த தக்கோய். 105

''இரவியைத் தழுவற் கெண்ணி எல்லியும் நெருங்கப் போமோ
கரவிலா எரியைக் கிட்டிக் காட்டமெங் ஙனம்வாழ் வெய்தும்
குரவரிற் சிறந்தாய், நின்னைக் கூடயான் நினைவே னாகில்
அரவின்வாய்ப் பட்ட தேரை ஆவதற் கைய மின்றால். 106

102. ஈடாக - ஒப்பாக, கரித்தாள் - யானையின் கால், அதம் இகும் - அழிக்கும், அந்துகம் - கட்டும் சங்கிலி.

103. நாகப்படமிணை - அல்குலை பாம்பின் படத்துக்கு ஒப்பாக. இதுவரை பெண்வடிவத்தை இழித்துக் கூறிய குந்தலை இனி வேறு வகையாக அறிவுரை கூறுகிறாள்.

104. கன்னம் - செவி. குக்கி - குட்சி, வயிறு, கன்னம் பாக்கிய மடைந்தது, கைநலந்தது, குக்கி ஊக்கமுற்றது, வாக்கு இலங்கியது என்க, நாமம் - இறைவன் பெயர்களைச் சொல்லி, பசித்து - பஜித்து. இப்பாடல் அவன் சிறப்பு.

105. உந்தி - வயிறு, கன அசடு-மிகுதியான கீழ்மை, குற்றம். நிகமநூல் - வேதம். இப்பாடல் அவள் இழிவு.

106. இரவி - சூரியன், எல்லி - இருள், காட்டம் - காஷ்டம், விறகு, குரவர் - குருமார். ஆவதற்கு - நான் ஆவதற்கு,

''ஆனதால் என்பால் ஐய அதிசுகம் யாது மில்லை
ஈனமாந் தொழி லியற்றி இருவரும் அழிவு றாமல்
ஊனமில் கலைகள் யாவும் உணர்ந்தஉன் மனைவி தன்னோடு
ஈனமொன் றணுகு றாமல் இன்புறச் சுகிபோ'' என்றாள். 107

''பண்டியா னிழைத்த நோன்பின் பயனெழில் வடிவ மாகி
மண்டலந் தனில்யான் காண மாதென வந்த நின்னைக்
கண்டஎன் உளங்க ளிக்கக் கருணைநீ புரியா யாகில்
தண்டலை யிடைநீ காணத் தழலிடைச் சார்வல்'' என்றான். 108

ஆவியை விடுவேன் என்ற அந்தணன் குறிப்பு ணர்ந்து
பாவியாம் இவன்முன் நிற்கிற் பழியினிப் படரும் என்னாத்
தூவியார் அனக்கு ழாங்கள் தொடரெழில் நடையா ளோடத்
தாவியன் னாளைப் பற்றித் தழுவினன் தகைமை இல்லான். 109

வலிமையிற் றன்னைச் சேர்ந்த மாதவன் முகத்தை நோக்கிப்
''பொலிவுறு பூணூற் சிக்கம் புலை ஞருக்குண்டோ?'' என்ற
ஒலிசெவி யடையா முன்னர் ஒழித்தவ ளொடுவி ராவி
மெலிவற ஈரா றாண்டு மேதினி மீது வாழ்ந்தான். 110

இவ்வண மிருக்கு நாளில் ஏந்திழை யிறக்க நோக்கிக்
கவ்வையுற் றிரங்கி வாடிக் கண்டவ ரேசப் பாரில்
எவ்விட முஞ்சார் பின்றி இரும்பசிப் பிணியால் ஏங்கி
ஒவ்வுறு விடங்கள் தோறும் உச்சிட்டம் உண்ணும் காலை. 111

107. ஈனம்: உனக்குத் தாழ்வு அணுகாமல்,

108. அந்தணன் கூற்று. தண்டலை - சோலை, தழல் - நெருப்பு. சார்வல் - வீழ்ந்து உயிர் விடுவேன்.

109. அவன் செயல், தூவியார் - இறகுடன் கூடிய, அனக்குழாங்கள் - அன்னப் புட்கள் அவள் ஓடப் பற்றித் தழுவினான்.

110. சிக்கம் - குடுமி, புலைஞன்: புலைச்சியாகிய தன்னைச் சேர்ந்த காரணத்தால் அவனையும் புலைஞன் என்றாள். ஒழித்து- குடுமியையும் பூணூலையும் ஒழித்து, விராவி -கலந்து.

111. ஏந்திழை - அக்குந்தலை. கவ்வை - துன்பம். ஒவ்வுறு - பொருந்திய. உச்சிட்டம் - எச்சில்.

வடதிசை வாழும் மன்னர் மனத்திடை நிறைந்த பத்தித்
திடமுற வேங்க டப்பேர்த் திருமலை யதனுக் கெய்தும்
தடமதி லன்னார் சேடந் தானுணும் ஏது வால்அம்
மடமையிற் றலைமை யான மாதவன் அவர்பிற் கேர்ந்தான். 112

வெம்மையைத் தவிர்ப்பான் தோன்றி விளங்குவேங் கடத்தின் [சார்பில்
உம்மையார் சுகங்கள் யாவும் உதவுதீ ரத்தை நண்ணப்
பம்மிய வுளவஞ் ஞானப் படாமது பரிதி கண்ட
செம்மையில் இருளி னீங்கத் தெளிந்தனன் மதிவ லோனாய். 113

பாங்குறு கபிலை தீர்த்தம் பார்த்திபர் குழாங்கள் எய்திச்
சாங்கமாய்ப் பிதிர்சி ராத்தம் தவறிலா தியற்றல் நோக்கி
ஓங்குதீ யவனும் நன்னாள் உறுதலால் சிராத்தம் செய்ய
வீங்குபு பிதிர்கள் யாரும் வீடுபே றடைந்தா ரன்றே. 114

விதியெலாம் முடித்த பின்னர் விரைவுட னேறி வெள்ளை
மதிதலம் சிகர மீது மாதவன் அணுக லோடும்
துதிபெறும் எரியைச் சேர்ந்து துலங்குகர்ப் பூரம் போலச்
சதியெலாம் நகிக்கச் செய்த சைலத்தைப் பணிந்து நின்றான். 115

திசைமுகன் முதல வாய தேவர்கள் அன்பி னோடும்
விசையமார் சேடவெற்பின் மேவுமா தவனை நோக்கி
இசைமிகு சாமி தீர்த்தத் தெய்திநீ ராடி எம்மை
விசையறக் காக்க வீற்ற வராகனைப் பணிவாய் ஆகில். 116

112. சேடம்-உண்ட பரிகல சேடம். மடமையில் தலைமை யான- அறிவில்லாதவனான.

113. பம்மிய-பெருகிய. மாதவனுடைய அஞ்ஞானம் நீங்கி மதிவல்லோனாய்த் தெளிந்தான்.

114. கபிலை தீர்த்தம் - திருமலை மீதுள்ள தீர்த்தம். பார்த்திபர் குழாங்கள்-வந்த மன்னர் குழாத்தினர். சாங்கமாய்- உரிய அங்கங்களோடு. வீங்குபு-துன்புற்றிருந்த.

115. விதியெலாம்-சிராத்த கருமங்கள்யாவும். ஏறி-தீர்த்தத் தினின்று கரையில் ஏறி. வெள்ளைமதி-சந்திரன். சதியெலாம்-பாவமெல்லாம். சைலம்-வேங்கடமலை.

116. திசைமுகன்-பிரமன். விசையம்-வெற்றி. சேடவெற்பு-சேட கிரியாகிய வேங்கடமலை. வீற்ற-வீற்றிருந்தருளும். வராகனை-வராக மூர்த்தியை.

பாவவிப் படிவம் நீங்கிப் பாண்டவர் சிறுமி யீன்ற
நாவலர் ஏத்து மேலாம் நரபதி சுதர்மன் என்போன்
ஆவலார் புதல் வனாக அவதரித் தவனி யாளும்
காவலர் பணியத் தொண்ட மண்டலங் காவல் கொண்டு. 117

''நாரண புரிபில் வாழும் நாளில்உன் மரபு காக்கப்
பூரணக் கமலை மாதுன் புதல்வியாய் அவத ரிப்பாள்
வாரணத் துயரை நீத்தோன் மருகனாய் வருவான் பின்னர்
ஆரணம் அறியா வீட்டை அடைதி''என்றயன் அறைந்தான். 118

கலையுணர் மறையோன் வெம்மை கடத்து கா ரணத்தி னாலம்
மலையைவேங் கடமென் றந்நாள் வாழ்த்தியங் கமல பீட
நிலையினான் அமர ரோடு நிறைமலர் மாரி தூவி
அலைகடல் முழக்கம் எஞ்ச ஆர்த்தனன் களிப்போ டம்மா. 119

உதயத்தில் வேங்க டத்தை உன்னுவோர் யாவ ருக்கும்
இதயத்தை வாட்டுந் தீய இடரெலாம் அகலு மென்று
சுதையொத்த சொல்லால் எந்தை சுகந்தரற் கேது வாம்இக்
கதையைத்தந் தருளப் பெற்றேன் என்றனன் மறைநூல் கற்றோன்.

உகமது நான்கில் வெவ்வேறு உத்தம நாமம் பூண்ட
நகமதை நினைப்போர் யார்க்கும் நரகநோய் அணுகா தென்று
சகலமும் உணர்ந்த ஞான சதானந்த முனிவன் அன்பாய்
நிகரிலா மிதிலை யாளும் நிருபன்நெஞ் சுவப்பச் சொன்னான். 121

117. படிவம்-பிறப்பு. நீ சுதர்மன் மகனாகப் பிறந்து தொண்ட மண்டல மன்னனாவாய் என்றான். பாண்டவர் மகள் தொண்டை நாட்டு அரசன் தேவியாயிருந்தாள் போலும்.

118. நாரண புரியில்-இப்பெயருடைய தலைநகரில். கமலை-இலக்குமி. வாரணம்-கஜேந்திரன். ஆரணம் அறியா வீடு-வேதங்கள் அறியப் பெறாத பரமபதம். அடைதி-அடைவாய். அயன்-பிரமன்.

116—118 அயன் மாதவனுக்குக் கூறியது.

119. மறையோன்-மாதவனாகிய அந்தணன். வெம்மையைக் கடத்துதலால் வேங்கடம்: இது புதியதொரு மொழியாராய்ச்சி. வெம்மை - பாவங்களாகிய வெம்மை, கமலபீடநிலையினான் - பிரமன். எஞ்ச - குறைவு என்னும்படி.

120. உன்னுவோர் - மனத்தால் நினைப்போர், சுதை யொத்த - சுருதியொத்த.

121. நிருபன்: சனகன். வெவ்வேறு நாமம் - பாட்டு 42 குறிப்புப் பார்க்க. நகம் - மலை.

## கதைச் சுருக்கம்

பூவுலகுக்கு அருள் செய்யும் நோக்கத்துடன் திருமால் வைகுந்தத்தை நீத்துப் பூவுலகு செல்ல எண்ணினார். அவரை ஒரு நாளும் பிரியாத ஆதிசேடன் அவர் வரும் முன்னேயே ஒரு மலையாகி இங்கு வந்து அமர்ந்தான். அம்மலை நான்கு யுகங்களிலும் நான்கு பெயர் பெற்றது. இடபாசுரன் என்ற அசுரன் அவ் வைகுந்த கிரிமீதேறி உலகோர் அஞ்ச உலாவினான். அப்போது தும்புரு தீர்த்தத்தில் நீராடலும், அவன் உள்ளத்தில் பக்தி தோன்றித் தன் தலையை அறுத்துத் திருமால் பாதத்தில் வைத்தான். முந்தைய வரத்தால் அவன் தலை மீண்டும் முளைக்கலும் 5000 நாள் பூசை செய்து வந்தான். திருமால் தோன்றி உனக்கு யாது வரம் வேண்டும் என்று கேட்க உன்னோடு துவந்தயுத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டான். அவ்வாறே திருமால் அவனோடு சிலநாள் விளையாட்டாக அமர் செய்து முடிவில் அவனைக் கொல்லக் கருதித் தன் சக்கராயுதத்தை எடுத்தலும் அவன் திருவடியில் வீழ்ந்து வணங்கி இம்மலை என் பெயர் பெறுக என்று வேண்டினான். அது முதல் அம்மலை இடபகிரி எனப் பெயர் பெறலாயிற்று.

கேசரி மனைவியான அஞ்சனை மதங்க முனிவன் கூறியபடி ஆகாய கங்கையில் நீராடிப் பன்னீராண்டு தவம் இருந்து வாயு தேவன் அருளால் அனுமன் என்ற புதல்வனைப் பெற்றாள். அது முதல் அம்மலை அவள் பெயரால் அஞ்சனாத்திரி எனப் பெயர் பெற்றது.

ஒரு சமயம் திருமால் உள்ளே யாரையும் விடலாகாது என்று ஆதிசேடனைக் காவல் வைத்துத் தேவியோடு தனித்திருக்க, வாயு அங்கு திருமாலைக் காணவந்தான். திருமால் மேருவின் மகனாகிய ஆனந்தகிரியைச் சுற்றி வளைத்திரு என்று சொல்லி வாயுவைக் கொண்டு அம்மலையை எடுத்து வரச் செய்து சேடனோடு இங்கு நிறுத்தினான். அது முதல் இம்மலை ஆதிசேடன் பெயரால் சேடகிரி (சேஷாத்திரி) என்ற பெயர் பெற்றது.

ஓர் அந்தணன் மகவில்லாமல் தவம் செய் துதிருமால் அருளால் மகவு பெற்று மாதவன் என்று பெயர் இட்டான். அவனுக்குச் சந்திரலேகை என்ற பெண்ணை மணம் செய்து வைத்தார்கள். அவன் ஒரு நாள் காம வசத்தனாகி அவளைப் பகலில் கூட

எண்ணிய போது அவள் அவனுக்கு அறிவுரை பலவும் சொல்லியும் கேளாமல் போகவே ஒரு சோலைக்கு வருமாறு அவள் கூறினாள். அவன் அங்குச் சென்று முன்னமே அங்கு வந்திருந்த ஒரு புலைப் பெண்ணோடு இருக்க அவள் கண்டாள். அப்பெண் பல நல்லுரை புகன்றும் கேளாமல் அவளை வலிந்து கூடினான். அவளோடு சிலகாலம் வாழ்ந்த பின் அவள் இறக்க அவன் பிணிவசத்தனாய் எச்சில் சோறு உண்டு வாழ்ந்த காலை, அங்கு வந்த பலரோடு அவனும் கபிலை தீர்த்தத்தில் நீராடி அவர்களைப் போலவே பிதிர்ச் சிராத்தம் செய்ய அவனைப் பீடித்த பாவங்கள் நீங்கின. சாமித் தீர்த்தத்தில் நீராடி வராக மூர்த்தியைப் பணிந்தால் அப்பாவப் பிறவி நீங்கி, அடுத்த பிறவியில் ஒரு மன்னனாய்ப் பிறந்து நாடாளுவான் என்று பிரமன் அவனுக்கு உணர்த்தினான். அந்தணனுடைய வெம்மையைக் கடத்தியபடியால் இம்மலைக்கு **வேங்கட மலை** எனப் பெயர் வந்தது.

## 5. வேள்விப் படலம்

''அன்னையங் கமலை இந்த அவனியில் அடைந்த வாறும்
என்னையாள் பதும நாபன் இவண் எழுந் தருளி வாழும்
உன்னதச் செயலும் என்றன் உளமகிழ் வுறக்கூறு'' என்று
மன்னவன் முனிவன் செய்ய மலரடி வணங்கிக் கேட்டான். 122

கேட்ட அச் சனக மன்னன் கேண்மையை மிக வி ரும்பிச்
''சேட்டமாஞ் சரிதந் தன்னைச் செப்பி உன் உளத்தி லுள்ள
வாட்டம்யான் தீர்ப்பல்'' என்னா மாயவன் தாளை உன்னி
நாட்டமாய்க் கூறலுற்றான் நவையிலா முனிவ னன்றே. 123

கங்கையின் தீரந் தன்னிற் காசிபன் முதலா மேலோர்
துங்கமாம் வேள்வி செய்யத் தொடங்கிய காலை அங்கு
நங்கிலா அரியின் நாமம் நவிலும்நா ரதன்வந் தெய்திப்
''பங்கமில் யாக பூசை பரிந்தெவர்க் களிப்பீர்?'' என்ருன். 124

### சந்த விருத்தம்

விதியோன் தனக் கீவோமென சிலவேதியர் விளம்ப
நதியார்சடை முடியோற்கென நவிலச்சிலர் வெதும்பித்
துதியார்அர வணைமீமிசைத் துயில்வோற்கென மற்றோர்
மதிமாறிய சிலர் பற்பல வகையாய்ப் பிதற்றினரால். 125

122. கமலை - இலக்குமி. பதுமநாபன் - திருமால். உன்னத - சிறப்புடைய. செயல் - இங்கு எழுந்தருளி வாழ்கின்ற செயல். மன்னவன் - சனகன். முனிவன் - சதானந்தன். செய்ய-சிவந்த.

123. கேண்மை - விருப்பம். சேட்டம் - சிரேட்டம், மேலான. மாயவன் - திருமால். உன்னி - மனத்தால் சிந்தித்து. நாட்டமாய் - கருத்தோடு. நவையிலா - குற்றமற்ற.

124. தீரம் - கரை. மேலோர் - மேலோரான இருடிகள். துங்கம் - புனிதம். நங்கு இலா - தாழ்வு இல்லாத; உயர்வான. அரி - திருமால். நவிலும் - எந்நேரமும் செபிக்கின்ற. பங்கமில் - குறைவு இல்லாத. யாக பூசை - யாகத்தில் கொடுக்க வேண்டி அவியை. என்றான் - என்று கேட்டான்.

125. விதியோன் - பிரமன். நதியார் சடை முடியோன் - சடையில் கங்கை நதியணிந்த சிவபிரான். நவில - சொல்ல. துதியார் அரவணை-துதி செய்யப் படுகின்ற ஆதிசேட சயனம். துயில்வோன் - திருமால். மதிமாறிய - புத்தியற்ற.

''ஒருசத்திர யாகஞ்செய வுற்றோர்தமை நோக்கிக்
குருசிற்பரன் இவனென்பது குறிக்கொண்டதன் பின்னர்
வருமித்திர யாகப்பலி அவற்கீவது வழக்கு''என்று
அருமைக்குண னுடைநாரத முனிஅக்கணம் அறைந்தான். 126

கலங்கும்மன னுடைக்காசிபன் முதலாயவர் கருதி
இலங்குங்குண மிகவார்பிருங் கிருடிதனை விளித்துத்
''துலங்கும்முள ரியன்முக்கணன் சுடராழியன் இவர்தம்
தலங்கண்டெவ ரிடைச்சத்துவ குணனுண்டறி தக்கோய்''. 127

எனஅந்நிலை உணர்வான்பிருங் கிருடியுடன் விரைந்து
மனதின்முன மலரோனகர் மருவிக்கலை வாணி
முனம்நின்றியல் பணிசெய்கிற முறையான்மறை குளிர
நினைவின்தலை அரிசிந்தனை நிறைஞானனை அணுகா. 128

நெறியார்முனி சடைமாமுடி நிலமீதுற வணங்கக்
குறியாதயன் மவுனச்செயல் கொளஅந்நிலை உணரா
அறியானிவன் முறையாறென அவண்நீங்கியங் கயிலை
வெறியார்மலை மிசைப்போந்தனன் வினைநீங்கிய முனிவன். 129

126. சத்திரயாகம் - பலநாள் தொடர்ந்து செய்யும் யாகம் குரு சிற்பரன் - யாகத்துக்குத் தலைவன். குறிக்கொண்டது-முடிவு செய்து கொண்டது. அக்கணம் - அந்த நேரம். அறைந்தான் - கூறினான்.

127. காசியபன் முதலான முனிவர் பிருகு முனியைக் கேட்டல். பிருங்கிருடி - பிருகு முனிவர். முளரியன் - தாமரை யில் தங்கும் பிரமன. முக்கண்ன் - சிவபிரான். சுடர் ஆழியன் - ஒளி பொருந்திய சுதர்சனச் சக்கர மேந்திய திருமால். தலங்கண்டு- இருக்குமிடஞ் சென்று. அறி - அறிவாயாக. தக்கோய் - பிருகு முனியைக் காசியபன் விளித்தது.

128. மலரோன் நகர் - பிரம்மலோகம். மருவி-அடைந்து கலைவாணி - சரசுவதி. அவள் பிரமனுக்குப் பணி செய்கின்ற முறையால் என்க. பிரமன் இந்த நிலையில் எப்போதும் அரியையே நினைவில் கொண்டிருக்கிறான். ஞானன் - பிரமன். அணுகா - அணுகி.

129. முனி - பிருகு முனி. வணங்க - வணங்குதலும். குறி யாது - அதைக் கவனிக்காது. அயன் - பிரமன். மவுனச் செயல் - வாளா இருத்தல்; வந்த முனிவனை விசாரிக்காமல். உணரா - பிருகு அதை உணர்ந்து. அறியான் இவன் - இந்தப் பிரமன் அறிய மாட்டான். முறையாறு-வந்த முனிவரை வரவேற்கும் முறை. உனக்கு உலகில் 'பூசையில்லாது ஒழிக என முனிவன் பிரமனைச் சபித்தான் என்பதும் வரலாறு.

அவையிற்றனை விழைவாற் புணர் அரனுக்கிவன் வரவைச்
சிவை சொற்றலும் முனிவுற்றொளிர் திரிசூலவங் கரனாய்ச்
கவைபெற்றெறி அனல்கக்குற எதிருற்றது காணா
நவையுற்றொளிர் முனிமிக்கன சினமுற்றிது நவிலும். 130

ஆடல்தனை விரும்பி எனை அறவோனென மதியா
வீடமுயன் றதனாலினி விளங்குன்தலம் பலவுங்
கூடல்தனக் குரித்தாகிய கோசங்கொளும் பூசை
நீடவெனச் சபித்தந்நிலை நீத்தான்நெறி வாய்த்தான். 131

அக்காலையில் அடர்காலென அழகாரும் வை குண்டம்
இக்காலைய மணுகாப்பண விரிவாரர வணைமேற்
டுக்காடக மலர்மாதொடு துயில்போகரி உரமீது
எக்காலையு மிசைகூர்தர ஒருகாலெடுத் துதைத்தான். 132

உரமீதுதை படஎந்தைதன் யோகத்துயில் நீங்கிச்
சிரம்நாணுபு நிலையார்மனுச் சேராவுளத் தானைக்
கரநாற்கரம் பிடித்துன்மனக் கவைதீரெனக் கழறாப்
பரமேலுனை நிகரன்பர்கள் இலையென்றுரை பணியா. 133

130. அவை - சதுரங்கமாடுமிடம். விழைவு - விருப்பம். அரனுக்கு - சிவனுக்கு. சிவை - உமாதேவி. முனிவுற்று - சினந்து அம்கரனாய் - அழகிய கையில் ஏந்தியவனாய். கவை - முத்தலைச் சூலமாதலால். அனல் கக்குற - கோபித்தமையால். காணா - கண்டு. நவை - குற்றம். மிக்கன - மிகுந்த.

131. ஆடல் - சதுரங்க மாடல். அறவோன் - முனிவன் மதியா - மதியாது. கோசம் கொளும் பூசை நீட-உனக்கு விருப்ப மில்லாத லிங்க பூசையே நடைபெறுக என்று. நெறிவாய்த்தான் - முனிவன். நீத்தான் - அங்கிருந்து அப்பாற் சென்றான்.

132. அடர் கால் என - அடர்த்து வரும் காற்று என்னும்படி. பணிவிரிவார் அரவணை - படத்தோடு கூடிய ஆதி சேடப் பள்ளி. ஆடக மலர் மாது - பொற்றாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள். துயில்யோகு - அறிதுயில் கொண்ட, அரிஉரம் - திரு மால் மார்பு.

133. எந்தை - எம்பெருமான். சிரம் நாணுறு - சிரம் தாழ்த்தி. மறு - அழுக்கு. உளத்தான் - முனிவன். நாற்கரம் - திருமால் சதுர்ப்புயன் ஆதலால். கவை - கவலை. கழறா-கழறி. பரம் - பூமி. பணியா - கூறி.

''மனமொன்றிய எனதன்பர்கள் குழுவின்தலை வனெனத்
தினம்நின்றிடு நீ''என்றருள் செய இன்துதி புரியாத்
தனதன்பொடு பரமன் பதம் இதயங்கொடு தணியா
அனகன்தலை விடைகொண்டிரு டிகள்தம்புடை அடைந்து. 134

ஒருமூவர்கள் உணர்வாதிக ரதலாமல கமுறழ்
தருமாறுரை செயமாதவர் தமவையுற வொழியாத்
திருமால்தனக் கவியீந்தவர் தெளிவுற்றுறு பிறவிக்
கருமாறிடு மருந்தென்றவன் தொழும்பாய்க் களித்தனரே. 135

134. அருள்செய் - இவ்வாறு திருமால் அருள் செய்ய, துதி புரியா - முனிவன் துதிபுரிந்து. அனகன் - திருமால், இருடிகள் தம் புடை - இருடிகள் யாகம் செய்த இடம்.

135. கரத லாமலகம் உறழ் தருமாறு - மூவரிடத்தும் நிகழ்ந்தவற்றை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் மாதவர் தம ஐயுறவு - மாதவர்களுடைய ஐயம். ஒழியா - ஒழியவே. இருடியர் பிறவிக் கரு மாறிடு மருந்து திருமால் என்று களித்தனர் தொழும்பாய் - அடிமைகளாய்.

## கதைச் சுருக்கம்

காசிபன் முதலான முனிவர் கங்கைக் கரையில் யாகம் செய்த போது, அங்கு நாரத முனிவன் தோன்றி, ''யாகத்தில் யாருக்கு அவி அளிப்பீர்கள்?'' என்றுவினவினான். பிரமனுக்கே என்று சிலரும் அரனுக்கென்று சிலரும் அரிக்கென்று சிலரும் இன்னும் பலவிதமாகவும் சொல்ல, ''மூவரில் யார் மேலானவன் என்று கண்டறிந்து கொடுங்கள்'' என்று நாரதன்கூறினான். அதன்மேல்அம்முனிவர்கள் ''மூவரில் சத்துவகுணம் உடையவன் யாவன் எனக் கண்டறிந்து வா'' என்று பிருகு முனியை அனுப்பினார்கள். அவ்வாறே அவன் சென்று பிரமனை வணங்கலும், அவன் கவனிக்கவில்லை. பிருகு அப்பால் கயிலையடைய அங்கு சதுரங்கமாடியிருந்த அரனுக்கு இவன் வரவைத் தேவி கூறுதலும், அரன்கையில் திரிசூலம் தாங்கி முனிவனை அழிக்கவந்தான். கண்ட முனிவன் சினமடைந்து, ''உன் கோயிலில் லிங்க பூசை மட்டுமே நடைபெறுக'' என்று சாபம் கொடுத்து வைகுண்டம் சேர்ந்தான். அங்கு அரவணைமீது பள்ளி கொண்டிருந்த தருமால் மார்பில் உதைக்க, திருமால் விழித்து இவன் கையைப் பிடித்து ''நீயே மெய்யன்பன்'' என்று உபசரித்தான். பிருகு முனி மகிழ்ச்சியடைந்து முனியர் யாக சாலைக்கு மீண்டு நிகழ்ந்தலை கூறினான். முனிவர் திருமாலுக்கு அவிர்ப்பாகம் அளித்து அவன் அடியாராகி இன்புற்றார்கள்.

## 6. திரு எழுந்தருளிய படலம்

பிருகுமா முனிவன் செய்த பிழைதனை மனத்திற் கொள்ளாது
அருகினில் இருக்கை யுந்தந் தன்புடன் உபச ரித்த
விருதுடை நாதன் செய்த விந்தைகண் டுடிச் செய்ய
திருகர வீரத் தெய்தப் பின்னிறைச் செயலு ரைப்பாம். 136

தோன்றிய நாலே ழாய துவாபர அந்தி யத்தில்
ஊன்றிய கலியி னாதி உற்ற அக்காலை தன்னின்
மான்றலை யகற்றுங் கங்கை மருங்குதென் திக்கில் நூறு
மூன்றியோ சனையிற் சொன்ன முகியெனும் நதியுண் டாமால். 137

அகத்திய முனிவன் தன்னல் அன்பொடு பூசை பெற்றுச்
செகத்தினோர் பாவம் போக்கச் செழித்துறு நதிக்கு தக்கிற்
பகுத்துறை தருகோ சைந்து பாதிக்கும் அப்பால், ஐய,
சுகத்தினை யருள வந்து தோன்றிய மலையொன் றுண்டால். 138

அம்மலை யியற்கை யாவும் ஆதியோ டந்த மாகச்
செம்மையாய் உனக்கு முன்னம் செப்பினேன் தெரிய, ஐய,
பம்மியோ சனைகள் நூறு படலமுப் பதுவா நீளம்
விம்முபுட் கரங்க ளோடும் விளங்கிடும் பாரின் மாதோ. 139

136. பிழை - மார்பில் உதைத்ததாகிய பிழை. விருதுடை - சிறப்புடைய. நாதன் - திருமகள் தலைவனாகிய திருமால். செய்ய திரு - செய்யவளாகிய இலக்குமி. கரவீரம் - அலரிமலர்.

137. அந்தியம் - இறுதி. கலியின் ஆதி - கலியுகத் தொடக்கம். மான்று அலை அகற்றும் - பெருமை பெற்ற அலை மோதுகின்ற. நூறு மூன்று - முந்நூறு. சொன்னமுகி - பொன்முகலி என்ற நதி. உண்டாம் - உள்ளது.

138. உதக்கில்-வடக்கில். கோசைந்து பாதிக்கும் - ஐந்து கோசத்தில் பாதியாகிய இரண்டரைக் கோசத்துக்கும். ஐய; விளி மலை-திருமலை.

139. இயற்கை-தன்மை. முன்னம் - திருமலை தோன்று படலத்தில். தெரிய-விளங்கும்படி. ஐய - விளி. பம்மு யோசனை-சொல்லிய யோசனை. படலம்-அடுக்கு. புட்கரங்கள்-புட்கரணிகள். மாதோ-அசை.

உரகமன் னவனைப் போல் நின் றொளிரும் அம்மலையின் நாப்பண்
நரகரி நிலைய மொன்று நண்ணுபு விளங்கும் துய்ய
பரகதி அருள்த லங்கள் பற்பல விடத்தின் மிக்க
பிரகட மாகத் தோன்றும் பின்திருச் சைலம் ஓங்கும். 140

துலங்கிய சோலை தோறும் துணருடன் கனிக ளோங்க
இலங்கிய புள்ளி னங்கள் இன்பமாய்க் களித்தொ லிப்ப
விலங்கினம் விண்ணில் தாவி மேகநீர் நக்கி மீன
நலங்கிளர் உணர்வ னங்கள் நசையுறச் சிறந்தி லங்கும். 141

உச்சிதப் பருப்ப தத்தில் ஒளிர்கின்ற செய்ய வண்ண
நச்சியற் பல்லோ டுற்ற நாகத்தை நோக்கித் தன்னை
இச்சையாய் நுகர்வான் வந்த இகல்மிகு கேது என்னா
அச்சமுள் ளுற்றே பானு அனுதினம் நடுந டுங்கும். 142

பரிதிதன் தேரிற் பூண்ட பரிவலிக் குரங்கள் பட்டுக்
கிரிமிசை யிருந்து மேன்மேற் கிளம்பிய தூளி மொய்ப்ப
விரிதரு விழிகள் மூடற் கிமையிலா மிடிமை யாலே
தெரிதரு பொன்னாட் டுற்ற தேவர்கள் அலக்கண் கொள்வார். 143

140. உரகம் அன்னவனைப் போல்-ஆதி சேடனைப் போல், நாப்பண்-நடுவில். நரகரி-நரசிங்க மூர்த்தி, நிலையம்-கோயில், துய்ய-தூய்மையான. பரகதி-மோட்சம். பிரகடம்-பிரசித்தம் சைலம்-மலை.

141. துணர்-பூங்கொத்து. வனங்கள்-சோலைகள்; சோலைகளின் சிறப்புக் கூறியவாறு,

142. நச்சு இயல்-விஷத்தன்மை. நாகத்தை-ஆதிசேடனாகிய பாம்பு. மலையை; கேது, சூரியனைப் பாம்பு விழுங்குவது என்ற அச்சம். பானு-சூரியன்.

143. பரிதி - சூரியன். பரி வலிக் குரங்கள் - குதிரைகளின் வலிமை மிக்க குளம்புகள். மிடிமை-வறுமை; மாட்டாமை. பொன்னாடு-தேவலோகம். அலக்கண்-துன்பம். தேவர்கள் இமையாதவர், அதனால் தூசி மொய்த்த போது கண் மூட முடியாது துன்புற்றார்.

ஓங்கிய நாகத் தும்பர் ஒளிர் தருச் சினைகள் யாவும்
வீங்கி மேற் படர்ந்து துய்ய விண்ணக ரதனை மூட
நீங்கிடாத் தமப்பெ ருக்கை நீக்குதற் பொருட்டு வானோர்
தாங்கினார் மணிவி ளக்கந் தலைமிசை மகுட மென்றே. 144

அருவித்தண் சுனைபே ரேரி அம்புயத் தடங்கள் ஓடை
பொருவில் சானவியி னோடு புகழ்பெரு நன்மை மேய
சருவதீர்த் தத்துக் காதி சாமிபுட் கரணி யெய்தித்
திருவளர் மலையின் நாப்பண் சிறப்பொடு விளங்கும் மாதோ. 145

ஒத்தமார் கழிம திக்கண் உதயகா லையிலெ ழுந்து
சுத்தமாந் திதியீ ராறில் தோய்ந்து நற் சிராத்தஞ் செய்ய
நத்தினோர் பிதிர்க ளெல்லா நரகவே தனையின் நீங்கி
நித்திய வைகுண் டத்தில் நிரந்தரம் வாழ்வர் மன்னோ. 146

காமிதப் பலனும் முத்தி யுந்தருங் கல்மீ துற்ற
சாமிபுட் கரணி யென்னுந் தடத்தினை அணுகி மேன்மேற்
பூமியிற் கொடுமை செய்த புலைஞருந் தோயிற் பந்த
நேமியோ டெதிர்த்த தீய நிசாசரர் குலத்தோ டொக்கும். 147

144. நாகம்-இம்மலை. உம்பர்-மேலே. தருச்சினைகள்-மரக்கிளைகள். தமம் - இருள். தேவர் மகுட மணிந்தவராத லால் அதற்கொரு காரணம் கற்பிக்கிறார்.

145. அம்புயத்தடம்-தாமரைப் பொய்கை. பொருவில்-ஒப்பற்ற. சானவி - கங்கை. ஆதி - ஆதியாகிய. நாப்பண் - மத்தியில். சாமி புட்கரணி-ஒரு தீர்த்தம்.

144 மதி-மாதம். திதியீராறு-துவாதசி திதி. நத்தினோர்-விரும்பி வந்தோர்.

147. காமிதப் பலன்-விரும்பிய பலன். கல்-மலை சாமிபுட் கரணி-முன் குறிப்பிட்ட தீர்த்தம்; மலைமீதுள்ள ஏழு தீர்த்தங் களுள் ஒன்று. தோயில்-நீராடினால். நிசாசரர்-அசுரர். நேமி-சக்கரம் ஏந்திய திருமால்.

உளங்களித் தகல்வான் மீனோ டுற்றொளிர் திங்கள் தன்னை
வளங்கெழும் உறவோ டெங்கும் வலியசே லென்று காண்டத்
திளஞ்சினை வாளை பாய்ந்தங் கிடறிய தழும்பை யன்றோ
களங்க மென் றுரைக்கும் ஓதக் கடலுடை உலகம் மாதோ. 148

ஆதியில் அரசி ழந்த அறிவுடைச் சங்கன் இந்தக்
கோதில்பொய் கையினிற் றோய்ந்து குறைவில்தன் நாடு பெற்றான்
நீதியாங் கிரன்ப யந்த நேரில்நா ராய ணப்பேர்
வேதியன் மூழ்கி மேலாம் விண்டுநா டடைந்தா னன்றே. 149

ஒப்பிலாத் தடத்தின் மேல்பால் ஓங்கெழில் வராக மூர்த்தி
பிப்பில நீழ லின்கண் பிறங்கிட மூன்று கோடி
சுப்பிர மான தீர்த்தஞ் சூழ்தர வான ளாவு
கப்புயர் தருக்கள் தோறுங் கடிமலர் பொதுளும் மாதோ. 150

திருமகள் கரவீ ரச்சேத் திரத்தினிற் செழிக்க எந்தை
பெருமையார் மலையின் நாப்பண் பிறங்குகோ னேரிப் பாங்கர்
விரிசினை எகின நீழல் மிகவுயர் வன்மீ கத்திற்
பரிவுடன் அடைந்தி லங்கிப் பார்மகள் துயரந் தீர்த்தான். 151

148. மீன்-நட்சத்திரம். காண்டம்-தீர்த்தம். வாளை மீன் இடறிய தழும்பே திங்களில் காணும் களங்கம்.

149. காசியில் ஆண்ட சங்கன் என்ற அரசன் நாடிழந்து! சேது செல்லும் வழியில இங்கு மூழ்கி வழிபட்டு நாடு பெற்றான் என்ற வரலாறு-திரு வேங்கடத்தல புராணம் அத்-25. ஆங்கிரஸ் என்ற முனிவன் மகன் நாராயண முனிவன். விண்டு நாடு-வைகுந்த பதம்; ஷெ அத்-5.

150. பிப்பிலம்-அரசு. சுப்பிரமான-ஒளிமிக்க. கப்பு-கிளை. பிறங்கிட-விளங்க.

151. கரவீரச் சேத்திரம்-அலரியைத் தல விருட்சமாகவுடைய தலம். கோனேரிப் பாங்கர்-தீர்த்தத்தின் பக்கம். எகினம்-புளி. வன்மீகம்-புற்று. பார்மகள்-பூதேவி. துயரம் - தன்னோடு திருமால் இருக்கவில்லை என்ற துயரம்.

அருள்வசு தேவன் ஈண்ட ஆம்பலந் தருவே யாகத்
தெருள்பெற ஈன்றெ டுத்த தேவகி உயர்புற் றாக
இருளறு துவரை யேயவ் வெழில்திரு மலைய தாகப்
பொருள்தரு பரமன் வாழப் பொலிந்தது புவனம் அம்மா. 152

அன்பொடு பாத முன்னி அருச்சனை புரிவோர் யார்க்கும்
இன்பொடு வீடு நல்கும் எந்தையை நாளும் வாழ்த்தித்
துன்பமி லாது பூசை தொடங்கிய பூமி தேவி
தன்புடை யமர்ந் திலங்கு தன்மையை நிகர்த்த தன்றே. 153

நாகலோ கத்தின் மேவு நாரியின் கட்டில் தோன்றிச்
சோக நீக் குறுவான் வந்து துலங்கிய சோழ மன்னன்
ஏகமாய்க் குடையின் நீழல் இப்புவி காக்கும் வேலை
பாகெனும் மொழியார் செய்யாள் இழைத்த அப்பரி சுரைப்பாம்.

செவ்விதாய் வன்மீ கத்திற் சிறந்தருள் இறைவன் தன்னை
ஒவ்வுற வெளிப்ப டுத்தற் குபாயமொன் றுள்ளத் திற்கொண்டு
எவ்வமில் கரவீ ரத்தில் எழுந்தரு ளியவெம் அன்னை
அவ்வயின் நின்று தேவர் அடிதொழ எழுந்தாள் மாதோ. 155

என்னை வாழ்வித்த அன்னை இடைச்சியின் படிவம் பூண்டு
துன்னிதழ் கமலத் தோனைச் சுரபிய தாக்கி வெற்புக்
கன்னிபா கனைக்கன் றாக்கிக் கரத்தினிற் கயிறு பற்றி
மன்னவர் வணங்குஞ் சோழ மகிபதி நகரம் புக்காள். 156

152. ஆம்பல்-மூங்கில் வசுதேவன்-திருமால். ஈண்ட-வந் திருக்க. ஆம்பல் தரு, புற்று தேவகி, திருமலை துவாரகை.

153. முன் வராக மூர்த்தியைக் கூறியவர் இங்கு பூதேவியைக் கூறுகிறார்.

154. நாகலோகத்தின் மேவு நாரி-நாகலோகத்திலிருந்து வந்து சோழனை மணந்த பீலிவளை. கட்டில்-கருப்பத்தில். செய்யாள்-திரு. நாககன்னி பீலிவளைபால் சோழன் புதல்வனாகத் தோன்றிய தொண்டைமான் தொண்டை நாட்டை அமைத்தாள் என்பது வரலாறு.

155. ஒவ்வுற-பொருந்த எவ்வமில்-குற்றமற்ற. புற்றிலிருந்த இறைவனை வெளிப்படுத்தும் பொருட்டு, இலக்குமி கரவீரத்தி லிருந்து எழுந்தாள்.

156. அன்னை-திரு. கமலத்தோன்-பிரமன். சுரபி-பசு. வெற்புக் கன்னி பாகன்-இமராசன் புதல்வி நாயகனான சிவபிரான்.

உத்தம அரசன் முன்னர் ஒளிர்கின்ற பதுமை தன்னைப்
பத்தியாய் உபசரித்துப் பசுவின்மேற் காதல் கொள்ள
அத்திறம் உணர்ந் தெம்மன்னை அகமகிழ்ந் திரங்கி அன்னான்
நத்திய துதவி அப்பால் நற்கர வீரம் உற்றாள். 157

நேயமாஞ் சுரபி தன்னை நிருபன்தன் பசுக்கு ழாத்தோடு
ஆயர்கள் சேர்த்து யர்ந்த ஆதிவேங் கடப்பொ ருப்பில்
மேயவிட் டிடவி ரைந்து விரிசினை எகினப் பாங்கர்ப்
போயுயர் வன்மீ கத்திற் பால்மழை பொழிந்து மீண்டும். 153

இனத்தொடு கூடி வேந்தன் இல்லிடை அடைந்த பின்னர்
தினப்படி கறக்கும் போழ்திற் சிறிது பாலேனும் அவ்வாத்
தனத்திடை யிலாமை நோக்கித் தராபதி மனைவி சாலச்
சினத்தொடாயனைவினாவ''எவன்கொலோதெரியேன்''என்றான்.

அத்தின முதல வாகச் சிறங்கைபால் கறப்ப தில்லா
உத்தமச் சுரபிச் செய்கை ஓர்வுறா ளாகி மன்னன்
பத்தினி உளங்கொ திப்பப் பயந்தடி வணங்கி ஆயன்
''சுத்தமாய் ஆய்ந்து வந்து சொல்லுவன் விரைவில்'' என்றான்.

தினந்தொறும் மாய மாய்ஆச் செய்கர வதனை ஓர்வான்
மனந்தனில் ஏக்க முற்று மறைந்தவன் இருக்குங் காலை
புனங்கடந் தடைந்து நின்றாப் புற்றின்மேல் அமுது குப்பச்
சினந்தரும் ஆயன் நோக்கிக் கொலைசெயச் சிந்தை யுற்றே. 161

157. பதுமை-பத்மாவதி. பசுவை அரசனிடம் தந்து கரவீரம் சென்றாள்.

158. ஆயர்-இடையர். எகினம்-புளி. வன்மீகத்திற் பால் மழை பொழிந்தது, புற்றிலிருந்த திருமாலுக்கு அபிடேகம்.

159. அவ்ஆ-அப்பசு. தராபதி-அரசன். தனத்திடை-மடியில். எவன் கொலோ-பால் இலாமை என்ன காரணமோ.

160. சிறங்கை-கையளவு. ஓர்வுறாள்-தெரியாள்.

161. கரவு-திருட்டுத்தனம். அமுது உகுப்ப-பாலைச் சொரிய.

தாங்கிய நவியத் தோடு தாவியங் கதைவி சைக்கொண்டு
ஓங்கிமீ தெறிய வந்த உருமனக் கருவி தன்னை
வீங்குதிண் திகிரி யங்கை விமலன்தன் சிரமேற் கொள்ள
ஆங்கெழுங் குருதி நோக்கி ஆயனும் வெருவி வீழ்ந்தான். 162

வீசிய குருதி வெள்ளம் விண்தனை யணுகிப் பொங்கப்
பாசொளி வண்ண மீறிப் பாயிருள் பருகி யோங்கு
மாசறு பரிதித் திண்டேர் மானினஞ் சிவந்த தென்னில்
தேசினை நோக்கி ஆயன் வீந்த , திண்மைத் தாமோ. 163

அன்னபோழ் தாவி னங்கள் அலறிஅக் கிரியி ழிந்து
உன்னரும் அச்சத் தோடும் பதியிடை யணுக ஊங்குப்
பின்னுறத் தேனு பாலன் எய்திடாப் பிழையா தென்னா
மன்னவன் எண்ணந் தேறற் கெய்தினன் அவையின் மன்னோ. 164

அவையகத் தமைச்சர் தம்மோ டாய்வன விரைவின் ஆய்ந்து
நவையகத் திலாத ஒற்றர் நால்வரை விளித்து நீவிர்
குவையவாய்ச் சிகர மார்வேங் க கிரி கோலி நோக்கிக்
கவையற ஆயன் செய்தி கழறுமின் கணத்தின் என்றான். 165

அரசனுத் தரங்கொள் ஒற்றர் அடைந்துவேங் கடத்தை ஆய்ந்து
பிரசமார் மலர்ப்பொ ழிற்கண் பெருகுஞ்செங் குருதிப் பாங்கர்ப்
பரசொடு கிடவா நின்ற பசுப்புரப் பவனைப் பார்த்து
விரசொடு வேந்தன் முன்னர் அடைந்தனர் விளம்பி னாரால். 166

162. நவியம்-கோடரி. அதை-அக்கோடரியை. விசை-வேகம். திகிரி-சக்கரம். விமலன்-திருமால். கோடரியைப் புற்றிலிருந்த விமலன் சிரமேல் தாங்கக் குருதி எழுந்தது. வெருவி-அஞ்சி.

163. பரிதி-சூரியன். மானினம்-அவன் தேரில் பூண்ட பச்சை நிறக் குதிரைகள். இரத்த ஒளியால் இவை சிவந்து காட்டின. தேசு-ஒளி. வீந்தது-இறந்தது.

164. பசுக்கள் வனத்திலிருந்து நகருக்கு ஓடிவந்தன. ஊங்கு-உவ்விடத்து. தேனுபாலன்-ஆயன்.

165. நவை-சூது. குவை-கூட்டம். கவை-சிக்கல். கழறுவீர்-கண்டு வந்து சொல்வீர்களாக.

166. உத்தரம்-கட்டளை. பிரசமார்-தேன்பொருந்திய. பரசு-கோடரி. பசுப் புரப்பவன்-ஆயன். விரசொடு-விரைவோடு. அடைந் தனர்-அடைந்து. விளம்பினார்-கண்டவற்றைச் சொல்லினர்.

கொடியஅம் மொழிகேட் டுள்ளக் கொதிப்பொடக் குன்றம் மேவி
மடிவுறும் ஆயன் தன்னை மன்னவன் விழியால் நோக்கி
இடியுறும் அரவின் ஏங்கி இச்செயற் கேது ஓர்வான்
கடிகமழ் துளவத் தண்ணல் கழல்தனைக் கருத்துட் கொண்டான்.

கன்னியிற் பரிதி அன்பாய்க் கலந்தஅத் திங்கள் தன்னில்
உன்னதப் பூர்வ பட்சம் ஓங்கிய தசமி மீது
மன்னிய மந்த வாரம் வளர்பெறுஞ் சிரவ ணத்திற்
பொன்னியந் துறைவன் காணப் பூமகள் கொழுநன் நின்றான். 168

நந்துசக் கரம ருங்கில் நலமுறத் தாங்கி மிக்க
சந்தமார் மலைவை குண்டந் தானெனக் காட்டி நான்கு
விந்தையங் கரங்கொண் டுற்ற வேங்கடப் பெருமான் கூற
அந்திய மடைந்த ஆயன் தகைமைமன் னவன்அ றிந்தான். 166

உணர்ந்ததோர் அபயன் மும்மை உலகினை அளந்த தாளுக்கு
இணங்கிய பத்தி யோடும் இதயத்தில் அன்பு பூண்டு
வணங்குறாத் துளவங் கொண்டு மலரடி பூசித் தேத்திக்
குணங்கமழ் எந்தை முன்னர்க் குழைந்துநின் றினைய கூறும். 170

''ஐயநின் மாயை யென்னும் அருந்திறல் வலையிற் சிக்கி
மையலான் மிகமெ லிந்து மதியிடைப் படல முற்றுத்
துய்யநின் பதும பாதத் தொண்டினை இழந்து மேன்மேற்
செய்யஇப் பாரின் மீது தெரிவையர்க் கடிமை யானேன். 171

167. இடியுறும் அரவு - இடியுண்ட பாம்பு. ஏது-காரணம் ஓர்வான்-சிந்திப்பான். கடி-மணம். துளவத்து அண்ணல்-துளவு அணிந்த திருமால்.

168 கன்னி-கன்னிராசி (புரட்டாசி). மந்தவாரம்-சனிவாரம் சிரவணம்-திருவோண நட்சத்திரம். பொன்னியந்துறைவன்-காவிரி நதித்துறையுடையனாகிய சோழ மன்னன். பூமகள் கொழுநன்-திருமால்.

169. நந்து-சங்கு. நான்கு கரம்-சதுர்ப்புயம். அந்தியம்-முடிவு.

170. அபயன்-சோழன். அளந்த தாள்:திரிவிக்கிரம அவதாரத்தில். வணங்குறா-வணங்கி. கூறும்-அபயன் கூறுவான்.

171. இது முதல் 175 வரை அரசன் கூற்று. படலம்-மறைப்பு.

''ஊணிடை யாவ லேபூண் டுறுநெடும் பசும்புற் காகக்
கேணியில் வீழ்ந்து வாளாக் கெடுமதி மாவை யொத்து
வேணியோ டிலகு மாதர் பால்மிக விருப்பங் கொண்டு
கோணிய மனத்த னாகிக் குவலயந் தனின்மெ லிந்தேன். 172

''பழுதுரை கூறி ஏய்க்கும் பாரினோர் மிக வணங்கித்
தொழுதெனைத் தெய்வ மென்று துதித்திடும் மொழியைக் கேட்டு
விழுசுவ ரனைய என்தன் மேனியைச் சதமாய் நம்பி
முழுமையும் உணர்வி ழந்து மோகத் தால்உனைம றந்தேன். 173

''அருளினால் உலகங் காக்கும் அண்ணலே உனைம றந்து
பொருளொடு மனைவி மக்கள் பூமியில் ஆவல் பூண்டு
மருளினான் மதிய ழிந்திவ் வடிவினை யானென் றெண்ணித்
தெருளிலா மனத்த னாகிச் செயலழிந் திடருள் ஆழ்ந்தேன். 174

''கடவுள்நின் கமல பாதம் கருத்தினில் இருத்தி டாத
மடையனேன் தனையின் றாள வந்தநின் கருணை கண்டேன்
தடமலர்ப் பாத பத்தி தந்தெனைக் காத்தி'' என்று
திடமுடன் இறைஞ்சி அண்ணல் அருள்பெற்று நகரஞ் சேர்ந்தான்.

கமலவீ டுறைவோ னாதிக் கடவுளர் பலரும் மற்றும்
அமலமா மதிநி றைந்த அருந்தபோ தனரும் மேலாம்
விமலவேங் கடத்தில் தோன்றும் வேதநா யகனைப் போற்றிச்
சுமன மங்கரத்திற் கொண்டு தொழுவர்நா டோறு மாதோ. 176

172. ஊண்-உணவு. மா-விலங்கு. வேணி-கூந்தல். குவலயம்-உலகு.

173. விழு சுவர் அனைய-ஒரு நாள் விழுந்துவிடும் (இறந்து போகும்) தன்மையுடைய சுவர் போன்ற. சதம்-நித்தியம்.

174. மருளினால்-அறியாமையால், மயக்கத்தால். வடிவு-உடல். தெருள்-தெளிந்த அறிவு.

175. பாதபத்தி-திருவடியில் அன்பு. காத்தி-காப்பாயாக.

176. கமல வீடுறைவோன் ஆதி-தாமரை மலரில் உறையும் பிரமன் முதலான. அமலம்-அழுக்கில்லாத. விமலம்-தூய்மையான. சுமனம்-மலர் (சுமனசம்.)

மேதினி தனைக்க ரந்த வெய்யதானவற்கா எந்தை
ஆதியங் கேழ லான அற்புத மூர்த்தம் யாதுந்
தீதிலா வேங்க டத்தில் திகழ்தரும் அதற்குத் தொண்டு
போதமார் பகுளை யென்னும் நங்கையே புரிந்து வந்தாள். 177

பாரினோர் பாவம் நீக்கப் பதுமையை உரத்திற் கொண்ட
ஆரியன் அணுகி னானென் றறிந்தவற் கடிமை செய்யச்
சீரிய அன்பி னோடு சேர்ந்துவேங் கடப்பி ராற்கு
நேரிய பாகஞ் செய்து நிவேதனங் கொடுப்பா ளானாள் 178

பாகஞ்செய் வளங்கள் தம்மிற் பலவகை தெரிந்து தூக்கி
யோகமா யிரசங் கூட்டி யூகமோ டினிமை யூட்டித்
தாகமா யீசற் கீந்து சந்ததம் மகிழ்சி றந்து
சோகமே வாத பாதத் தொழும்பினி திழைத்தி ருந்தாள். 179

தேவர்தந் தேவன் வந்தான் என்பதோர் சிந்தை கொண்டு
பூவுல கத்தோர் யாரும் பொதுளலும் அமரர் நோக்கி
யாவருங் காண்ப தன்றால் எமதுரு எனவுட் கொண்டு
மேவருந் தமது மேனி வேற்றுமை செய்தா ரன்றே. 180

அண்டர்கள் தருக்க ளாக அருந்தவர் விலங்க தாகத்
தொண்டுசெய் பிதிர்க்கள் யாரும் தொகுபல பறவை யாகக்
கொண்டபே ருருவந் தன்னை மானிடர் கூறற் பாற்றோ,
இண்டையிற் பிறந்தோ னெண்ணற் கேங்குவ னென்னின், மாதோ. 181

177. தானவன் - அசுரனான இரணியாக்கன். கேழல் - வராகமூர்த்தி. போதம் - அறிவு. பகுளை - அந்நங்கை பெயர்.

178. பதுமை - பத்மாவதி, இலக்குமி. உரம் - திருமார்பு. பாகம் - திருவமுது.

179. தூக்கி - ஆராய்ந்து. இரசம் - சுவை. தாகமாய் - பரிவோடு. தொழும்பு தொண்டு.

180. பொதுளலும் - கூடுதலும் அமரர் - தேவர். தேவர்தம் உருக்கரந்து வந்திருந்தனர்.

181. அண்டர் - தேவர். இண்டை - தாமரை. பிறந்தோன் - பிரமன். ஏங்குவன் - விவரிக்க முடியாது அயர்ச்சி யடைவான்.

—4—

## திரு எழுந்தருளிய படலம்—கதைச் சுருக்கம்

சுவர்ணமுகி என்ற நதியின் கரையில் பொதிய முனிவர் பூசை பெற்ற தலமொன்று உள்ளது. அங்கு பிரசித்தமான மலை அமைந்திருக்கிறது. அங்கு துவாதசியில் சாமி புட்கரணி தீர்த்தத்தில் நீராடிச் சிராத்தம் செய்தால் பிதிர்கள் வைகுந்த வாழ்வு பெறுவர். சங்கன் என்ற அரசன் அங்கு நீராடி வழிபட்டு இழந்த அரசைப் பெற்றான். நாராயண முனிவன் என்பவன் வைகுந்தம் அடைந்தான். திருமகள் கரவீர க்ஷேத்திரத்தில் வந்து தங்கினாள். திருமால் திருமலையின் இடையில் தீர்த்தக்கரையில் புற்றாக எழுந்தருளினார். திருமகள் அவரைத் தொழ எழுந் தருளினாள். பிரமனைப் பசுவாகவும் சிவபிரானைக் கன்றாகவும், தான் இடைச்சியாகவும் வேடம் தாங்கி அவற்றைக் கையில் கொண்டு சோழ மன்னன் அவையை அடைந்தாள் மன்னன் பசுவின் மீது விருப்பம் கொண்டு அதைக் கேட்கத் திருமகள் அதை அவனிடம் கொடுத்துச் சென்றாள். அரசன் ஓர் ஆயனை அப் பசுவை மேய்த்து வரும்படி நியமித்தான். அவன் அவ்வாறு மேய்த்து வர, பசு தன் பாலை யெல்லாம் புற்றில் சொரிவது கண்டு ஆயன் கைக் கோடரியால் அப் பசுவை வெட்டப் புக்கபோது, வெட்டு புற்றின் மீது விழுந்து எங்கும் இரத்தம் ஆறாக ஓட ஆயன் கண்டு அஞ்சி உயிர் விட்டான். ஆயன் மீண்டு பசுவோடு வராதது கண்டு மன்னன் ஒற்றர் கொண்டு தேடி வந்து பார்த்தபோது ஆயன் இறந்து கிடந்தமை கண்டு திருமாலைத் துதித்தான். பின்னர் திருமால் அவனுக்கு அருள் புரிதலும் அவன் நகருக்கு மீண்டான். திருமால் இங்கு எழுந் தருளிய செய்தி அறிந்து பகுளை என்னும் நங்கை அவருக்குத் திருவமுது அமைத்து நிவேதனம் செய்து வந்தாள். இங்கு தேவர்கள் மரங்களாகவும் இருடிகள் விலங்குகளாகவும் பிதிர்கள் பறவைகளாகவும் உருவம் தாங்கி எழுந்தருளியுள்ளார்கள்.

# மூன்றாம் அத்தியாயம்

## 7. சோலை காண் படலம்

இனியவாம் சரிதம் தன்னை இசைத்தரு ளியநற் சூத
முனிவனைச் சவுன காதி யோர்முறை யாக வாழ்த்தித்
''தனிமையாம் வேங்க டேசன் தாமரை தனில் உதித்த
பனிமொழி தனைம ணந்த பரிசெமக் குரைத்தி'' என்றார். 182

சுத்தமா மலையின் மீது துலங்குற அமர்ந்து பூவாழ்
பத்தருக் கிகப ரத்தோர் பணிவிடை புரிய மேலாம்
நித்திய சீர்கள் யாவும் நிரந்தரம் அருள வந்த
சித்தசன் தந்தை காதை செப்புவான் முனிவன் மாதோ. 183

### எழுசீர் விருத்தம்

தேனு லாவுமனம் மேவு மாமலர் செறிந்து யர்ந்திலகு பூந்தருக்
கானு லாவுமது வண்டு வீயிலுறு காமர் கூர்நறவு வாய்க்கொளீஇ
வானு லாவுமலை மீதி லூறுமதி வாரி றாலென மயங்குபு
தானு லாவுபல சோலை வேங்கட தடங்கிரிப் புறன்இ லங்குமே.184

குன்று நின்றவுயர் வும்வி லங்குபல குழுமு கின்றஎழி லுஞ்சிறை
துன்று மன்றில் குயில் தோகை கிள்ளையிவை சோடு கூடிவிளை யாடவும்
மென்று மென்றுநனி தின்று தின்றுவலி மேவுமூர்வன வினோதமும்
சென்று நன்றறிய எந்தை தேவவனி சேருமால் நினைவு செய்யவே. 185

182. தனிமையாம் - திருவோடு கூடியதற்கு முன்னுள்ள தனிமை. பனிமொழி - திருமகள்.

183. பூ - பூமி. சித்தசன் - மன்மதன். தந்தை - திருமால்.

184. கான் - காடு. மதுவ்ண்டு - தேனீ. வீ - மலர். காமர் - விருப்பம், நறவு வாய்க் கொளீஇ - தேனை உண்டு. மதியை இறால்மீன் என மயங்கி என்க.

185. சிறைதுன்னு - சிறகுடன் கூடிய, அன்றில், குயில், மயில், கிளி முதலான புட்கள் ஆணும் பெண்ணுமாக விளையாடுகின்றன. சோடு - ஆணும் பெண்ணுமாக எந்தை தேவு - எம்பெருமான். அவனி - பூவுலகு. உயர்வும் எழிலும் வினோதமும் அறிய நினைவு செய்ய எந்தைசேரும் என்க. ஆல் - அசை.

அலங்க மீமிசை நெருங்கு தார்கலின மாடல் கூரடி யிலங்கு பொற்
சலங்கை யங்கவடி சென்னி மாமணி தகட்டு வாரணி கழுத்தணி
துலங்க எங்குமொளி பொங்க வந்தவளர் சோதியம் புரவி வேங்கட
விலங்க லாலயம் வலங்கொ டெந்தை முன் விரும்பியன் பொடு பணிந் - ததே. 186

சேரு பாய்பரியை நோக்கி எந்தை யொளிர் செம்பொ னம்பர மணிந்து நீள்
மேரு மால்வரை நிகர்த்த தோளிலெழின் மேவு தூவலைய மின்னவன்
மாரு மீதுவன மாலையோடு மணி மாலை துன்னவுயர் மாமணி
ஆரு மாமுடி புனைந்து பொற்கழல் அசைந்து வாளிடை அலங்கவே. 187

மல்லெ டுத்தகணை பொங்குதூணி யிருமாடு பின்னுற விரிந்துவான்
வில்லெ டுத்தனைய வில்லெ டுத்திரவி வீசு செஞ்சுடர் மழுங்கமேல்
எல்லெ டுத்தகடல் வண்ண வீசனுய இவுளிமேன் மகிழ்வோ டேறவின்
சொல்லெ டுத்தமரர் நின்று பூமழை சொரிந்து பன்முறை துதித்தனர். 188

அந்த வேலையி லுணர்ந்த வாம்பரி அனந்த மாமலை குலுங்குறச்
சிந்தை மேவுமகிழ் வுந்தவா னிலவு சிந்தவா ணகைபு ரிந்து தாண்
மந்த மல்லகதி முந்தி சைந்துகரு மங்குல் கண்டமயி லின்னடந்
தந்து தாவுமுசு நந்த மேவு முயல் தந்தரந் தெறவி:ரைந்துறா. 189

186. புரவி வேங்கடமலையை வலங்கொண்டு எந்தை முன் வந்து பணிந்தது. அலங்கம் - அரண். கலினம் - கடிவாளம். சலங்கை கங்கவடி மணி முதலியன துலங்குகின்றன.

187. செம்பொன் அம்பரம் - பீதாம்பரம் வலையம் தோள் வலையம். மாரு - மார்பு. வனமாலை - திருமாலுக்குரிய துளப மாலை. துன்ன - நெருங்க இடை - இடையில் அலங்க - அசைய.

188. இவுளி - குதிரை. திருமால் புரவிமீது ஆரோகணித்தல். கொங்கு - நிரம்பிய தூணி - அம்பறாத்தூணி மாடு - பக்கம் வானவில் - இந்திரவில் கடல் வண்ணன் திருமால் சொல் லெடுத்து - துதிப் பாடல் பாடி.

189. குதிரையின் கதியைச் சொல்லுகிறார். வாம்பரி - தாவு கின்ற குதிரை. அனந்த மாமலை - சேடகிரி. மல்லகதி குதிரையின் கதி ஐந்தனுள் ஒன்று; நான்கு காலையும் தூக்கிஆடுவது. கருமங்குல் கண்ட - மேகம் வரக்கண்ட. முசு - குரங்கு. மயிலின் நடமும், குரங்கின் தாவலும முயலின் பாய்ச்சலும் பின்னிட என்க; இவை மூன்றும் குதிரையின் கதிகள்; முறையே மயூரகதி, வானரகதி, சசகதி எனப்படும்.

செண்டு கூடுபரி எந்தை யம்புநிகர் சென்று மண்டல முறச்சுழல்
சண்ட வாயுநிகர் கொண்டு லாவியகி சார்த லங்குகத மாகமேல்
அண்ட கோளமக வெண்தி சாமுகம் அனைத்துமோர்நொடி யதற்குளே
கண்டு மீளவல திண்ட டம்பரி கடாவி எந்தை வரு காலையே. 190

கிரியின் மீதுலவு முகிலைநேரிலொருகெழுவு மாபிடியதெனவெணா
விரியு மாவலொடு தழுவ மாமலையின் மிசையி லேறியதி விரைவதாய்
அரியு மிஞ்சுகொடு வரியு மஞ்சவுயர் அசல மொன்றுவரு மடைவினோர்
கரிய டைந்தததை னடல்கொடுந் தகைமை கழறவென் தரம தலவரோ. 191

தும்பி யென்றுலகி லுள்ள யாவு மெதிர் தோன்றி நின்றமர் தொடங்கினும்
வெம்பி நின்றிதுவு ரப்ப மேற்சிறை விரித்த தும்பியென விரிதரும்
வம்பி லங்குவன மீது மெல்லவடி வைத்து மேவு பொழு தேபுவி
கம்பிதஞ் செய்தவெ னென்று சொல்லிது கண்டனன் கமல கண்ணனே. 192

கண்ட காலைபரி யுங்கடா வியுயர் கார்முகத்தையும் மலர்க்கையில்
மண்ட லாகர முறக்கு னித்தரை மதிச்சரந் தழுவ வைத்திழுத்து
அண்ட நாயக னெருக்கு போதுகரி யஞ்சி நீள்கரம் உயர்த்திவான்
விண்ட வாயொடிரி போதெ மையனும் விரட்டினான் பரிய தட்டினான். 193

190. இதுவும் குதிரையின் கதி. செண்டு - குதிரை செல்லும் வீதி. எந்தையம்பு நிகர் - இராமன் விடும் அம்பு நிகர்த்த வேகத்துடன்; சரகதி - குதிரையின் கதிகளுள் ஒன்று. சண்ட வாயு - விரைந்த வாயு. அகிசார் தலம் - ஆதிசேடன் தாங்கிய பூமி. குகதம் - அற்பமென்னும்படி. திண்தடம் பரிகடாவி - வலிமை பொருந்திய குதிரையைச் செலுத்தி.

191. கரி - சிங்கம். வரி - புலி. அசலம் - மலை. ஒரு கரி (யானை) கடைந்தது, அதன் தகைமை என்னல் கழறத் தக்கதன்று என்க.

192. தும்பி - யானை. சிறை விரித்த தும்பி - வண்டு. வம்பு - மணம் கம்பிதம் - நடுக்கம், மெல்ல அடி வைத்த பொழுதே புவி நடுங்கிற்று. என்னென்று சொல். கமலக்கண்ணன் அக்கரியைக் கண்டனன்.

193. கார் முகம் - வில். மண்டலாகரம் உற - மண்டலம் போல். குனித்து - வளைத்து. அரை மதிச்சரம் - அர்த்த சந்திர பாணம். கண்ட யானை வாய் விண்டு ஓடிந்து. இரி போது - ஓடிய போது.

குஞ்ச ரம் பெரிய சஞ்சலங் கொடியர் கோடு காடு பல குப்புரு
நெஞ்ச யர்ந்துவலி யெஞ்சி யேகுமிடை நேரில் வானளவு நீடிய
மஞ்சு றங்கு மொரு சோலை எய்தி மலர் கொய்ய வந்த
மடமாதரார்
தஞ்ச தங்கொண்டு மாது கண்டு கழல் தஞ்ச மென்றுகரி
தாழ்ந்ததே. 194

## கதைச் சுருக்கம்

முனிவர்கள், திருமால் திருமகளை மணந்த கதை கூறுமாறு கேட்க, சூதமுனிவன் கூறுகிறான். திருமால் குதிரையேறி வேங்கட மலையின் சோலை வளங் காண்கிறார். அப்போது ஒரு கொடிய யானை வர, அதைத் துரத்திச் செல்கிறார். அந்த யானை, ஒரு சோலை எய்தி அங்கு மலர் கொய்யவந்த மாதைக் கண்டு பணிந்தது.

194. குஞ்சரம் - யானை. கோடு - மலை. மஞ்சு உறங்கும் - மேகம் தோய்கின்ற. ஓடிய யானை சோலையில் ஒரு மாதைக் கண்டு தஞ்சமென்று தாழ்ந்தது.

## 8. தேவி தோன்று படலம்

### அறுசீர் விருத்தம்

காரிகை யென்ற மாற்றம் செவியுறு காலை ''அந்த
நாரிதன் வரலா றைய நவிலுக'' என்று மேலாம்
ஆரியர் வினவ லோடும் அகமகிழ்ந் தவரை நோக்கிச்
சீரியல் உணர்ந்த சூத முனிவரன் செப்ப லுற்றான்.

தாங்கிய எழுநான் சாய சதுருகங் கழிந்த பின்னர்
தீங்குறு கலியு காதி சிறந்தஅக் காலை தன்னிற்
பாங்குடன் செங்கோ லோச்சிப் பாரினைப் பரிந்து வந்த
ஓங்கிய அரசர் சென்றோ ரொழியமற் றுலகை யாண்டோன். 196

திங்கள்தன் மரபில் வந்த சீர் பெறுஞ் சுவிர மன்னன்
துங்கமா மைந்த னாகித் துலங்கிய சுதர்ம னென்னுஞ்
செங்கதி ரொளியோன் ஈன்ற சிரேட்டனா காய னென்போன்
அங்கவன் பின்னோன் தொண்ட மானென அறைவர் மன்னோ.

இருவருஞ் சுருதி யாதி எல்லையில் நூலு ணர்ந்து
மருவளர் துளவ ணிந்த மாதவன் பத்தி பூண்டு
பருவ மொன் றின்றி யாவும் பல்குற நெறியில் நின்று
கருவமி லாம லன்பாய்க் காசினி காக்குங் காலை. 198

நீதிநூல் நெறிவ ழாத நிருபரில் தலைவன் மேலாங்
கோதிலாத் தன்னா டாள்வான் குமர னிலாமை யாலே
வாதனை யுளத்த னாகி வருந்துறு காலை தன்னில்
வேதியர் குழாங்கள் சூழ மேவிய குருவைக் கண்டான். 199

195. நாரி - பெண். ஆரியர் - முனிவர். முனிவரன் - முனிவன்.

196. எழுநான்கு - 28. சதுருகம் - நான்குயுகம். தீங்குறு - கலி கொடுமை நிறைந்தது என்று சொல்லப்படுவது. பரிந்து - தாங்கி, புரந்து.

**197.** திங்கள் தன் மரபு : சந்திரகுலம். சுவிரன், சுதர்மன், ஆகாயன், தொண்டைமான் என்போர் ஆண்ட மன்னர்.

198. சுருதி - வேதம். மாதவன் - திருமால். பல்குற - பெருக. மருவளர் - மணம் மிக்க. காசினி - உலகு.

199. குமரன் இலாமையால் வருந்திக் குருவைக் கண்டான்.

சாந்தநற் குணங்கள் யாவுந் தானொரு வடிவ மாக
ஏய்ந்த சற் குருவின் செய்ய இணையடி சிரமேற் பூண்டு,
''நீந்தரும் பிறவிப் பௌவம் நீக்கிஎன் றனையீ டேற்றப்
போந்தருள் எந்தாய்! எற்பின் புவிபுரப் பவரைக் காணேன். 200

''சென்றதோர் சனனந் தன்னிற் சிறுவர்மேல் இரக்க மற்றுக்
கொன்ற னோ, இப்பி றப்பிற் குழவிதன் முகம்பா ராமல்
நின்றியான் புலம்ப லானேன் நிலமிசை மகவி லார்கள்
என்றும்வீ டணுகார் என்றே இயம்புவர் நூலு ணர்ந்தோர். 201

''குழவிதன் வதனம் என்னுங் குசேசயம் நோக்காப் பாவி,
அழுகுர லதுகேட் டோடி அன்புடன் தழுவாப் பாவி,
மொழிதரு மதலை யுச்சி மோகமாய் மோவாப் பாவி,
'எழிலுற அலங்க ரித்தே எடுத்தவை எய்தாப் பாவி. 202

'நீளநேர் தண்டத் தோடு சமன்வீடு தூதர் நேர்ந்து
காளை நீ வருவாய் என்று கனன்றெனை இழுக்கு மந்த
வேளையின் மீளு தற்கோர் வினையிலா தரிமா நேர்பட்டு
ஊளைகொள் ஓரி யொப்ப உருகவோ உருவ முற்றேன்.'' 203

என்றடி மிசைவீழ்ந் தேங்கும் ஏந்தல்தன் வதனம் நோக்கி
''நன்றி சேர் மகவு காண்பான் ஐயநீ நசையுற் றாயேல்
ஒன்றிய வேள்வி இன்னே உஞற்றுதி'' என்ன மெய்ம்மை
துன்றிய குரவன் கூற உடன் செயத் தொடங்கி னானால். 204

புத்திர காம யாகம் புரிதரு முறையிற் செம் பொற்
பத்திர வலத்தி னாலிப் பாரினை உழுத போழ்து
மித்திர னொளியும் எஞ்ச விளங்கிய கமல மீது
சித்திரப் பதுமை போன்று சிறந்திடுஞ் சிசுவைக் கண்டான். 205

200. பௌவம் - கடல். எற்பின் - எனக்குப் பின்பு. காணேன்: புத்திரனில்லை என்றவாறு. இது முதல் 203 வரை அரசன் கூற்று.

201. சனனம் - பிறவி. கொன்றனோ - கொன்றேனோ. மகவு - புதல்வன். வீடு - மோட்ச வீடு.

202. புத்திரப் பேறிலாத தனது பாவத்தன்மையைக் கூறுகிறான். வதனம் - முகம். குசேசயம் - தாமரை.

203. சமன் - யமன். கனன்று - கோபித்து. வினையிலாது - புதல்வர்ப் பேறு என்ற புண்ணியமில்லாது. அரிமா - சிங்கம். ஓரி - நரி. உருவமுற்றேன் - பிறந்தேன்.

204. நசை - விருப்பம். உஞற்றுதி - செய்வாய். குரவன் - குரு. வேள்வி செய்யுமாறு குரு கூறலும் அரசன் தொடங்கினான்.

205. புத்திர காம யாகம் - புத்திரன் விரும்பிச் செய்யும் யாகம். பத்திரம் - வாள். மித்திரன் - சூரியன். ஒரு தாமரை மலர் மீது ஒளிமிக்க குழந்தையைக் கண்டான்.

கமலமா மலர்வ யிற்றில் உதித்தபைங் கனக மேனி
அமலநா யகியைக் கண்ணுற்று யார்மக விஃதென் றேங்க
நிமலவா காய வாணி, ''அரச நின் னெறிநீட் டித்துச்
சமநிலை யொடுவாழ் வெய்தத் தந்தது''என்றுரைத்த தன்றே. 206

களித்த சரீரீ வாக்குக் கருத்துற உணர்ந்தா னந்தம்
வெளிப்படல் புளகங் காட்ட விரைவொடு கரத்தி லேந்தி
இளிப்பிலாப் பாவை யைத்தன் இல்லவள் கரத்தில் ஈயத்
தளிர்ப்புடை மனத் தாள் தாங்கத் தடமுலை சுரந்த தன்றே. 207

அந்தணர் தமக்க னேகம் ஆவொடு தனங்க ளீந்து
சந்ததங் குழவி தன்னைச் சாங்கமாய் வளர்க்கும் நாளிற்
சுந்தர அரசன் தேவி துலங்குறு கருவ டைந்து
நந்தலில் வனப்பு வாய்ந்த நந்தனன் தனைப்ப யந்தாள். 208

புத்திரன் வதனங் கண்ட புரவலன் அகம கிழ்ந்து
பத்திரக் குழுவி னோடு பலவிதத் தானந் தன்னைச்
சத்திரக் குரவர்க் கீந்து சடங்கெலாம் முடிந்த பின்னர்ச்
சித்திரப் புதல்வ னோடு சிறந்து வாழ்ந் திருந்தான் மன்னோ. 209

'குட்டன்தன் வரலா றெல்லாம் கூறிய துணர்ந்தோம் ஏந்தல்
கட்டம தகற்ற வந்த கன்னிகை சரிதந் தன்னை
மட்டற வுரைக்க'' என்று மாதவர் வினவ லோடும்
சிட்டரில் உயர்ந்த சூத முனிவரன் செப்ப லுற்றான். 210

206. தாமரை மலரில் தோன்றிய குழவியை. கனக மேனி - பொன்னொத்த வடிவம். நிமல - அழுக்கில்லாத. ஆகாய வாணி - அசரீரீ, சமநிலை - மனத்திருப்தியோடு.

207. அரசியிடம் அம்மகவைக் கொடுக்க அவள் முலை பால் சுரந்தது. இளிப்பிலா - குற்றமற்ற.

208. தேவி ஒரு புதல்வனைப் பெற்றாள். சாங்கமாய் - முறைப்படி நந்தலில் - குறைவில்லாத. நந்தனன் - புதல்வன்.

209. பத்திரக்குழு - உறுதிச்சுற்றம். சத்திரக் குரவர் - யாகம் முடித்த குருமார்.

210. குட்டன் - புதல்வன். ஏந்தல் - அரசர், கட்டம் - துன்பம். கன்னிகை - தாமரையில் தோன்றிய பெண்.

திருமலி கஞ்ச மீன்ற செல்வியென் றெவருந் தேற
மருமலி அலர்மேல் என்று வாஞ்சை யாய் நாம மிட்டு
அருமையின் மைந்த னோடும் அரிவையை வளர்க்கு மேல்வை
வருமுலைப் பருவம் நோக்கி மயங்கினன் அரையன் மாதோ. 211

அணங்கினிற் சிறந்த இந்த அரிவைபே ரெழிலி னாற்றற்கு
இணங்குறு புருடன் இப்பா ரிடத்தெவன் உளனோ வென்னா
வணங்கிய சென்னி யோடு மனைவிபால் நாடோ றுஞ்சென்று
உணங்கிய மனத்த னாகி உழன்றிறை அயருங் காலை. 212

ஒளிமிகு வேனிற் காலம் உற்ற அத்தருணந் தன்னிற்
களிமிக அருள் வனத்திற் கன்னிய ரோடு கூடி
அளிதிகழ் மலரெ டுத்தற் கடைந்தளம் அலர்மே லன்னை
இளிவிலாத் தருவின் நீழல் இருந்தனள், இருக்குங் காலை. 213

211. கஞ்சம் - தாமரை செல்வி - மகள். அலர்மேல் - அலர் மேல் மங்கை. அரிவை - இங்கு அப்பெண் குழ்ந்தை. ஏல்வை - காலத்தில். முலைப் பருவம் - மணப் பருவம்.

212. இணங்குறு - ஒத்த, உணங்கிய - வருந்திய, இறை அரசன்.

213. அலர்மேல் மங்கை நந்தவனத்தில் மலர் எடுக்கச் செல்லுதல்.

## கதைச் சுருக்கம்

மாது என்ற சொல்லைக் கேட்டு முனிவர்கள் அவள் வரலாற்றை வினவ, சூதமுனிவன் சொல்லுவான்.

கலியுகத்தில் திங்கள் மரபில் விசுரன் சுதர்மன் குலத்தில் ஆகாயன் தொண்டைமான் மன்னாக வந்தான். புத்திரன் இல்லாமையால் வருந்தி, புத்திரன் வேண்டும் என்ற தன் விருப்பத்தைக் குருவிடம் கூறினான். குரு புத்திர காம யாகம் செய்யுமாறு கூற அரசன் அவ்வாறே செய்ய, ஒரு தாமரை மீது ஒரு பெண் மகவு தோன்றிற்று. 'உன் வாழ்வு தழைக்க இக் குழவி வந்திருக்கிறது' என்று அசரீரி கூற அரசன் அதை எடுத்துச் சென்று மனைவி கையில் கொடுத்து வளர்த்தான். நாள்கள் செல்ல அரசி நந்தனன் என்ற குழந்தை பெற்றாள். தாமரை மேல் வந்தமையால் மகளுக்கு அலர்மேல் மங்கை என்று பெயரிட்டு வளர்க்க, அவள் மணப் பருவம் அடைந்தாள். ஒரு நாள் அலர்மேல்மங்கை மலர் எடுக்க எண்ணி மலர்வனம் சென்றாள்.

## 9. நாரதர் சந்தித்த படலம்

சடந்தனிற் பூதி பூசிச் சடைமுடி இலங்க நாக
படந்திகழ் வீணை தாங்கிப் பத்திவா சனையுட் கொண்டு
திடந்தரும் அரியின் நாமஞ் செபிக்குநா ரதன்மா மாயை
கடந்தவ ரேத்துந் துய்ய கன்னிதன் னருகில் வந்தான். 214

''நலமலி குணங்கள் யாவும் ஒருரு வாக நண்ணி
உலகுளோர் துயரந் தீர்ப்பான் உற்றநீ யார்கொல்?'' என்ன,
''இலகுற வனத்தி லுற்ற இராசபுத் திரியே, யானுன்
குலகுரு வாகும் பாணிக் குறிதனை அறிவேன்'' என்றான். 215

''கரந்தனில் விளக்கு ரேகைக் காரியம் உணர்ந்த என்தன்
தரந்தனை வெளிப்ப டுத்தச் சார்ந்துளேன் கரம் நீட்டு'' என்ன
நிரந்தரம் அரியின் நாமம் நினைவினின் றகலான் கூறச்
சிரந்தனைக் கோட்டி நாணஞ் செறிதர மவுன முற்றாள். 216

''தையலிற் சிறந்தாய், உன்றன் தந்தை யொப்பாக என்னை
ஐயுற வில்லா தெண்ணி அங்கைகாட் டுதிநீ'' என்று
வையகம் ஏத்து மேலாம் வரமுனி உரைப்பக் கேட்டு
நையலை அகற்றி அன்னை நளின அங் கரம்வி ரித்தாள். 217

கங்கை தன்கரவி ரேகைக் குறியலால் நயமி குந்த
அங்கமா ரிலக்க ணங்கள் முழுதுமாய்நீ தகம கிழ்ந்து
மங்கள வியல்பு யாவும் மனக்கொளீஇ மாதை நோக்கி
பங்கயன் புதல்வ னான பருணிதன் புகல்வ தானான். 281

214. சடம் - உடல், பூதி - திருநீறு, கன்னி - அலர்மேல் மங்கை. இவளே இலக்குமி யாதலால் மாயை கடந்தவர் ஏத்தும் என்றார்.

215. என்ன - என்று காவலர் கேட்க. பாணிக்குறி - கை ரேகைக் குறி. அறிவேன் - அறிந்து சொல்வேன்.

216. என்ன - என்று நாரதன் கூற அகலான்-நாரதன். கோட்டி - கவிழ்த்து, உற்றாள், மங்கை,

217. நையல் - மெலிவு. நளின - தாமரையொத்த.

218. குறியலால் - குறிகளைக் கொண்டு மட்டுமல்லாமல். மனக்கொளீஇ - மனத்தில் கொண்டு. பங்கயன் - பிரமன். பருணிதன் - புலமை மிக்க நாரதன்.

## நெடிலடிச் சந்த விருத்தம்

வரைமேவு நிறைதோகை புரைசாயை முறைசார வருமாதராய்,
கரமேவு பிறையாகு குறிநீர்மை வரலாறு கருதாவுளம்
புரைமேவ விரைவாக நிறமாறி யறமீறு பொலிவார் சுரத்
தரைமேவி யொருவாது தவமாரு மிருபோது தளர் கோடலே. 2.9

காதமிசை மோதமிகு சாதக மறாதமதர் காமர் விழியாய்,
ஓதமிசை கோதரமு னாதுநெரி மேவுசுரு ளோதிகுறியாக்
கேதமிகை யாதலத னாலுயர வேகிநலி கீணமுறுமா
நாதமுட னேயழுக ணீர மது வேயுலகி னாளு நதியே. 220

கற்றவர் மனத்தைமய லுற்றலைய வைத்தவொளிர் கச்சுமுலை யாய்
முற்றவெழில் பெற்றவுன முகக்குநிக ரொத்துறு முயற்சியதனால்
தெற்றலுற சுத்ததிதி யுற்றுரு புதுக்குபு சிறப்பில வெனாக்
குற்றமறு புத்துரு வமைக்க நினைவுற்றுடல் குறைக்கு மதியே. 221

நளிர்கஞ்ச மலர்மஞ்ச மிசையஞ்ச நிகரெஞ்ச நடை மிஞ்சுவாய்,
ஒளிர்தங்க ணருளெங்கும் இலையென்ற கமிகுந்து லவு பங்கயத்
தளிர்தங்கு கயலுன்கி ருபையங்க ணிணைகண்டு தவநெஞ்சுளே
களிசென்று சிறிதுந்தெ ரிவதின்றி வலையொன்று கணழிந்தவே.

தரிப்புறு பெருங்கலி வரிப்புரி கிரீவநிகர் தருமாதராய்
பரிப்புறு நறுங்குண முரித்தென விளங்குனது பசுநாசிகண்
டெரிப்புறு கொடுங்குண வுருக்கொடலர் சண்பகம திடைசார்கிலா
கிரிப்புறு முளங்கொடு வரிக்கரிய தும்பியவை களெந்நாளுமே. 223

219. தோகை புரை சாயை - மயிலொத்த சாயல், மாதராய் - விளி. கருதா உளம் புரைமேவ - குறியைக் கருதாத உள் உள்ளம் மாசு. படியும்படி தளர் கோடல்: தளராதே.

220. விழியாய்: விளி. நெரிமேவு - அடுக்குக் கொண்ட சுருள் ஓதி - சுருண்ட கூந்தலையுடைய உன்னை. குறியா - குறிக்கொண்டு.

221. முலையாய்: விளி. மதி, உனது முகவொளி பெற முயன்று அதனால் உடல் குறைக்கிறது.

222. கஞ்ச மலராகிய மஞ்சமிசை என்க அஞ்சம் - ஹம்சம், அன்னம், பங்கயத் தளிர் தங்கு கயின். உன் கிருபையங்களிர் கண் கண்டு, கண்ணழிந்தன என்க.

223. கிரீவம் கழுத்து - சண்பக மலர் உன் நாசிக்கு இணையில்லை, எரிப்புறு - பொறாமை கொண்ட.

கடிமேவு வடிகூருன் இதழ்நேரு தரமாதர் கனமீறவே
கொடிமேவி யடர்கோவை வடிவாய கனியேது குறியாநிதம்
படிமேவு முடியாக வடமாய தவநேர்பு பரிவாயினும்
அடிமேவு படுபாசி கடவாமல் நெடுநாளு மயர்கூருமே. 224

புத்தமுத மொத்தமொழி பெற்றுநில முற்றுவளர் பொற் கொடியனாய்
சுத்தமிகு பத்திவடி வத்துனெயி றுக்கிணை சொலக்கருதுறா
முத்தமதி டைத்துளை பொதுத்திழை புகுத்தழகு மொய்த் துறவிலாச்
சித்தமெலி வுற்றுரு நிறப்பழுது பெற்றவை சிறுத்துரியுமே. 225

இழைமேவு தனமேரு வதிபார மதில்வாடு மிடைமாதராய்,
குழைமேவுன் எழில்தோளின் அணியாரு னரநேர்மை குறியாபசுங்
கழைகால மிகவாடி வலிமாறி அயர்வோடு கனமார் நெடும்
புழைமேவு ளிடமாகி இழிவாரும் வளைவோடு புகழ் பாடுமே. 226

வின்மலை தரக்கலை குலைந்தலை யுறப்பிரபை வீசுநுதலாய்
பொன்மலை மிசைக்கடல் வணக்கடவு ளுற்றெழில் பொருந்து நிலைபோல்
உன்மலை முலைத்தலை நிலைத்தகண் விளக்குமணி யொளிகாணுறா
கன்மலை சிறைப்பொறை யொழித்துலகி னிற்றிடரில் கவைகூருமே. 227

நம்புமவர் அம்புவியில் இன்பமுறு செம்பொருள்கள் நல்குமொழியாய்
உம்பெரிய வாறளிர் நிரம்புறு முரோமமுலை யோங்கலிடைமே
வம்பெரு மிதம்பெற மதந்திகழ் தருங்கரியி னடிசேர்வுறாக்
கும்பமிசை தங்குற வரந்தருக வென்றுதொடர் கூவியழுமே. 228

224. கோவைக் கனி உன் அதரத்துக்குத் தோற்றது. அயர் கூரும் - வாட்ட மடையும்.

225. பொற் கொடியன்னாய், உன் எயிற்றுக்கு முத்தம்தோற் றது. முத்தம் துளைபெற்று, இழை புகுத்து மெலிவுற்று உரியும்.

229. அணியார் உன்னத நேர்மை. குறியா - குறித்து. கழை - மூங்கில். மூங்கில் உன் தோளெழிலுக்குத் தோற்றது.

227. வில் மலைதர, கலை (சுந்திரகலை) குலைந்ததலைய. பிரபை - ஒளி, முலையின் சிறப்பு.

228. இதுவுமது,

காமனெழின் மாமலரின் வாளிதொடு சாபநிகர் காமர் நுதலாய்
தாமமணி பாரமுலை யால்நிதமும் வாடுனது சாயலிடையை
வீமமருள் சீயமவை காணுபுவி நாரியெதிர் மேவியினிமேல்
நாமுயிரின் வாழ்தலறி வீனமென வேமறைவு நாடியதுவே. 229

கறங்கலை யுறுங்கடல் தருங்குளி ரினுங்கருணை கமழ்பார்வையாய்
குறங்கதன் இலங்கெழில் நலங்கருதி யங்கனி குலுங்கமலரும்
பிறங்கு மிலையுங் கொளும் அரம்பையி னினங்களுள
பிணங்கிமிகவும்
நொறுங்கி முழுதங்கம்வயி ரங்கெட மெலிந்துபடை நொய்
- துரியுமே. 230

பானுமிக நாணநய தேகவொளி வீசுவரி பாரினிதியே
சானுகணை யாயபத மேவுமெழில் காணுபுநி தான நழுவி
ஈனமறு கூனினம் வராலினம் வயாவொடுதம் ஈரல்குலையத்
தானமினி யாகும் வளை நீருமென வோடிநிலை சாருநிதமே. 231

சந்ததம் நினைந்தவர் மணந்தனி விருந்தருள் தருந்தகைமினாய்
வந்தவரு டந்தொறு னிதந்திகழ் சுரந்தரு மலிந்த மொழி கேட்
டந்தமொ டறிந்துறு வசந்தபரு வந்தனி லறைந்து தமவாய்
பந்தக மடைந்துபரு வந்தொறு மெலிந்துபயி லுங்குயில்களே. 232

கஞ்சமிசை மேவுகம டந்தனை நிகர்த்தகழ லென்று புகல
நெஞ்சமிசை யாவொரு மனங்கொடு தினந்துதி நிகழ்த்தியதையே
தஞ்சமென நம்பிலவ ரன்புறு பதந்தருத றன்மை யுளதோ
வஞ்சியுள தஞ்சர ணடைந்த வர்கள் வீடுபெரு வாழ்வடைவரே.

நாகுபழி மேவுமழ காயகள மார்நளின நாடுறுமினே,
வாகுநடை காணுபிடி யாவுமுள நாணியொரு மாடு விலகிப்
போகுமிட மேதுமறி யாமையினன் மூடுதிரை போடு முகமீ
தாகவன மானுமென யாதுமறி யாவறிவி லார்புகல்வரே. 234

229. வாளி அம்பு. சாபம் - வில்; நுதலுக்கு உவமை. தாமம் - மாலை, இடையின் சிறுமையைச் சிறப்பித்தது.

230. குறங்கின் சிறப்பு,

231. முழந்தாளின் சிறப்பு,

232. குயில்கள் மொழி பயிலும்.

234. இதுவரை மங்கையின் உறுப்புக்களின் அழகுக் கொவ்வாமல், பிற பொருள்கள் தோற்றன என்று விரிவாய்ச் சொன்னார்.

### அறுசீர் விருத்தம்

எண்ணில்நோன் பிழைத்தி கத்தில் எழுந்தரு ளியபொற் கஞ்சப்
புண்ணிய வதியே, உன்றன் பொற்பினை வடிவங் கொண்டு
மண்ணினோர் ஏத்த நின்செம் மலர்க்கரம் பிடித்து வாழ்க
நண்ணுவான் சௌரி யென்னா நாரதன் உரைத்தான் மன்னோ

இந்துவைப் பழிக்குங் காமர் ஏந்திழை விடைகைக் கொண்டு
சிந்தையில் வணங்கி யேத்திச் சிறப்புறு முனிவன் சென்றான்,
விந்தையார் வனத்தில் வைகும் மின்னனாள் சரித மோர்வீர்
நந்தலின் மதமாப் பின்னர் நண்ணினோன் தன்மை கேண்மோ.

235. எண்ணில் நோன்பு - கணக்கில்லாத தவம்; தவத்தால் வந்தவள். கஞ்சம் - தாமரை. புண்ணியவதியே: விளி. வாழ்க - வாழ. சௌரி - சௌரமுடையனவான திருமால். நாரதன் இவ்வாறு கைரேகை பார்த்துக் குறி சொன்னாள். முனிவன் - நாரதன். இது சதானந்த முனிவன் கூற்று

236. இந்து - சந்திரன். காமர் - அழகு. ஏந்திழை - அத்திரு மகள். ஓர்வீர் - இவ்வாறு - அறிவீர்களாக. மதமா - மதங் கொண்ட யானை; பின் வந்தவன் திருமால். கேண்மோ - கேட்பீராக,

### கதைச் சுருக்கம்

அவள் முன்னே நாரதன் தோன்றி, அவள் கையின் குறிகளைப் பார்த்து, அவள் உறுப்புக்களின் அழகைப் பலபட வருணித்து, அவளை மணம் புரியத் திருமாலே வருவான் என்று சொல்லி மறைந்தான்.

## 10 தேவியைக் கண்ணுற்ற படலம்

தூசிமீ தேறித் தன்பின் துரிதமாய்த் தொடரு கின்ற
மாசிலான் நெருங்கல் நோக்கி வாரணம் வாய்விட் டார்ப்பத்
தேசிக மாதர் கண்டு திடுக்கமுற் றேங்கி உள்ளங்
கூசியோர் தருவின் சார்பு மறைந்தனர் குழுமி மாதோ. 237

அத்தியைக் கவர்வான் போலத் தொடர்தரும் அண்ணல் தாளைப்
புத்தியாய் வணங்கித் தும்பி பரவியாண் டகற லோடும்
நித்திய பரியி னோடு நேரிலா மாதர் கூட்டம்
நத்திய தருவை நோக்கி நடந்தனன் நமது நாதன். 238.

நடந்தெதிர் வந்து நின்ற நம்பியை நோக்கி உள்ளத்
திடந்தனை யொருவி ஏங்குஞ் சேடியர் தம்மைப் பார்த்துத்
தடந்திகழ் தோளான் ''அன்னை தந்தையும் மரபுந் தங்கும்
இடமுநீர் அறிதிர்'' என்றவ் வேந்திழை உணரச் சொல்வான். 239

''மன்னிய மதிக்குலத்து மன்வசு தேவன் ஈன்றோன்,
அன்னை தேவகி, என் முன்னோன் அடல்பல ராமன், மாற்றங்
கன்னல்நேர் சுபத்திரை எங்கை, காண்டிபன் மைத்து னன்தான்,
உன்ன தக்கண்ண னென்றே உம்பர்கள் அழைப்பர் என்னை. 240

''என்குல வரலா றெல்லாம் இசைத்தனள் எழில்நி றைந்த
நன்குல மொழியோ டுற்ற நாரியர்க் கரசி, நன்றாய்
உன்குல முரைத்தி'' யென்ன உத்தமன் கேட்க மாது
தன் குல வியற்கை யாவும் தெரிதரச் சாற்ற லுற்றாள். 241

237. தூசி - குதிரை. மாசிலான் - அத்திருமால். வாரணம் - யானை. தேசிக - அழகு பொருந்திய.

238. அத்தி - யானை, தும்பி - யானை, அகறலோடும் - அப் பால் அகலுதலோடும், நத்தியதரு - அடைந்த மரம்.

239. உள்ளத்திடம் - மனவுறுதி, ஒருவி - விட்டு, நாதன் தன் வரலாற்றை அவர்களுக்குக் கூறுகிறான். தோளான் - திருமால். ஏந்திழை - மங்கை.

240. இங்கு திருமால் உண்மைக் கண்ணனாகவே தன் வரலாறு முழுமையும் கூறுகிறான். மாற்றம் - சொல். கன்னல் - கரும்பு. காண்டிபன் - சுபத்திரையை மணம் புரிந்த அருச்சுனன்.

241. உத்தமன் - திருமால்,

''இந்துதன் மரபில் தோன்றி இப்புவி பொதுவிற் காக்குந்
தந்தை ஆகாய மன்னன் ஈன்றவள் தரணி தேவி
விந்தை யத்திரி தனும்பன் மேதினி யோர்க ளென்னைத்
தொந்தமாய் அலர்மேல் என்று சொல்லுவர் அன்பி னோடும். 242

''குமர,நீ மிக விருப்பங் கொண்டெனை வினவ லாலே
சமரச மாக என்றன் தந்தைதாய் தலமுஞ் சொன்னேன்
அமரரும் அணுக அஞ்சும் அருமலர் வனத்தில் இன்னே
தமரணு குதற்கு முன்னர்ச் சாருதி புறம்பே'' என்றாள். 243

''பசித்தவர் தங்கட் கன்னம் படைத்திடல் தரும மாகும்
நசித்தவர் தமக்குச் செல்வம் நல்கிடிற் கீர்த்தி சேரும்,
முசித்துறு மோக நோயால் முன்னர்வந் திரக்கும் எற்குப்
புசித்திட இதழ்ம ருந்து புகட்டல்நின் கடமை'' என்றான். 244

''கன்னிகை என்று சற்றுங் கருத்தினில் நினைவு றாமல்
மின்னிய எயிறு தோன்ற வித்தகம் பேசும் வேடா,
உன்னிய தொவ்வா'' தென்ன ஒன்றுபட் டோய்வி லாமந்
சென்னியின் மீது வீழச் சிலைமழை பொழிந்தார் மாதோ. 245

**சேடியர் கல்லால் அடித்தல்**

கல்லடி பட்டு வெய்ய காமப்பேய் வசத்த னாகி
மல்லினிற்றிணிதோளண்ணல் மயக்கொடுமீண்டான் என்னில்,
நல்லெழிற் கலன ணிந்த நாரியர் மோகந் தன்னை
வெல்லுவர்எவர்கொல், மாயை விலக்கொணா உலக மாந்தர். 246

242. இந்து - சந்திரன். தந்தை ஆகாயன், தாய் தரணி, (வானும் பூமியும் பெற்றோர்). அத்திரிகோத்திரம், மேதினி யோர் - உலகிலுள்ளோர். அலர்மேல் - என் பெயர் அலர்மேல் மங்கை, தொந்தம் - உரிமை.

243. குமர - விளி. தலம் - இடம். தமர் - என் சுற்றத்தார்.

244. நசித்தவர் - நிலை குன்றியவர். முசித்துறும் - மெலி விக்கும். இரக்கும் - உன்னை யாசிக்கும். எற்கு - எனக்கு. இதழ் - வாயிதழ்.

245. வேடா - வேடவடிவத்தோடுவந்த வீரனே உன்னியது. நினைத்தது (காதல் கொண்டது) சென்னியின் - வீரன் தலையின். சிலைமழை - கல்மழை கல்லால் அடித்தார்கள் (சேடியர்).

246. கல்லடி பட்டு - அப்பெண்களால் இவ்வாறு கல்லெறி பட்டது. கலன்-அணிகலன். அண்ணல்-இத்தலைவன். இது கவி கூற்று.

—5—

**தலைவன் வேங்கடம் மீண்டு வருந்தல்**

அரியிடை யனுங்க ஓங்கும் அரிவையின் நகில மென்னுங்
கிரியிடை யுள்ள மேறக் கிலேசமாய் அறிவ ழிந்து
பரியுடன் உவப்பு நீங்கிப் பாதமா மலர்கள் நோவ
விரிவுறு நெறிக டந்து வேங்கடம் ஏறி னானால். 247

இருப்பில் வந்தெய்திப் பின்னர் ஏந்திழை காமத் தீயாம்
அருப்பினால் வாடி அண்ணல் அலரணை யணுக மேனி
உருப்பினான் மலர்கள் தீய உயிர்ப்பினாற் புழுதி யாக
நெருப்பினில் இட்ட நெய்யின் நெஞ்சழிந் துருக லுற்றான்.

247. அனுங்க - வருந்த. அரிவை-தேவி. நகிலம் - கொங்கை பரியுடன்: குதிரையையும் விட்டு. உவப்பும் - மகிழ்ச்சியும் பாதம் நோவ - காலால் நடந்து என்க. விரிவுறு - நீண்ட.

248. தலைவன் நிலை. இருப்பு - இருக்கை. அருப்பு - வருத்தம் உருப்பு - வெப்பம். உயிர்ப்பு - மூச்சு.

## கதைச் சுருக்கம்

குதிரைமீது வந்த வீரனைக் கண்டு பெண்கள் ஒரு மரத்தின் சார்பில் மறைந்து நின்றனர். யானை அப்பாற் செல்லவே, வீரன் அவர்கள் இருந்த இடம் நோக்கிச் சென்று தன்னை அவர்கள் அறியச் சொன்னான் சந்திரகுலத்து வசுதேவன் தேவகி மைந்தன், பலராமன் தம்பி, சுபத்திரை அண்ணன், அர்ச்சுனனுக்கு மைத்துனன், பெயர் கண்ணன் என்று. அவர்கள் வரலாறு கேட்கவே மங்கை சொல்வாள்: நான் சந்திரகுலத்து ஆகாய மன்னன் தரணி தேவி இருவர் புதல்வி. பெயர் அலர்மேல். நீ இங்கு நில்லற்க போய்விடு என்றாள். அவன் தன் காதலை வெளிப்படுத்த அதைக் கண்டு சினந்த சேடியர் அவனைக் கல்லால் அடித்தனர். அடிபட்ட வீரன் வேங்கடமலைக்கு நடந்தே மீண்டு பள்ளியில் கிடந்து வருந்தினான்.

# நான்காம் அத்தியாயம்

## 11. வரலாறு கிளத்து படலம்

ஏர்மிகு சூதன் அன்பாய் இசைத்தன யாவுங் கேட்டுச்
சீர்திகழ் முனிக்கு ழாங்கள் வியப்பொடு சிந்தை கூர்ந்து,
"நேரிலான் சரிதை மற்றும் நிறைவுறப் புகல்தி" என்ன
மாரிநேர் கருணை யோடு வகுத்துரை செய்ய லுற்றான். 249

**பகுளை வினவுதல்**

மிஞ்சிய அன்பி னோடு விசையன் தன் சேவை யாவும்
சஞ்சலம் இலாதி யற்றுஞ் சனனியாம் பகுளா தேவி,
மஞ்சுள பாய சான்னம் இயற்றிவந் தவண்மா தூய
நெஞ்சினிற் கருணை யோடு நேரிலான் செயலை நோக்கி 250

படுக்கையின் மீதி லுற்றுப் படத்தினான் முழுமெய் மூடி
ஒடுக்கமா யிருக்க "ஐய, உனக்குறு துயரம் யாதோ?
இடுக்கமாங் கான கத்தில் எய்திய காலை உன்முன்
துடுக்குறு காளி கூளி தோன்றியச் சுறுத்த துண்டோ? 251

"உள்ளத்தி லுற்ற சங்கை ஒளித்திடா துரைப்பா யாகில்
கள்ளமி லாமல் யானக் காரியம் முடியுங் காறும்
எள்ளள வேனுஞ் சோர்வின் றியற்றுவன்" என்னக் கேட்டு
வள்ளல்மேற் போர்வை நீக்கி மனங்களித் துடனெ ழுந்தான்.

வரலாறு: அலர்மேல் மங்கையின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறுவது.

249. நேரிலான் - வேங்கடவன். மற்றும் - எஞ்சியுள்ளன. புகல்தி - சொல்லுவாய். மாரி - மேகம்.

250. விசையன் - இவ்வெற்றி வீரன். சேவை - பணிவிடை. சனனி-தாய். மஞ்சுள-இனிமை பொருந்திய. பகுளாதேவி - வகுள மாலிகை என்றும் பெயர்.

251. படம் - போர்வை. கூளி - பேய்.

252. சங்கை - துயரம். என்ன - என்று அவள் கூற.

**வேங்கடவன் கூறுதல்**

என்னையா ளுடைய எந்தை ஏம்பலோ டினிது வந்து
மன்னிய தொண்டை நாட்டு மன்னன்ஆ காயன் என்போன்
நன்னயத் தவத்து தித்த நங்கைதன் இயல்பை நன்றாய்
அன்னையாம் பகுளா தேவி அறிவுற எடுத்து ரைப்பாள். 253

**வேதவதியின் வரலாறு**

''பண்டுயான் இராம னாகப் பாரினில் அவத ரித்துத்
தண்டகா ரணியம் புக்குச் சனகியோ டமர்ந்த போழ்து
கண்டக இராவ ணன்தான் கரவுசெய் தவளைத் தேர்மேற்
கொண்டகல் வான யாற்றிற் குலைந்தவள் கதறும்காலை. 254

''உதாசனன் அக்குரற்கேட் டுத்தமி கலக்கந் தன்னை
விதானமாய்த் தவிர்ப்பல் என்னா விரும்பிவிண் நெறியில் எய்திச்
சுதாநிதி வதன மாமித் தோகைதன் வரலா றியாவும்
நிதானமாய் உரைப்பல் கேண்மோ, இலங்கைவாழ் நிருபஎன்னா.

''அரக்கர்கட் கரசே, நிற்காய் அஞ்சிஆ ரணங்கை என்பாற்
கரக்கவைத் திராமன் சாலக் கபடமாய் மறையோன் ஈன்ற
இரக்கமில் இவளால் உன்னை ஏய்த்தனன் மதிம யங்கிச்
சிரத்தொகை யுடையாய், கொண்டுசேறலிற் பயனொன்றின்றால்.

253. எந்தை - வேங்கடவன். ஏம்பல் - களிப்பு.

254. சனகி - சீதை. கண்டக - கொடிய, கரவு - வஞ்சனை, வானயாறு - ஆகாயவீதி.

255. உதாசனன் - அக்கினி தேவன். தோகை - மயிலை யொத்த சீதை. என்னா - என்று அக்கினி இராவணனுக்குச் சொல்கிறான். நிருப - இராவணனை விளித்தது.

256. அக்கினி கூற்று கரக்க-மறைத்து நிற்காய் - உனக்காக. சிரத் தொகை - பல தலைகள். ஆரணங்கை - சீதையை. அரசே, உடையாய் இராவணனை விளித்தது. மறையோன் ஈன்ற-முனியன் பெற்ற பெண்ணாகிய,

"எம்பிஎன் னுரைநீ கைக்கொண் டிவளையென் பால்ஈ வாயேல்
உம்பர்கள் துதிக்கும் பொன்னை உதவுவல்" எனவும் மாற்றம்
நம்பியவ் வரக்கன் உள்ளம் உணர்ந்தக மகிழ்ந்து நாடி
வம்பியல் குழல்சேர் வேத வதிதனை விளித்துச் சொல்வான்.

"ஆதியம் பரமன் தன்னை அணைந்திட ஆவல் பூண்டு
தீதில்நற் றவமி யற்றுக் தினத்தில்வந் திடுக்கண் செய்த
பாதகன் முடியுங் காலம் நெருங்கிய ததற்குப் பாவாய்,
ஏதுவாய் இருத்தி போ"வென் றிசைத்தனா னிடைக்
கொடுத்தான். 258

ஒளிதர வந்த மாதை உவப்புடன் அரக்கன் நோக்கி
அளிதிரி கூந்தற் சீதை தனைவிடுத் தகற லோடும்
நளினமா துளத்திற் கொண்ட நடுக்கமுந் துயரும் மாற்றித்
தெளிதரத் தன்திசைக்கட் சேர்ந்தனன் சாத வேதா. 259

வன்னியால் அருளப்பெற்ற வனிதையைத்தாங்கிச்சென்றோன்
உன்னத இலங்கை தன்னில் உவப்புடன் இருக்கும் எல்லை
மன்னிய இராம னாம்யான் வஞ்சகன் தன்னை மாய்த்துச்
சின்னமாஞ் சிறையி னின்று சீதையை மீட்டு நோக்கி. 260

257. எம்பி: இராவணனை விளித்தது, வம்பு இயல் - மணம் பொருந்திய. சொல்வான் - அக்கினி.

258. பரமன் - திருமால். தவம் இயற்றும் - வேதவதி தவம் செய்த. பாதகன் - இராவணன். பாவாய் - விளி, அக்கினி வேத வதியை விளித்தது. ஏதுவாய் - காரணமாக அனான் இடை - அவ்விராவணனிடை, வேதவதியை சீதை என்று சொல்லி.

259. ஒளிதர - பிரகாசத்தோடு. அளி - வண்டு. நளின மாது - தாமரையில் இருந்த இலக்குமியாகிய சீதை. சாதவேதா - அக்கினி.

260. வன்னி - அக்கினி. வனிதை - வேதவதி. சின்னம் - சிறுமை.

''பாருறு பழிய படங்சப் பாவகன் தனிலே மூழ்கி
நாரிநீ வருதி'' என்ன நயமுடன் இசைந்து மூழ்கி
ஏருறும் இருவ ராக எய்திட நோக்கி, ''உன்றன்
நேருறும் இவள்யார்'' என்னப் பதுமைநன் னெறியிற்
சொன்னாள். 261

''அந்தவெவ் வரக்கன் எற்காய் ஆற்றிய இடர்பொ றுத்த
சுந்தரி, இவள்தன் உள்ளச் சோர்வறப் புணர்தி'' என்று
வந்தனை புரிந்த கஞ்ச மடந்தையை நோக்கி அந்நாள்
'' இந்தவோர் அவதா ரத்தில் இதரரைத் தீண்டேன் மாதே 262

''ஆனதால் விரிஞ்சன் நாட்டை அடைந்துபூ சனையைப் பெற்று
வானவர் தொழ அமர்ந்து வருகின்ற இருபத் தெட்டாம்
ஈனமில் சதுரு கத்தில் என்றனை அடைதி'' என்னப்
போனவள் அரசன் பெண்ணாய்ப் புகுந்துளாள்'' எனப்பு
கன்றான். 263

**பகுளை நெறி வினவல்**

ஐயன துரைகேட் டுள்ளம் அலர்தரு பகுளா தேவி
''செய்யவள் வளர்ந்தி லங்கு திருநகர் அதனுக் கேக
மெய்யருள் நெறியைக் கூறில் விரைவுடன் நடப்பல்'' என்னப்
பொய்யிலா மொழியால் கூறப்புணரியில் துயின்றோன் கூறும்.

261. பாவகன் - அக்கினி. இருவராக - சீதை வேதவதி என்ற இருவராக. நோக்கி - இராமன் சீதையை நோக்கி. பதுமை - தாமரையில் தோன்றியவள்.

262. எற்காய் - என்துயர் எல்லாம் - இவன் தாங்கிக்கொண் டாள். புணர்தி - கூடுவாயாக. கஞ்சமடந்தை - சீதை.

263. விரிஞ்சன் நாடு - பிரமலோகம். சதுருகம் - நான்காம் யுகமாகிய கலியுகம். என்ன - என்று இராமாவதாரத்தில் யான் சொல்ல, புகன்றான்: வேங்கடவன்.

264. அலர்தரு - மகிழ்ச்சியடைந்த. செய்யவள்-திருவொப்பாள். புணரியில் துயின்றோன் - பாற்கடலில் பள்ளி கொண்டவன்.

## கதைச் சுருக்கம்

அவன் பட்ட இன்னலைக்கண்டு பகுளாதேவி தன்னிடம் அவன் துயரத்தைக் கூறினால், அவன் கவலையைத் தீர்ப்பதாகச் சொன்னாள். அதன்மேல் அவன் வேதவதியின் வரலாற்றைக் கூறினான். அவள் முற்பிறப்பில் ஒரு முனிவன் புதல்வியாய்ப் பிறந்து திருமாலை மணம்புரிய விரும்பித் தவம் செய்தாள் அவளை இராவணன் துன்பம் செய்தபோது அவள் ''நான் மறுபிறப்பில் உன் அழிவுக்குக் காரணமாய்ப் பிறப்பேன்'' என்று கூறித் தீயில் உயிர்விட்டாள். இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றபோது அக்கினி தேவன் தோன்றி ''நீ தூக்கிச் செல்வது பொய்ச், சீதை மெய்ச் சீதை என்னிடம்உன்னாள்'' என்று சொல்லி வேதவதியை அவனிடம் தர இவளை இராவணன் சீதையென்று நம்பிக் தூக்கிச் சென்று இலங்கையில் வைத்துக் கொடுமை இழைத்தான். பின்னர் இராமன் இராவண வதம் முடித்துச் சீதையைத் தீயில் மூழ்கி வா என்று சொன்னபோது தீயிலிருந்து சீதை வேதவதி இருவருமாக வந்தனர். சீதை ''இவளையும் மணந்து கொள்''என்று இராமனை வேண்டியபோது இராமன் ''இந்த அவதாரத்தில் மற்றவளைத் தீண்டேன் என்றான். அந்த மற்றவளாகிய வேதவதியே இப்போது ஆகாய அரசன்பெண்ணாய்ப்பிறந்திருக்கிறாள்'' என்று கூறினான். பிறகு பகுளாதேவி வழி ஆகாய மன்னன் நாட்டுக்குச் செல்லும் வினவ வேங்கடவன் கூறுவான்.

## 12. தூதுப் படலம்

**பகுளை சேடியரைக்காணல்**

கல்லகம் விட்டி ழிந்து கபிலைகாண் டத்தில் தோய்ந்து
முல்லையில் திகழுஞ் சொன்ன முகிநதி கடந்து வப்பாய்ச்
சொல்லுதி யென்று ரைத்த தேவன்சொற் படியே எய்தி
அல்லல்தீர் அகத்தி யன்றன் ஆச்சிர மத்திற் புக்காள், 265

விந்தையார் தருக்கள் சூழ விளங்குமாச் சிரமந் தன்னில்
அந்தரி பாகன் வாழும் ஆலய மதைய டைந்து
மந்தமா கதியோ டுற்ற மங்கையர் குழுவைக் காணா
' எந்தநற் காரணத்தால் எய்திய திவண்நீர்'' என்றாள், 266

**சேடியர் கூறுதல்**

''சமானமில் இவுளி யேறிச் சார்ந்தவன் எழிலைக் கண்டு
குமாரியாம் மின்னுக் குற்ற கொடுந்துயர் அகல ஆதி
உமாபதி பூசை செய்தற் குத்தம அரசன் ஏவ
அமானமா மறைவ லாரோ டணுகினோம் யாங்கள்'' என்றார்.

''கதிமிகு பரிமீ துற்ற காளையைக் கண்ட போழ்து
துதிமிகும் அரசன்ஈன்ற சுந்தரிக் குற்ற செய்கை
மதிமிகு விசால மான மங்கைமீர், எனது நெஞ்சிற்
பதிதர உரைமின்'' என்ன அன்னவர் பகர லுற்றார். 268

''வட்டவன் முலையோ டுற்ற மங்கைதன் வனப்பு நோக்கி
முட்டவெங் காமங் கொண்டு முல்லையில் எயிறு காட்டித்
தெட்டுதற் கெண்ணங் கொண்ட செம்மலைச்சினந்துயாங்கள்
'துட்டநீ அகல்தி' என்னாத் தூவினோம் கல்லுஞ் சில்லும். 269

265. கல்லகம் - மலை. காண்டம் - தீர்த்தம். தோய்ந்து - நீராடி. சொல்லுதி - சொல்வாயாக.

266. அந்தரிபாகன் - உமாபாகன். காணா - பகுளாதேவி அவர்களைக் கண்டு.

267. இவுளி - குதிரை, மின் - அலர்மேல் மங்கை. அகல - நீங்க எண்ணி. என்றார் - சேடியர் கூறினர்.

268. என்ன - என்று பகுளாதேவி கேட்க. விசாலமான மதி.

269. வல் - சூதாடு கருவி; கொங்கைக்கு உவமை. முட்ட - அதிகமாக. முல்லையில் எயிறு காட்டி - வெண்மையான பற்களைக் காட்டி. தெட்ட - ஏமாற்ற, தூவினேம் - எறிந்தோம்,

''கல்லடி பட்டு நொந்து காதலன் அகன்ற பின்னர்
நல்லெழில் குடிகொண் டோங்கு நறுமணக் கஞ்சச் செல்வி
அல்லலுற் றயர்தல் நோக்கி அதிவிரை வாகக் கன்னி
இல்லிடைக் கொடுபோய் மஞ்சத் திருத்திய காலை மாதோ.

''அணைமிசை அலர்ந்த நங்கை அகமிக உருகக் காமன்
கணைபல சிலையிற் கோத்துக் கனன்றுநின் றெய்யுங் காலை
இணையிலா பொருப்புக் கொப்பா எழுந்துயர் தனத்தாள் கன்னித்
திணையினை யகற்றிச் சித்தம் தியங்கியின் னனவு ரைத்தாள்,

**அலர்மேல் மங்கையின் அரற்றல்**

' இழிவிலா எழிலி ஏந்தல் தனைக்கண்ட காறொ டங்கி
ஒழிவிலாக் காம வெந்தீ ஓங்குவ துணர்ந்தி ருந்தும்
அழிவிலாத் தழலும் வெம்பும் அவர்தளிர் சாந்தங் கொண்டு
பழிசெயப் பிழையென் செய்தேன், பாங்கிமீர், பகர்மின் என்பாள். 272

''எல்லியும் பகலும் நொந்தீன் றெடுத்ததன் பார்ப்பை யெல்லாம்
மெல்லுமீன் பயிலும் வாரி வீற்றிருந் தெழுந்து வந்து
வல்லுற மனத்தோ டுற்ற மதியமே, மாத ராவி
கொல்லுதற் குனது நெஞ்சம் கூசுமோ, கொடியை என்னும்.

''அரிவையர் காம மேற்கொண் டல்லலுற் றழுங்கு மெல்லை
விரிதரு நிலவைக் காலும் வெணணிறக் கூற்றே, சொந்தக்
கிரியையாற் குறைவ தல்லாற் கிளருமுன் மருமந் தன்னிற்
கருமையாங் குட்டம் நேர்ந்துங் கருதலை மதிப்பேர் மூடா. 274

270. செல்வி - மங்கை.

271. அணை - பள்ளி. பொருப்பு - மலை. திணை - தன்மை.

272. மங்கை கூறுகிறாள். பாங்கியர் செய்யும் சீத உபசாரத்தைப் பழித்துப் பேசுகிறாள்.

273. பார்ப்பு - குஞ்சு. வாரி - கடல், வல்லுற - கடினமான. மதியம் விளி; சந்திரன். மாதர் ஆவி - என் உயிரை. சந்திரோபாலப்பனம்.

274. இதுவுமது. கூற்று: யமன்என்றவாறு, விளி. மதிப்பேர் மூடா-விளி. மருமம் - மார்பு; உடல். கருதலை - நீ கருதவில்லை.

“சீதையாம் அன்னை தன்னைச் சிறையிடை வைத்து வீந்த
பாதக அரக்கன் தீமை பழகிய மலையில் தோன்றி
வேதைசெய் காலே, நீசெய் வெம்மையின் மிகையா லன்றோ
வாதைசெய் காலன் பேரில் வரியொன்று குறைத்த ழைத்தார்.

“உத்தமப் பொதிகை தன்னில் உன்னுடன் பிறந்த வாரம்
நித்தமுந் தோய்ந்து நோக நேர்பவர் புருட ரோடும்
வித்தகஞ் செய்யு மந்த மெல்லியர் தமைவிட் டென்மேற்
சித்தம்நீ கொதித்து வாளாச் சினப்பதென் தென்றற் காலே.

“தீதிலா மாத ரார்கள் தினமனம் நொந்து வாட
ஊதிமா மலரை யெல்லாம் உகுத்திடுங் குயிலே, பொல்லாப்
பாதக வசந்த காலன் பருவமல் லாது மற்றைக்
கோதறு பருவ மன்னர் குற்றடை படுப்ப ரன்றே, 277

“கன்னியர் மனங்க லங்கக் காமத்தீ மூட்டி யந்த
மின்னிய வெம்மை யாலுன் விழிசிவப் புற்ற செய்கை
உன்னியே வெருவு றாமல் அடுத்தடுத் தூது கின்ற
அன்னிய புட்டமே, உன் னக்கத்திற் கழிவுண் டாமால் 278

“அத்திரி மனைவி யுன்றன் அரியொடு மூவ ராய
நித்தியர் மைந்த ராக நிகழ்த்திய தறிந்தி ருந்தும்
பத்தினிப் பெண்க ளுள்ளம் பதைப்புற மலரெய் மூடா,
புத்திரன் முறைமை யால்யான் பொறுத்தனன் அகல்வாய்
என்பாள். 279

275. தென்றலைப் பழித்தது. வீந்த - உயிர்விட்ட, மலை - மலைய மலை. கால் - தென்றல்; வேதை - வேதனை.

276 இதுவுமது. வாரம் - அன்பு

277. குயிலைப் பழித்தது. குயில்மலர்களை வருகிறது என்கிறாள்.

278. புட்டம் - காக்கை; இங்கு குயில். அக்கம் - கண்.

279. மன்மதனைப் பழித்தது. அத்திரி முனிவர் - சத்த ரிஷிகளில் ஒருவர். மலர்எய் - மலரம்பு எய்கின்ற மூடா; விளி. அரி - திருமால். நித்தியர் - தேவர். அத்திரி மனைவியான அனசூயையின் கற்பைச் சோதிக்கச் சென்ற முத்தேவரையும் அவள் தன் கற்பின் மகிமையால் குழவிகளாக்கி வைத்தாள். என்பது புராண வரலாறு. மைந்தராக - குழவிகளாக புத்திரன் முறைமை - மன்மதன் திருமாலின் புத்திரன் என்பது வரலாறு; ஆகவே இலக்குமியான அலர் மேல்மங்கைக்கும் புத்திரன்.

"பேடியாம் இந்து தென்றல் பெருங்கட லவற்றோ டென்றுங்
கூடிய படியாற் றுப்புக் கொஞ்சமு மில்லா னாகி
ஆடியே களித்துப் பேய்போல் அலர்க்கணைதொடுக்கும்வேளே
ஈடிலாண் பெண்ணின் தன்மை எவ்வணம் அறிதி" என்பாள். 280

**அரசன் துயரம்**

பலவிதம் புலம்பி யேங்கிப் பங்கய மனையாள் சோர
நலமுளாள் அயர்வை நோக்கி யாங்களும் நடுக்க மெய்தி
அலமர லுற்ற தன்மை அன்னை பாற்கூறக் கண்ணிற்
சலமுற அனையாள் வேந்தன் உணர்வுறச் சாற்றி னாளால்

அறுசீர் விருத்தம்

மனைவியுரை செவிபுகுத லோடுமனன் பதைத்தயர்த்து
வாடி ஏங்கி
நினையவகை அறியானாய் நெட்டுயிர்ப்பு வீங்கிநிலை
தளர்ந்து நிற்பத்
தினையளவும் ஆற்றாது கன்னிகைமா டம்புகுந்து
செல்வி சோர்ந்த
வினையமுண ரானாகி மெலிந்துதுய ராழியிடை
வீழ்ந்து கூறும். 282

"இழைத்ததீ வினையறியேன் நீஇவ்வா றாயின்இனி
என்றன் ஆவி
பிழைத்ததிலை மகவில்லாக் கலிதீர்த்த பெருந்திருவே,
பேசாயாகித்
தழைத்தமுகஞ் சோம்பவுயிர்ப் போய அசை வில்லாது
சாம்பும் என்றன்
மழைக்கிணையார் கண்ணமுதே வாழ்வேவாழ் வருளழகே
மகளே" என்னும் 283

280. கூடிய படியால் - நீகூடிய படியால், துப்பு - திறமை. வேளே; விளி: மன்மதன்,

281. பங்கயம் அனையாள் - தாமரையொத்தவள். சலமுற - கண்ணீர் பெருக. அனையாள் அவள்

822. மனன் - மன்னன். தந்தையின் துயரநிலை. புகுந்து - புகுந்து மகள் நிலையைப் பார்த்து.

2ᴕ3. திருவே: தன் மகளை நோக்கிய விளி. உயிர்ப்பு ஓய - மூச்சு இன்றி சாம்பும் - துயருறும். இது தந்தை கூற்று.

''ஏருழுத கொழு முகத்தில் எழுந்தருளும் அலர்மேலே
எனைவாழ் வித்த
சீரெழுத ஒண்ணாத திருமகளே இனிப்பாவி
தேற லாற்றேன்
நீரெழுதும் எழுத்துநிகர் உடல் சதமென் றொரு போழ்தும்
நினையேன் கண்ணாற்
பாரழுது வாடுமென்றன் அமுதமன்னாய்'' என்றரசன்
பதைத்துச் சோர்த்தான். 284

**வியாழன் வருதல்**

ஏதமுட னயர்மனனைக் காணவெணி முனிவர்புடை
இலங்க நான்கு
வேதமுழக் கொடுவேந்த னகரடைந்தா லயம்புகுந்து
விண்ணோர் போற்றும்
நாதன்வியா ழன்கமலை சோர்ந்தநிலை தனைப்பார்த்து
நகையுட் கொண்டு
சாதகமாங் கருணையொடு நோக்க வன்னுள் சிறிது துயர்
தணிந்தாள் மன்னோ. 285

தோகை யெதிர் பட்டஅர வெனவாடி அயர்ந்த மகள்
துயரஞ் சற்றங்
கேகவஃ துணர்ந்தரசன் சுரர்குருதன் திருவடியை
இறைஞ்சி ஏத்தி
''வீகுநிலைக் கெய்திய என் தனையள்துயர் முழுவதும்நீ
விலக்கி நன்மை
ஆகும்வழிக் கேதுவெதோ அதையடியேற் கருள்க''
ஆசான் கூறும் 286

284. சதம் நிலையுள்ளது. கொழுமுகம் - என்றது சீதையின் பிறப்பை நோக்கியது. வாழ்வித்தது - மகவு இல்லாத குறையைப் போக்கியது.

285. ஏதம் - துன்பம். மன்ன - மன்னன். ஆலயம் - அரசன் அரண்மனை. வியாழன் - குரு. கமலை - அலர்மேல் மங்கை. நகை, அவன் வரப்போவது உணர்ந்தவள் ஆதலால்,

286. தோகை; மயிலைக் கண்ட பாம்பு என. அங்கு ஏக - அப் போது நீங்க. சுரர் குரு - தேவகுருவான வியாழன் (பிருகற்பதி), வீடும் நிலை - உயிர் பிரியும் நிலை. தனையள் - மகள் என - என்று மன்னன் கூற. ஆசான் - குரு.

**உமாபதியைப் பூசிக்கச் சொல்லுதல்**

"எக்காலை யினும் நெறிமை தவறாய்கேள் யாதுவினை
எய்த போழ்தும்
முக்காலை உமாபதிதன் சினகரத்தை வலம் வந்து
முறையிற் போற்றின்
அக்காலை இரவிகண்ட பனியனைய வாயகலும்
அளவில் வாழ்வு
புக்காரு மின்பமுறுஞ் சுகமாய தனைத்தும் வரும்
பூசி''என்றாள். 287

"குருமொழியைக் கொண்டுமனன் சிவபூசைத் திரவியங்கள்
குறைவி லாமல்
அருமறையோ ரிடமாயும் எங்களிட மாயுமளித்
தனுப்பலாலெம்
திருமகள்தன் துயர்நீங்க உமாபதியைத் தொழவந்தோம்
தெரியவே நீ
வரும் வகையா தவை எமக்குப் புகல்தியெனப் பகுளையன்பின்
வழுத்தலுற்றாள். 288

**பகுளை கூறுதல்**

"ஆரணமும் ஆகமமும் அமரர்முனி வர்உலகோர்
யாரு மேத்தும்
நாரணன்தன் தொண்டுபுரி அடியவள் யான் உங்கள்நரா
திபனி டத்திற்
காரணமாய் வந்துளன்அன் னான்முனெனைக் கொடுபோய்நீர்
காட்டும்'' என்னப்
"பூரணமாய் அரன்பூசை முடித்தபினர்ப் போவதியாம்
புரிதும்''என்றார். 289

287. உமாபதியைப் பூசிக்குமாறு கூறுகிறான் தவறாய். அரசனை விளித்தது. சினகரம் - கோயில். இரவி - சூரியன் பூசி - பூசிப்பாயாக.

288. நாங்கள் வந்த காரியம் இது, நீ வந்த காரியம் புகல் என்று சேடியர் பகுளையைக் கேட்கிறார்கள். மனன் - மன்னன்.

289. நராதிபன்-மன்னன். என்றார்-என்று சேடியர் கூறினர்.

இவ்வண்ணம் உரைத்தஅன்னார் எய்துமற்றம் நோக்கியவண்
பகுளை நிற்பச்
செவ்வண்ண அரசன்மனை யவளுறுதி கொளுமாறு
தேற்ற வல்ல
கைவண்ணம் போதாது பகுளையினால் எனஉளத்திற்
கருதி மிக்க
மைவண்ண வேங்கடத்தோன் ஒருவினையஞ் செயத்தனது
மனங்கொண்டானால். 290

**வேங்கடவள் குறத்தியாக வருதல்**

மேலான குறக்குலத்து முதுமகள்போல் ஒருவேடம்
விரும்பிக் கொண்டு
நாலான மறைவேதன் தனைமகவாய் வெரிநிலுற்று
நாலத் தாங்கிக்
கோலான தையுங்குறிசொல் கோலாகப் பிடித்தண்ட
கூடந் தன்னை
ஏலான குறக்கூடை யாய்த்தோளில் எடுத்தெந்தை
எய்தி னானால். 291

நடையாருங் குறத்திவளர் நாரணமா புரித்தெருவில்
நண்ணிக் கந்தை
உடையாரும் எழில்துலங்க உயர்ந்தகும்ப தனங்குலுங்க
உருவி ளங்கத்
தடையாரு மிடலரிய நடையோடு நல்லொழுக்கந்
தழுவி ''நீண்ட
படையாரும் விழிமாதர் கேட்டகுறி தவறாமற்
பகர்வல்'' என்னா. 292

290. எய்தும் அற்றம் - வருகின்ற சமயம். மனையவள் -அரசி. பகுளைக்குத் தேற்றும் ஆற்றல் போதாது என்று கருதி. வினையம் - செயல்.

291. வேங்கடன் குறத்தியாக வருதல். மறைவேதன் - மறைக்கு உரியவனான பிரமன். வெரிந் - முதுகில். நால - கட்டித் தொங்கும் படியாக. அண்டமே குறக்கூடையாகிறது. ஏலான - பொருத்தமுடைய. எந்தை-வேங்கடவன்.

292. நாரணமாபுரி - மன்னனது நகர், பகர்வல் - நான் சொல்வேன்.

வீதிதொறுங் கூவிவரும் வேளையினில் அந்நகர
மின்னார் கூடி
''யாதுனதூர் பெயர்'' எனலும் ''நாரணாச் சிரமமென
தெல்லை யாகும்
மாதர்களே யெனைத்தரும தேவியென உலகத்தோர்
வழுத்து வார்கள்
நீதியுடன் என்குறிகே ளாதவரே வறுமை யுற்றார்
நிலத்தின்'' என்றாள். 293

என்றுரைத்த குறத்தியுரை ஏந்திழையார் கேட்டுளத்தில்
இன்ப முற்றுக்
குன்றடுத்த தெனவுயர்திண் புயவரசன் மனையவட்குக்
கூற எண்ணிச்
சென்றடுத்த ''குறமாது செயலுமவள் குறிகூறுந்
திறனும் நீயே
நின்றடுத்துப் பார்ப்பாயேல் உண்மைநிலை தெரியும்'' என
நிகழ்த்தினாரால். 294

குறத்தியை அழைத்தல்

மடமாதர் உரைகேட்ட நிருபன்மனை யவளுளத்தின்
மகிழ்வு பூண்டு
''திடமாய குறியுரைக்குந் தெரிவைதனைக்கொணர்மின்''எனச்
செப்ப அன்னார்
நடமாடு மயிலெனப்போய் அழைக்க,''நரா திபன்மனையாள்
முன்னர் கந்தைப்
படமோடு வரலழகோ'' எனக் குறத்தி நளினவுரை
பன்னினாளால். 295

293. குறத்தி கூற்று, மின்னார் - பெண்டிர், நாரணாச்சிரமம் தான் தங்கியிருக்குமிடம் என்கிறாள். மாதர்களே - விளி, தரும தேவி - திருமால் தருமதேவதையாதலால் இப்பெயர், பொருத்த மாகச் சொல்லுகிறுள்.

294. ஏந்திழையார் - சேடியர். நீயே கேட்டறிவாயாக என் கின்றனர்.

295. கந்தையோடு அரசிமுன் வருதல் அழகாகாது என்கின் றாள் குறத்தி. படம் - துணி.

''ஏழையர்த மிலந்தோறும் இரந்துகுறி பகர்ந்துண்ணும்
எளியேன் அந்த
மாமழையொளிர் கண்ணாள்தன் மனையிலுறேன் எனப்பகர்ந்தாள்
மாதே'' என்ற
கோமழைமதி மாதருரை கேட்டளவில் விரைந்தெழுந்து
கொடிய பூர்வ
ஊழையொழித் தருள்குறத்தி யிருந்தவிடத் தரசனிலாள்
உற்றாள் அன்றே. 296

### ஆசிரிய விருத்தம்

உன்னரும் விரைவ தாய்வந் துற்றவள் குறத்தி தன்னை
அன்னையின் விரும்பி அன்பாய் வணங்கி,''நீ அடைவாயாகில்
பின்னமா மாடை தன்னைப் பேதிப்பல்'' என்ற காலை
நன்னய அரசன் தங்கு மனையிடை நண்ணிச் சொல்வாள். 297

**குறத்தி குறி கூறுதல்**

''முறத்தினை அரிசி யோடென் முன்னுற வைத்தா யாகிற்
குறத்தியென் றெனைநீ மெச்சக்குறிசொல்வல்''என்னவுள்ளத்
திறத்தெழில் தரணி யேமச் சின்னத்தில் தரளம் மொண்டு
நிறத்துடை யொடுமுன் வைத்து,''என் நினைவறிந் துரைத்தி''
என்றாள். 298

முத்தினை முக்கூ றாக முறத்திடை வகுத்துச் சுத்த
பத்தியாற் கேச வாதி பனிரண்டு பெயருங் கூறி
சத்தியார் மாத்தி ரைக்கோல் தரணிசெங் கரத்தில் ஈந்தே
''இத்திறக் கூறில் ஒன்றைத் தொகுதிநீ'' யென்னத்
தொட்டாள். 299

296. பகர்ந்தாள் - குறத்தி சொன்னாள். மாதே அரசியைச் சேடியர் விளித்தது இதைக் கேட்ட அரசி தானே அவள் முன் வருகிறாள். இலாள் - இல்லாள்.

297. அடைவாயாகில் - அரண்மனைக்கு வருவாயாகில், பின்னமாம் ஆடை - கந்தல் ஆடை, பேதிப்பல் - மாற்றித்தருகிறேன்.

298. குறத்தி கூற்று, தரணி - தரணிதேவி. அரசி. ஏமச் சின்னம் - பொன்னாலான முறம். தரளம் - முத்து அரசி முன்வைத்துக் கேட்டாள்.

299. குறி சொல்ல ஏற்பாடு. கேசவாதி பன்னிரண்டு நாமம்: கேசவன், நாரணன், மாதவன், கோவிந்தன், விட்டுணு மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், சிரீதரன், இருடீகேசவன், பத்மநாபன், தாமோதரன். சத்தியார்-ஆற்றல் பொருந்திய. என்று - என்ன குறத்தி சொல்ல, அரசி கேட்டாள்.

''தொட்டதோர் பங்கி னாலே தோன்றிய குறியை நோக்கின்
இட்டமாய் வளத்தி லுன்பெண் எதிரிடை வனப்பின் மிக்க
சிட்டனோர் பரிமீ தேறிச் செறிதரக் கண்ட னான்மேல்
மட்டிலா மையல் கொண்டு மயங்குறத் தோன்று தின்னே. 300

''மையலால் வெதும்பு கின்ற மங்கையை மகிழ்வோ டந்த
ஐயனுக் கீவீ ராகில் அமரரும் வணங்க யாதும்
நையுற வில்லா திந்த நானிலங் காத்து மேலாச்
செய்யவை குண்ட நாட்டைச் சிறப்புடன் ஆள்வீர்'' என்றாள். 301

**அரசியின் சினம்**

சேட்டமாங் குறத்தி வாக்குச் செவிபுகச் சினந்து ''மெத்த
நீட்டமாய் உரைக்க வேண்டா நிறுத்து'' எனத் தடுத்துக் ''காம
வாட்டமாய் அறிவிழந்த மாதரார் தம்மைக் கிட்டிப்
பூட்டகங் காட்டில் உன்னைப் புகழ்வர் போ'' எனப் புகன்றாள்.

**குறத்தி மீளுதல்**

சினத்துடன் அரசன் தேவி செப்பிய மொழியைக் கேட்டு
மனத்திடை அயர்வு பூண்ட வஞ்சனைக் குறத்தி பொய்யாக்
''கனத்ததோ ரெனது வாக்கைக் கபடமென் றெணற்க இன்னே,
இனத்துடன் உனது பெண்பால் எய்தியின் றரசி ஓர்தி. 303

''அந்தநின் மகள்தன் வார்த்தை அறிந்தபின் னரசி நீயே
இந்தநற் குறியைப் பற்றி எனைமிகப் புகழ்வாய்'' என்று
சுந்தரக் குறத்தி சொல்லிச் சுதனொடுங் கூடை தாங்கிச்
சந்ததம் வாழு கின்ற தன்பதி யடைந்தாள் அன்றே. 304

300. சிட்டன்-சிரேட்டன், அ (ன்) னான் மேல் என்க. இன்னே-இப்போது. இது குறத்தி கூற்று.

301. இதுவும் குறத்தி கூற்று.

302. அரசியின் சினமொழி. சேட்டமாம் -மேலான. பூட்டகம் - தாழ்வான வேலை. காம வாட்டமுள்ள பெண்களிடம் உன் வேலையைக் காட்டு போ என்றாள்.

303. எணற்க - எண்ணாதே. இன்னே - இப்போதே. பெண் பால் - மகளிடத்து ஓர்தி - உணருவாய்.

304. சுதன் - முதுகில் தாங்கிய மகன். சந்ததம்-எப்போதும்

**தாயிடம் அலர்மேல் மங்கை கூறுதல்**

மெய்யினை உணர்வான் எண்ணி மெலிந்ததன் மகளின் பாங்கர்ப்
பையவே நண்ணி அன்பாற் பலமுறை இரங்கி வேண்டி
''நையலென் கொல்லோ என்பால் நவிலுதி மகளே'' என்னத்
துய்யநல் லலர்மே லன்னை அவள்முகம் நோக்கிச் சொல்லும். 305

''மலர்தனைக் கொய்தற் கெண்ணி வனத்திடை அடைந்தபோழ்து
நலமிகு பரிமீ தேறி நண்ணிய வேங்க டேசன்
மலமிலா வதனம் நோக்கி மனத்திடை மையல் கொண்டு
துலமில தாய காமத் துயரிடை ஆழ்ந்தேன் என்றாள். 306

**பகுளையைக் காணுதல்**

காதலி மனத்திற் கொண்ட காரணம் உணர்ந்து பின்னர்ச்
சீதநன் மொழிக ளாலே திடமுறத் தெருட்டி யாதும்
ஏதமில் தலைவி தன்னில் ஈண்டிய வேலை பூத
நாதனைப் பூசை செய்து நண்ணுநங் கையரைக் கண்டாள். 307

வந்தஅம் மடவார் நாப்பண் மலர்மகள் இவள்தான் என்னும்
அந்தமாம் பகுளை எய்த அன்பொடு வணங்கி ஏத்தி
''எந்தவூர், எய்தற் கியாது காரணம்'' எனவி னாவச்
''சுந்தர வேங்க டேசன் தொண்டினால் வந்தேன்'' என்றாள். 308

இவ்விதம் மொழிபு கன்ற ஏந்திழை தனக்கு யர்ந்த
திவ்விய பீடம் ஈந்து சீருடன் இருத்தி வாழ்த்தி
''அவ்வை நீ வந்த தன்மை அருள்புரிந் தென்றன் உள்ளக்
கவ்வையை நீக்கி என்னைக் காப்பதுன் கடமை'' என்றாள். 309

305. நையல் - இவ்வாறு மெலிதல். அரசி மகளைக் கேட்டல்

306. அலர்மேல் மங்கை கூற்று. மலமிலா வதனம் - களங்க மில்லாத முகம். துலமிலதாய - இணையில்லதான.

307. காதலி - மகள். சீத - இனிமையான. தெருட்டி - தெளி வித்து, தலைவி - அரசி. தன்னில் - தன் அரண்மனை. வேலை - சமயம். பூதநாதன் - சிவபிரான். நங்கையர் - சேடியர். அப்போது உமாபதி கோயில் பூசை முடித்துத் திரும்புகிறார்கள்.

308. நாப்பண்-இடையில். அந்தமாம்-அழகுடைய. அரசி ஏத்தி வினாவ, பகுளை சொன்னாள்.

309. ஏந்திழை - பகுளை. அவ்வை - அம்மை கவ்வை-துயரம்.

தாங்கியே முகமன் சொன்ன தரணியின் வதனம் நோக்கித்
தீங்கிலாப் பகுளை செய்ய திருமுக மலர்ச்சி யோடும்
''ஓங்கிய வேங்க டத்தின் உத்தமன் தனக்குன் பெண்ணாம்
வீங்கிய முலையாள் தன்னை வேண்டியான் வந்தது'' என்றாள். 310

''சீர்மிகு பெண்வி ளுவச் செறிந்த நல்லன்னாய், உன்றன்
ஏர்மிகு மணம கன்தன் இனம்யா தீன்றோர் யாவர்,
வார்பெரு நாமம் யாது, குலம்யாது, வகுத்தி'' என்னப்
பார்புகழ் பகுளா தேவி பரிவொடு பகர லுற்றாள். 311

''அன்னைதே வகியே, ஈன்றோன் அருள்வசு தேவன், இந்து
வின்னது மரபு, மிக்க எழிற்பல ராமன் பின்னோன்,
முன்னைய பாண்ட வர்க்கு முறைமைமைத் துனன், எந் நாளும்
என்னையா ளுடையோன் நாமம் ஏர்நிறை கண்ண னாமால்''.

**மணம்புரிவிக்குமாறு அரசி அரசனிடம் கூறுதல்**

என்றவள் மொழிந்த சொல்லின் இயல்பெலாம் உணர்ந்து மாது
தன்தனிச் சுதனை ஏவித் தலைவனை வரவ ழைத்து
நன்றியா றிவணம் பெண்ணை நல்கென்றாள் மாத வற்குத்
துன்றிதழ் அலர்மே லுள்ளத் துணிவுமங் கதுவே மன்ன. 313

''நாரணுச் சிரமத் துற்ற நன்குற மாது சொன்ன
தாரண வாக்காய் இந்நாள் அமைந்ததால், அயர்த வின்றிக்
காரண வளக முற்ற கன்னியின் கருத்து ணர்ந்தேன்
பூரண முயற்சி கொள்வாய் மணஞ்செய்தற்கு'' எனப்புகன்றாள்.

310. பகுளை தான் வந்த காரியம் கூறுகின்றாள். முகமன்- உபசார மொழி. தரணி - அரசி.

311. அன்னாய் - பகுளியை நோக்கிய விளி. உன்றன் - நீ கூறுகின்ற. வகுத்தி -சொல்வாயாக.

312. இந்து - சந்திர குலம். ஏர் நிறை -அழகு நிறைந்த.

313. அவள் - அப் பகுளை. மாது-அரசி. சுதனை - மகனை. நன்றியாறு இவ் வண்ணம் - இவ்வாறு நன்முறையிலே. நல்கு- தருக. மாதவன்-வேங்கடவன். மன்ன - பொருந்த.

314. அரசி மன்னனிடம் கூறுதல் குறத்தி சொன்னபடியே பலித்தது. ஆரண வாக்கு - வேதம் போன்ற வாக்கு.

**அரசன் மகளை வினவி அறிதல்**

தலைவிதன் னுரையு ணர்ந்த தராபதி மகள்முற் சென்று
''சிலை நிகர் நுதலாய், எண்ணந் தெரிதர அடைந்தேன்'' என்ன,
''இலைபுரை வேலாய், என்தாய் இயம்புவள்'' என்ற காலைக்
''குலைதலை விடுக உன்றன் கோருதல் முடிப்பல்'' என்றான். 315

**வியாழனை அழைத்து வரச்செய்தல்**

அண்ணல் தன் அவையி லெய்திப் புதல்வனை விளித்து, 'ஈண்டைய
விண்ணவர் உலகில் வாழும் வியாழன்பால் அணுகிக் கையில்
வண்ணஇச் சுருளை நல்கி அவனொடும் வருக நீயோர்
கண்ணிமைப் பொழுதில்'' என்று கழறினன் அரசர் கோமான் 316

தந்தைதன் விடைகைக் கொண்டு தனயன்மா விரைவ தாக
இந்திரன் உலகம் நண்ணி இமையவர் குருவைக் கண்டு
வந்தனை புரிந்து வாழ்த்தி மணத்திரு முகத்தை ஈந்தவ்
அந்தண னோடும் அன்னான் அரசன்மா டணுகி னானால். 317

**வியாழன் சுகனை அழைத்து வருமாறு கூறுதல்**

சுரர்குரு வரவு கண்டு துணுக்கென எழுந்து மன்னன்
தரைமிசை வீழ்ந்து போற்றித் தகுந்தஆ சனத்தி ருத்தி
''மரைமலர் தனில் உ தித்த மாதைவேங் கடற்கு நல்கக்
குரவ, உன் னுள்ளங் காண்பான் கோரினேன்'' என்று ரைத்தான்.

315. தராபதி - அரசன். தெரிதர - தெரிந்து கொள்ளும் பொருட்டு. சிலைநிகர் நுதலாய் - வில் ஒத்த புருவம் உடையவளே என்று மகளை விளித்துச் சொல்கிறான். தெரிதர - அறியும் பொருட்டு. என்தாய் இயம்புவள் என்று மங்கை சொன்னாள். குலைதலை - வருந்துவதை. கோருதல் - உன் விண்ணப்பத்தை.

316. அரசன் தன் மகனிடம் ஒரு சுருளைத் தந்து வியாழனிடம் தந்து அழைத்து வருமாறு அனுப்புகிறான். வண்ண இச் சுருள் - அழகிய இவ் ஓலைச் சுருள்; கடிதம்.

317. சென்ற மகன் குருவை அழைத்து வருகிறான். வியாழன் தேவகுரு வாதலால் இந்திரலோகம் அடைகிறான். அந்தணன் - வியாழன்.

318 மரை - தாமரை. தன் கருத்தைக் குருவினிடம் கூறுகிறான். குரவ - குருவே; விளி, கோரினேன் - அழைத்தேன்.

சொன்னதோர் அரசன் தன்னைச் சுரர்குரு வாழ்த்தி ''ஐய,
முன்னர் நீ இழைத்த நோன்பு முற்றிய தால்உன் பெண்ணைப்
பன்னக சயன னுக்குப் பகுளையாள் கேட்க வந்தாள்,
அன்னவன் மகிமை யாவர் அறிகுவர் சுகனை அல்லால்.'' 319

என்றுபொன் னுரைப்பக் கேட்ட ஏந்தல்ஆ தரவி னோடு
நன்றிசேர் பின்னோன் ஆன னத்ினை நோக்கி ஞான
வென்றியார் வியாசன் மைந்தன் தனைவிருப் போடு போற்றி
இன்றிவண் அழைத்துப் போதென் றிசைத்தனன் அரசன் மன்னோ.

**சுகனை அழைத்து வரல்**

வேந்தனல் விடைகைக்கொண்டு விரைவுடன் அடைந்துநோன்பின்
ஏந்தலாம் சுகன்தன் பாற்சென் றேத்தியாண் டழைத்துக்
கொண்டு
சாந்தமார் குருவோ டுற்ற தராபதி முன்னர் நண்ணப்
பாந்தமாம் பீட மீந்து பரிவுடன் உபச ரித்து, 321

**அவன் செய்தி அறிந்து வாழ்த்துதல்**

மலரடி வணங்கி ஏத்திச் சுகமுனி வதனம் நோக்கி
''அலர்மிசை அவத ரித்த அரிய என் மகளை ஐய,
இலகுறும் வேங்க டேசற் கீயநின் னருள் நிறைந்த
நலமலி உடன்பா டெய்த அழைத்தனன்'' எனந வின்றான். 322

அதிபனாண் டுரைத்த சொற்கேட் டானந்த உளத்த னாகி
மதிமிகு வியாதன் மைந்தன் வாழ்த்தி ''உன் மரபின் முன்னோர்
கதிபெறுங் கால முற்ற தால்நின் றன் மகளை ஆதி
விதிபிதா விரும்பி னால்நின் தவத்திறம் விளம்பற் பாற்றோ. 323

319. பன்னக சயனன் - பாம்பணைப் பள்ளி கொண்டவன். சுகன் - சுகப் பிரமம் என்ற முனிவர், வேத வியாசரின் புதல்வர்.

320. பொன் - வியாழனுக்கு ஒரு பெயர். ஏந்தல் அரசன், ஆனனம் - முகம். வியாசன் மைந்தன் சுகன்.

321. நோன்பின் ஏந்தல்-தவத்தால் பெரியவன். பாந்தமாம்- சிறப்பான. ஈந்து உபசரித்தான் அரசன்.

322. அரசன் கூற்று.

323. கதிபெறும் - நற்கதியடையும். விதிபிதா - பிரமனின் தந்தையாகிய திருமால்; விதி-பிரமன்.

''கந்தமூ லங்கள் உண்டு கனவுடன் மெலிய யாங்கள்
நிந்தையில் தவங்கள் செய்து நெஞ்சிடை அணுகாச் சோதி
சுந்தர உருவங் கொண்டுன் சுதையொடு வேங்க டத்திற்
சந்ததம் வாழச் செய்த துலகினோர் தருமம்'' என்றான். 324

**பொருத்தங்களைக் கேட்டல்**

''விதிபுகழ் முனிவ, நின்னால் வேங்கடன் பெருமை ஓர்ந்தேன்
மதிமுக அலர்மே லுக்கும் மாயவன் தனக்கும் ஒத்த
சதியிலாப் பொருத்தம் யாவுந் தரமுடன் எனது ளத்திற்
பதிதர ஆய்ந்து சொற்றி'' எனவுரை பணித்த காலை. 325

324. கந்தமூலங்கள் - கனி கிழங்குகள், அணுகாச்சோதி- அணுக முடியாத பரம் பொருள். சுதை - மகள். இவ்வாறு உலகினோர் செய்த புண்ணியம்.

325. ஓர்ந்தேன் - அறிந்தேன். பதிதர-பொருந்தும் படி. சதியிலா - குற்றமற்ற. சொற்றி - சொல்வாயாக.

## கதைச் சுருக்கம்

வேங்கடவன் கூறிய வழியைக் கேட்டு பகுளாதேவி சென்று அகத்தியன் ஆசிரமத்தில் உமாபதியைத் தொழ வந்திருந்த மங்கையரைக் கண்டாள். அவர்கள் தாங்கள் குதிரை வீரனைக் கல்லால் அடித்த செய்தியைச் சொல்லி, மங்கை காமத்தீயால் வருந்துவதை உரைத்தார்கள். ''புதல்வியின் வருத்தம் கண்ட மன்னன் தானும் வருந்தியிருந்த போது அவன் குருவாகிய பிரகஸ்பதி வந்தார். அவர் உமாபதியைப் பூசிக்க வேண்டும் என்று சொல்ல, நாங்கள் பூசிக்க வந்தோம்'' என்றார்கள்.

இந்த நிலையில், பகுளையினால் சென்ற காரியம் முடித்தல் அரிது என்று கருதிய வேங்கடவன் குறத்தி வேடம் பூண்டு அரசியின் கையைப் பார்த்து ''உன் மகளை ஐயனுக்கு மணம் முடித்தால் உன் துயரம் நிற்கும்'' என்றாள். அரசி கோபித்து அவளை வெருட்ட அவள் ''நீயே உன் மகளைக் கேட்டுத் தெரிந்து கொள்'' என்று சொல்லிப் போய் விட்டாள். அவ்வாறே அரசி மகளின் காதல் செய்தி அறிந்து வரும்போது எதிரில் உமாபதியைப் பூசை செய்து மீண்டு வரும் சேடிய ரோடு பகுளை வரக்கண்டு அவளை வினவி வேங்கடவன் நிலை தெரிந்து கொள் கிறாள். அரசனிடம் இதைச் சொல்ல அரசன் குருவைக் கண்டு அவர் சொற்படி சுகமுனிவரை வரவழைத்து உபசரித்து அவர் மூலம் வேங்கடவன் பெருமை உணர்ந்து தன் பெண்ணை வேங் கடவனுக்குக் கொடுக்க மனம் ஒருப்பட்டு, பொருத்தங்களை வினவுகிறான்.

# 13. அங்க விலக்கணப் படலம்

## எழுசீர் ஆசிரிய விருத்தம்

**கணித நூலவரைக் கேட்டல்**

கணிதநூல் வலவர் தமை விளித்து "உயர்வேங்
கடத்துவாழ் எம்பிரான் தனக்கும்
அணிதிகழ் அலர்மேல் என்னும்நா யகிக்கும்
அமைந்தபே ரிலக்கண வியல்பும்
துணிவுறு பொருத்த நிலைமையும் நீவிர்
சோர்விலா துரைசெய்மின்'' என்னாத்
தணிவிலா ஞான வடிவுடைச் சுகப்பெயர்
தண்ணருள் முனிவரன் இசைத்தான், 3‹6

சுகமுனி நவின்ற உரைத்திறன் உணர்ந்த
சோதிடர் தெளிதரு தங்கள்
அகமிக மகிழ்ந்து பெண்தரத் தக்க
ஆடவர் இலக்கண மதனைத்
தகைபெறு சுருதி யுத்தி இவ்வுலகத்
தனுபவ மும்மைக்குஞ் சான்றாய்த்
தொகை வகை யுற அவ் வவையுளோர் உள்ளங்
களிதரச் சொலத் தொடங் கினரால். 327

**மகட் கொடை உதவத்தக்கார்**

புரைதபு குணனும் சீலமும் வனப்பும்
பூரண ஆயுளும் துப்பும்
கரையில் விற்பனமும் பாலனம் புரியுங்
கருத்ததுங் குறைவிலா தாக

அங்க இலக்கணம்: ஆடவருக்கும் பெண்டிருக்கும் சொல்லப் படும் சாமுத்திரிகா லட்சணம் 32 ஐயும் கூறுவது.

326. அரசன் கேட்கச் சுகன சொல்வான். கணித நூல் - சோதிட நூல்.

327. மும்மை - சுருதி யுக்தி அனுபவம் என்ற மூன்று.

328. புரைதபு - குற்றம் இல்லாத எண்வகைத் தன்மைகள்: குணம், சீலம், வனப்பு, ஆயுள், விற்பனம், வலிமை, ஆளுந்திறன், செல்வம் ஆகிய எட்டு, பருணிதர்- பண்டிதர்.

விரவு செல்வமுமாம் எண்வகை யுடைய
ஆடவர் விருப்புறு வண்ணம்
பரவிநின் றவர்க்கு மகட்கொடை யுதவல்
பருணிதர் கடமைய தாமால். 328

**மகட்கொடை யளிக்கத் தகாதார்**

முத்தியில் விருப்ப முடையவன் மிடியன்
மூர்க்கன் சேண் தேயத்தி லுள்ளோன்
புத்தியில் வைரம் பொருந்திய சூரன்
புதல்விதன் வயதின்மும் மடங்கு
தத்திய வயது ளோனினார் தமக்குத்
தரணியி லொரு வரும்உள்ளம்
நத்திநன் மகளைத் தரத்தகாது'' என்னாக்
கணிதநூல் நவின்றிடும் மன்னோ. 329

**ஆடவருக்கு 32 இலக்கணங்கள்**

''இலங்குறு தீர்க்க மோரைந்து சிறுமை
யியலும் நான்கதி நுட்பம் ஐந்து
துலங்குறு பரும னாறு செந்நிற மேழ்
துகளில்கம் பீரமோர் மூன்று
நலங்கிளர் விசாலம் இரண்டிவ் வெணான்கு
நயவிலக் கணங்கள்நன் றென்னாப்
பலன்தரு சிற்ப நூல்வலோர் மொழிவர்
யாமவற் றுணர்ந்தவா பகர்வேம். 330

இருவிழி யவற்றி னிடையுரம் நாசி
கரம் கபோ லம்மிவை ஐந்தும்
விரிதகு தீர்க்க மேவுமேற் புவிக்கு
வேந்தனாய் மிகுபுக ழுடைவான்
தெரிதரும் அபரம் சங்கம் நாக்கோச
நான்குமேற் சிறியன வாயிற்
புரிதரு நன்மையாவும் வந்தெய்தும்
புனிதமா கியகுண மாதோ. 331

330 - 349. இந்தப் பாடல்களில் புருஷ சாமுத்திரிகா லட்சணங்களையும், ஸ்திரீ சாமுத்திரிகா லட்சணங்களையும் ஆசிரியர் விரிவாகச் சொல்கிறார்.

330. நீண்ட உறுப்பு 5, சிறியது 4, அதி நுட்பம் (மெல்லியது) 5, பருமன் 6, செந்நிறம் 7, கம்பீரம் 3, விசாலம் 2 - ஆக 32 இலக்கணங்கள்; எணான்கு, 32.

331. தீர்க்கம் (நீண்டலை) 5. சிறியன 4 சொல்லப்படும், உரம்-மார்பு. கரம்-கை. சங்கம்-நெற்றி.

அங்குலிக் கனுக்க ணகஞ்சரு மம்பல்
உரோமமிவ் வைந்துமெல்லியவேல்
தங்குறு தீர்க்க ஆயுளுள்ளோராய்த்
தரணியில் இனியவாழ் வுறுவர்
பொங்குரம் நெற்றி விலாகக்க நாசி
யின்முனை புயமிவை ஆறுந்
துங்கமா யிருப்பின் நல்லன யாவும்
அனான்றனைச் சூழ்ந்து வாழ்வுறுமோ. 332

அகங்கை யுள்ளடிகட் கடையுச்சி நகநா
தரமிவ் வேழுஞ்செந் நிறமே
மிகுந்துள வாயின் உத்தமம் என்ன
விளம்புவர் அறிவினின் மேலோர்
தகுந்தநா பியொலி யுரமிம்மூன்றுங்கம்
பீரமாய்த் தங்குதல் நன்மை
சுகந்தரு சிரமும் நெற்றியும் விசால
மேநல மெனமறை சொல்லும்; 333

நிறைவுற எண்ணான் கிலக்கண முடையோன்
நீடிய ஆயுளோ டுற்றுக்
குறைவுறாச் செல்வம் மலிதரச் சீர்த்தி
விளங்கவிக் குரைகட லுடுத்த
தறைமுழு தளிக்கும் இறையவ னாகித்
தண்ணளி தழுவுற நான்கு
மறைகளுந் துதிக்கும் மாண்பொடு வாழ்வன்
எனஎடுத் துரைத்தனர் மறையோர் 334

என்றவர் உரைத்த ஆடவர் இலக்க
ணங்களை இதயத்துள் எண்ணி
நன்றறி கிள்ளைப் பெயர்முனி மகிழ்ந்து
''நவின்றரும் வாசகத் தாலே
இன்றியாம் அளவில் இன்பமுற் றனம்நல்
ஏந்திழை யாரிலக் கணமும்
ஒன்றுற மொழிமின்'' என்றலும் உள்ளத்
துவப்புடன் உரைத்திட லுற்றார் 335

332. மெல்லியவை 5. பருமன் 6. அங்குலி-விரல்.

333. செந்நிறம் 7, கம்பீரம் 3, விசாலம் 2.

334. கீர்த்தி-புகழ். தறை-உலகு மறையோர்வேதம்வல்லோர்.

335. கிள்ளைப் பெயர் முனி-சுகமுனி. பெண்ணுக்குரிய இலக்கணம் கேட்கிறார்.

**பெண்டிருக்கு 32 இலக்கணங்கள்**

குழல்தலை நுதல்கண் நாசிகா ததரம்
கொடிறுபல் சிங்குவை மோவாய்
கழுத்துரங் கையங் கைவிரல் உகிர்ப
யோதரம் வயினாபி சகனம்
பழுதுறா முழந்தாள் சங்கநற் பரடு
புறவடி பதம்விரல் நகங்கள்
வழுவிலா வோசை மணம் வணமுப்பான்
இரண்டிலக் கணங்கள் மங் கையர்க்கே. 336

நீனிற மேகங் காரளி புரையும் நிறமுடைத் தாய்ப்பசை யனவாய்த்
தானுற நெடிதாயொன்றுபோற் சமமாய்ச்சாலவுமிருதுவாய்ச்சிறிய
கூனுற வளர்ந்து நல்லெழில் நிறைந்த கூந்தலும், எதிரிலா தாக
வானுற ஓங்கும் மதகரிக் கும்பம் எனத்திரண் டுயர்ந்தவன் சிரமும்.

அரைமதி நிகர்த்து நாடியு ரோம
மற்றொரு கழிபடா வாகி
விரலொரு மூன்றன் அளவுயர் வுள்ள
மேன்மையார் வனப்புடை நுதலும்
சுரபிதன் பானேர் வெண்மையாய்ச் சினித்த
மேவியங் கடைத்தலை துவர்த்துப்
பரவிமை மணியுங் கரியவா யழகு
பயக்கும் அற் புதக்கயல் விழியும். 338

ஏர்பெறச் சமமாய்த் திரண்டுமேல் நுதிய
தென்மல ரேய்க்குநா சியும், நல்
வார்தகும் வளைவின் சுயப்புரி யொருங்கு
மாறுறா வனப்புடைச் செவியும்

336. வயின்-வயிறு. சகனம்-கடிதடம். வணம்-வண்ணம். இங்கு சொல்லப்பட்டவை பெண்டிர் சாமுத்திரிகா லட்சணத்துக்குரிய 32 உறுப்புக்கள்.

337. கார்அளி-கருவண்டு. கூனுற-சுருண்டு, இங்கு குழல்தலை இரண்டும் சொல்லப்பட்டன.

338. பால்நேர்-பால்போன்ற. இங்கு நுதல்விழி இரண்டும் சொல்லப்பட்டன.

339. எண்மலர்-எட்பூ. பாடலம்-பாதிரி; இளஞ்சிவப்பு நிறம், நாசி, செவி, கதுப்பு, இதழ் ஆகிய நான்கும் இங்குச் சொல்லப் பட்டன.

சீர்தரு மொழுங்கின் பெருமையாய் வனப்புத்
திகிரியிற் றிகழ்தரு கதுப்பும்
பேரிடை வரியோ டுருண்டுறு பசையாய்ப்
பிறங்கு பா டலநிற இதழும் 339

ஆவின்பால் நிறமாய் அடிநுனி சமமாய்ச்
சிறிதுயர்ந் திடுக்கிடை யற்று
மேவிய பசையோ டொளிதரு முப்பா
னிரண்டதாய் விளங்குறு மெயிறும்
பாவிய செய்ய வணத்தவாய் மேன்மை
பயில்தரு கோமள நாவும்
பூவிரு விரலைகலந்திரட் சியவாய்ப்
புடைத்தின்பம் புரியுமோ வாயும். 340

தசைமிகுத் துருண்டங் குலங்கள் நான்குயர்ந்து
தங்குமூ வரியுடைக் களனும்
இசையுமீ ரொன்பான் விரற்கடை விரிவாய்ப்
பெருத்துநல் லெழிலுற உயர்ந்து
வசைபெறு நாடி உரோமமு மின்றி
வளம்பெற விளங்குறு மார்பும்
நசையுறத் திரண்டு கணுவென்பு ரோம
நாடிதோன்றா எழிற் கரமும். 341

அரத்தநல் நிறமாய் நடுவுயர்ந் திடுக்கி
லாமையாய் மிருதுவ தாகித்
திரத்தவி ரேகை யுடையவா யவையுஞ்
சிறிதுபூண் டொளிரகங் கையும்
வரத்தகு தீர்க்க நெடுமையாய்க் கணுக்கள்
மருவிநற் கிரமமாய் மெலிந்து
தரத்தெழில் பொருந்தி வார்தரு கரத்தில்
தங்கிய விரல்களும் மன்னோ. 342

340. எயிறு-பல். வணத்த-வண்ணமுடையன. எயிறு நாவாய் என்றும் சொல்லப்பட்டன.

341. களன் - கழுத்து, கணு, என்பு, உரோமம் இவை தோன்றாத கை களன் மார்பு கரம் மூன்றும் சொல்லப்பட்டன.

342. அரத்தம்-சிவப்பு. அகங்கையும் விரல்களும் சொல்லப் பட்டன.

உயர்ந்தறச் சிவந்து பசைகொடு கூர்மை
யுடையமனோக்கிய உகிரும்
நயந்தரு வட்ட வடிவமாய்க்கடினம்
நண்ணியோர் தரவொரு சமமாய்
இயைந்துற நெருங்கி முகடமுந் தியநல்
லெழினிறை தருகன தனமும்
வியந்தகு தசையும் மிருதுவு முடைத்தாய்
நரம்பிகழ்ந் தறமெலி வயிறும். 343

கூடுறு மாழம் உடையவாய் வலது புறச்சுழி யுற்றகொப் பூழும்
பாடுறு கமட வபரத்தை நிகர்த்தும் பற்கும்ப மேய்ப்பமேற் பருத்து
மேடுறு தடியுற் றுயர்சகனமும்நீள்வேழத்தின் துதிக்கையுரமகங்கை
நீடுறு விளிம்பும் அரம்பையும் நிகர்த்து நரம்புரோ மமுமிலாத்
துடையும். 344

சக்கர வடிவில் தசையுற நிவந்து தழைத்தெழில் தருமுழந் தாளும்
தொக்கிநா டியுரோ மமுமிலா துபசை தழுவியோர் துணைபெறு
சமமாய்
வக்கிர மின்றிக் கிரமமாய்த் திரண்டு மனோக்கிய மாங்கணைக்
காலும்
பக்கமார் நரம்ப தின்றிவட் டமதாய்க் கடினமே பயிலுறு பரடும்.

தசைகொடு நிவந்து நரம்பின்றிக் கமடமுதுகுறழ் தருபுறந் தாளும்
விசையறத் திரண்டு நெருங்கி மேன்மையவாய் உயர்ந்தெழில்
மேவிய விரலும்
நசையுறு பாதி மதியில் நின் மலமாய்க் கோமள மாயகால் நகமும்
பசைதசை மிருது சமஞ்செம்மை சூடு கொடுவெயர் வில்லவாம்
பதமும். 346

343. மனோக்கிய-ரம்மியமான. உகிர்-நகம். உகிர் தனம் வயிறு மூன்றும் சொல்லப்பட்டன.

344. கமட அபரம் - ஆமையின்முதுகு. சகனம் - கடிதடம். அரம்பை வாழை. கொப்பூழ் சகனம் துடை மூன்றும் சொல்லப் பட்டன.

345. மனோக்கியமாம்-மனத்துக்கு இனிமை தரும். பரடு-கணுக்கால். முழந்தாள் கால் பரடு மூன்றும் சொல்லப்பட்டன.

346. நின்மலமாய்-அழுக்கின்றி. கோமளம்-இடையழகு. பதம்-அடி. புறந்தாள் விரல் கால்நகம் பதம் நான்கும் சொல்லப்பட்டன.

வாகியல் கமலஞ் சண்பகங் குவளைபாடல மலர்மெய்வா சனையும்
கோகிலங் கீரம் வீணையி னோசை யொப்பன ஒலியுடைக் குரலும்
வேகுற உருகும் ஆடகம் ஏய்ப்ப மெய்தரு காந்தியும் இனைய
பாகுபாடாமெண்ணான்கிலக் கணமு முடையவள் பாவையர்க்கரசி.

உறைதரு முன்னெண்ணான் கிலக் கணமும்
உடையனும் இவளுங் கூடுற்றால்
நிறைதரு செல்வ முடையராய்த் தீர்க்க
நிலையராய் நீணிலத் தென்றுங்
குறைவிலா அட்ட மங்களம் பொருந்திக்
கோக்குழாங் களுமடி போற்ற
அறைதரு புகழோ டழகுற வாழ்வரென்
றருமறை புகன்றிடுமால். 348

திருத்தமாந் திருவேங் கடத்திறை வனுக்குஞ்
செங்கம லத்திடை யுதித்த
பருத்தடர் நகில அலர்மே லனைக்கும்
பகர்ந்தஇவ் விலக்கணம் முழுதும்
பொருத்தமும் பொருந்தி இருத்தலால் விவாகம்
புரிவதற் கொருகுறை யின்றால்
கருத்துற அறிதி முனிவநீ என்னக்
கழறினர் கணிதவல் லவர்கள். 349

**கேட்டு மணம்முடிக்க இசைதல்**

அன்றவர் உரைத்த திறனெலாம் உணர்ந்த
அறிவனும் அகமிக மகிழ்ந்து
வென்றிசேர் அரசன் ஆனனம்நோக்கி
விரைவினில் மணமுடித் திடுதல்
நன்றென அரசன் உவப்புட னுறவோர்
நட்பினோர் தம்முளத் துடன்பா
டொன்றுற ஆய்ந்து முகூர்த்தகா லமும்பார்த்
தெழுதெனக் குருவிடத் துரைத்தான். 350

347. கமலம்-தாமரை. கோகிலம்-குயில் கீரம்-குயில் உருகும் ஆடகம்-உருக்கிவிட்ட ஆடகப் பொற்றதனி. மெய்-உடல். எண்ணான்கு-இவ்வாறு விளக்கிக் கூறிய 32உம்உடைய பெண்கள். மெய்வாசனை, குரல்,காந்தி மூன்றும் சொல்லப்பட்டன. இவ்வாறு 32 இலக்கணங்களும் முடிகின்றன.

348. தீர்க்கநிலை - நீண்ட வாழ்வு. கோக்குழாங்கள்-பிற அரசர்கள்.

349. நகில-நகிலுடைய. முனிவ-சுகமுனியை விளித்தது.

350. சோதிடம் வல்லவர்கள் இருவருக்குமிடையே இலக் கணங்கள் முழுமையும் பார்த்து விவாகம் புரிவது நன்று என்று கூறுகிறார்கள். அறிவன்-சுகமுனிவன். ஆனனம்-முகம்.

### அறுசீர் விருத்தம்

**சுகமுனி ஓலை பெற்றுச் செல்லுதல்**

அரசன துரைத்த லோடும் ஆரியன் முகூர்த்த வோலை
சரசமாய் வரைந்து வேந்தன் தனதுசெங் கரத்தில் ஈயச்
சுரசமாந் திருமு கத்தைச் சுகமுனிக் கரத்தில் ஈந்து
விரசம துளங்கொ ளாது விருப்பொடு காக்க வென்றான். 351

**வேங்கடவன் உபசரித்தல்**

காவலன் விடைகைக் கொண்டு களித்துவேங் கடத்தான் முன்னர்
மேவுநல் லன்பினோடு மெலிவற வந்தோன் தன்னைத்
தேவர்கள் தேவன் கண்டு திடுக்கென எழுந்து மிக்க
ஆவலாய்ப் பூசை செய்தங் காசனத் தேற்றி னானால். 352

''அறிவினிற் சிறந்த ஐய ஆனந்தம் பெருக என்பாற்
செறிதர லெவன்கொல்'' என்னத் திருவளர் மார்பன் கேட்பக்
''குறிசொலி மீண்ட நின்றன் கோருதல் முடிப்பான் நீண்ட
நெறிகடந் தடைந்தேன் நித்த நிமல வேங்கடத்தோய்'' என்றான்.

சுகமுனி பணித்த மாற்றஞ் சுருதியிற் படலுஞ் சொன்ன
நகமெனப் புயங்க ளோங்க நல்லுடற் புளகம் பொங்க
அகமிகக் களித்து ''ஞானா னந்தநின் னருளி னாலே
இகமிசை யின்புற் றென்று மிருந்தியான் வாழ்வல்'' என்னா. 354

**ஓலையைத் தந்து சம்மத ஓலைப் பெற்று வருதல்**

''மித்திர னொளிக்கு மேலாம் விளங்குமுன் பாணி தன்னிற்
பத்திரம் யாதோ'' என்று பதுமைதன் நாதன் கேட்ப
''இத்திர வேங்க டத்துக் கீசநின் மணத்துக் காக
சத்திரபதி யா லீந்த தனித்திரு முகமீது'' என்றான். 355

351. நன்மை பொருந்திய ஆரியன்-புரோகிதன். முகூர்த்த ஒலையைச் சுகமுனிவன் மூலம் அனுப்புகிறான்.

352. வேங்கடவன்முன் முனிவர வேங்கடவன் அவனை வரவேற்றல்.

353. செறிதரல் - வருதல், திருவளர் மார்பன் - திருவை மார்பில் வைத்த திருமால்.

354. பணித்த - கூறிய, சுருதி - செவி, நகம் - மலை, இகம் இவ்வுலகு. என்னா - என்று வேங்கடவன் சொன்னான்.

355. மித்திரன் - சூரியன் - பாணி - கை. பத்திரம் - கடிதம், நாதன் - வேங்கடவன், ஈச : விளி. சத்திரபதி - அரசன்.

திருமுக மதனை ஏற்றுத் தெளிதரப் படித்து ணர்ந்து
திருவளர் மாலை மார்பில் தழுவி மா முனியைப் பின்னர்ச்
சருவமும் உணர்ந்த எந்தை சம்மதம் அறி வுறுத்தக்
கருதியோர் முடங்கல் தீட்டிக் காவலன் தன்பால் விட்டான். 356

**பதுளையைப் பாராட்டல்**

விட்டதோர் கடவுள் முன்னர் மேவிய பகுளை தன்னை
மட்டிலா மகிழ்ச்சி யோடு வாழ்த்தி "நீ நெடிது நாட்கள்
நட்டம தாக அங்கு நடந்தது யாதோ" என்னச்
சிட்டனின் முகத்தை நோக்கித் தெளிதர மொழிய லுற்றாள். 357

பூரண மனத்தி னோடும் பூபதி இசையச் செய்த
தாரணம் புகழும் ஐய அடிமையின் செயலின் அன்று
நாரணாச் சிரமத் துற்ற நலமிகு தரும தேவி
காரணம் என்ன அன்னாள் காதலாய்க் கூறினாளால். 358

பகைமேற் றுயில் கூர் ஏக பரம் பொருளாய தூய
அனகனவ் வுரை கேட் டுள்ளத் ததிமகிழ் வோடன் னாளை
நினை கலா வண்ணம் ஏய்க்க நெஞ்சிடை நினைத்தான் என்னச்
சனக பூபதிக்கு ஞான சதானந்த முனிபு கன்றான். 359

356. வேங்கடவன் மறு மொழி அனுப்புதல். மரு - மணம், திருமுகத்தைத் தழுவி என்க. மாமுனியை - சுகமுனிவரை. முடங்கல் - மறுமொழிக்கடிதம். காவலன் - மன்னன்.

357. கடவுள் - வேங்கடவன். மேவிய - வந்த. சிட்டன் - சிரேட்டனாகிய வேங்கடவன். அவன் கேட்க பகுளை கூறுகிறாள்.

358. பகுளை பணிவோடு கூறுதல். பூபதி - அரசன், ஆரணம் - வேதம். தான் காரணம் அல்ல, தருமதேவி காரணம் என்று பணிவோடு சொல்கிறாள்.

359. பனகம் - அரவணை. அனகன்-வேங்கடவன். இவ்வாறு சதானந்த முனிவன் சனக மன்னனுக்குச் சொல்கின்றான்.

## கதைச் சுருக்கம்

சோதிட நூல் வல்லார் பெண் கொடுக்கத் தக்கார் தகாதார் இலக்கணம் உரைத்து, பின்னர் வேங்கடவன் அலர்மேல் மங்கை இருவருக்கும் உள்ள 32 இலக்கணப் பொருத்தங்களையும் தனித் தனியே தெளிவாக உரைத்து, திருமணம் செய்வது தக்கது என்று கூறுகிறார்கள். சுகமுனி திருமணஓலை பெற்று வேங்கடவனிடத்துத் தந்து அவன் சம்மத ஓலையோடு மன்னனிடத்துத் திரும்புகிறான்.

**குறிப்பு :** நூலாசிரியர் இச்சிறு நூலில் புருட சாமுத்திரிகா லட்சணங்களை ஐந்து பாடல்களாலும், பெண் சாமுத்திரிகா லட்சணங்களைப் பன்னிரண்டு பாடல்களாலும் விரித்துரைத் திருப்பது மிகவும் அரிய சிறப்பு.

## 14. மணச்சடங்குப் படலம்

### கலித்துறை

**சதானந்த முனிவனைச் சனகன் கேட்டல்**

'மறையொ ருங்குணர் சதாநந்த மாமுனி தாளை
நிறைபெ ருங்குண விதேகநாட் டரசன் நீடேத்தி
' உறைபெ ருந்திரு வேங்கட னுரைத்தஅற் புதத்தில்
இறையும் எஞ்சுறா தியம்புக'' வெனஇறைஞ் சினனால். 360

### அறுசீர் விருத்தம்

'தேங்கமழ் மலர்நி றைந்து திருமலி வளமி குந்த
வேங்கட நாதன் சொன்ன விந்தையைச் சனக மன்ன,
சாங்கமாய் உரைப்பல்'' என்று தனிச்சதா னந்தன் என்னும்
ஓங்கிய உணர்வின் மிக்கான் உரைசெய லுற்றான் மாதோ. 361

### கலித்துறை

**வேங்கடவன் கூற்று**

முனிவர் தேவர்கள் பணிபரன் பகுளையை முறையாய்
நனிவ ழுத்தி ''அனாய், எனைப் பயந்த நற்றாயர்
இனிய வாமுற வினரிலாத் தமிய னென் றெண்ணிற்
கனியவா மொழி மகட்டரக் காவலன் கருதான்.'' 362

என்று கூறிய எந்தைசொல் பகுளையாள் எண்ணி,
''நன்று நாயக,பொய்ம்மொழி நவிலற்க, அவனிமேல்
துன்றும் மைந்தனும் விடையிலூர் நாதனும் சுரரும்
ஒன்று மன்னவர் மனைவியர் மற்றவ ரோடும்.'' 363

360. விதேக நாட்டு அரசன் சனகன். இறையும் எஞ்சுறாது-சிறிதும் விட்டு விடாமல்.

361. மன்ன-விளி. சாங்கமாய்-விரிவாக.

362. அனாய் - அன்னையே என்று பகுளையை விளித்த வாறு. உறவினரிலா - சுற்றத்தார் இல்லாத. தமியன் -தனியன். காவலன் - மன்னன். மகள்தர - தன்மகளை மணம் செய்து கொடுக்க. கருதான் - ஒருகால் இசையாது போகலாம்.

363 பகுளையின் கூற்று. நாயக - விளி. சிவபிரானும், பிற தேவர்களும் தேவியர்களோடு வருவார்கள் என்று கூறுகிறாள். நவிலற்க என்று சொல்லிச் சென்றனள் (364) என்க.

கூடி அன்பொடு மகட்டரும் அரசனிற் குறுகி
நாடி அன்னவன் மனமுறு துயரது நையத்
தேடி நின்றயர் மலர்மகள் சிந்தைநோய் தீரப்
பாடி யங்குற விரைவினே சென்றனள் பகுளை 364

**திருமுகம் அனுப்பல்**

அளவி லின்பமுற் றையனுந் திருமுகம் வரைந்து
பளகில் சேடனுங் கலுழனும் வரவுனப் பரிவோ
டுளம கிழ்ந்தவர் எய்தலும் அவர் கையி லுதவிக்
களமி டற்றினான் பங்கயன் கரங்கொடு மென்றான். 365

திருமு கந்தனைச் சிரங்கொடு விரைவினில் உவணன்
பிரமன் செங்கர மீதலும் பிரியமோ டேற்று
வரமெ னக்கிதென் றுள்ளமா மகிழ்வொடு வாயு
கிரம மாயிதைக் கிளத்தென அவன்கரங் கொடுத்தான். 369

**தேவர் வருமாறு பறையறைதல்**

மருத்தன் வாசிக்க வுணர்ந்தமா மறையவன் மகிழ்வோ
டருத்தி மீதுற வாயில்காப் பாளரை அழைத்துப்
பருத்த வேங்கடஞ் சேர்தரப் பறையறை யென்னத்
திருத்த மாயவர் அறைதலுஞ் செறிந்தனர் தேவர். 367

**தேவர் வருதல்**

வெள்ளை மேனியா ளுடன்திகழ் அன்னமேல் மேவித்
தெள்ளு வாரிநேர் சுரர்படை தழுவுறச் சேடன்
உள்ள வாறொளிர் மலையிடை விரைவில் வந்துற்று
வள்ளல் தன்திரு மலர்ச்சரண் தொழுதனன் மலரோன். 368

364. பகுளை செல்லுதல்.

365. திருமால், சிவனும் பிரமனும் வருமாறு திருமுகங்களைச் சேடன் கருடன் மூலம் அனுப்புகிறான். சேடன் - ஆதி சேடன். கருடன் - கருடன். வரவுன - வரவு உன்ன. கள மிடற்றினான் - நீலகண்டன். பங்கயன் - பிரமன்.

366. உவணன் - கருடன், பிரமன்-திருமுகத்தை வாயுவிடம் கொடுத்துப் படிக்கச் சொல்கிறான். கிளத்து - சொல்.

367. மருத்தன் - வாயு. பிரமன் பறை அறையும் படி சொல்ல தேவர் கூடுகிறார்கள். மறையவன் - பிரமன். சேர்தர - செல்வதற்காக.

368. வெள்ளை மேனியாள் - சரசுவதி. அன்னம் - அவளுடைய வாகனம். வாரி நேர் - கடல் போன்ற. வள்ளல் - திருமால். மலரோன் - பிரமன்.

வணங்கி நின்றபங் கயன் தனக்காதனம் வழங்கி
இணங்கு தேவர்மா முனிவரர் இயக்கர் கள்மற்றைக்
கணங்கள் யாவர்க்கும் உரிய ஆசனம் எந்தை காட்டி
அணங்கு நேரவர் மனைவியர்க் குறைவிடம் அளித்தான். 369

இருந்த தேவர்கள் எந்தையைத் துதிசெயும் எல்லை
மருந்து போற்கடல் விடம்நுகர் பரன்மலை மகளோ
டருந்த போதனர் பாரிடர் சூழ்தர அன்பு
பொருந்த அச்சுதன் தன்முனர்ப் போந்தன னன்றே. 370

திங்கள் மாமுடி சூடியோ னாதி எண்டிக்கில்
தங்கு பாலருந் தத்தம் மங் கையரொடும் இருக்கப்
பொங்கு நன்மணி யாதனம் போடுவித் திலங்கு
மங்குல் மேனியார் வள்ளலும் உளமகிழ் சிறந்தான். 371

அறுசீர் விருத்தம்

திருமணச் செய்தி

திசைமுக னாதியாய தேவர்தங் குழுவை நோக்கி
இசைமிகும் அலர் மேல் தன்னை எழின் மண முடிப் பானுள்ளம்
நசை யுறும் எனக்கும் எண்ணம் அறிதர நவின்மின் என்று
விசைய வேங் கடத்தோ னிங்ஙன் விளம்பிய காலை மாதோ 372

எந்தையுன் வினோத மெல்லாம் யாம் நெடுங் காலங் கண்டோம்
நந்த கோன் மைந்த னாகி நங்கையர் தம்மை மேய்த்த
விந்தைபோ லாகும் எம்மை வினவுதல் விரைவ தாகச்
சுந்தர விவாகஞ் செய்தி என்றனன் தோகை பாகன் 375

369. பங்கயன் - பிரமன். ஆதனம் - இருக்கை.

370. பரன் - ஆலம் அமுது செய்த சிவன். அச்சுதன் - வேங் கடவன்.

371. சூடியோன் - சந்திர சேகரனாகிய சிவன். பாலர் - எட்டு திக்குப் பாலர். மங்கையர் - மனைவியர். மங்குல் மேனியார் வள்ளல்-கார் வண்ணனாகிய திருமால்.

372. நசையுறும் - விரும்பும். நவில்மின் - சொல்வீராக. உங்கள் கருத்தைச் சொல்லுங்கள் என்று தேவர்களை வேங் கடவன் கேட்கின்றான்.

373. வினோதம் - விளையாட்டு. நந்தகோன்-கோகுலத்தின் தலைவன். நங்கையர் - கோபியர். தோகைபாகன் - உமாபாகன்.

**தேவர்களுக்குப் பணிகள் அளித்தல்**

வாசவன் தன்னை நோக்கி ''வானவர் தச்சனோடும்
ஏசில்ஆ காய மன்னன் எழில்நகர்க் கேகி அங்஖ன்
தேசுறு மாட மொன்று செய்வித்து வருதி'' என்னப்
பாசமாய் அன்னான் சென்று படைத்து மீண் டுரைத்தா னன்றே.

''இனியநான் முகவ, நீயே இமையவர் தலைமை பூண்டு
முனிவர்கள் உபசா ரத்தின் முக்கணான் தனைய மைத்துப்
புனிதமாம் அமரர் தம்மைப் புரந்தரன் பராம ரிக்கக்
தனிமையா யிருத்திப் பாகம் செயத்தனஞ் செயனை வைத்து.

''வாங்குறு புனல் திரட்ட வனைகடற் கிறையை ஏவித்
தீங்குசெய் வோரை வாட்டத் தென்திசை யோனை நாட்டிப்
பாங்குடன் குசுமம் சாந்தம் பவனனை வழங்கச் செய்து
தாங்கிஆ பரணம் ஆடைதரத்தன பதியை ஏவி 376

''இவ்வித மாக மற்றும் இயற்று வோர் தமைநே மம்செய்
நவ்வுமென் மணத்தில் ஐய, ஒருகுறை இன்றி யாவும்
செவ்விதாய் இயற்றும்'' என்னச் செப்பியாங் கவர்வ குத்துக்
கவ்வையில் பிரமன் அண்ணல் கழல்தொழு தினைய கூறும். 377

374. வாசவன் - இந்திரன். வானவர் தச்சன் - விசுவகர்மா. உரைத்தான் - மாடம் செய்தாயிற்று என்று உரைத்தான். இந்திரனுக்கு மாளிகை அமைக்கும் வேலை.

375. அடுத்துப் பிரமனுக்குப் பல பொறுப்புக்களையும் பிரித்துத் தந்து நிர்வகிக்கும் வேலை. நான்முகவ-பிரமனை வேங்கடவன் விளித்துக் கூறுதல். முக்கணான் - சிவனை முனிவரைப் பராமரிக்கவும்; புரந்தரன் (இந்திரன்) தேவர்களை. பாகம்செய - சமையல் செய்ய. தனஞ்செயன் - அக்கினி தேவன்.

376. கடற்கிறை - வருணன். தென் திசையோன் - யமன். குசுமம் - புஷ்பம். சாந்தம் - சந்தனம். பவனன் - வாயு. தனபதி - குபேரன். நேமம் · நியமம்.

377. செய் - ஏவல். ஐய - விளி; பிரமனை. கவ்வையில் - குற்றமில்லாத. அண்ணல் - வேங்கடவன். இனைய - இச்சொற்களை.

**திருமகளை அழைத்தல்**

'இன்னமும் அடியேற் கேவும் ஊழியம் உளவோ?'' என்னக்
''கன்னல்மென் மொழியோ டுற்ற கமலையாள் தன்னை நீக்கி
என்னணம் மணம்மு டித்தற் கிசைகுவேன்'' என்ற மேக
வண்ணனைத் தொழுதி றைஞ்சி வாணிதன் கொழுநன் கூறும் 378

''செகத்திடைச் சுபத்திற் கெல்லாம் தெய்வமாந் திருவை அன்றி
மகத்துவ மான உன்றன் வதுவைஎவ் வாறு முற்றும்?
அகத்திடை ஆய்ந்து காண்டி ஆரணம் அருளி தம்மைச்
சுகத்தொடு வாழச் செய்த சூக்கும மதியோய்''என்றான். 379

வேதன துரையை ஓர்ந்து விரிகதி ரவனை நோக்கி
''ஏதமில் கரவீ ரத்தில் ஏகிஇக் கணத்தில் என்முன்
சீதசா கரத்து தித்த திருவினைக் கொணர்தி'' என்னா
நாதனங் குரைத்தலோடு நடந்தனன் பரிதி மன்னோ. 380

வேகமா யேகிப் பானு விமலையைக் கண்டு போற்றி
ஏகமாய் விளங்குகின்ற இணைமலர்ப் பாதந் தன்னில்
சேகரம் பொருந்தத் தாழ்ந்து தேவன் ஆக் கினையைக் கூறத்
தாகமாய் எழுந்து தேவி தமனியத் தேர்மீ துற்றாள். 381

378. என்ன - என்று பிரமன் கூறி. கன்னல் - கரும்பு. கமலையாள் - இலக்குமி. இலக்குமியை நீக்கி இப்போது வேறு மணத்திற்கு எவ்வாறு இசைகுவேன் என்று மேகவண்ணன் (வேங்கடவன்) கூறுகிறான். வாணி - சரசுவதி. கொழுநன் - பிரமன்.

379. திரு - இலக்குமி. வதுவை - திருமணம். அகத்திடை - மனத்துள். காண்டி - காண்பாயாக. மதியோய் - வேங்கடவனை விளித்தது, பிரமன் கூற்று.

380. வேதன் - பிரமன். கதிரவன் - சூரியன். கரவீரம் - இலக்குமி வந்து தங்கியிருக்குமிடம். சீதசாகரம் - குளிர்ந்த பாற்கடல். இதிலிருந்து, அமுதத்துக்காக கடைந்தபோது திரு தோன்றினாள் என்பது வரலாறு. பரிதி - சூரியன்.

381. பானு-சூரியன். விமலை - இலக்குமி. சேகரம் - முடி. ஆக்கினை - கட்டளை. தமனியத் தேர் - பொற்றேர்.

அப்பெரு நகரந் தாண்டி ஆதிவேங் கடத்தில் எய்தி
ஒப்பிலான் பாதம் தன்னில் உவப்புடன் வணங்கிப் போற்றித்
' துப்பிலா எனைஅழைக்கத் தோன்றிய கார ணத்தைச்
செப்புக'' என்று கேட்ட திருமுகம் நோக்கிச் சொல்வான். 382

''ஆதியிற் சீதை யாகி அரக்கரால் இடருட் பட்ட
மாதினை மணம்பு ரிந்து மருவுதி என்ற நின்றன்
கோதிலா வரம்முடிக்கக் கோரிய அதனால் உன்னை
மோதமாய் அழைத்தேன்'' என்று மொழிந்திடக் களித்துச்
சொல்வாள். 383

''ஐய,நின் தொண்டு செய்யும் அடிமைமேல் கிருபை கூர்ந்து
வையகம் துதிக்கும் வேத வதிமணம் முடிப்பை யாகில்
துய்யமா தவர்கள் வானோர் துலங்கிய சகத்தோ டென்றும்
செய்யநின் பாத சேவை செய்தனர் உய்வர்'' என்றாள். 384

நாதனாம் வேங்க டேசன் நளினிசொற் கேட்டு மிக்க
மோதமாய் மணத்தை வல்லே முடித்திட வேண்டும் என்று
வேதனை நோக்கிக் கூற விரைவுடன் வணங்கி அன்னான்
கோதிலா வினதை ஈன்ற குமரனை வணங்கிக் கூறும். 38

''புண்ணிய தீர்த்தமெல்லாம் பொருந்துறப் பொற்பாண் டத்தில்
அண்ணலே நிரப்பு போய்''என் றாவலாய் உரைத்த போது
விண்ணிடைத் தாவி யாற்ற வேகமாய் ஓடிச் சென்று
கண்ணிமைப் பொழுதின் முன்னம் காண்டத்தை நிறைத்து
வைத்தான். 388

382. துப்பிலா எனை:பணிவுடன் கூறியசொற்கள். திருமுகம்-திருமகளின் திருமுகம்.

383. மாதினை - மாயா சீதை என்னும் வேகவதியை, கோரிய - சீதையா யிருந்த நீ விரும்பிய. 262ஆம் பாடல் காண்க. மோதமாய் - மகிழ்வோடு. இது வேங்கடவன் கூற்று.

384. திருமகள் கூற்று, ஐய - வேங்கடவனைத் திரு விளித்துச் சொல்வது. செய்தனர் உய்வர் - செய்து உய்வார்கள்.

385. நளினி-தாமரையில் தோன்றிய இலக்குமி. மோதமாய்-மகிழ்ச்சியோடு. வல்லே - விரைந்துவேதன் - பிரமன். வினதை ஈன்ற குமரன் - வினதையின் புதல்வனான கருடன்.

386. உரைத்தபோது - பிரமன் கருடனுக்கு உரைத்தபோது, விண்ணிடைத்தாவி - கருடனாதலால் ஆகாய வழியே தாவி ஆற்ற- மிக்க. காண்டம் - வாவியாகிய தீர்த்தம்.

**மணத்துக்கு ஏற்பாடுகள்**

அப்புனல் தனிற்சு கந்தம் ஆசுகன் அளாவ மேலாம்
ஒப்பின்மாங் கல்ய மாதர் உவப்புடன் விவாகச் செய்கை
தப்புறா தியற்ற எண்ணிச் சதிஅருந் ததியா ளோடு
துப்புடன் வாழ்த்துப் பாடல் தொடங்கினர் பிறையேழ் நாளில் 387

சீதநீர்க் கலசம் நான்கு திக்குற அமைத்து நூலைக்
கோதறச் சுற்றி நாப்பண் குருமணிப் பீடமொன்றிட்
டாதர வோடு தேவன் அருகினிற் கௌரி யாதி
மாதர்கள் சூழ்ந்து நூலின் மண்டபத் திருக்கச் சொன்னார். 388

திசைமுகன் தன்னை நோக்கித் தேவர்தம் தேவன் ஏங்கி
''நசையொடு மணநீ ராட்ட நற்றமர் அற்றேன்'' என்ற
வசைசெவி யுற்றபோது வனசமின் ஒத்து வாழ
விசையன்தாள் தனில் வணங்கி வேண்டியே கூற லுற்றாள். 389

''வையகம் தனைப்ப டைத்து வயிற்றிடை வைத்துக் காக்கும்
ஐயநின் மாய வித்தை அறிந்திடல் எவரா லாகும்?
செய்யமா மணிப்பீ டத்தில் சிறப்புற அமைதி, கையில்
துய்யநல் தயிலங் கொண்டு தொடங்குவேன் தொண்டுக்கு''
என்றாள். 390

அந்தண ரோடு சூழ்ந்த அமரர்கள் மணம் புணர்ந்த
சுந்தரி மாரை நோக்கிச் சோபன நாளம் செய்ய
முந்தநல் விடைகைக்கொண்டு மோகமோ டெழுந்து மேலாம்
விந்தையார் ஆசனத்தில் விளங்கவீற் றிருந்தான் எந்தை. 391

387. ஆசுகன் - வாயுதேவன், சுகந்தம் - நறுமணம் மாங்கலிய மாதர் - சுமங்கலியாயுள்ள மாதர், சதி - பதி விரதை யான. பிறையேழ்நாள் - சுக்கிலபட்சத்துச் சப்தமி.

388. திக்குற - நான்கு பிரதான திக்கிலும். நாப்பண் - இடையே. குரு - ஒளிபொருந்திய, பீடம் ஒன்றை இட்டு, தேவன் - வேங்கடவன். கௌரி - உமாதேவி. நூலின் - விதிப்படி.

389. திசைமுகன் - பிரமன். தேவன் - வேங்கடவன். ஏங்கி - துயரமுற்று. நசையொடு-விருப்பத்தோடு. நல்தமர் - சுற்றத்தார்- வசை - பழிச்சொல், வனசமின் - தாமரையி லிருக்கும் திருமகள். விசயன்-வேங்கடவன்.

390. திருமகள் கூற்று, ஐய - விளி, அமைதி - இருப்பாயாக, தயிலம்: நீராட்டுதற்கு,

391. சுந்தரிமார் - தேவர்களுடைய தேவிமார், சோபன நானம் - மணஸ்நானம். விந்தையார் - அழகு பொருந்திய,

ஏசில்மாங் கலிய மாதர் இருபுறம் நின்று பாட
வாசனைத் தைலங் கொண்டு மாதவன் களிக்கப் பின்னை
பூசியே பனிநீ ராட்டப் பூவையர் கூட்ட மொன்றி
ஆசையார் அயினி நீர்கொண் டாலத்தி சுழற்றி னாரே. 392

கலைமகள் ஆடை ஈந்து கருநிறக் குஞ்சி நீவ
மலைமகள் தூபங்கொண்டு மற்றதன் ஈரம் மாற்ற
இலைவிரி குசுமக் கோலோன் இல்லவள் கவரி வீச
அலைதிகழ் கங்கை பாவல் அன்பொடு தாள்பு னைந்தாள். 393

**மணச் சடங்குகள்**

மாதர்கள் உபசரிக்க மாமணி இருப்பில் எய்தி
ஆதர வுடனி ருக்க அமரர்மா முனிவர் வாழ்த்த
நாதமார் வீணை தன்னை நாரதன் மீட்டிப் பாடச்
சூதர்கள் ஏத்தெடுப்பத் துதிப்பவர் துதிக்க மன்னோ. 394

உத்தம வேளை ஈதென் றுவப்புடன் கணிதன் கூறப்
பத்தியாய்ப் பணிகள் செய்யும் பகுளையும் ''அண்ண லுக்கு
வத்திரங் கலன்பு னைந்து மாப்பிளைக் கோலம் செய்தி
சித்திரத் திருவே'' என்று செப்பமா எழுந்தாள் அன்றே. 395

மட்டின்மை வரையின்மீது மதிநில வுற்ற தென்னச்
ட்டமாய் மனம்நிறைந்த சந்தனக் குழம்பு நீவி
அட்டமிச் சோம னாப்பண் அருணன் வந்தமர்ந்த தொப்பச்
சிட்டநன் னுதலிற் செய்ய சிந்துரத் திலகமிட்டாள். 396

392. மாதர் - முற்கூறிய சுமங்கலிகள். அயினிநீர் - சோறு கலந்த ஆலத்திநீர்.

393. குஞ்சி - குழலை, நீவ - சீவி ஒழுங்கு படுத்த, குசுமக் கோலோன் - மலரம் புடைய மன்மதன், இல்லவள் - ரதிதேவி - பாவல் - பாதக் குறடு; தாளில் பொருத்தினாள்.

394. இருப்பு - ஆசனம். சூதர் - புகழ்பாடுவோர்.

395, கணிதர் - சோதிடர். வத்திரம் கலன் - ஆடையும் ஆபரணமும், பகுளை திருவை நோக்கி அலங்காரம் செய்யுமாறு கூறுகிறாள். செய்தி - செய்வாயாக.

396. மைவரை - கருநிறமலை. மதிநிலவு - சந்தனக் குழம்பு பூசியது, இவ்வாறிருந்தது அட்டமிச் சோமன் எட்டாம் நாட் சந்திரன். அருணன் - சூரியோதயத்துக்குமுன் தோன்றுகின்ற அருணன். அவன் சாரதி, சிவந்த நிறம், நுதலில் இட்டசிந்துரம் அவ்வாறு தோற்றமளித்தது.

நீனிற முகிலின் மீது நிலவுசெய் மின்ன லேய்ப்பத்
தூநிறக் கடவுள் மார்பில் துலங்குமா பரணம் பூட்டி
ஆனிரை முன்னம் மேய்த்த ஆயனை அமரர் ஏத்த
மாநிறை ஆவலோடு மாப்பிளைக் கோலம் செய்தாள். 397

குலதெய்வ வழிபாடு

அலங்கரித் தாய பின்னர் அருந்தவ வசிட்டன் தன்னை
இலங்குறு வதுவைச் செய்கை இயற்றுதி என்ற காலை
நலங்கிளர் விதிகள் யாவும் நடாத்திநா யகனை நோக்கித்
துலங்குறு குலதெய் வத்தைச் சொல்லுபூ சிக்க என்றாள். 398

வன்னிநற் றருவே யங்கண் மரபினைக் காக்குந் தேவி
என்னவேங் கடத்தோன் கூற இருடிஅத் தருஇ ருக்கும்
உன்னதத் தலம்யா தென்ன உயர்ந்தஇம் மலையுதக்கில்
துன்னுபல் வினையுந் தீர்க்கத் தோன்றிய குமாரம் என்னும். 399

விந்தையாம் தீரப் பாங்கர் விளங்குமவ் விருக்கம் என்று
நிந்தையில் கும்ப யோனி நிகழ்த்திய மொழியு ணர்ந்து
சிந்தையிற் களித்துச் சென்று சிறப்பொடு பூசித் தேத்தி
அந்த நற் கிளையி னைக்கொய் தமலன்தன் முடிபு னைந்தான்.

பலவித இயம்மு ழங்கப் பரிவுடன் இருப்பில் எய்திக்
குலதெய்வந் தாபித் தேத்தக் கூறுதிர் தலமொன் றென்று
மலமிலாக் கடவுள் கேட்ப வராகமந் தரத்து ளிட்டு
நலமுற அர்ச்சி என்று நாரதன் உரைத்தான் மன்னோ. 401

397. ஏய்ப்ப - ஒப்ப. மா - திரு. நிறை ஆவலோடு - மிக்க விருப்பத்தோடு.

398. வசிட்ட முனிவனைத் திருமணம் நடத்தும் புரோகிதனாக அமைக்கின்றனர்.

399. வன்னி நல்தரு - வன்னி மரமே குல தெய்வமாகிய தேவி. இருடி - வசிட்டன். உதக்கில் - வடக்கில். குமாரம் - குமார தீர்த்தம்.

400. விருக்கம் - விருட்சம் கும்பயோனி - அகத்தியர்.

401. இயம் - இசைக் கருவி. வராகத்தலத்தில் அருச்சிக்க என்று நாரதமுனிவன் சொன்னான்.

அன்புறு வசிட்டன் தன்னோ டாதியாம் வராகன் வாழும்
பொன்பதி தன்னில் ஏகிப் புகழ் மிகு குலதெய் வத்தை
இன்பமாய் வைத்துப் பூசை இயல்பொடு புரிந்து வப்பால்
நன்பதி தனைய டைந்து சதுமுகன் களிக்கச் சொல்வான். 402

**உணவூட்டல்**

வடதிசைத் தலைவன் அன்பாய் வாஞ்சிதப் பொருள்கைக் கொண்டு
திடமுடன் சமையற் கான திரவியம் சேக ரித்தோர்
இடரறப் பாகம் செய்வித் திருடியர்க் கீவாய் என்ற
வுடன் விதிபாகம் செய்வித் துவப்புடன் உரைத்தான் மன்னோ.

வேதியர் களிக்க ஊட்டி வெள்ளிலைப் பாகி னோடு
தீதில்தக் கணையும் ஈந்து தெளிவுடன் புதல்வர் பேரர்
ஆதியாய்ச் சூழ்ந்தா ரோடும் அன்பொடு புசித்து வப்பாய்ச்
சோதியாங் கரிய வண்ணன் துலங்கிய காலை மாதோ. 404

**சூரிய அத்தமனமும் மறுநாள் உதயமும்**

ஆற்றல்சேர் வேங்கடன் பொன் னாடனக் கிகல தாக
வேற்றடந் தோளோ டுற்ற ஆகாய வேந்த னீன்ற
சேற்றடங் கண்ணுள் கையைத் தீண்டலுற் றனனென் றோதப்
பாற்கடற் கேகுவான்போற் குடகடற் பரிதி வீழ்ந்தான். 405

பகையவாம் பரிதிச் சீயம் பரவையில் வீழ்ந்து வீயத்
தகையொடு கரிக்கு ழாங்கள் சார்ந்தெங்கும் விளங்கல் போலத்
திகையெலாம் கவர்ந்து கங்குல் செறிந்திடுங் காலை தன்னில்
தொகைபெறும் அமரர் மாதர் சுகமனு பவித்தி ருந்தார். 406

402. குலதெய்வமாகிய வன்னியை முடியில் புனைந்து கொண்டு சென்று வராகத் தலத்தில் பூசித்த பின் வேங்கடம் மீண்டான். சதுமுகன் - பிரமன்.

403. வாஞ்சித-விரும்பிய, பிரமன் சமையல் செய்கிறான்.

404. வெள்ளிலைப்பாகு - வெற்றிலைப் பாக்கு. தீதில் தக் கணையும். கரியவண்ணன் - கார் நிறமுடைய வேங்கடவன்.

405. பொன்னாள் தனக்கு இகலதாக - திருவுக்குச் சமான மாக. சேல் தடங்கண்ணாள். குடகடல் - மேல் கடல். பரிதி - சூரியன் அத்தமித்தான்.

406 சீயம் - சிங்கம், பரவை - கடல். திகை. திசை.

தன்னிடை நேய முற்ற தாமரை ஈன்ற பெண்ணின்
வன்னமாம் பாணி பற்ற வருமண வாளன் பூண்ட
உன்னதக் கோலங் காண உவப்புடன் வந்தான் என்னத்
துன்னிய குணதி சைக்கட் சூரியன் உதயம் செய்தான். 407

## கதைச் சுருக்கம்

தனக்கு உறவினர் இன்மையால் பெண்தரக் காவலன் இசையான் என்று வேங்கடவன் வருந்த, பகுளை அவனைத் தேற்றிப் பிற ஏற்பாடு செய்கிறாள். திருமுகம் அனுப்பப் பிரமனும் சிவனும் வருகின்றனர். பிற தேவர்கள் தங்கள் தேவியரோடு வந்து மணத்துக்கான பணிகளை மேற்கொள்ளுகிறார்கள். வசிட்டனைப் புரோகிதனாக அமைத்து, குலதெய்வமாக வன்னி மரத்தைக் கருதி அதை வராகத் தலத்தில் வைத்து வழிபட்டு மீண்டு மணத்துக்கான அலங்காரம் செய்து கொள்ளுகிறான்.

406. மறுநாட் காலை சூரியன் உதயம் செய்தான். குணதிசை - கீழ்த்திசை.

## 15. எழுச்சிப் படலம்

சூரியன் உதயங் கண்டு துயில்தனைத் துறந்தெ ழுந்து
நேரிலான் வழுவி டாது நித்திய விதிமுடித்துக்
கோரிய மணத்துக் கேகக் குரவரோ டமரர் தம்மைச்
சீரிசை வினதை மைந்த செப்பயன் சேர்க்க என்றான். 408

கடவுளின் உரைகைக் கொண்டு கனத்தவே கத்தி னோடும்
திடமுடன் உவணன் சென்று திசைமுகன் தனக்கு ணர்த்தத்
தடமதிற் தவத்தரோடு தானவர் பகைவர் தத்தம்
மடவர லோடு நண்ண மலரயன் விடைகொ டுத்தான். 409

தேவர்கிம் புருடர் சித்தர் இயக்கர்கந் தருவர் நாகர்
நாவலர் முனிவர் திக்கு நாயகர் முதலாய்ப் பூமி
காவலர் பத்தர் மற்றோர் கடிதின்வந் தடைந்த காலை
யாவரும் ஊர்ந்து செல்ல யானம் அன் புடன ளித்தான். 410

### கலி விருத்தம்

பின்னையும் பகுளையும் இரதம் பேரெழில்
மின்னுறு மானமும் மேவச் செய்தவ
மன்னுறு முனிவரர் தேவர் வாழ்த்துறக்
கன்னல்வி லோன்பிதா கலுழன் ஏறினான். 411

திருமணத்துக்காக வேங்கடவன் பரிவாரங்களோடு மணமகள் நகருக்குப் புறப்பட்டுச் செல்வதைச் சொல்வது.

408. வினதை மைந்தன் : கருடன். வேங்கடவன் கருடனுக்குக் கட்டளையிட்டான்.

409. உவணன் - கருடன். தானவர் பகைவர் - தேவர். மடவரல் - பெண்டிர்.

410. யானம் - சிவிகை முதலான வாகனம்; கருடன் அளித்தான்.

411. கன்னல் வில்லோன் - கரும்பு வில்லுடைய மன்மதன். பிதா - திருமால். கலுழன் - கருடன்.

கொடி குடை காய்மரம் குழலும் தாளமும்
துடிசின முதலிய இயந்தொ னித்திட
இடியென முரசொலி ஏம்ப வானவர்
கடிகுழல் மாதர்கள் களிப்பொ டாடவே 412

ஆரண முழக்கம் ஆர்ப்ப அந்தணர்
பூரண கலசங்கள் ஏத்திப் போற்றிடச்
சாரணர் புகுந்ததர் தானுண் டாக்குக
நாரண புரந்தனை நாடிச் சென்றனன். 413

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

காமனை ஈன்ற கடவுளன் போடு
கருடன்மீ தொளிரல் நோக்கி
ஏமநற் குன்றில் ஈண்டிய காரென்
றின்பமாய் உளத்திடைக் களித்துக்
தூய்மையா மஞ்ஞை தோகையை விரித்துத்
தொடர்ந்தெதிர் ஆவலோ டாடக்
கோமள நடனக் கோதையர் சாலக்
கூசுவர் மனத்திடைக் கொதித்தே. 414

கானகப் பரண்மீக் கருந்தினைப் பைங்கூழ்
காப்புறு குறத்தியர் முதிர்ந்த
ஈனலைக் கொய்யும் புள்ளினம் இரிதற்
கிசைப்புறு மிளமிட றொலிக்கு
மானவே யுன்னி வருந்துறக் கூட்டி
மாடகந் தந்திகள் நைய
மோனமாய் மிகவும் நாணமுற் றேங்கி
முனிவன்நா ரதன்முனஞ் சென்றான். 415

412. துடி சின்னம் முதலிய இயம் (வாத்தியம்) தொனித்திட ஒலிக்க. ஏம்ப - களிப்போடு ஒலிக்க. கடி - மணம்.

413. அதர் - வழி.

414. கடவுள் - திருமால். ஏமம் - பாதுகாப்பு. மஞ்ஞை ஆடுதல் கண்டு கோதையர் கூசுவர்.

415. மீ - மீது இருந்து. காப்புறு - காக்கின்ற, ஈனல் - ஏனல், தினை. மிடறொலிக்கு - குரல் ஒலிக்கு. மானவே - பெரிதும், மாடகம் - வீணையின் தந்திகளை முறுக்கும் ஆணி. முனிவனாகிய நாரதன் முன்.

**செல்கின்ற வழியின் வருணை**

குடவர்தம் மாக்கள் குழுமுற ஊதும் குழலிசை செவியுற வோடும்
வடமுடன் திகழும் வற்றிய குறத்தி வகுளிஎன்றெண்ணியே புட்கள்
தடமிகு பாலை வனத்திடைக் குறுகித் தரித்திடச் சாயலில்லாமல்
இடரினால் நொந்து மனத்திடை வெதும்பி மீண்டுடன் மருதமே
எய்தும் 418

வேட்டல்செய் கிற்பான் களிப்புடன் செல்லும்
வேங்கட நாதனைப் பொறுத்து
வாட்டமற் றிலகு மனத்திடைக் களித்து
வருந்தம திறைவன்முன் அடைந்து
கூட்டமாய்ப் பறவைக் குலமெலாந் தத்தங்
குறையெலாங் கூறுவான் வெதும்பிப்
பாட்டையி லணுகி நின்றிடு வனபோற்
படிந்தன சாலைகள் தோறும். 417

சோலையி னிடைச்சென் றலர்நறை அருந்தத்
தோன்றிய பிரமைமீ தேறிப்
பாலையிற் சுழலும் இளங்கரு வண்டைப்
பார்த்துபு பாரினைச் சூழ்ந்த
வேலையில் திகழும் மீன்குழு விழுங்க
விருப்பொடு பாய்தரக் கழையின்
ஆலையி னொலிகேட் டஞ்சிவா னளாவு
மலையரு வியனிடை அடையும். 418

கானவர் சிறுமி தம்மொடு கூடிக் கசடிலா எயினர்தம் மாதர்
ஈனமில் வனத்தில் ஏகுபோ தாயர் இன்புறு மாதரை அழைத்துத்
தேனகும் புன்னை மலர்தனை நாடித் திரிபவர் கமனமே நோக்கி
வானவர் கோதை மகிழ்தர நடக்கும் வாகுறும்எகினங்கள் நாணும்

416. குடவர் - இடையர். வகுளி - ஒலி. சாயல் - நிழல். புட்கள் குடவர் குழலொலி கேட்டுப் பாலை என்றறியாமல் வந்து ஏமாந்து திரும்புதல்.

417. வேட்டல் - மணம். பறவைகள் சாலையில் நிற்கின்ற தோற்றம்.

418. பிரமை - பிரமரம், தேனீ. கழை - கரும்பு,

419. கசடு - குற்றம். எயினர்-வேடர், தமனம் - செல்லுகை. எகினம் - அன்னம்.

பன்னக சயனன் தன்னையே முடுகப்
பரிவுடன் தமதினங் காக்கும்
மன்னவன் சுமந்து வருமெழில் நோக்கி
மனத்திடை மோகமாய் நின்று
சன்னையாய்க் கலிங்க மிசைகளைப் பாடத்
தாளமே மரங்கொத்தி போடக்
கின்னரம் பதலை யொற்றியே ஒலிக்கக்
கேகயம் நடித்திடு மாதோ. 420

முத்தநன் முகத்தை மதியென நினைந்து
முண்டகங் குவிதருங் காலைப்
புத்தமு தருந்தத் தங்குபொன் வண்டு
புதைத்தர பேடவை யோடி
வித்தகமாக விளங்குசெவ் வாம்பல்
விரிமலர் மீதுறு காட்சி
உத்தமக் கணவன் மாய்ந்திட வெதும்பி
ஒண்தழற் புகுந்தமா தொக்கும். 421

காமமாய்க் கடவுள் காண்டக நிற்குங் காதலி மார்கள்தம் குழுவின்
நீமமா முருவின் செவ்வியை நோக்கி நேரிலாச் சதிகெட முன்போல்
கோமள மிகுந்த குழலிசை காட்டிக் கூடுவானெனவெருக்கொண்டு
தீமன விடையர் தம்பொது வியரைச் சினந்துறு சிறையிடைச்
செறிப்பார். 422

ஆனபே ரமரர் நெறியிடைத் தோன்றும் அழகினை எங்கணுநோக்கி
ஈனமாந் தமது கற்பக நாட்டில் இவ்வெழில் இலையென எண்ணா
ஊனமே மிகுந்து பலவழிச் சுழலும் உம்பரை ஆய்ச்சியர் காணா
மானமே இழந்து மறுகிடை யலைதல் மறுவுமக் கெனமுகத்
திடிப்பார். 423

420. பன்னக சயனன் - பாம்பணையுடைய திருமால். தமது இனம் காக்கும் மன்னவன் - பட்சிராஜனாகிய கருடன், திருமால் வாகனம். சன்னை - சமிக்ஞை. கலிங்கம் - ஒரு குருவி, பதலை - மத்தளம். கேகயம் - மயில். கலிங்கம், மரங்கொத்தி, கின்னரம், கேகயம் என்ற பறவைகள் இங்குச் சொல்லப்பட்டன.

421. முத்த - முத்தனைய ஒளி பொருந்திய. முண்டகம் - தாமரை. பேடு - பெண்வண்டு.

422. நீமம் - ஒளி, பொதுவியர் - இடைச்சியர்,

423. உம்பர் - தேவர். தேவரை ஆய்ச்சியர் முகத்து இடிப்பார்.

**கலி விருத்தம்**

**பதும வாவியருகு தங்குதல்**

எள்ளிட இடமிலாது யாண்டும் அந்தணர்
மெள்ளவா னடக்குறு மெலிவு நோக்குபு
வள்ளல்தங் கினன்பதும வாவி மாடுற
உள்ளமா மகிழ்வுறு சுகன் உணர்த்துவான். 424

**சுகன் குடிலில் தங்குதல்**

"அறிவிலேன் சிதுகுடிற் கணுக எற்குறு
பிறிவிலாப் பீடள விடுதற் பாலதோ
சிறியன் என்றிகழ்கிலா தடிமை செய்பணி
வெறிய வாயினுங் கொளவேண்டும் எந்தையே." 425

அந்தணன் உரைத்தலும் பகுளை, "ஐய,கேள்
உன்றனுக் கணங்குகேட் டிடுதற் குற்றுழி
இந்தமா முனிசொலால் இணங்கினான் மனன்
சுந்தரா" என அவன் மனையிற் றுன்னினான். 426

ஏதமில் முனிவன் நீராடி எய்திஇன்
மோதகம் அப்பம்நன் மூலம் காய்கனி
ஆதர வாய்த்தர அருந்தி அன்பொடு
வேதநா யகன்அவண் மேவுங் காலையே. 427

**சூரியன் மறைவு**

ஓங்குவை குண்டமீ துரகமெத்தைமேல்
தூங்கினோன் கானிடைச் சோர்தல் காண்பனோ
நீங்குவன் நீரில்வீழ்ந் துயிர்எ னக்கதிர்
ஆங்குவீழ் தவிற்குட கடலு ளாழ்ந்தனன். 428

424. அந்தணர் நடையின் மெலிவு நோக்கி, வேங்கடேசன் பதுமதீர்த்தத்தின் அருகே தங்குகிறான். அப்போது சுகன் சொல்லுகிறான்.

425. எற்கு - எனக்கு. பீடு - பெருமை. வெறிய - அற்பம், எந்தையே-விளி.

426. பகுளை கூறுகிறாள். அணங்கு கேட்டு - பெண் கேட்டு. உற்றுழி - சென்ற காலத்தில். முனி - சுகன். மனன் - மனம் சுந்தரா - வேங்கடேசனை விளித்தது.

427. ஏதமில் -குற்றமற்ற. மூலம் - கிழங்கு. வேதநாயகன் - வேங்கடேசன்.

428. உரகமெத்தை - பாம்பணை. கதிர்-சூரியன், சூரியன் மறைவு.

சூரியன் உதயம்

அலகிலா வேங்கட அண்ணற் கெய்திய
உலகினோர் கண்ணெச்சில் ஒழிப்பல் யானெனாக்
குலவுகீழ்த் திசைமகள் மணிக்குடங் கொளீஇ
இலங்குதல் எனக்கதிர் உதயத் தெய்தினான். 429

மீண்டும் செல்லுதல்

உதிக்குமுன் துயிலொழிந் துவணன் மீதுருக்
கதிக்கயா னம்பல கடவு ளேறினர்
மதிக்குமா தவன்புடை வருகக்கா டொரீஇ
அதிர்க்குமா முரசுட னடையுங் காலையே. 430

மன்னர் வந்து போற்றி அழைத்தல்

வார்முர சதிர்குரல் மன்ன னஞ்செவி
சார்தலுந் தனையன்பின் தமர்தன் தானையும்
ஏர்பெறச் சூழ்வர வெய்தி எந்தைநேர்
ஆர்வமோ டடைந்தவன் அன்பிற் போற்றினான். 431

மலைபுரை புயமுடை வள்ள லன்னவன்
நிலைபுரை முறைமையின் நெடிது நன்மொழி
கலைபுரை தருவன கழறிக் காவலன்
அலைபுரை தானையின் நடுவ டைந்தனன். 432

அந்நக ரிடைப்பரன் அணுகுங் காலையின்
மின்னனார் வளைகளை யாழிவீ ழுறத்
தன்னதா தரத்தொடு தயங்கு நெஞ்சமும்
முன்னுறப் பின்னவர் முடுகி னாரரோ. 433

429. சூரியோதயம், கொளீஇ - கொண்டு, உதிக்கின்ற சூரியன் மணிக்குடமொத்துத் தோன்றினான்.

430. உவணன் - கருடன், யானம் - வழி, புடை வருக - அருகில் வர, ஒரீஇ - நீங்கி.

431. தமரும் தானையும் சூழ்வர, மன்னன் - ஆகாய மன்னன் எதிர் கொள்ளுதல்.

432. கழறி - சொல்லி, தானை - சேனை.

433. பெண்கள் சூழ்ந்து வரும் நிலை. ஆதரம் - அன்பு.

மயன்தொழில் துலங்குற வகுத்த மாளியில்
அயன்முத லோர்தொழ அரசன் போற்றுறப்
பயன்தரும் வேங்கடப் பரமன் நண்ணினான்
இயம்பல முகிலிரி தரவி டிக்கவே. 434

**சூரியன் மறைதல்**

குடதிசை மடந்தைநேர் குணதி சைப்பெணாள்
அடவொடு நின்றுதன் ஆற்றல் காட்டுவான்
கடவிய பந்தென மேற்றி சைக்கடல்
இடமதில் ஆழ்ந்தனன் இரவி நொய்தினே. 435

அந்தியங் கடன்முறை ஆற்றி அந்தணர்
பந்தியி லிருந்தமு தருந்திப் பண்ணவன்
இந்திரை தாள்வரு டிடத்து யின்றனன்
சுந்தரச் சனகஎன் றிருடி சொல்லினான். 436

## கதைச் சுருக்கம்

வேங்கடேசன் கட்டளைப்படி, கருடன் தேவர் அனைவரையும் மணத்துக்கு ஏகவேண்டி ஒன்று திரட்டுகிறான். எல்லோரும் திரண்டு ஆகாய மன்னன் நகரை நோக்கிச் செல்கிறார்கள். வழியில் சுகமுனிவன் ஆசிரமத்தில் தங்குகிறார்கள். மன்னன் அங்கு வந்து போற்றி அழைக்கிறான். எல்லோரும் நகர் அடைகிறார்கள்.

434. மயன் - தச்சன். மாளி - மாளிகை. இயம் - வாத்தியம். இடிக்க - ஒலிக்க. முகில் இரிதர - மேகம் இடித்தாற்போல

435. இரவி - சூரியன், அடவொடு - அடைவொடு, முறையாக. குணதிசைப் பெண் பந்தெறிந்தது போல. நொய்தின் - விரைந்து.

436. அந்தியங்கடன் - மாலைக்கடன், பண்ணவன் - திருமால். இந்திரை - இலக்குமி. சனக : சனக மன்னனைச் சதானந்த முனிவன் விளித்தது. இந்திரை தாள் வருட என்றது, ''திருமகள் கரந்தொடச் சிவந்து காட்டிற்றே'' என்ற கம்பர் வாக்கைக் கருதியது.

## 16. பாணிக்கிரகணப் படலம்

இன்னண முரைபு கன்ற இருடிதாள் வணங்கி ஏத்திப்
''பன்னக சயனன் கஞ்சப் பாவையை மணம்பு ணர்ந்த
உன்னதச் சரிதை தன்னை உவந்தருள் புரிக'' என்ற
மன்னவன் களிசிறப்ப மாதவன் வழுத்த லுற்றான். 437

தொண்டநாட் டரச னீன்ற தோகைதன் மணத்துக் காக
அண்டர்கள் உவப்ப ஆனெய் அழலிடைப் பெய்யும் ஓம
குண்டமொப் பாகத் துய்ய குணதிசை தனில்உ தித்து
விண்டல மிசையு யர்ந்து விளங்கினன் பரிதி மாதோ. 438

நகர் அலங்கரித்தல்

மறிதிரைக் கடலு டுத்த மலர்தலை உலகங் காக்கும்
அறிவினில் உயர்ந்தி லங்கும் ஆகாய வேந்தன் ஆண்டு
நெறியறி தொழிலின் மேன்மை நிலையின்ஓ வியரை நோக்கி
''குறியுடை நகர முற்றும் புனைந்தினே கூறும்'' என்றான். 439

இறையவன் விடைகைக் கொண்டவ் வெழில்நிறை நகரந்தன்னைக்
கறையறப் புனைதல் செய்து கதலிபூங் கமுகு நாட்டிக்
குறையில் தோரணம் நிறைந்த கும்பநற் கொடிய மைத்து
நறைகமழ் கற்ப கக்கா நாடுகண் டேங்கச் செய்தார். 440

437. பன்னக சயனன் - பாம்பணையுடைய திருமால். கஞ்சப் பாவை - தாமரையில் வதியும் திருமகள், என்று மன்னவன் கேட்கச் சதானந்தன் கூறுவான்.

438. ஓம குண்டலத்தில் நெய்பெய்தாற்போல. குணதிசை - கீழ்த்திசை. சூரியோதயம்.

439. ஓவியர் - நகர் அலங்கரித்தல் வல்ல சிற்பியர்.

440. கும்பம் - பூரண கும்பம். நறை - மணம். கற்பகக்காவின் நாடாகிய தேவலோகம் இதைக் கண்டு ஏங்கும்படி இதனை அணி செய்தார்.

நகரில் வாழ் மாத ரூட்டும் நறும்புகை கடல்நீர் உண்ட
நிகரிலா மங்குல் என்ன நினைந்துறு பசியை யாற்ற
மிகவுமா தரவி னோடி மேவுசா தகங்கள் நோக்கி
அகமிக வெதும்பி அன்றே யதிரிச மான தம்மா. 441

கடிமலர்க் கூந்தன் மாதின் கரம்பிடித் தாள வந்த
முடியொளிர் கருணை மாரி முகிலேஎம் நாடு காக்கும்
இடியினான் மிரட்டல் தீர்தி எழிலியென் றடித்தன் மானும்
கொடியுயர் விசும்பிற் றாவிக் கோடையா லாடன் மாதோ. 442

ஒளிகிளர் மேனி லைக்கண் உற்றுயர் பளிங்கு தன்னிற்
களியொடு மறுகி லேகுங் கன்னிதன் உருவை நோக்கி
இளிவிலா அமரர் மாதர் ஏந்தல்தன் வதுவை காண்பான்
நளிகுடை விண்ணா றுற்று நடப்பது புதுமைத் தென்றாள். 443

இனத்தொடு தோர ணத்தில் இசைத்தபன் மலரோர் மங்கை
தனத்திடை வளியால் வீழச் சகிதனைக் களித்து நோக்கிக்
கனத்தவேங் கடக்கோன் என்னைக் கடிமணம் புரிவான் என்ன
மனத்திடை மதித்துத் தேவர் மலர்மழை பொழிந்தார் என்றாள்.

கூடிய காலை மாதர் கொழுநரோ டுடி நீத்த
சேடுறு கலனாம் வெற்பிற் செலுமிடைப் பரிதாள் மாட்டி
ஓடுறும் ஒற்றை யாழி உற்றதேர் சாயு மென்று
வாடுறும் பரிதி அந்த வளநகர் கடக்குங் காறும். 445

441. சாதகப் புட்கள் மேக நீரை உண்டுவாழும், மாதர் ஊட்டும் நறும்புகை மேகம் என்றெண்ணி இவை ஏமாந்து வெதும்பி மறைந்தன. மங்குல் - மேகம். ஆதரவு-அன்பு. சாதகம் ஒரு புள் வகை. அதிரிசம் : அதிருசியம், மறைந்தன என்க.

442. ஆடல் ஒலி இடிக்குரல் போலிருந்தது. முகிலே · விளி.

443. ஒரு கன்னியின் கூற்று.

444. ஒரு தோரணத்தில் இருந்த ஒரு மலர், மலங்கையின் தனத்திடை விழ அவள் களிப்புற்றுக் கூறுதல்.

445. சூரியனது அச்சம். கலன்களாக மலை. ஒற்றையாழித் தேர் சூரியனுக்குரியது, அவன் பரிகளின் தாள் இம்மலையில் மாட்ட, தேர் சாயும் என்ற அச்சம்.

விண்டலத் தினும்உ யர்ந்த மேடையின் மீது நின்று
கண்டஅக் கடவுள் மீது காமமாய் வெதும்பு மாதர்
அண்டையில் நின்று வாட்டும் அம்புலி யகலத் தாளால்
தண்டஞ்செய் போழ்து பூண்தோய் தழும்பினைக் களங்கமென்பர்.

வானநாட் டுவதி மார்கள் வனப்பினை நோக்கிச் சால
ஈனமென் றெண்ணு கின்ற இருடியர் குழாங்கள் இந்த
மாநகர் தன்னில் வாழும் மாதர்கள் வனப்பை நோக்கித்
தீனராய் உணர்வ ழிந்து தெருவினில் திரிவர் மாதோ. 447

பட்டண முழுதுஞ் சுற்றிப் பார்ப்பவர் உளம்வி யப்பத்
திட்டமாய் அலங்க ரித்த செய்தியை அரசன் முன்னம்
கிட்டிஒற் றர்கள் உரைப்பக் கிளர்மண வறைஇ யற்றி
மட்டறக் கோலஞ் செய்ய மந்திரிக் கறிவித் தானால். 448

சூரிய உதயம்

இவ்விதச் செய்கை தன்னின் இறையவன் இருக்கு மெல்லை
செவ்வியின் மிகுந்த நாதன் தினகரன் உதயம் நோக்கி
அவ்விய மிலாத நித்திய அரும்விதி முடித்துப் பின்னர்
ஓவ்விய குபேரன் தன்னை உவப்பொடு நோக்கிக் கூறும். 449

அமுதருத்துதல்

''ஏந்தல்பால் விரைவின் எய்தி இருடியர் அசனம் தன்னைப்
பாந்தமா யியற்றி வல்லே படைத்திடப் புகல்தி'' என்னச்
சாந்தனல் விடைகைக் கொண்டு தராபதிக் குரைத்துப் பின்னைக்
காந்தனா ரிடத்தி லுற்றான் கனநிதிக் கிழவன் மாதோ. 450

446. மேடைமீது நின்று மாதர் சந்திரனைத் தண்டம் செய்த தால் வந்த தழும்பே களங்கம்.

447. உவதி - யுவதி. இருடியர் தெய்வப் பெண்கள் அழகை ஈனம் என்று எண்ணுபவர், இந்நகர் மாதர் அழகில் உணர்வழிவர்.

448. நகரணி கேட்டு அரசன் மணவறை கோலம் செய்யக் கட்டளையிடுதல்.

449. தினகரன் - சூரியன், அவ்வியம் - அழுக்கு.

450. அசனம் - உணவு. வல்லே - விரைந்து, கனநிதிக் கிழவன்-குபேரன். தராபதி - மன்னன், காந்தனார்-வேங்கடேசன்.

மாதவன் விடைபெற் றான்ற மகிழ்ச்சியோ டரசன் மேலாங்
கோதின்மா தவத்தி னோர்க்குக் குறைவற அமுத ருத்தித்
தீதில்தாம் பூலஞ் சந்தம் தெட்சணை யீந்து பின்னர்த்
தூதரை நோக்கித் ''தானை விரைவொடு தொகுக்க''
என்றான். 451

தளம்பல குழுமத் தானைத் தலைவர்கள் அமைச்சர் நண்ண
இளவலன் புதல்வ னுற்ற இனத்தினர் மருங்கு சூழ
வளமிகு சுரேசன் வெள்ளை வாரணந் தனைச்சிங் காரித்
துளமிகக் களித்து முன்னர் உவப் பொடு கொடுந டந்தான். 452

திருமணச் செயல்கள்

விந்தையாய்த் தெய்வத் தச்சன் விதித்தநன் மனையில் தேவர்
அந்தணர் குழுவின் நாப்பண் அரியணை மிசைஅ மர்ந்த
சுந்தரக் கடவுள் முன்னர்த் தோன்றல்வந் தெய்த லோடும்
அந்தரர் துதிக்க அண்ணல் ஆவலாய்த் தழுவி னானால். 453

புரோகிதன் தன்னை நோக்கிப் புரவலன் களிப்பி னோடு
சரோசமின் நாதன் ''பூசை சடுதியின் முடித்தி'' என்னச்
சிரோமணி யான மன்னன் தேவியாந் தரணி என்னும்
விரோதமில் லாளை நோக்கி முறையின்வே தியனு ரைக்கும். 454

''அருந்ததி யோடு கூடிஅ ன்னைநீ ஆவ லாகத்
திருந்தநற் றேவன் பூசை செய்''யெனத் தவிசின் மீது
பொருந்திய கடவுள் தன்னைப் பூசிக்குங் காலை ஆங்கு
பிருந்தமாய் முனிவர் மாதர் பேணியே வாழ்த்த லுற்றுர். 455

கலையொடு மணிக ளாலுங் களிப்புற அலங்க ரித்து
மலையென விளங்குந் துய்ய வாரண வெருத்தின் மீதில்
அலைகடல் வண்ணம் போன்ற ஐயனை ஏற்று வித்துச்
சிலைதிக ழரசன் மற்றத் தேயமன் னவர்க ளோடு. 456

451. ஆன்ற-மிக்க. சந்தம்-சந்தனம்.
452. குழும - கூட, சுரேசன் - இந்திரன், வாரணம்-யானை.
453. தெய்வத்தச்சன்:இங்கு மயன்.

454. சரோச மின் - தாமரையில் வைகும் இலக்குமி மன்னனையும் தரணி தேவியையும் நோக்கி.

455. பூசை செய் என்று உரைக்கிறான், பிருந்தமாய் - கூட்டமாய்.

456. துய்யவாரண எருத்து-வெள்ளையானையின் கழுத்தின்.

வரம்பிலாத் தானை சூழ மதிநகர் கவரி வீச
நிரம்புபல் லியங்கள் யாவும் நீள்கட லொலியை மாற்ற
அரம்பையர் நடிக்க வானத் தமரர்கள் களிப்புற் றார்ப்பப்
பரம்பிய முனிக்கு ழாங்கள் பண்ணையிற் பாட மாதோ. 457

### வெங்கடேசனை வழிபடுதல்

பலவிதக் கொடியி லங்கப் பரிவுடன் நடந்தே எங்கும்
நிலவிய சேனை தன்னை நிறுத்தியும் களிப்பி னோடு
நலமிகு கோலஞ் செய்த நரபதி கோயில் வாயிற்
குலவிய கடவுள் முன்னர்க் குங்கும நீரெ டுத்து. 458

மணமலர்க் கைலா கோடு மணவறை மீசை இருத்தி
அணவியங் கரசன் தேவி யோடரு நீர மாடிக்
குணமிகு முனிவர் வேதங் கூறவேங் கடத்தோன் தாளை
உணர்வுடன் விளக்கி அந்நீர் உச்சிமீக் கொண்டு கூறும். 459

### மங்கை வருகை

''இன்றுதா னென்மு னோர்வீ டெய்தினர் யானும் மேலாம்
நன்றுறு காட்சி பெற்றேன் நற்றவத் தோரே'' என்று
குன்றுறழ் திரள்தோள் மன்னன் கோதையர் தம்மை நோக்கிச்
''சென்றென்மா மகளைக் கோலஞ் செய்திவண் கொணர்மின்''
என்றான். 460

மன்னவன் விடைகைக் கொண்ட மாதர்கள் களிப்பி னோடு
நன்னயக் கன்னி வாழும் நவமணி மாட மெய்தி
''அன்னை நீ விவாக நீரம் ஆடுதற் கெழுக'' என்ற
கன்னியர் உவப்பின் மூழ்கக் கஞுறிய காலை மாதோ. 461

457. மதிநிகர்-வெண்ணிறமான. பரம்பிய - எங்கும் பரவிய பண்ணையில் - மகளிர் குழாங்கள் ஒப்ப.

459. அணவி - நெருங்கி.

460. வீடு - நற்கதி.

461. விவாக நீரம் - திருமணத்துக்கான நீராட்டல். கஞுறிய - கழறிய.

### அறுசீர் விருத்தம்—வேறு

கார்திகழுமின வணிந்து காசினியி னீர்சொரிந்து காத்தல் நோக்கிப்
பார்திகழு மாதர் பிறி துதவிசெய வுளத்தினிடைப் பரிவு பூண்டு
சீர்திகழுஞ் சேணினிடைச் செலச்செயலற் றதற்குரிய திறமை
கொண்டு
நேர்திகழுஞ் சிகுரமிடை யுடையனைக்கு நீராட்டி நீவி வார்ந்து. 462

உடலினுயர் எழிலினொடு காந்திதனை மறைத்திடத்தம் உள்ளத்
தெண்ணிச்
சுடர்திகழும் மணியணியும் வயங்கு பசும் பொன்னுடையும் சூட்டி
யப்பால்
திடமுடனன் மணமிகுந்த கலவையுடன் திலகநுதல் தீட்டி வாசம்
படரவுயர் பூந்துணரஞ் சிகழிகை மேற் புனைந்தனர்கள் பண்பு
கூர. 463

பலஉடுக்கள் புடைசூடி வருமதிமீ தொளிருமொரு பால்வா
னென்ன
நலமலியும் மாதர்குழு மருங்குதிகழ் தரநளின நாட்டு மங்கைக்
கிலகவுயர் வெண்கவிகை எடுத்தனர்கள் இருபாலுங் கவரி வீசப்
புலவர் குழாம் புகழ்பாடப் பொன்னுலகோர் களிசிறந்து போற்ற
மாதோ. 464

விண்ணுலக விபுதர்முதன் முனிவர்களுக் கெட்டாத வீடு பேறு
மண்ணுலகிற் பசனைசெயுந் தொண்டர்தமை அன்பினொடு
வலியத் தேடித்
தண்ணியவா மிப்பாதந் தந்தருள வந்ததெனத் தாழ்வு றாமல்
திண்ணமீகு நூபுரங்கள் மிகஆர்ப்ப ஒயிலினடி தேவி பேர்த்தாள்.
465

462. சிகுரம் - கூந்தல், இரண்டு பாடல்களும் நீராட்டி அலங் கரித்தல் (462 - 3). 463. சிகழிகை—கூந்தல் முடிப்பு.

464. உடு - நட்சத்திரம், மதி - சந்திரன், நளினம் - தாமரை.

465. விபுதர் - தேவர். பசனை - பஜனை. தண்ணியவாம் - குளிர்ச்சி பொருந்திய. நூபுரம்-காலணி, ஒயிலின் - ஒய்யாரமாக. அடிபேர்த்தாள் - நடந்து வந்தாள்.

அன்னைமிக அடிவருந்த வருநடையி னழகதனை அன்பாய் நோக்கி
வன்னமிகு மடவனங்கள் அடிவைத்த இடந்தோறும் வணங்கத் துண்டந்
துன்ன வெழிற் சுவட்டுநிறை செம்பஞ்சின் துவர்வன்னந் துலங்க வோங்கும்
சின்னமழி யாதுவளச் செம்மையல குற்றதினுந் தெளியத் தோன்றும். 466

இத்தகைய வனப்பினொடு தோழியர்கை லாகுதர இரும ருங்கும்
பத்தியுடைச் செவிலியரும் பார்ப்பனிமா ரும்புகழ்ந்து பிரிவிற் பாட
வித்தகஞ்சே ரமரர்மா தர்கணெஞ்சங் களி கூர்ந்து வேண்ட யாரும்
நத்தியரு வினைதுடைப்ப விவாகமா ளிகைக்கு மெல்ல நடந்து வந்தாள். 467.

### அறுசீர் விருத்தம்—வேறு

**மணமாடத்து அமர்தல்**

வந்தபூ மகளை மன்னன் மகிழ்வுடன் அழைத்துச் சென்று
கந்தமா மலரி றைத்துக் கடிகாபூ சனையி யற்றி
அந்தரர் முனிவர் மன்னர் அன்பொடு நோக்கி நிற்கும்.
நந்தலின் மணமா டத்தின் நங்கையைத் திகழ வைத்தான் 468

பீதஅக் கதைகைக் கொண்டு பிறங்கிய தேவர் மன்னர்
ஏதமில் முனிவர் மின்னார் யாவரும் எடுத்து வாழ்த்திக்
கோதிலா வரன்றன் மீதுங் குறைவிலா வதுவின் மீதும்
வேத மந்திர முழங்க விருப்பொடும் இரைத்தா ரன்றே. 469

**திருமணம்**

கடல்திகழ் கஞ்சப் பூமேற் காந்தள்வீ மலர்ந்த தென்னத்
திடஅலை வண்ணன் கைமேல் தேவிபூங் கரத்தை வைத்து
வடமணி முலையோ டுற்ற வனிதையி னோடு நின்று
தடமிகு புயஆ காயன் தாரைவார்த் தனன்உ வந்தே. 470

466. துவர்வன்னம் - சிவப்பு நிறம்.

468. பூமகள் - இலக்குமி அனையாள், கடிகாபூசனை - காப்பு நாண் சேர்த்தல் (கங்கணம்). நந்தலின்—குற்றமில்லாத.

469. பீதஅக்கதை - மஞ்சள் கலந்த அட்சதை.

470. கஞ்சப்பூ - தாமரை. வீ - மலர். அலைவண்ணன் - நீலவண்ணனான திருமால்.

சூலியும் வேதன் பாங்கு துன்னிநின் றெடுத்து வாழ்த்த
நூலினோர் மறையி ருக்கு துதியுடன் களித்துக் கூற
வாலிப அலர்மே லன்று மங்கைதன் பாணி தன்னை
ஆலிலை மேல்து யின்ற ஐயனன் பொடுபி டித்தான். 471

களிப்புடன் விசாக மீனிற் கதிருவா மதிவாழ் மாதந்
தளிப்புள சுத்த பக்கந் தசமிநற் புகரின் வாரம்
குளிர்ப்புறு கதிர்நாள் தன்னிற் கோதூளி இலக்கி னத்தில்
இளிப்பிலா எரிவ ளர்த்தார் இருபிறப் பாள ரம்மா. 472

தேவ துந்துபி முழக்கந் திசையெலாம் பரவி யோங்க
நாவலர் புகழச் சொர்க்க நாட்டவர் மலர்கள் தூவக்
காவலன் பவனத் துற்ற காரிகை மார்ந டிக்க
யாவரும் மகிழ மன்னர் யாழ்தனை இசைக்க லுற்றார். 473

அந்தணர் அமரர் வெற்றி அரசர் மாமுனிவர் நாகர்
கந்தமார் கரிய கூந்தற் கன்னியர் தமக்கு வேறாய்
விந்தையா ரசன மிட்டு மிகவுப சரித்த லோடு
நந்தலில் பணிதி யாடை நவையிலா தெவையும் ஈந்தான். 474

விமலையி னோடு தேவன் வியப்புறும் அசனம் உண்டு
தமரொடு சிலநாள் தங்கிச் சடங்குமேற் பலவும் முற்றிக்
கமனமே னினைவு கொண்ட கடவுளுக் குபச ரிப்போடு
அமலமா மணிபொன் னாடை யளிப்பன பிறவும் ஈந்தான். 475

471. சூலி - சூலமேந்திய கரன். வேதன் - பிரமன். இருக்கு- இருக்கு வேதம்.

472. விசாகநட்சத்திரம் பூர்வபக்கத்தசமி வெள்ளிக்கிழமை (புகர்). கதிர் நாள் - உத்தரம். கோதூளி லக்கினம் (வசுக்கள் வீடு நோக்கி வருகையால் தூசு எழும்பும் நேரமாகிய)அந்தி நேரம்.

473. பவனம் - அரண்மனை.

474. கந்தமார் - மணம் பொருந்திய. அசனம் - சோறு. நந்தலில் - குறைவில்லாத. பணிதி - அணிகலன்கள்.

475. கமனம் - தன் இடம் செல்லுகை,

### தன்பதிக்குச் செல்லல்

பலவித வரிசை யாவும் பரிவொடு பெற்ற பின்னர்
நலமிகும் அலர்மே லென்னும் நங்கையோ டுவந்தெ ழுந்து
துலமிலாக் கலுழன் மீது துலங்குற வேறி யப்பால்
குலவுதன் பதிக்குச் செல்லுங் கோதிலான் பின்னர் மாதோ, 476

காண்டகந் தனினி றைந்த கன்முளுங் காலில்தைக்க
ஆண்டகை வரவு நோக்கி அருட்கட லாய எந்தை
மீண்டெதிர் நிறுத்தி ''வந்த விருப்பினை உரைக்க'' என்ன
''நீண்டநின் பாத பத்தி நீங்கிடா தருள்க'' என்றான். 477

அதிபன்அன் புரையு ணர்ந்த ஆரண முதல்வன் ''ஆன்ற
துதிபெருங் குரவரோடும் துலங்கிடும் அடியார் சேருங்
கதியுனக் கீந்தேன்" என்னக் களித்துடன் வணங்கி வேந்தன்
பதிதனை யடைய மீண்டு பரிவுடன் நடந்தான் எந்தை. 478

கருடனோர் கணத்தின் முன்னர்க் கான்மலை தொறுங் கடந்து
முருகுடன் இலகுஞ் சொன்ன முகிநதிப் பாங்கர் நண்ண
அருகுறும் அயனைப் பார்த்து''இவ் வயனத்தில் வெற்பிற் கேகேன்'
திருமணம் புரிந்தோர் தங்க டீச்சையீ தென்று ரைத்து. 479

### அகத்தியர் ஆசிரமம்

அவ்விடைக் கடல்கு டித்தோன் ஆச்சிர மத்தை நோக்கிச்
செவ்வியோ டிலங்குந் தேவர் தேவிய ரோடு நண்ணி
எவ்வமி லாமல் மிக்க இன்பமோ டிருக்கும் எல்லை
திவ்விய சொரூபன் ஒன்று சிந்தையில் நினைந்தா னன்றே. 480

476. துலம் இலா. இணையற்ற. கலுழன் - கருடன். கோதிலான் - வேங்கடேசன்.

477. காண்டகம் - காடு. பத்தி - பக்தி. ஆண்தகை - மன்னன். வந்த - நீ என்னைத் தொடர்ந்து வந்த. என்றான் என்று மன்னன் வேண்டினான்.

478. வேந்தன் பதிஅடைய, எந்தை நடந்தாள்.

479. இவ்வயனத்தில் - இந்தத் தட்சிணாயனத்தில். தீச்சை- தீக்கை.

480. கடல்குடித்தோன் ஆச்சிரமம் - அகத்தியனது ஆச்சிரமம். திவ்விய சொரூபன் - தேவனான வேங்கடேசன்.

## கதைச்சுருக்கம்

நகர் அலங்கரிக்கிறார்கள். வேங்கடேசன் வெள்ளை யானை மீது அமர்ந்து மணவினைக்காகச் செல்லுகிறான். மன்னன் அலர் மேல் மங்கையை மணக்கோலம் செய்வித்துப் பெருமானுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கிறான். சிலநாள் தங்கிப் பின் வேங்க டேசன் தன் நகர் நோக்கித் தேவியுடன் மீளுங்காலை, தன் பின்னர் மன்னனும் நெடுந்தூரம் வரக்கண்டு, ''உன் விருப்பம் யாது?'' எனக் கேட்க, மன்னன், ''உன் திருவடிப் பத்தியே என்றும் வேண்டுவது'' எனலும், பெருமான், ''உனக்கு அடியார் பெறும் மேலான பதவி தந்தேன்'' என்று அருளுகிறான். மன்னன் தன் நகர் திரும்ப, வேங்கடேசன் பரிவாரங்களோடு அகத்தியர் ஆசிரமம் அடைகிறான்.

## 17. போது கொய் படலம்

### கலி விருத்தம்

**மக்கள் செய்கை**

போது கொய்யப் புதுமண மாதுடன்
ஆதி நாதன் அகத்தினின் நினைந்ததை
மாத ரோடுநல் வானவர் கண்டுமுற்
றீத மாமலர்ச் சோலை செறிந்தனர். 481

புங்க மாமலர் பூத்த சினைகளை
அங்கை யால்வளைத் தவ்வலர் கொய்துபு
மங்கை யோடு மனங்களித் தண்டர்கள்
தங்க நல்லிடந் தன்னை விரும்பினார். 482

துங்க மாந்தருத் துன்னுஞ் சினையெலாம்
பங்க மற்றிடந் தோறும் படர்ந்துமேல்
எங்குஞ் சற்று மிடுக்கிலாச் சோலைவாய்
கங்குல் தங்கு நிலையங் கடுக்குமால். 483

ஓடு வார்சிலர் ஓகையோ டாட்டியைத்
தேடு வார்சிலர் கண்டு திகைப்பறக்
கூடு வார்சிலர் கூர்தரு நல்லிசை
பாடு வார்சிலர் பாவையர் மெய்க்கவே. 484

பழுதில் தேவர்தம் பாவையர் தாளிணைத்
தொழுது கூடலிற் சொர்க்கம் பிடித்தகை
வழுவ லோடக வாஞ்சை மிகுதியால்
அழுத நீரிடை அன்னங்க ளாடுமே. 485

482. கொய்துபு - கொய்யுபு. புங்க - உயரத்தில். அண்டர்கள் - உடன் வந்த தேவர்.

484. ஓகை - உவகை. ஆட்டி - பெண்டாட்டி.

485. அகவாஞ்சை - அகத்தெழுந்த அன்பு.

**ஐயனும் அன்னையும்**

மின்னை யொத்து விளங்கிய மெல்லிடை
தன்னை யாற்ற அடர்க்குந் தடமுலை
அன்னை யோடு மலரெடுத் தாடுதற்
கென்னை யாளுடை எந்தையங் கெய்தினான். 486

ஆவி நேரலர் அன்னையோ டையனைத்
தாவில் காமகள் தங்கர நீட்டுபு
தூவு கேசரந் தூற்றி யழைப்பபோல்
மேவு காடகம் விண்டு வினாடுமே. 487

அன்னை யோடெழில் ஐயனைக் கண்டுநல்
இன்ன கைப்புறும் ஏந்திழை யாரெனப்
புன்னை யங்கிளை பொற்புற எங்கணுந்
துன்னு மாமலர் தோன்றப் பொலியுமே. 488

ஐயன் பாங்கர் அணுகிய அன்னையின்
பைய சாரத்தைப் பார்த்துடன் பின்தொடர்
செய்ய அன்னங்கள் சிந்தை யுவப்பொடு
துய்ய பாதச் சுவடு தொழுமரோ. 489

பாங்கி மார்தமை நோக்கிப் பணியிடைத்
தேங்கு மாமலர் தேடெனுந் தேவிசொல்
ஓங்கு சோலை யுறைதரு கிள்ளைகள்
ஏங்கி யேதொடர்ந் தின்புறக் கேட்குமே. 490

அஞ்ச னிச்சம் அன்பொடு கொய்துதன்
வஞ்சி யங்கரம் வைத்திம் மலர்நிறம்
நெஞ்சி டைக்கொடு நீமற வாயெனில்
எஞ்ச வில்சுகம் எய்திடு மென்னவே. 491

486. அன்னை - அலர்மேல் மங்கை.

487. ஆவிநேர்அலர் அன்னை. காமகள் - காவாகிய பெண். காடகம் - காடு.

488. புன்னை மலரொடு பொலிந்தது, ஏந்திழையார் புன்னகை புரிந்தாலொத்திருந்தது.

489. பைய சாரம் - மென்மையான நடை.

490. தேவி கொல்லைக்கிளிகள் இன்புறக் கேட்கும்.

491. அஞ்சு அனிச்சம் - அனிச்சப்பூ. இப்பூவை வஞ்சியின் கரத்தில் வைத்து அவள் சொன்னாள்.

பொன்ன வாமெழிற் சண்பகப் பூவினை
அன்னை கொய்தம லன்மல ரங்கரந்
தன்னில் ஈந்திதன் தன்மையை நெஞ்சிடை
மன்ன வைத்து வளர்த்தருள் என்றனள். 492

காவெ லாமிகக் கண்டு களித்தபின்
பாவை மாரொடு பண்ணவர் சிந்தையின்
ஆவ லாலெழில் ஆவியை நோக்குபு
தாவி நீரிடைச் சார்ந்தனர் ஆடவே. 493

சுண்ணஞ் சாந்தந் துலங்கக் கரத்திடை
மின்ன வாரிச் சொரியும் மினார்தமை
மன்னி வர்னவர் வாரி யரக்குநீர்
பொன்ன வாமுலை மீது பொழிந்தனர். 494

எட்ட நின்றவவ் வேந்திழை மார்மிகக்
கிட்ட நண்ணிய கேள்வரை ஆவலாய்
வட்ட மாமுலை யுச்சி மடங்குறக்
கட்டி யாரக் களிப்பொடு புல்லினார். 495

விந்தை யாகவவ் விண்ணவ ராடிடும்
அந்த வேலையில் அண்ணலும் ஆய்மணிப்
பந்து நேர்முலைப் பாவையி னோடெழிற்
சந்த மாருந் தடத்திடை மேவினான். 496

அண்ணன் மார்பி லரக்கர றூவிய
வண்ண மாதின் வனமுலை மீமிசை
நண்ணு தூச்சுணம் நன்குறத் தீட்டிய
கண்ணன் மாபுயங் காதலிற் கூடினன். 497

முன்னம் வேதன் முளரியை வெள்ளிய
வண்ண மாகவிம் மண்ணி லுண்டாக்கினான்
அன்னை தாளி னலத்தகஞ் சார்தலால்
இன்னுஞ் செம்மை எழில்தருங் கஞ்சமே. 498

492. சண்பகப்பூவை அமலன் கரத்தில் வைத்து அவள் சொன்னாள்.

494. மினார் - மின்னார், பெண்கள்.

495. கேள்வர் - கணவர்.

497. தூச்சுணம் - தூய்மையான சுண்ணம்.

498. வேதன் - பிரமன். முளரி - தாமரை. கஞ்சம் - தாமரை. வெள்ளிய தாமரை அன்னை தாளிற் சேர்தலால் செந்தாமரையாயிற்று. அலத்தகம் - செம்பஞ்சு.

கார்நி கர்த்த கனங்குழ லாளொடு
நீர நீத்து நெடுங்கரை நண்ணுபு
வார்தி ரட்டிய வானவர் தம்புடைச்
சார்த ரப்பரன் தன்னிருப் பெய்தினான். 499

அறுசீர் விருத்தம்

அண்ணல்தூ வணியோ டாடை ஆவலால் ஈயப் பெற்று
விண்ணவர் முனிவர் மற்றோர் மேவுதம் பதிக்குச் செல்ல
வண்ணமா மலரின் மாது மாதவன் விடைகைக் கொண்டு
தண்ணிழற் சோலை சூழ்ந்த தனிக்கர வீர முற்றாள். 500

வேட்டலுக் காக வந்த விதிபசு பதியி னோடுங்
கூட்டமாந் தேவ ரேகக் குறுமுனி வனத்தில் தங்கி
வாட்டமில் லாம லோங்கி வசுமலை தனைப்ப ழிக்குஞ்
சேட்டமாந் தனத்தா ளோடு சிறப்புடன் வாழுங் காலை. 501

## கதைச்சுருக்கம்

புதுமணக் கோலத்தோடு வரும் வேங்கடேசன் பொழில் விளையாட்டிலும் நீர் விளையாட்டிலும் மனம் செலுத்த, பரிவாரங்கள் யாவும் இவற்றில் ஈடுபடுகின்றன. பின்னர் அகத்தியாசிரமம் அடைந்து வேங்கடேசன் மங்கையோடு வாழ்கிறுன்.

500. மலரின் மாது - திருமகள். கரவீரம் - தான் தங்கியிருந்த இடம்.

501. வேட்டல் - திருமணம் காண. விதி - பிரமன். பசுபதி- சிவபிரான். குறுமுனி - அகத்தியன். வசுமலே - பொன்மலே.

## 18. அரசருக்கு அருள்செய் படலம்

**தூதன் வருதல்**

முத்தர்கள் துதிக்குஞ் சொன்ன முகிநதி யதனின் மூழ்க
உத்தம குணஞ்சி றந்த உலோபாமுத் திரைமி னோடு
நத்தியே அலர்மே லன்னை நண்ணஅவ் விடைவந் துற்ற
சுத்தநா ரண புரத்தின் தூதனைக் கண்ணிற் கண்டாள். 502

கண்டகா லையினில் அன்னை தந்தையைக் கண்டாங் குள்ளங்
கொண்டபே ருவகை யோடு, ''கோதறு குணத்தாய், எய்தற்கு
எண்டகு கருமம் யாதோ, இவண்நினை விடுத்தோர் யாவர்
விண்ட வென்தாய்முன் மற்றோர் சேமமும் விளம்புக'' என்றாள்.

**மன்னன் மரணச் செய்தி**

கேட்டநா யகிதன் முன்னர்க் கிட்டிய தூதன் சால
வாட்டமாய் முகந்தி ரிந்து மனமிக மெலிவுற் றேங்கிச்,
''சேட்டமாம் அரச னிந்தச் செகவிருப் பனைத்தும் நீக்கி
ஈட்டமாய்ப் பிதிர்க்கள் வாழும் இருக்கையை விரும்பி னானால்.

''ஆனதால் அன்னை நின்னோ டருமறை தேடிக் காணா
ஞானநா யகனைக் கூட்டிக் கொண்டின்னே நண்ணாய் என்று
தீனமாங் குரலினோடு செப்பிய உனது தந்தை
ஈனமாந் துயரின் நீங்க எய்து''என ஏங்கி வீழ்ந்தாள். 505

பாரிடைப் பதறி வீழ்ந்த பைங்கொடி தனைக்க ரத்தால்
வாரியே அகத்தி யன்தன் மனைவிதன் மடிமேல் வைத்து
நேரிலாள் துயரஞ் சற்று நீக்குறக் கைலா கோடும்
ஆரியன் சமுகந் தன்னில் அணுகினாள் அருவிக் கண்ணாள். 506

502. உலோபா முத்திரை - அகத்திய முனிவன் பத்தினி. நத்தி - விரும்பி. நாரணபுரம் - ஆகாயமன்னனது நகரம்.

503. அலர்மேல் மங்கை தூதனை வினவுகிறாள்.

504. சேட்டம் - சிரேட்டம். செகவிருப்பு - உலகப் பற்று. ஈட்டம் - தொகுதி.

504-5. தூதன், இவர்களை அழைத்து வருமாறு மன்னன் செப்பிவிட்ட செய்தியைக் கூறுகிறான்.

அண்டர்கள் துதிக்கும் நாதன் அமுதுசார் கமல மாதைக்
கண்டஅக் காலை ''உள்ளங் கவலுறக் கலுழற் சேது
உண்டுகொல் உரைத்தி'' என்ன உயிர்தொறும் உறையும் வள்ளல்
மண்டல மாந்தர் போல மயல்கொடு வினாவி னானால். 507

காணச் செல்லுதல்

இல்லவள் தந்தைக் குற்ற இன்னலை இயம்பு றக்கேட்டு
அல்லலோ டகத்தி யன்தன் ஆனனம் நோக்கி ''ஐய
ஒல்லையில் தேவியோடும் ஒப்பிலாப் பகுளை யோடும்
செல்லுவல்'' என்று சாலச் சிரத்தையோ டகன்றா னன்றே. 508

அத்தினம் அண்ட யோனி யத்தவெற் படையு முன்னர்ப்
பத்தினி யொடுவி ரைந்து பட்டண மதனை நண்ணி
உத்தம வாயிலோரை யுற்றுமன் னியல்ப றிந்து
நித்திய னன்பி னோடு நிருபன்முன் சென்றான் மன்னோ. 509

படுக்கையி லுணர் வழிந்து பதைப்புறும் இறையை நோக்கி
திடுக்கென மனம யர்ந்து செறிந்துடன் தழுவிக் கொண்டு
''நடுக்குற மனைவி மக்கள் நட்பினோர் தமைவிட் டேகல்
அடுக்குமோ ஐய''என்ன வாய்திறந் தரற்றி னானால். 510

தேவனாற் றழீஇய காலைத் தெளிதரு மனத்த னாகி
ஆவலாய்ப் பின்னோன் மைந்தன் கரங்களை அன்பிற் பற்றி
யாவரு மகிழ்வோ டேற்ற எதுபதி கரத்தி லீந்து
காவலன் களிப்பினோடு களத்திரந் தன்னை நோக்கா. 511

அரசனும் அரசியும் இறத்தல்

''உச்சிதத் தரணி கேள்நீ உவப்புட னென்ற னோடு
சச்சிதா நந்த னீந்த தலத்தினை யடைதி'' என்று
துச்சித மான காயந் துறந்துகோன் ஆவி ஏக
இச்சையோ டரசன் தேவி ஏகினள் உடலம் நீத்தே. 512

507. அண்டர் - தேவர். அமுதுசார் - அமுதோடு பிறந்த.

508. ஆனனம் - முகம். ஒல்லையில் - விரைவாக.

509. அண்டயோனி - அண்டங்களனைத்துக்கும் பிறப்பிடமாயுள்ளவன். அத்த வெற்பு - அத்தகிரியாகிய சூரியன் மறையும் மலை.

510. இறை - மன்னன். அரற்றினான் வேங்கடேசன்.

511. பின்னோனையும் தன் மைந்தனையும், எதுபதி - யது (யாதவ) குலத்துக்குப் பதியாகிய (கண்ணன்) வேங்கடேசன். களத்திரம் - மனைவி, தரணிதேவி. நோக்கா - நோக்கி.

512. சச்சிதானந்தன் - வேங்கடேசனாகிய திருமால். காயம்- உடல். மன்னன் உயிர் பிரிய, அரசியும் உயிர் விட்டாள்.

திசைமுகன் விரைவின் நண்ணித் தேவியோ டரசன் தன்னை
இசையுற விமான மீதில் ஏற்றுவித் தனுப்ப அப்பால்
நசையுறச் சிதைய டுக்கி நரபதி யோடில் லாளின்
வசையின்மெய் யதனை வேத மந்திர வசுவுக் கீந்தார். 513

சோடச தினம் வரைக்குந் தொடர்ச்சியாய்ச் சவச்ச டங்கு
சேடமி லாமற் செய்து தீர்ந்த பின் மாசி யத்தில்
ஈடற ஒளிருந் துய்ய இருடியர்க் கூட்டி எந்தை
ஆடவ ளோட ருந்தி அகத்தியன் வனம்அ டைந்தான். 514

**அரசன் தம்பிக்கும் மகனுக்கும் போர்**

இன்னன கிரியை யாவும் இயல்பொடு முடிந்த பின்னர்
மன்னவன் இளவ லோடு மைந்தனவ் வரசுக் காக
நன்னடை யொழுக்க முற்ற நட்பினை யிழந்து சாலத்
துன்னவ ராய்ப் போர் செய்வான் தொல்பெரும் படைதொ
குத்தார். 515

வேந்தன்தன் புதல்வ னாய விசுவக்கு சேன னைப்போற்
சோந்தையாம் அரசன் தம்பி தொண்டைமான் தானுங் கூடித்
தீந்தமிழ் முனிவன் வாழுஞ் செழும்பொழில் தனை யடைந்து
பாந்தமாய்த் தேவ தேவன் பாகத்திற் படிந்தார் மன்னோ. 516

பாதமே கதியென் றோரைப் பரிவுடன் தழுவி வாழ்த்தி
ஏதமி லாத எந்தை இருவர்தம் முகமும் நோக்கிப்
''பேதமாய் உங்க ளுக்குட் பிறந்தகா ரணம்யாது''என்று
நாதனாம் வேங்க டேசன் நயமொடு வினவு காலை. 517

மதிமுக அரசன் மைந்தன் மாதவன் தனைவ ணங்கிப்
''பதியதன் நிமித்தம் யாங்கள் பகைத்திரு வக்கு ரோணி
துதிபெறு தானை சேர்த்துத் துணிந்தனம் நின்னை நம்பித்
ததியிது காக்க'' என்று தாளினை முடிமேற் கொண்டான். 518

513 திசைமுகன் - பிரமன். மெய் - உடல். மந்திரவசு - அக்கினி. உடல்களைத் தகனம் செய்தார்கள்.

514. சோடச - 16. சேடம் - குறைவு. மாசியம் - இறந் தோருக்கு மாதந்தோறும் செய்யும் பிதிர்க்கிரியை. அடைந்தான் - மீண்டான்.

515. மன்னன் தம்பியும் மைந்தனும் அரசுக்காகப் போர் தொடுக்கிறார்கள்.

516. சோந்தை - விரோதம். தமிழ் முனிவன் - அகத்தியன்.

518 பதி - நாடு. அக்குரோணி - சேனையின் அளவு - 21870 தேர், 21870 யானை, 65610 குதிரை, 109350 காலாள் கொண்ட படை ஓர் அக்குரோணி. (வேறு அளவும் உண்டு.)

**வேங்கடேசன் தேவியை உசாவுதல்**

திருமிகு தொண்ட மானுந் தேவன்த னடியில் வீழ்ந்து
''பருவமீ தென்னைக் காத்துப் பாலிக்க வேண்டும்'' என்ன
''ஒருவன்யா னிருவர்க் கெவ்வா றுதவுவல்'' என்று கூறிப்
பொருவில்நன் மனையாள் அந்தப் புரத்திடைப் புக்கான் மாதோ

சிற்றிடை மடந்தை தன்பாற் சென்றதோ ரெந்தை சாலக்
''கற்றவர் துதிக்குஞ் செய்ய கமலமே லவளே, உன்னைப்
பெற்றவ னரசை வேண்டிப் பிணங்கிநின் தம்பி யோடும்
உற்றசிற் றத்தன் என்றன் உதவியை வேண்டி வந்தான். 520

''இவ்விரு அரசர் தம்மில் எவரொடு கலக்க'' என்று
செவ்வியோன் வினவக் கஞ்சத் தேவியுள் மகிழ்ச்சி யோடும்,
''எவ்விதக் குறைவும் இன்றால் எந்தைதன் இளவ லுக்குத்
திவ்விய படையி னோடு திரவிய வலியு முண்டு. 521

''தந்தைதா யின்றிச் சற்றுந் தனமின்றி எனது தம்பி
விந்தையா ருலகை யாள வேண்டிவந் திரத்த லாலே
எந்தையா சனத்தி லேற்றி எழிலுற வைப்பா யாகில்
நிந்தையி லமரர் யாரும் நீதியென் றுணர்வர்'' என்றாள். 522

**மகனுக்கு உதவ வருதல்**

அந்தமா மொழிகேட் டையன் அகமிகக் களிப்பி னோடுந்
தொந்தமா நந்து நேமி இரண்டையுந் தொண்ட மாற்குத்
தந்துமைத்து னற்குத் தான்போர்ச் சகாயம தியற்ற வேண்டி
எந்தையங் கருடன் மீதில் ஏறினான் தேவி யோடும். 523

ஆரணம் புகழும் எந்தை அன்பொடு விரைவ தாக
நாரண புரியை நண்ணி நங்கைய ரோடி ருக்கத்
காரணன் பவனந் தன்னிற் காதலி தன்னை விட்டுப்
பூரண னாவ லோடு போர்க்களந் தனைய டைந்தான். 524

519. இருவரும் உதவுமாறு வேண்ட, வேங்கடேசன் மனையாளைக் கேட்க அந்தப்புரம் அடைந்தாள். பொருவில் - ஒப்பில்லாத.

520. சிற்றத்தன் - சிற்றப்பன்.

521. கஞ்சத் தேவி - தாமரையில் வைகும் இலக்குமி.

522. தம்பிக்கு உதவ வேண்டும் என்பது தேவியின் யோசனை.

523. நந்துநேமி - சங்கு சக்கரம்.

524. காரணன் பவனம் - அரசன் மாளிகை.

**போர்**

சித்திரை நாளிற் பௌவத் திங்கள்வந் தடைந்த மாதம்
உத்தமச் சுத்த பக்கம் உறுதிதி ஒருபான்மூன்றிற்
சத்திர பூசை செய்து சங்குடன் முரசம் ஆர்ப்ப
எத்திசை யோடும் ஏங்க ஈண்டிய வீரர் ஆர்த்தார். 525

நாகந் தேர்ப் பரியா ளோதை நதிபதி யொலிய டக்க
ஏகமாய்ப் பரவி எங்கும் ஈண்டிய படைவெவ் வேறு
பாகமாய்ப் பிரித்த டர்ந்து பார்ப்பவர் நடுங்க நானா
யூகமாய்த் தொகுத்துச் சுத்த யோதநர் முனைந்து நின்றார். 526

சேனையி னோடு சேனை தேர்களி னோடு தேர்கள்
யானையி னோடு யானை அயத்தினோ டயம தாகத்
தானையின் தலைவ ரேவத் தனித்தனி அமர்தொ டங்கச்
சோனைபோற் கணைகள் தூவிச் சூரர்கள் ஆர்த்தார் அன்றே 527

போர் செயும் படையின் நாப்பண் பொலிவுறுங் கடவுள் தன்பால்
ஏர்விசு வக்கு சேனன் இனமணித் தேரில் ஏறிச்
சீருற வந்து நின்று சிறியதந் தையினை நோக்கிக்
கார்முகம் வளைத்தீ ரைந்து கணைதொடுத் தெய்தான் மாதோ.

விட்டஅக் கணைக ளின்பின் விரைவொடு பாதித் திங்கள்
திட்டமா மத்தி ரத்தைச் செறிவுறத் தாக்க நோக்கி
மட்டிலா அரசன் தம்பி வாளியின் வன்மை மாற்றி
அட்டகா சத்தி னோடும் அத்திர யுத்தஞ் செய்தான். 529

525. திதி ஒருபான் ஒன்று - திரியோதசி. சத்திர பூசை - படைக்கலங்களுக்குச் செய்யும் பூசை.

526. நாகம் தேர்ப்பரியாள் - யானை தேர் குதிரை காலாள் ஆகிய நால்வகைப்படை, ஓசை படைகளின் ஆரவாரம். நதிபதி ஒலி - சமுத்திர ஒலி. வியூகம் - படையமைப்பு. யோதனர் - யுத்தம் செய்வோர்.

527. அயம் - குதிரை. சோனை - விடாத கடுமழை.

528. கார்முகம் - வில்.

529. பாதித்திங்கள் சத்திரம் - அர்த்த சந்திர அஸ்திரம், வாளி - அம்பு.

தொண்டமான் புதல்வ னான தோன்றலாஞ் சீநி வாசன்
அண்டர்நா யகன்தன் மீதை யாயிரங் கணைகள் ஏவக்
கண்டவர் நடுங்கி யேங்கக் ககனமீ தவற்றை யெல்லாந்
துண்டமா யுதிரச் செய்தான் பத்தம்பு தொடுத்து மாதோ. 530

வாசிகள் தமக்கு நான்கும் வலவன்தன் மிடற்றுக் கொன்றும்
ஏகிலாக் கவிகைக் கொன்றும் எழின்மிகு தேருக் கைந்தும்
தேசுறு கணைகள் தூவிச் சிதைத்துடன் எந்தை யார்ப்ப
மாசிலாத் தொண்ட மான்தன் மைந்தன் பார் மீதிற் பாய்ந்தான்.

வேங்கடேசன் மயங்கி வீழ்தல்

தரையிடைக் குதித்த காளை சக்கரந் தன்னை ஏவத்
திரைநிகர் சேனை தன்னின் முக்கூறு சிதையச் செய்து
குரையுடன் கொடியைத் தள்ளிக் குறுகி மார் பிடையிற் றாக்க
வரையெனத் திரள்தோள் எந்தை மயங்கி மண் மீது வீழ்ந்தான்.

புரிசைமேல் நின்ற தேவி போர்க்களந் தன்னில் வீழ்ந்த
குரிசிலை நோக்கி யுற்ற குருமுனி தன்னை நோக்கிப்
பரிசனத் தோடு பாரிற் படுத்தவச் சுதனை மீட்க
வரிசையார் உபாய மொன்று வகுத்தருள் என்று கேட்டாள். 533

அகத்தியன் உரை

அடுகளந் தனில டைந்த வபயர்கள் உயிருக் கஞ்சி
முடுகிய சமரிற் சற்று முகந்தனைத் திருப்ப மாட்டார்
கடுகென வேகித் தங்கள் கணவனைக் காத லோடும்
படுகளத் திருந்து மீட்டல் பத்தினி மார்கள் தன்மை. 534

530. சீநிவாசன் - மன்னன் தம்பி தொண்டைமானின் புதல்வன். ககனம் - ஆகாயம்.

531. அவனுடைய போர்த் திறம், வாசி - குதிரை. வலவன்- தேர்ப்பாகன். கவிகை - குடை.

532. காளை - சீநிவாசன். எந்தை - வேங்கடேசன்.

533. புரிசை - மதில். குரிசில் - வேங்கடேசன். குறுமுனி - அகத்தியன். அச்சுதன் - வேங்கடேசன்.

534 அபயர்கள் - வீரர். சமர் - போர்.

சீரிலாப் போரி னிற்போர் செவ்விய பிதா சுதன்தான்
நேரிலா அரசுக்காக நீங்கிடாப் பகைமை யுற்றார்
ஏரிலா விருவர் தம்மை இணக்குதல் தருமம் என்றவ்
வாரிநீர் முழுது முண்ட வயிற்றினோன் உரைத்தா னன்றே. 535

தேவி செயல்

தண்டிகை மீதிலேறிச் சமர்க்களத் திடையி லெய்திக்
கண்டமாய்ப் புவியில் வீழ்ந்த கருட கேதனத்தின் பாங்கர்
மண்டியே கிடக்கா நின்ற மாதவன் தன்னை நோக்கி
அண்டையிற் சென்று தேவி அயர்வினை நீக்கி னாளால். 536

எழுந்துதன் பாங்க ருற்ற இல்லவள் முகத்தை நோக்கி
"அழுந்தலாம் போரில் நண்ணில் அரிவையர்க் கழகோ" என்று
கொழுந்துறும் வடவை யேய்ப்பக் கோபம தடைந்த போழ்து
தொழுந்தகை எந்தை முன்னர்த் தோன்றினன் கும்ப யோனி. 537

ஈண்டிய முனிவன் தன்னை எம்பிரான் நோக்கி "ஐய,
தாண்டிய சமரி னிற்குந் தனையனுந் தொண்ட மானுந்
மாண்டிட நூறி யப்பால் மைத்துனன் ஈன்றோன் நாட்டை
ஆண்டிடச் செய்வேன்" என்ன அன்னைவந் தடியில் வீழ்ந்தாள்.

"பத்தருக் கருள்வான் இந்தப் பாரிடை அவத ரித்த
அத்த, நின் பெருமை தன்னை அறிகிலாப் பாலன் மீது
சித்தம்வைத் தாள்வாய்"என்று செப்பிய காலை தன்னில்
உத்தம முனிவ னுள்ளம் உவப்புடன் கூற லுற்றான். 539

535. பிதா சுதன் - சிற்றப்பனும் மகனும். ஏர்இலா - இணையில்லாத. வாரி - கடல். வயிற்றினோன் - திருமால்.

536. கருடகேதனம் - கருடக் கொடி. பாங்கர் - அதையுடைய தேரின் அருகு.

537. வடவை - வடவா முகாக்கினி. கும்பயோனி - அகத்தியன்.

538. நூறி - அழித்து. மைத்துனன் - அலர்மேல் மங்கையின் சகோதரன்.

539. அருள்வான் - அருளும் பொருட்டு. அத்த - விளி.

அகத்தியன் உரை

''அண்டையில் விளங்குகின்ற அரசன்தன் புதல்வ னோடுந்
தொண்டமா னென்போன் தன்னைத் துரிதமாய் வரவ ழைத்துச்
சண்டையி னின்று நீங்கிச் சந்திசெய் வித்துப் பின்னர்ப்
பண்டைய அரசி ரண்டு பாகமாய்ப் பிரித்தீ'' என்றான். 540

அந்தமா முனிவன் சொல்லில் அன்புடன் மனமி ரங்கி
எந்தையவ் விருவர் தம்மை இன்பமாய் வரவ ழைத்துச்
சொந்தமாம் அரசி ரண்டு தொகையுறப் பிரித்து ''நீவிர்
சந்ததம் வாழ்மின்'' என்னச் 'சம்மதம்'' என்றார் அன்னார். 541

இருவருக்கும் பங்கிடுதல்

நாடொடு நகரஞ் சொன்ன நற்பொருள் கலன்க ளாடை
காடுமா மலைகள் துய்ய கபிலையி னீட்டஞ் சேனை
ஈடுற இரண்டு கூறாய்ப் பகுத்தவர்க் கீந்த போழ்து
சேருடன் திகழு கின்ற தேவிக்கு மூவூ ரீந்தார். 542

ஆரணம் புகழும் எந்தை அன்புடன் தொண்ட மானை
ஏரண ஆச னத்தில் இருந்திடச் செய்து பின்னர்
நாரண புரத்தி லோங்கும் நகைமணிப் பீட மீது
காரணன் மைந்தன் தன்னைக் களிப்புடன் அமர்வித் தானால். 543

காதலி யோடும் எங்கோன் களிப்புடன் அசன முண்டு
மாதவப் பெருமை யுற்ற மைத்துனன் உபச ரிக்க
ஏதமில் கலுழன் மீதில் இல்லவ ளோடெ ழுந்து
மோதமாய் அகத்தியன்தன் முளரியை யடைந்தான் மாதோ. 544

பன்னக சயனன் கஞ்சப் பாவையோ டினிமை யாகத்
துன்னியாண் டிருந்தான் என்று சுகமுடைச் சனக மன்னன்
சந்நிதி தனிலே துய்ய சதானந்தன் அறைந்தான் என்ன
இன்னல்தீர் சூதன் சௌன காதியோர்க் கிசைத்தான் மாதோ. 545

540. அகத்தியன் கூற்று சந்தி செய்வித்து - இணக்குவித்து, பிரித்து ஈவாயாக என்றான்.

542. சொன்ன - சொர்ண (பொன்). கபிலை - பசு.

543. காரணன் மைந்தன் - ஆகாயமன்னனுடைய புதல்வன். நகை - ஒளி மிக்க.

544. முளரி - ஆசிரமம்.

545. சௌனகாதியோர் - நைமிசாரணியத்தில் சூதமுனிவரிடம் புராணங் கேட்ட சௌனகர் முதலான முனிவர்.

## கதைச் சுருக்கம்

ஆகாய மன்னன் மரணத்தறுவாயில் இருக்கிறான் என்று செய்திவர, தேவியும் வேங்கடேசனும் நாரணபுரம் சென்றார்கள்· அரசன் மரணமடைய தரணிதேவியும் உயிரைவிட்டாள். அரசுக்காக பின்னர் அரசன் தம்பியும் புதல்வனும் போர் தொடுக்க வேங்கடேசன் புதல்வனுக்குத் துணையாகச் செல்கிறான். போரில் வேங்கடேசன் மயங்கிவிழ அகத்தியன் உரையின்படி தேவி சென்று வேங்கடேசன் மூலம் இருவருக்கும் சமாதானம் செய்து நாட்டைப் பிரித்துக் கொடுக்கச் செய்கிறாள்.

## 19. விழா இயற்று படலம்

சத்துவ குணத்தோ டுற்ற சதானந்த முனியை நோக்கி
உத்தமச் சனக வேந்தன் உவப்புடன் வணங்கி ஏத்திப்
''பத்தருக் கருள வந்த பதுமை தன் நாதன் செய்த
வித்தக முழுதுஞ் சொல்க'' எனமுனி விளம்ப லுற்றான். 546

சந்த விருத்தம்

தொண்டமான் வருகை

வண்மை மேவு தொண்ட மானோர் நாளி லெந்தை வார்கழற்
குண்மை மேவும் அன்பி னோடு வந்து வந்தி றைஞ்சலும்
தண்மை மேவு துளப மாலை குழையு மாறு தழுவுறாக்
கண்மை மேவும் அரச போது கருமம் யாது கரைகெனா. 547

பதுமை நாதன் வினவு போழ்து பரிவு மீறு குணமனன்
கதுமை யாய்வ ணங்கி, ''ஐய கனலி னீரி னடுவதாய்
முதுமையாய்த் தவமியற்று முனிவர் காண முனமுறாய்
புதுமை யாய முறவு மேய புனித வேறு புகலெனோ. 548

அவன் துதித்தல்

''சோதி யாய பிரமம் நீ சுடர்ப ரப்பும் ஒளியும்நீ
ஆதி மத்தி அந்தம் நீ அவனி வானம் யாவும்நீ
ஓதி மத்து வேதன்நீ உமைக்கு மோக நாதன்நீ
பூதி யாமு ருக்கொ டென்னை யாள வந்த பொருளும்நீ. 549

546. பதுமைதன் நாதன் - வேங்கடேசன். வித்தகம் - அற்புதங்கள்.

547. வண்மை - வள்ளன்மை. எந்தை - வேங்கடேசன் தழுவுறா - தழுவி. கண் மை - கண்ணுக்கிடும் மை. போது கருமம் - வந்த காரியம் கரைக - சொல்லுக.

548 கதுமையாய் - கதும் என விரைவாக. கனலின் - அக்கினியின் நடுவிருந்து. முனம் உறாய் - நீ வருபவன் அல்லன். புகல் என்னோ - வேறு புகல்வது என்ன.

549 நீயே யாவும் என்று அரசன் வேங்கடேசனை நோக்கிக் கூறுகிறான். அவனி - பூமி. ஓதிமம் - அன்னம். வேதன் - பிரமன். பூதியாம் - செல்வம் எனத்தக்க.

''உள்ளி லங்கு கரணம்நீ உறைந்த தீய புலனும்நீ
கள்ள மேவு மனனும்நீ கதித்த சீவ னாதிநீ
தெள்ளி தாய அறிவுநீ திகழ்ந்த சாட்சி தானும் நீ
எள்ளில் எண்ணெய் போல வாக எங்கு மாய எந்தையே. 550

''முன்னர் வேதி யோரை நின்முகத் திருந்து தந்தனை
மன்னவர் தம்மை வெற்றி மேவு வார்புயத் தளித்தனை
பின்னரிப்பர் தங்களைப் பெருந்து டைக்க ணீந்தனை
பன்னு சூத்தி ரக்குலம் பதக்கணே படைத்தனை. 551

''அண்ட கோடி யாவு முன்ன கட்டிடை அமர்ந்துறப்
பிண்டம் யாவு ளுந்நி றைந்து சாட்சி யாய்ப்பி றங்குவாய்
விண்ட சோதி யேஉன் பாதமேல் விருப்ப மலதுவே
றெண்த ராது புரிதி'' என்றி றைஞ்சி வீழ்ந்து தொழுதனன். 552

வேங்கடேசன் இரங்கல்

''மறையி னீதி வழியதாய் வழுத்து மன்னர் மன்னகேள்
குறைவினின் றுதிப்பினைப் படிப்பர் கேட்பர் கோதிலா
நிறைவின் வாழ்வு பெறுவர் என்றன் நேர்மை மாதை யீன்றநல்
இறைவ னாவி நீத்த பின்ன ரின்பி ழந்தன்'' என்றனன். 553

மன்னன் கூற்று

''அழலின் வெம்மை யாக மாந்தர் அகம் வெதுப்பும், ஆற்றல்கூர்
பழவினைப் பிணிப்ப றுத்து ளோர்கள் யாவர், பார்மிசைக்
கழல்கொடேதல் அடியர் தீமை களையு மாதிக் கடவுள்நீ
குழவி போல் இரங்கல் என்ன கொள்கை'' என்று கூறினான். 554

550. உள்ளிலங்கு கரணம் - அந்தக்கரணம் (அகக்கருவி). புலன் - இந்திரியங்கள்.

551. நாலு வருணங்களையும் நீ உன்னிடத்திருந்து உதிப்பித் தனை என்கிறான். வேதியோர் - அந்தணர். இப்பர் - வைசியர். பதக்கணே - திருவடியிலிருந்து.

552. அகட்டிடை - வயிற்றில். பிண்டம் - பூவுலகு. வேறு எண் தராது - வேறு நான் எண்ணாதபடி. புரிதி - செய்வாயாக.

553. வேங்கடேசன் உரை. வழுத்தும்-துதிக்கின்ற. நின்துதிப் பினை - நின் துதியைப் பின்னை.

554. வினை, அழலின் வெம்மைபோல, அகம் வெதுப்பும், கடவுளாகிய நீ இவ்வாறு இரங்கல் ஏன் என்று அரசன் வேங்கடேச னுக்குக் கூறினான்,

''பெற்ற பெண் கொடுத்து நின்முன் அன்பி னோடு பேணினான்
மற்ற மங்கை யோடு வாழ மனையி லேனென் எளிமை யான்
முற்ற வின்னல் தீர்ப்பரித் தரைக்கண் யாவர், முறைமையோடு
உற்ற நின்னை யன்றி என்றன் உள்ளம் ஓர்வ தில்லையே.'' 555

''இச்சிரத்தை எந்தை கொள்ள யாதுநோன் பிழைத் தேனோ
மெச்சுறப் படைத்த ளிப்பல்''எனவிளம்பு வேலைவாய்
உச்சிதக் களிப்பினோ டுறைந்த தொண்ட மானொடும்
அச்சு தப்பி ரானெம் அன்னை யாளொ டாண்டெ ழுந்தனன். 556

அறுசீர் விருத்தம்

வேங்கடேசன் மன்னனைத் திருப்பணி செய்யக் கூறுதல்

நறுமையா முகுர்த்த நாளை நாடிநா யகனன் புற்றுப்
பொறுமை யோடி ருக்குஞ் சாமி புட்கர மதற்குத் தென்பால்
வறுமையை அகற்றுந் துய்ய மந்தர மதனைக் காட்டிச்
சிறுமையைக் களையு மெங்கள் திருவுறை மார்பன் கூறும், 557

''இவ்விரு சிகரி மற்ற எழிற் பிராகார மூன்றும்
திவ்விய வாயி லேழுந் திரள்கொடித் தம்ப மேலும்
எவ்வமில்தலங்கள் தீர்த்தம் யாவையும் படைத்தாய், முன்னர்
ஒவ்விய கருங்கல் லாலீண் டுயர்திருப் பணிசெய்'' என்றான். 558

555. வேங்கடேசனுடைய மறுமொழி. வாழ வீடில்லாத என் எளிமையை நீ தீர்க்கிறாய் என்று வேங்கடேசன் கூறுதல். ஓர்வது - நினைப்பது.

556. மன்னன் கூற்று, இச்சிரத்தை - இவ்வன்பு. வேலை வாய் - நேரத்தில். உச்சித - மேலான.

557. நறுமையாம் - நன்மையான. மந்தரம் - மலை. திருவுறை மார்பன் - இலக்குமி உறையும் மார்பனான திருமால்.

558. இவ்விதமாக ''இங்குநீ கோபுரம், பிராகாரம், வாயில், கொடித்தம்பம், தீர்த்தம், யாவையும் கல்திருப்பணியாகச் செய்வாயாக'' என்று தொண்டைமானுக்குக் கட்டளையிடுகிறான். சிகரி- கோபுரம்.

**மன்னன் வினாதல்**

மன்னவன் அதனைக் கேட்டு மனமிக வியப்ப டைந்து,
''நன்னயச் சிகரம் தீர்த்தம் நவையிலா தமைக்க, ஐய
முன்னைய சனனத்து யான்யார், மொழிந்திடு நாமம் யாது,
கன்னல் வில்லோனை யீன்ற கடவுள்நீ கழறுக'' என்றான். 559

**முற்பிறப்பு வரலாறு—விகசை முனிவன்**

''எண்ணுறு துவாப ரத்தில் எதுபதி யாக வந்து
நண்ணிய என்றன் காதை நன்குறு விவர மாக
வண்ணமாந் தவத்தில் தங்கி வனத்திடை யிருந்து கேட்டுக்
கண்ணினாற் காண வேவை கானச முனிநி னைந்து.'' 560

''தொந்தமாய் அரசி யற்றுஞ் சோழமண் டலத்தில் எய்திக்
கந்தமார் சோலை சூழ்ந்த கானிடைப் புலன டக்கிச்
சந்ததந் தவம்பு ரிந்த சமயத்தி லோர்நாள் யானே
நந்தலில் கண்ண னாகி நண்ணினேன் அவள்முன் னாக. 561

''அன்னமா காரம் நீக்கி அருந்தவ மதனில் உற்றோன்
முன்னர்யான் தோன்றவேஅம் முனிமிக ஆவலோடென்
சன்னிதா னத்தி லுற்றுச் சரண்மிசை வீழ்ந்து வாழ்த்தி
வன்னமாம் பூசை செய்ய மனத்திடைக் களித்த காலை. 562

**அரங்கதாசன்**

''வேங்கட மலையின் மேவி விளங்கிய வன்மீ கத்துள்
தேங்கிய சீநி வாசன் திருவடி பூசித் தேத்த
நீங்குதி அரங்க தாசன் நெறியிடை நினைய டைந்து
பாங்குறு நின்ப ணிக்குப் பயமிக வுடையோ னாவான். 563

559. அரசன் திருமாலைக் கேட்கிறான். சிகரம் - கோபுரம். நவையிலாது - குற்றமற்ற. ஐய - விளி. சனனத்து - பிறப்பில். கன்னல் வில்லோன் - கரும்பு வில்லுடைய மன்மதன்; திருமாலின் புதல்வன். கழறுக - சொல்லுக.

560. துவாபரம் - துவாபரயுகம். எதுபதி - யதுகுலத் தரசன். யயாதியின் புதல்வனான யது; இவன் வழி வந்தவர் யாதவர். வைகானசமுனி - வைணவ சமயத்தின் முதற் பிரிவாகிய வைகானசப் பிரிவை நிலைநிறுத்திய விகனச முனிவன்.

561. கந்தமார் - மணம் பொருந்திய. கான் - காடு. நந்த வில் - குறைவில்லாத.

562. சரண் - பாதம். வன்னமாம் - அழகுடைய.

563. நீங்குதி - செல்வாயாக. நெறியிடை - வழியில். பயம்- பயன், உதவி. இது திருமால் முனிவனுக்குக் கூறியது.

'என்ற என் மாற்றங் கேட்ட இருடிதன் மனங்க ளித்துக்
குன்றெனப் புயங்க ளோங்க மெய்யிடைப் புளகங் கொள்ளத்
துன்றவென் தாளில் வீழ்ந்து துதித்ததி ஆவலோடு
நன்றென விடைகைக் கொண்டு நடந்தனன் முனிவன் மாதோ.

''வேகமாய் நடக்கும் போழ்து விரிதரு நெறியி லொன்றிச்
சோகமி லாமல் நிற்குஞ் சூத்திரன் தன்னைக் கண்டு
தாகமாய் உனது நாமஞ் சாற்றுதி என்ன, அன்னான்
'ஏகமாம் அரங்க தாசன் என்பரிப் புவியோர்' என்றான். 565

''அகமகிழ் வோடு ரைத்த அவன்தனை அழைத்துக் கொண்டு
மதிதவழ் சிகர மேய வடமலை அடைந்து நீண்ட
துதி பெறும் புற்றுட் சோதி சொரூபமா யமர்ந் திலங்கு
நதிதனை ஈன்ற பாத நாயகன் மருங்கு சேர்ந்தான் 664

''சனிவுடன் அரங்க தாசன் கடிமலர் மாலை ஈய
முனிவன்அங் கனேக காலம் முறைமையிற் பணிசெய் காலைப்
பனிமொழிக் கின்ன ரப்பெண் பாங்கிய ரோடு கூடித்
தனிமையிற் கிரீடை செய்யச் சாமிபுட் கரணி சார்ந்து. 567

''நீரிடை யாடும் போழ்து நேரிழை உருவம் நோக்கிப்
பேரியல் அரங்க தாசன் பிரமையின் மூழ்க, ஆங்கச்
சீரறும் அசுத்த மான தீங்கினுக் குருகி முன்னர்
ஏருறத் தொடுத்த மாலை எறிந்துடன் நாரம் ஆடி. 568

''மலர்பினர் எடுத்துச் செய்ய மாலையாய்த் தொடுத்துள் அஞ்சிப்
பலமிகு ரங்க தாசன் பதறியே அடைந்த காலை,
நலமிகு முனிவன் கண்டு, 'நாயகன் பணிசெய் காலம்
விலகிய பின்வந் தாய்என் முன்னின்று விலக' என்றான். 569

564. மாற்றம் - உரை.

565. நெறியில் - வழியில். ஒன்றி - பொருந்தி. சூத்திரன் - தாழ்ந்த குலத்தினனான அரங்கதாசன். தாகமாய்-அன்போடு.

566. வடமலை - வேங்கடமலை. நதி - கங்கை; கங்கை திரு மாலின் பாதத்தில் தோன்றியது என்பது புராணக்கதை.

567. மாலை ஈய - மலரெடுத்துத் தொடுத்து மாலையாய்த் தர. பனி - குளிர்ந்த. கின்னரப்பெண்-தேவலோகமாது.

568. பிரமை - ஆசை. தீங்கு - இவ்வாசை. நாரம்-நீரில். முன் தொடுத்த மாலையை எறிந்தான், பின் நீராடி.

569. பினர் - பின்னர். விலகியபின் - கடந்தபிறகு.

''ஊடிய முனிவன் சொல்லால் உயிரிழந்தவர் நேராக
வாடிய முகத்தான் தன்மேல் மனத்திடைக் கிருபை கூர்ந்து
சூடிய நந்து நேமி துலங்குற அவன்முன் தோன்றி,
ஈடிலாய் அஞ்சாய்' என்ன, இணையடி பணிந்தான் அன்னான்.

''சாமிபுட் கரணி தன்னில் சடந்தனை நீக்கி நீதி
நேமியார் சுதர்ம னென்று நேரிலான் புதல்வ னாகித்
தூமனப் பத்தி செய்து துணையில்வீ டடைவாய்' என்னப்
பூமியில் உதித்தாய், அன்னான் நீ, இதுன் பூர்வ மாமால். 571

மகனுக்குத் திருப்பணி செய்யக் கட்டளை

''இத்தல மெல்லாம் முன்நீ இயற்றியது'' என்னக் கேட்டுப்
பத்தியோ டண்ணல் தாளில் பணிந்துதான் சுதன்பால் எய்தி
''உத்தம மலைமேல் ஏக வோசனைப் படிய மைத்து
மத்திய லோங்கும் கூபம் மண்டபம் இயற்றுக'' என்றான். 572

அவன் திருப்பணிகள்

கட்டிட மெல்லாம் தீர்த்துக் காதலன் வந்து கூற
மட்டிலாக் களிப்போ டேந்தல் மாதவன் சமூகந் தன்னில்
கிட்டிநின் றேத்தி ''ஐய, கிளர்மணிச் சிகரி யோடு
ஒட்டிய படிது வங்க ஒங்கலில் அமைத்தேன் மன்னோ. 573

''அந்த நல்லிடத்தில் நண்ணி அன்பொடு வசிப்பாய்'' என்னப்
பந்தமில் கடவு ளுள்ளப் பரிவுட னெழுந்து வானாள்
இந்திரன் முதலாந் தேவர் இருடிகள் தொகுதி சூழக்
கந்தலில் பத்தி யார்வை கானச னோடு மாதோ. 574

570. ஊடிய - கோபித்த. நேராக - ஒப்ப. நந்து நேமி-சங்கமும் சக்கரமும். தோன்றி - (திருமால்) தோன்றி. அன்னான் - அரங்கதாசன்.

571. சடம் - இவ்வுடல். நேமியான் - சக்கரம் செலுத்துகின்றவன். துணையில் வீடு-இணையில்லாத முத்திப்பேறு. என்ன-என்று நான் சொல்ல. நீ உதித்தாய், அவ்வரங்கதாசனே நீ.

560 - 571 முடிய வேங்கடேசன் கூற்று.

572. சுதன் - மகன். ஓசனை - நாற்காத தூரம். கூபம் - கிணறு. இயற்றுக - செய்வாயாக என்று மகனுக்கு அரசன் சொன்னான்.

573. காதலன் - மகன். ஏந்தல் - அரசன். கிட்டி - வந்து. ஓங்கலில் - மலை மீது.

574. வசிப்பாய் - நீ கோயில் கொள்ளுவாயாக. வான்ஆள் - தேவலோகத்தை ஆளுகின்ற. கந்தல் இல் - ஒழுக்கக் குறைவில்லாத. பத்தியார் - பத்தி பொருந்திய. வைகானசன் - தவம் புரிந்து கொண்டிருந்த முனிவன்.

கீத வேதங்கள் நூலோர் கிளர்தரும் எழிலில் பாட
மோதவாய்க் கருவி யாவும் முழங்குமுன் நடந்து துய்யோன்
ஏதமி லால யத்தில் எழுந்தரு ளியவக் காலை
நாதன்மேன் மலர்கள் தூவி நடித்தனர் அமரர் மாதோ. 575

மகிழ்வுற அடைந்தோர் யார்க்கும் மனத்திடைப் பேரானந்தம்
நிகழ்தலால் தூவானந்த நிலையமென் றெவருங் கூறப்
புகழ்பெறும் அலர்மேல் தன்னைப் பொருந்துற நிறத்துள் வைத்துத்
திகழ்மண வணியி லங்கச் சிந்தையிற் களித்து மாதோ. 576

ஆழிநந் தொளிர்வ தல்லால் அருங்கர மிடையில் வைத்து
வாழிய புவியி னோர்க்கும் மருவுபொன் னுலகத் தோர்க்கும்
ஊழினை விலக்குந் தன்தாள் ஒங்கிய கதியீ தென்று
பாழியார் வலக்க ரத்தாற் பண்புறக் காட்டி மன்னோ. 577

குணதிசை முகமாய் நின்று குலவுபல் லுயிர் களாய
கணமெலாங் காக்க எண்ணிக் காமமாய் விளங்கும் ஐயன்
மணமிகு பாதந் தன்னில் வணங்கியே கமல யோனி
அணவிமுன் விளக்கி ரண்டை ஆவலாய் அமைத்துச் சொல்லும்.

"கலியுக முள்ள மட்டுங் காணவிவ் வொளிய றாது
வலியுடன் விளங்க வேண்டும் வளரவ தார மூய்வில்
மெலிவற வொளிரும் மேலாம் விமானமும் விளக்கும், ஐய,
நலிவற வரமா" என்ன நாதனும் ஈந்து கூறும். 579

575. மோத - மகிழ்ச்சியுடைய. துய்யோன் - திருமால்.

576. தூ - தூய்மை பொருந்திய. ஆனந்த நிலையம் என்பது இன்றும் விமானத்துக்கு வழங்கும் பெயர். அலர் மேல் மங்கை - இங்கு அவதரித்துள்ள மங்கையின் பெயர். நிறம் - மார்பு; செற்றார் நிறம் பாய்ந்த கவிமா என்பது கலித்தொகை 57.

577. ஆழி நந்து - சக்கரமும் - சங்கமும். புவி - பூவுலகு. பொன்னுலகம் - தேவலோகம். ஊழினை விலக்கும் - விதியையும் வெல்ல வல்ல. பாழி - அனைவருக்கும் புகலிடம். காட்டி - அபய முத்திரை காட்டி.

578. குணதிசை - கிழக்கு. காமம் - விருப்பம். கமலயோனி- உந்தித் தாமரையில் பிறந்த பிரமன். அணவி - அணுகி. இரண்டு விளக்குக்களை அமைத்தான்.

579. மூய்வு - முடிவு. விமானமும் விளக்கும் ஒளிரும் வரம் ஈவாயாக.

திருவிழாச் செயல்

''ஐயஎன் திருவி ழாவை அழகுறச் செய்க'' என்னத்
துய்யபா ரதியின் நாதன் தொண்டமான் தனைய ழைத்துச்
''செய்யதேர் வாக னங்கள் சிறப்புற அமைத்தி'' என்ன
வையகத் தோர்வி யக்க அவனவை வனப்பிற் செய்தான். 580

தேர்முதல் வாக னங்கள் செய்துவந் தெய்த லோடும்
ஏர்மிகும் உற்ச வத்தை இயற்றுதற் காக ''மன்ன
நேரிலாச் சகல தேய நிருபரை அழைத்தி'' என்னச்
சோர்விலாத் தொண்ட மானுந் தூதரை விடுத்தா னன்றே. 581

தேசுறு தூத ரோடித் தேசங்கள் தோறும் எய்தி
ஏசிலா மன்னர் தம்பால் இறைஞ்சியே கூற லோடும்
தூசிதேர் கரிமீ தேறித் தோன்றுறச் சிலபேர் செல்ல
மாசிலாச் சிலது மன்னர் மலரடி வருந்தச் செல்வார். 582

கடையர்தீ யவன ரல்லாக் காசினி யாளு மன்னர்
படையினோ டேகும் எல்லை பரிவுடன் உணவு நீத்தந்
தடையற அசனம் உண்டுந் தவீர்த்தும்பா ரணையாய்ச் செய்தும்
அடை பசும் பாலை யுண்டும் அன்புடன் நடக்க லுற்றார். 583

பனிமொழிக் கமலைநாதன் பாதபத் தியையுட் கொண்டு
கனிவுள மனத்தோ டெந்தை காட்சி கூர் விழவு காண்பான்
முனிவர்கள் மாதர் மைந்தர் மோகமா யாடிப் பாடிப்
புனிதவேங் கடப்பொ ருப்பிற் பொள்ளென அடைந்தா ரன்றே.

580. பாரதி - சரசுவதி. வேங்கடேசன் விழாச் செய்யுமாறு பிரமனுக்குக் கூற, அவன் தொண்டமானுக்குக் கூற, அவன் தேர் முதலியன செய்தான்.

581. திருவிழாச் செய்ய சகல தேய மன்னரை அழைக்க மன்னன் தூதரை விடுத்தான்.

582. தூசி - குதிரை. கரி - யானை. மலரடி வருந்த - நடந்து.

583. நடந்தவர்கள் உணவு உண்டும், உணவு நீத்தும், பாலை யுண்டும் வருகிறார்கள். அசனம் - சோறு.

584. எல்லாரும் வருதல், பாதபத்தி - திருவடிக்கன்பு. பொருப்பு - மலை.

—10—

கன்னியா மாதந் தன்னிற் கஞுறிய சுத்த பக்கம்
உன்னதத் துதிகை தன்னில் ஓங்கிய துவச மேற்றி
மன்னிய முளையை நாட்டி வாகுவை கான சப்பேர்த்
துன்னிய முனிவன் பூசை தொடங்கிய காலை மாதோ. 585

திசைமுகன் அன்பி னோடுந் தேவனை வாழ்த்தி ஏத்தி
நசையுடன் ''சிவிகை மீதில் நண்ணுதி'' என்ற காலை,
''இசைமிகுஞ் சுருதி கற்றும் இயற்கையின் மதியனா கிப்
பசைமிகச் சொன்ன துன்றன் பாலிய பாவம்'' என்றான். 589

மாசிலான் மொழியக் கேட்டு மனத்திடைக் கலங்கி வாடிப்
பாசமாய் மிகவெ தும்பி அப்பரன் பதமுட் கொள்ளத்
தேசுறு மனத்த னாகிச் ''சிறப்புட னைந்து மூர்த்தி
நேசமாய்ப் படைத்த செய்கை நிகழ்த்துவேன் அரச'' என்றான் 587

ஐந்து சீனிவாசன்

உத்தம விழாவுக் காக உற்சவ சீனி வாசன்,
மத்தரைத் தண்டஞ் செய்ய பருவுக்கிர சீனிவாசன்
பத்தர்கள் துதிக்கு மேலாம் பரியங்கந் தனிலே யென்றும்
சித்தமாய் விளங்கும் போக சீனிவா சனுமா மற்றும். 588

585. கன்னி - புரட்டாசி மாதம். கஞுறிய - சிறப்புடைய. சுத்த பக்கம் - வளர்பிறை. துதிகை - துவிதியை. துவசம்- கொடி. முளையை நாட்டி - பாலிகை தெளித்து.

586. திசைமுகன் - பிரமன். நசை - விருப்பம். சுருதி - வேதம். இயற்கையில் மதியன் - அறிவில்லாதவன். பாலிய பாவம் - இளமைத்தன்மை. பசை - பற்றுதல்.

587. மாசிலான் - வேங்கடேசன். என்றவன் சதானந்த முனி. அரச - சனகனை விளித்தது. ஐந்து மூர்த்தி வடிவங்களை அமைத்த கொள்கை; சீனிவாசனின் ஐந்து பேதங்கள் : அவை யாவன உற்சவ சீனிவாசன், உக்கிர சீனிவாசன், போக சீனி வாசன், கணித சீனிவாசன், உபதேச சீனிவாசன், இவற்றை அடுத்த இரு பாடல்களில் சொல்லுகிறார்.

588. மத்தர் - உன்மத்தர், அறிவில்லாதவர். பரியங்கம் - (பாம்பணைப்) பள்ளி.

கணக்கர்பால் வேளை கொள்ளுங் கணிதனாஞ் சீனி வாசன்
வணக்கமாந் தொண்டர்க் குற்ற மாறிடாத் துன்பம் நீக்கிக்
குணக்கதி உபதே சிக்குங் குறைவிலா மூல ரோடும்
இணக்கமாம் மூர்த்தி யைந்தும் இழைத்தின்ன வாறு செய்தான்.

பத்து நாள் விழா

முந்திய நாளில் யானம், முயலுறு மறுநாட் சேடன்,
நந்தலின் மூன்றாம் நாளில் நலங்கிளர் அன்னம், அப்பால்
அந்தமாம் நான்காம் நாளில் அநுமந்தன், வைய மிக்க
விந்தையாம் ஐந்து நாளில் விளங்குறுங் கலுழ னாமால். 590

ஆறெனும் நாளில் யானை, அமலமண் டபமாம் ஏழில்,
கோறிய எட்டாம் நாளிற் குரங்கி வாகனமே யாகும்,
மீறிய ஒன்பான் நாளில் விளங்குமா மணித்தேர் மீதில்
ஏறிமா மறுகு நான்கும் இன்பமாயு லாவி மாதோ. 591

தேர்தனை விட்டி ழிந்து செகத்திடை யாவருக்கும்
பேர்மிகு தனிக்கோ னேரிப் பெருகுதீர்த் தமும்ஈந் தப்பால்
ஏர்திகழ் சிரவ ணத்தில் இன்பமாய்ப் பரிமீ தேறிக்
கார்மிகு வண்ணன் வீதி கடந்துதன் விமான முற்றான். 592

வந்தபே ரமரர் மன்னர் மாசிலா முனிவர் யார்க்கும்
நந்தலில் கலனும் ஆடை நல்கவே களிப்பி னோடும்
அந்தமாந் தமது நாட்டுக் கனைவரும் சென்ற பின்னர்
விந்தையாய் வணங்கி வேதன் விளங்கு தன்பதி யடைந்தாள். 593

589. மாறிடாத் துன்பம் - பிறவிப்பிணி.

590. உற்சவ தினங்கள் பத்துக்கும் உரிய வாகனங்களை இரு பாடல்களில் சொல்லுகிறார். யானம் - முதல் நாளில் சிவிகை. கலுழன் - கருடவாகனம். ஐந்து நாளும் முறையே சிவிகை, ஆதி சேடன், அன்னம், அனுமன், கருடன்.

591. குரங்கி - சந்திரன். மறுகு - வீதி. மற்ற நாள்களில் முறையே யானை, கமலமண்டபம், சந்திரன், தேர்.

592. கோனேரி - புட்கரணி. சிரவணம் - திருவோண நட்சத் திரம்.

593. கலன் - அணிகலன். வேதன் - பிரமன். இவ்வாறு விழா முடித்துத் தன் நகர் அடைந்தான்.

அரசனாந் தொண்ட மானும் அண்ணல்தன்விடைகைக் கொண்டே
உரசுடன் நடந்து தன்னா டுற்றுநன் னெறி யினோடும்
சுரசமா முலகை யாளுந் தோன்றலோர் பிலத்தின் மார்க்கஞ்
சரசமா யென்றுஞ் சென்று தற்பரன் பணிசெய் காலை 594

## கதைச் சுருக்கம்

''பதுமையின் தந்தை இறந்தபின் எனக்குத் தங்க மனை யில்லாத வருத்தமே'' என்று வேங்கடேசன் கூற, தொண்டமான் அவன் விருப்பப்படியே வேண்டிய கோயில் தீர்த்தம் எல்லாம் அமைத்தபின் தன் முற்பிறப்பு வரலாறு கேட்கிறான். வேங்க டேசப் பெருமான் கூறுகிறான். ''முன் வைகானச முனிவன் என்னைக் காணவேண்டிக் கடுந்தவம் செய்தான். அவன் முன்னர் நான் தோன்றினேன் அவன் மகிழ்ந்து பூசிக்க எண்ணிய போது, ''நீ வன்மீகத்தின் சீனிவாசனை என் வடிவமாக்கிப் பூசிப்பாயாக. உனக்கு அரங்கதாசன் என்பவன் பணிவிடை செய்வான்'' என்று நான் சொல்ல, அவன் அங்ஙனமே சென்று அரங்கதாசனைக் கண்டு அவனால் பணிவிடை செய்யப் பெற்று முனிவன் பூசனை செய்து வந்தான். ஒருநாள் ஒரு கின்னரப் பெண் சாமி புட்கரணி யில் நீராடிய போது, மலர்மாலை தொடுத்து வந்த அரங்கதாசன் அவளைக் கண்டு மனம் வேறுபட்டு, பின் தேறி மாலையை எறிந்து விட்டு, மீட்டும் நீராடி மலரெடுத்து வேறு மாலை தொடுத்து வந்தான். முனிவன், ''பூசைநேரம் கடந்து விட்டபடியால், நிற்காதே போ" என்று வெருட்டி விட்டபின், வாடிய அரங்தாசன் முன் நான் காட்சி தந்து ''நீ இங்கு உடலைவிட்டு, சுதர்மன் புதல் வனாய்த் தோன்றிப் பத்தி செய்து முத்தி பெறுவாய் என்று தேற்றினேன். இதுவே உன் பூர்வ வரலாறு, இத்தலம் முதலியன யாவும் உன்னால் முற்பிறவியில் இயற்றப்பட்டனவாகும்'' என்றான். கேட்ட தொண்டமான் மகிழ்ந்து தன்மகனைக் கூவி, கூபம், மண்டபம் எல்லாம் செய்க என்றும் அவன் விரைந்து செய்து முடித்தான். இதைத் தொண்டமான் பெருமானிடம் சொல்லி ''நீ இனி அங்கு வந்து வசிப்பாயாக'' என்று வேண்டலும், அவன் இந்திரன் முதலான தேவர், வைகானசமுனி முதலிய இருடிய ரோடு அங்கு வந்து வசிக்கலானான். பிரமன் இரண்டு விளக்குக் களை அங்கு அமைத்து, ''நீ அவதாரங்களின் இறுதியில் இந்த விமானத்திலும் விளக்குக்களிலும் விளங்கும் வரம்தா'' எனக் கேட்டலும் வேங்கடேசன் அவ்வாறே வரம் ஈந்து விழாச் செய்யு மாறு சொல்ல, பிரமன் எல்லாரையும் அழைத்து உற்சவ சீனிவாசன், உக்கிர சீனிவாசன், போக சீனிவாசன், கணித சீனிவாசன், உபதேச சீனிவாசன் என்ற மூர்த்திகள் ஐவரையும் அமைத்து, தேர் விழாவுக்கு முன் ஒன்று முதல் ஒன்பது நாளும் ஒன்பது வாகனங்களையும் அமைத்துப் பெருவிழாச் செய்து பின் விடை கொண்டு தன்னூர் சென்று வந்து பணிசெய்து கொண்டிருந் தான்.

594. உரசு - வேகம்; சுரசம் - சுவையுள்ள.

# 20. கையடைப் படலம்

பாகுலந் தனிலே வேத பாரகன் கூர்ம நாமம்
வாகுடன் இலகுந் துய்ய வசிட்டகோத் திரத்தில் வந்தோன்
ஆகுலத் தோடு தந்தை யங்கத்தைக் கொண்டு கங்கைக்கு
ஏகுவான் நெறியில் தொண்ட மான்தன திசையைக் கேட்டான்.

பத்தினி மைந்தன் தன்னைப் பாங்கரோர் வனத்தில் வைத்துச்
சத்தியந் தவறு தாளுந் தராபதி தன்னைக் காண
நத்தியே ஆவ லோடு நகரத்தி னுட்பு குந்து
சித்திரப் பீட மீது சிறந்துறும் இறைமுன் நின்றான். 599

வேறு அறுசீர் விருத்தம்

உற்ற மாமறை யவன்தனை அரசர்கோ னுவப்புடன்
பணிந்தேத்திக்
''கற்ற மாதவ வேதிய, வந்ததோர் காரணம் அயராமல்
முற்ற வோது'' என விருப்புடன் வினவலும் முகமிக மலர்வெய்திக்
குற்ற மில்வழி தனையனு சரித்துறு கூர்மனும் இவை சொற்றான்.

''தந்தை இன்னுயிர் துறந்தனன் அத்தியைச் சாநவி தனிலே விட்டு
அந்த நன்னதி யாடியான் மீள்வதற் காவலோ டடைகின்றேன்
வந்தஎன் மனையாள் கருப்பத்தொடு மைந்தனை யெடுத் தெய்த
நொந்த னள்மிக நெறியிடை அவள்துயர் நோக்குதற்
காற்றேனால். 598

595. பாகுலம் - கார்த்திகை மாதம். கூர்மன் - அந்தணன் பெயர். அங்கத்தை - அஸ்தியை. இசையை - புகழை.

596. தன் பத்தினியையும் மைந்தனையும் - (இவர்களும் காட்டுக்கு உடன் வருகிறார்கள்). தராபதி - தொண்டமான். நத்தி - விரும்பி. இறை - அரசன். இந்திரப் பீடம் - சிங்காதனம்.

597. குற்றமில் வழிதனை அனுசரித்துறு - நன்னெறியிலே ஒழுகுகின்ற.

598. அத்தி - அஸ்தி, எலும்புகள். சாநவி - கங்கை; ஜன்னு ரிஷியின் செவியிலிருந்து வந்தவள், கூர்மன் மனையாள் கருப்ப முற்றவள், கையிலும் ஒரு குழந்தை.

''மாமன் மாதுலன் பயந்தவன் மனைவிதன் மாதுலன் மனனீதி
நாம நூற்புரோ கிதனிவர் மாதரை நட்பொடு காப்பாற்றற்
கேம மார்தரு தந்தை யென்றருமறை இயம்புதல் சரதமெனச்
சேமமா மரசே நினையல தேவர் தெளிதர உணர்வாரே. 599

''ஆனதால் ஐய,அன்னரும் புதல்வனும் மனைவியும் அருள் கூர்ந்த
மானவேந்த, நின்னடைக் கலமாய்இவண் வைத்தனன் காப்பாற்றி
யானடைந்தபிற் றகுதி''என் றுரைத்தலும் அளவிலா மகிழ்வெய்தி
''ஈனமின் மறையவ, விரைந் தெய்''தென ஈந்தனன் பொருள் சால·

மனைவியோடு தன் மைந்தனை மன்னவன் வசத்தினில் ஒப்பிக்க
இனைதலின் மறையவன் முனர்ஏம நல்எழி லுடைத்தன தில்லாள்
தனையழைத்து ''இவ்வேதியன் வருகா றிவர் தமை மன மகிழ்
நினைவி னோடு காத் தருள்தி''என்றளித்தனன் நிகரிலா
முடிமன்னன். 601

கண்ணி னீர்ததும் புறவழு திரங்கிடு காதலன் முகம் நோக்கி
வண்ண மாமறை யவன் மனையாள்மன மயங்கிமேற் சிறிதாறி
''அண்ணலே.திரி பதகை நீராடி நீயடைகுதி விரைந்து''என்னப்
புண்ணி னூடுமுள் நுழைத்தலிற் றுயரோடு புதல்வன்
வாய்விட்டார்த்தான். 602

பால கன்தனை யெடுத்துமார் புறத்தழீஇப் பரிவொடு துயராற்றிச்
சாலநல்லுரை புகன்றுதன் மனைவி பால்தந் துளமயர் வோடும்
சீலனே குவன்,அடிக்கடி திருமுவன் தேவி தன் வதனத்தின்
கோல நோக்குவன் இன்னவா றுழன்றுளங் கூடிமேல் நடந்தானால்

599 மாதுலன் - தாயுடன் பிறந்தவன. பயந்தவன்-பெற்ற தந்தை. மனைவிதன் மாதுலன் என்க. இவர் மாதரை - இவர்கள் மனைவியரை.

600. அந்தணன் கூற்றை ஏற்று விரைந்து அவர்களைக் கொண்டு இங்கு எய்துக என்றான் அரசன்.

601. இனைதலின் - வருந்துதலின். இல்லாள் - அரசன் தேவி. அவளிடம் அரசன் அந்தணன் மனைவியையும் மைந்தனையும் ஒப்புவித்தான்.

602. திரிபதகை - கங்கை. மனைவி விடைகொடுக்கும் போது மகன் அழுகிறான்.

603. அந்தணன் பிரியாவிடை கொண்டு ஏகுதல். திருமுவன்- திரும்புவன்.

நடந்த வேதியன் நெறியினிற் பன்னியின் நயனங்கள்
தொடர்நோக்கங்
கடந்த காலையிற் கௌவையால் வெதும்பிய கறங்கெனச் சுழல்
நெஞ்சு
தொடர்ந்து சோர்தரக் கண்ணி னீராற்றொடு தேவிதன்
மனைபுக்கு
வடங்கொளும்புய வரசன்மா மனைவி தன் மருங்குற
அடைந்தாளால். 604

நீதிவாழ்வுறு நிலையம தாகிய நெறிவழு வாவேந்தன்
மாதின் பாலுறு கற்பினுக் கணியென வளர்பெருங் குணமார்ந்த
வேதியன் மனையாள்தனைக் காப்புற விரும்பியோர்மனைதன்னிற்
பேதி யாதிரு மூமதி வரைக்குணும் பிரியமாம் பொருள்
சேர்த்தான். 605

அந்த மாமனை யகத்தெழின் மைந்தனோ டரிவையையமர்வித்துப்
பந்த மாய்ப்புத வதுதிற வாதுதாள் வலியுறும் படிபாவி
எந்த வேளையு மாறுருக் காவலர் இயங்குற நியமித்துச்
சந்த மாமதி முகமன் உலகினைத் தாபரித் திடுகாலை. 606

அறுசீர் விருத்தம்

பூதலந் தனிலே நீதி பொருந்துற அரசி யற்றும்
ஏதமில் அரசன் துய்ய இருடியின் தேவி யோடும்
தீதிலா மைந்தன் தன்னைச் சேமத்தில் வைத்து மீண்ட
காதலை மறந்து பின்னர்க் காசினி காக்க லுற்றான். 607

ஆண்டிரண் டொழிந்த பின்னர் அந்தணன் கங்கை நண்ணி
மாண்டதன் தந்தை யங்கம் மறைவழி விடுத்துத் தேர்ந்து
நீண்டகா வடியெ டுத்து நிருபன்முன் நண்ணி, "ஐய
வேண்டினேன் அபிடேகிக்க விரைவுடன் இசைக" என்றான். 608

604. பன்னி - பத்தினி. கௌவை - துன்பம். கறங்கு - பம்பரம்.

605. இருமூமதி - ஆறுமாதம். உணும்-உண்ணுவதற்கேற்ற-

606 அரிவை - அந்தணன் மனைவி. புதவு - கதவு. பாவி. அமைத்து. தாபரித்திடு - பரிபாலிக்கிற. மன் - மன்னன்

607. காசினி - உலகு. அரசன் அந்தணன் மனைவியைச் சேமத்தில் வைத்துப் பின் மறந்துவிட்டான்.

608. அபிடேகிக்க-மனைவியோடு கூடயாகம் செய்ய என்பது பொருள்.

அந்தணன் புகலக் கேட்ட அரசன்தன் உளம்மெ லிந்து
நிந்தையில் கலுழன் முன்னர் நெருங்கிய அரவம் போலும்
நந்தல்செய் யாளி நேரில் நண்ணிய வேழம் போலும்
விந்தையாம் எரியி லுற்ற வெண்ணெயைப் போலு மானான். 609

முகமலர்ச் சியுங்களிப்பும் முற்றுமற் றொழிய வேகண்டு
அகமது மிகமெ லிந்த அந்தணன் அரசை நோக்கி,
''நிகரிலா என்றன் இல்லாள் நிறைகரு வீனும் போழ்து
மிகவெனைக் கருதித் தீய வியாதியுற் றிறந்தாள் கொல்லோ? 610

''புதல்வன் நீராடு தற்குப் போய காற் சோபா னத்திற்
பதம் வழுக் குற்ற முந்திப் பதைத்துடன் இறந்தான் கொல்லோ?
விதமுரைத் தருள்க'' என்று வியர்த்தயர் மறைவ லாளன்
இதமுற உள்ளந் தேறி இறைவன் ஈதெடுத்து ரைத்தான். 611

''போனதோர் புகர்வா ரத்திற் பொற்பில்வாழ் வேங்கடேசன்
நூனமில் அபிடேகத்தை நோக்க வென்குமாரி தன்னோடு
ஈனமிலுனது தேவி ஏழின்மிகு மக்களோடும்
ஊனமிலாது சென்றாள் உறுவளித் தினத்தில்'' என்றான். 612

அந்தணன் அடைந்த துன்பம் அகல்தரத் தேற்றி அப்பால்
நந்தலோ டரசன் துய்ய நந்தனன் தன்னை நோக்கிப்
''பந்தனை தவிர்த்துத் தாளைப் பரிகசித் துயர்ந்தோன் மாது
மைந்தரைக் கொணர்தி''யென்ன விரைவொடு வணங்கிச்
சென்றான். 613

அரசன் தனிஇல்லில் அந்தணன் பத்தினியை விட்டுக் கவனிக்காமையால், அவள் உரிய காலத்தில் ஒரு பெண் மகவைப் பெற்று, தானும், பெண் மகவும் மகனும் ஆகிய மூவரும் இறந்து விட்டார்கள். இதைச் சொல்லும் பகுதி நூலில் விடுபட்டது போலும்.

609. அரவம் - பாம்பு. நந்தல் - துன்பம். வேழம்-யானை. யாளி - சிங்கம், யாளி என்ற ஐதிகப் பிராணியுமாகலாம்.

610-11. அரசனது வாடிய தோற்றத்தைக் கண்டு அந்தணன் தன் மனைவிக்குத் துன்பம் நேர்ந்ததா, மகன் நீராடும் போது படிவழுக்கி விழுந்திறந்தானா என்றெல்லாம் கவலையுற்று வினவுகிறான். சோபனம் - படிகள். பதம் - கால்.

612. புகர்வாரம் - சுக்கிரவாரம், நூனம் - குற்றம். உன் மனைவி என் மகளோடு மலைக்கு அபிடேகம் பார்க்கச் சென்றாள். வருவாள் என்கிறான்.

613. நந்தனன் - தன்மகன். அந்தணன் மனைவி மக்களைக் கொணருமாறு தன் மகனை அனுப்புகிறாள், முன் கூறியவாறு (608) காய்களை இதுகாறும் மறந்த காரணத்தால் போலும்.

சென்றவன் அத்தலத்தில் தெளிவுற நோக்கும் வேலை
கன்றியே கிடக்கா நின்ற களேபரந் தன்னைக் கண்டு
குன்றிய மனத்தனாகிக் குரிசில் முன்னிலையி லெய்தி
''இன்றுநம் மரபுக் கெல்லாம் இறுதி வந்துற்றது'' என்றான். 614

உணவினுக்கான பண்டமுதவி செய் துறுதியாக
அணவுவாய் அசன முண்டென் றந்தணன் தனை அனுப்பி
மணநிறை சேட வெற்பின் மைந்தனோ டேகி எந்தைத்
துணர்நிறை கழலிற் சென்னி சூட்டி மன்னவன் அயர்ந்தான். 615

பாதமேல் விழுந்தரற்றும் பார்த்திபன் தன்னை நோக்கி
நாதனாம் வேங்கடேசன் நண்ணிய அன்பினோடும்
''ஏதம்யா தூரைத்தி'' என்ன இசையொடு மறுமாற்றந்தான்
ஓதநா வறட்சி யாய்மெய் உதறுத லுற்றா னன்றே. 616

மெய்யிடை நடுக்க முற்ற வேந்தன்தன் முகத்தை நோக்கிச்
செய்ய வேங் கடம்வா ழீசன் சிந்தையில் இரக்கங் கொண்டு,
''வையகந் தன்னிற் கேட்டோர் மலைப்புறு பிழைநீ செய்தாய்,
ஐயமேற் பயப்படற்க, அகற்றுவேன் துயரம்'' என்றான். 617

''மகன்தனை யேவி அங்ஙன் மடிந்தவர் அங்கங் கொண்டு
ககந்தனை நேரா யெய்தக் கழறுதி'' என்ற லோடும்
நகந்தனை நிகர்த்த தோளான் அந்தணன் தன்னை நோக்க
அகந்தனிற் களிப்புற் றெண்ணி அதிவிரை வுடன்ந டந்தான். 618

வேகமாய் நடந்து சென்று வேதியன் மனைவி மக்கள்
தேகதா ரகத்தை யெல்லாந் திரட்டியே சிவிகை தன்னில்
ஏகமாய்ப் பொருந்த வேவைத் தெடுத்துடன் சேட வெற்பில்
தாகமா யெய்திக் கண்ணன் தாளிணை முன்னர் வைத்தான். 619

614. களேபரம் - எலும்புக்கூடு. குரிசில் - தந்தையாகிய அரசன்.

615. அனுப்பி - சாப்பிட்டு வருவாயாக என்று அனுப்பி துணர் - மலர்.

616. பார்த்திபன் - அரசன். ஏதம் யாது - துன்பம் என்ன நிகழ்ந்தது.

617. மலைப்புறு பிழை - அடைக்கலம் பெற்றோரைக் காக்க மறந்த பிழை.

618. ககம் நேராக - அம்பு போல. கழறுதி - சொல்வாயாக.

619. தேகதாரகம் - எலும்புகள்,

அத்தியை எடுத்த ஐயன் அங்கவத் திரத்திற் கட்டிச்
சித்தி யோ டிலகும் பாண்டு தீர்த்தத்தின் படிமேல் வைத்துப்
புத்திர னோடுங் கோனைப் பொற்புறு கரை நிறுத்தி
நித்தியன் மிடறு காறும் நீரிடை நின்று மாதோ. 620

அங்கத்தின் மீதி லையன் அங்கையாற் புனல் இரைக்கத்
துங்கமுன் னருவ தாகத் தோன்றுற மறை யோனில்லாள்
நங்கிலாச் சிறுமி மின்னாள் நந்தன னோடெழுப்பி
எங்கணுங் கீர்த்தி யோங்க விறைவசம் ஈந்துசொல்வான். 621

''மன்னநின் பத்தியாலும் மறுவிலா நின்முன் வந்த
நன்னய மான மேலாம் நரபதி யுதவி யாலும்
இன்னலை யகற்ற லானேன் இனிநெறி வழுவிடாது
பின்னமில் உலகங் காத்தி மவுனமேற் பேசோய்'' என்றான். 622

வசையிலாப் பரமன் செய்ய மலரடி தனில்வ ணங்கி
இசை பெறு தொண்டமானும் இறைஞ்சியாங் ககற லோடுந்
திசைமுக னுள்ளங் கூர்ந்து செய்தஅம் மூர்த்த மைந்தின்
நசையுடன் சகல வியாபி நண்ணியாண் டிருந்தான் மாதோ. 623

மறையவன் மனைவியோடு மைந்தரை யழைத்தாங் செய்தி
இறையவன் கூர்மன்தன்பா லீசன தருளால் வந்த
நிறைமதி யுடையோ னில்லாள் நிகரிலாமக் கள்தம்மைக்
குறைவறக் கொடுத்து வந்து குறுகின னவையின் மாதோ. 624

நந்தலின் மாது மக்கள் நண்ணிய காலை தன்னிற்
சிந்தையிற் களி சிறப்பத் தீவிரத் தொடு நடந்து
நிந்தையில் அரங்கன் வாழு நிலையத்துக் கேகஅப்பால்
இந்திரன் முதலாந் தேவர் ஈண்டினர் களிப்பி னோடும். 625

620. அத்தி - அஸ்தி. கோனை - கோனேரி. நித்தியன் - வேங்கடேசப் பெருமான். கழுத்தளவு நீரில் நின்றான்.

621. நங்கிலா - குற்றமில்லாத. சிறுமி - அந்தணன் மனைவி பெற்றெடுத்துச் சுமார் இரண்டு ஆண்டுகள் ஆன பெண் குழந்தை.

622. வேங்கடேசன் கூற்று, இளி - இப்போது தவறு செய்து விட்டமையால்.

623. மூர்த்தம் ஐந்து - பாடல் 578-9 பார்க்க. சகல வியாபி- சகல வியாபியான இறைவன்.

625. நிலையம் - ஆனந்த நிலையம். ஈண்டினர் -அங்கு வந்தார்கள்.

கற்புடை வேதி யன்தன் காதலி அங்கந் தன்னைப்
பொற்புரு வாகச் செய்த புதுமையை நோக்கித் தேவர்
விற்பன ரான மேலோர் மேயவா விக்கு நாமம்
சிற்பமில் துய்ய அத்தி தீர்த்தம் என் றறைந்தார ன்றே. 626

'உரமிகும் புவியி லுற்றோர் உயிர்விடி னவர்தம் அத்தி
திரமுற விளங்கும் இந்தத் தீர்த்தத் திலிடு வாராகிற்
பரமதை யணுகி யென்றும் பரிவுட னிருப்பர்' என்று
வரமதை அருளி யுள்ளம் மகிழ்ந்து வானவர்கள் சென்றார். 627

## கதைச் சுருக்கம்

கூர்மன் என்ற ஓர் அந்தணன், இறந்த தன் தந்தையின் எலும்பைக் கங்கையில் விடவேண்டிப் புறப்பட்டுக் கர்ப்பவதியான தன் மனைவியோடும் கையிலுள்ள மகனோடும் வரும் போது, மனைவி நடக்க இயலாதவனானாள். அவன் இம்மன்னனை அணுகித் தன் மனைவியையும் மகனையும் கையடைப் பொருளாகக் கொடுத்துப் பாதுகாக்கச் செய்து காசி செல்கிறான். அரசன் தன் மனையாளிடம் இவ் வந்தணப் பெண்ணையும் கைக்குழந்தையும் ஒப்புவித்து, தனி மனையிலிருந்து பாதுகாப்புக்காகக் காவலரையும் நியமிக்கிறான்.

உரியகாலத்தில் அவள் கருவுயிர்த்து ஒருபெண் குழந்தை யை பெறுகிறாள். ஆனால் ஏதோ தீவினை வசத்தாலே அவளும் மகனும் பெண் குழந்தையும் இறந்து போகிறார்கள். கண்ட அரசன் அவர்கள் எலும்பை மட்டும் பத்திரப்படுத்தி வைக்கிறாள். இதற்குரிய மூலப்பகுதி நூலில் காணப்படவில்லை. ஒருகால் ஒன்றிரண்டு ஏடுகள் சிதிலமாயின என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இரண்டு ஆண்டு கழித்து அந்தணன் வந்து தன் மனைவி மக்களை கேட்கிறான். மன்னன், ஒப்புவிக்க முடியாத நிலையை எண்ணி நடுங்கிச் சோர்ந்து, பின் அவனை உணவு உண்டு வரும்படி சொல்லி, இறந்தோரின் அங்கத்தை வேங்கடேசன் முன் கிடத்தி முறையிடுகிறான். வேங்கடேசன் கோனேரிக் கரையில் அவ்வங்கங்களை நிறுத்தி அந்தணன் மனைவியும் பிள்ளையும் பிழைத்தெழுந்து வருமாறு செய்ய, அரசன் அந்தணனிடம் அவர்களை ஒப்புவிக்கிறான். இந்த அற்புதம் காரணமாக அத்தீர்த்தம் அத்தி தீர்த்தம் எனப் பெயர் பெறுகிறது.

626. மேய் அவ் வாவிக்கு - அவ்வாவிக்கரைவந்து அதற்கு. அத்தி தீர்த்தம் - அவ்வாவிக்கு இட்டபெயர்.

627. அத்தி - எலும்பு. பரமதை அணுகி - வைகுந்த லோகம் சென்று.

## 21 .பீமதாசனுக்கருளிய படலம்

கடவுள்தன் கிருபை யாலே கந்தின மனைவி மக்கள்
திடமுற மறையோன் தன்பாற் செலுத்தியான் உய்ந்தே
னென்னாத்
தடமிகு புயத்து மன்னன் தவத்தினோர் தம்மை நோக்கி
''இடர்களைந் தளித்த ஈசற் கெப்பணி புரிவது'' என்றான். 628

''ஆரண விதியினோடும் ஆயிரந் துளவங் கொண்டு
நாரணன் பாதத் துள்ள நட்பின் அர்ச்சிப்பை யாகிற்
பூரண மாய்க்க ளித்துப் புகழொடு வாழ்தி''யென்று
காரணன் தன்னை நோக்கிக் கனிந்த ஆங்கிரசன் சொன்னான். 629

அண்ணலவ் வார்த்தையுட் கொண் டன்பொடு மூன்று திங்கள்
வண்ணமா மணியாற் செய்த வளமிகு துளவங் கைக் கொண்டு
எண்ணலில் நாமந் தன்னால் இன்பமாய் மிகத்து தித்துக்
கண்ணனை அர்ச்சித் தப்பாற் கஞறியே கனிந்து சொன்னான். 630

''பத்தரின் அபராதத்தைப் பரிகரித் தாள வந்த
உத்தமக் கடவுளே என்உறு துயர்தீர்ப் பாய்''என்னச்
சுத்த ஆகாய வாணி, ''தோன்றலே, உன்னைப் போல
மத்தமா மறையோன் மக்கள் மனைவியைக் கொன்றா ருண்டோ?

''அப்பெரும் பாவந் தன்னால் அதோகதி அடையத் தக்காய்,
தப்பிலா காய மன்னன் தருமத்தால் உய்ந்தாய், சற்றுஞ்
துப்பிலா நிருப''என்ற சொற்செவி அடைந்த காலை
ஒப்பிலாக் கடவுள் தன்னை உற்ற தோர் அரசன் சொல்வான் 632

628. கந்தின - துன்புற்ற. தவத்தினோர் - முனிவர்.

629. ஆரணம் - வேதம். உள்ள நட்பின் - உள்ளன்போடு. காரணன் - அரசன். ஆங்கிரசன் - ஆங்கிரசன் என்ற முனிவன்.

630. எண்ணலில் - எண்ணற்ற. கஞறி - உருக்கத்தோடு.

631. பரிகரித்து - போக்கி.

632. ஆகாயவாணியின் சொல்லைக் கேட்டபின், கடவுளை நோக்கிக் கூறுகிறான்.

''செய்யநல் லுதவி செய்து செப்புவர் உலகிலில்லை
துய்யநின் தொண்டை என்போல் தொடர்ந்திடும் தொண்டரில்லை
ஐயனே உன்னைப் போல அருள்செய்யுந் தெய்வமில்லை
வையகந் தன்னில்'' என்ன,மாதவன் வெகுண்டு கூறும். 633

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

''முக்குணத்தொ டிலங்கியமூ வடியர் தம்மின்
மூதுணர்வும் அன்பும் நிறை முறைமை பூண்டோர்
இக்குவல யத்திலெங்கும் இலங்கு வோர்கட்கு
இலக்கமிலை அவர் பெருமை இயம்பற் பாற்றோ,
எக்குலத்தும் இழிவாய குயக்கு லத்தில்
இயைந்தகுய வீமனென இசைக்கும் பேரோன்
மிக்கவறு மைக்கணுற்றோன் வடபாலாக
மேவியயோ சனையிடத்தில் விரும்பி யுள்ளான். 634

''அன்னவன்தன் குடிசையுளோர் தாரு வாலே
அன்பினெனைப் போலோர் பாவையைச் செய்தாங்கு
மன்னவில் லுள்வைத்து மனமறப்பு றாமல்
வருபுனலில் தோய்ந்துமண்ணில் துளவஞ் செய்ய
என்னையொரு நொடியும்வழு வாமல் நெஞ்சில்
இருத்தியனு தினம்பூசை இயல்பாய்ச் செய்து
வின்னமிலா உளத்தாலும் உருக்கத் தாலும்
மெய்யாலும் என்தொண்டு விடாத தூயோன். 635

''உத்தமமா மனனுடைய பீம தாசன்
உறுதியொடு செயும்பூசைக் குவந்து யாமும்
நித்தியமும் அவணடைந்து விருப்பி னோடு
நேயநிவே தனம்பெற்று நிலையை நோக்கிப்

633. உதவி செய்தோர் தாம் செய்த உதவியைச் சொல்லிக் கொள்வது இல்லை. உனக்கும் என்போல் பணி செய்யும் தொண்டரும் இல்லை.

634. மாதவன் கூற்று, என்போல் தொண்டர் இல்லை என்ற அரசனுக்கு வேறு சிறந்த தொண்டர் நிலையை அறிமுகப் படுத்துகிறான். அன்புடையோர் தொகை எண்ணைக் கடந்தது. குயவீமன் - குயவர் குலத்தில் பிறந்த வீமன் என்ற பக்தன்.

635. பாவை - உருவம். வின்னம் - பின்னம், வேறுபாடு.

636. அவண் - அவனது இல்லம்.

பத்தியைப் பார்த் தவனன்பின் பெருக்கைப் பார்த்துப்
பக்குவம் பார்த் திவணடைவேன் பாரின் கண்ணே
இத்தகைய தொண்டரின்னும் அனேகர் உண்டால்
அவர் பெருமை என்னாலும் இயம்பொ ணாதே. 636

''அடியர்தமில் எனைப் போல்வார் இல்லை என்ற
அரச,நின் தொண்டெனைத் தாகும் அறிதி'' என்ன
நெடியோன் உரை கேட்ட அரச னுள்ளம்
நிலைதளர்ந்து மெய்வாடி நெஞ்சம் நொந்து
முடியணியுந் தலைநாணி வதனஞ் சோம்பி
மொழியாதும் புகலாமல் நெறிதொ டர்ந்து
கடியாரும் வடதிசையை நோக்கி வேந்தன்
கால் தளர நடந்தவனைக் காணச் சென்றான். 637

உருகுமனக் குயவீம தாசன் இல்லை
உண்மையொடு தேடியந்தத் திசையை நோக்கி
பெருகுமன்பால் அடிக்கடிகை தொழுது வாழ்த்திப்
பேதையர் போல் அவன் மனையை வினவிக் கொண்டு
வரும் வழியில் தெரிந்த நல்லோர் கண்ணன் புத்தி
மறவாத குயவீமன் மனையீ தென்று
தருமொழியா லுவந்துகண்ணீர் வார உள்ளந்
தளிர்க்க மெய்யிற் புளகமுறச் சார்ந்தா னன்றே. 638

சென்றவன்தன் முன்றிலிடைக் கலந்த போது
சித்தமிசைக் கனிவினொடு தியக்கம் மேவி
நின்றபடி நிலமேல் வீழ்ந் தயரக் கண்டு
நெறியாரும் வீமனங்கு நிருபன் பாங்கர்த்
துன்னிஉப சரித்தயர்வு நீக்கத் தேர்ந்த
தோன்றலவன் முகம்பார்த்துச் சோர்வி னோடு
தன்றனுளத் துற்றகுறை தீரு மாறு
சார்ந்துநின்றோன் முகம் பார்த்துச் சாற்ற லுற்றான். 639

637. அறிதி - அறிவாய். இதுவரை வேங்கடேசன் கூற்று. நெடியோன் - வேங்கடேசன். அவனை - அவ்வீமதாசனை.

638. குய - குயவர் சாதியைச் சேர்ந்த. இல்லை - வீட்டை. வீமதாசன் மனையை வினவித் தெரிந்து கொண்டு அங்குச் சென்று சார்ந்தான்.

639. கண்டு - வீமன் அவ்வாறு கண்டான். துன்னி - அருகில் வந்து. நின்றோன் - வீமன். சாற்றுபவன் மன்னன்.

''மறை நான்குங் காணாமல் வாடும் ஈசன்
மலரடியை அனுதினமும் மறவா அன்பின்
நிறைமனனஞ் செயும்வீம தாசன் தன்னை
நேராக யான்காண நீசெய் வாயேல்
இறையளவு துயருமென்பா லுறுகா தைய
இவ்வுதவி எனக்கின்னே இழைத்தி''என்று
குறைபுகன்ற னான் தன்னை உணர கில்லாக்
கொற்றவனீ தாவலொடு கூறினானால். 640

காவலன்தன் உரை கேட்ட வீம தாசன்
கருணைபெரு குறஅவன்தன் வதனம் நோக்கி,
''ஏவல்செய்யும் உனதடிமை எளியேன் ஒன்றும்
இயலறியேன் தவமுறையை யாதும் ஒரேல்:
நாவலர்கள் பணிந்தேத்துங் கண்ணன் செய்ய
நளினமலர்ச் சரணிணையை நாளும் நாடி
ஆவலுடன் பூசைசெய்தற் குரிய வல்லோர்
அந்தணரல் லால் எவரே யாவர்''என்றான். 641

அறுசீர் விருத்தம்

இருவரும் அளவ ளாவி இன்புறப் பேசு மெல்லை
மருவளர் தொண்டர் தம்மை வளர்க்கின்ற கடவுள் துய்ய
திருவுடன் புள்ளி லேறித் செறிதரக் கண்ட காலை
அருவிபோற் கண்ணீர் வாரக் குலாலன்ஐ யனைத்து திப்பான். 642

''தானம்வை குண்ட மாகும் தாரமோ வாரிச் செல்வி,
ஊனமில் மலரோன் தன்னை உதவிய துந்திக் கஞ்சம்
வானதி ஈந்த தாள்கள் வளரணை யதுவோ சேடன்
தானமீ யரசே நின்னைத் தாங்கு வோன் வைந தேயன். 643

640. காணாமல் வாடும் - ஈசனைக் காண முடியாமல் வாடுகின்ற. மனனம் - தியானம். எதிரே வந்த இவன்தான் வீறதாசன் என்று அறியாமல் மன்னன் இல்லாது கூறுகின்றான். குமைபுகன்று அனான் தன்னை - தன் குறையைச் சொல்லி, முன் தோன்றிய அன்னானை. உணர்கில்லா - இன்னானென்று உணர மாட்டாத.

641. வதனம் - முகம். நளினம் - தாமரை. அந்தணரே பூசை செய்யத் தக்கான், நான் அறியேன் என்று வீமதாசன் கூறுகிறான்.

642. திரு - இலக்குமி. புள் - கருடன். செறிதரள் - அங்குத் தோன்ற. குலாலன் - வீமதாசன்.

643. தாரம் - தேவி. வாரிச்செல்வி - கலைமகள். மலரோன் - பிரமன். கஞ்சம் - தாமரை. வான்நதி - கங்கை. சேடன் - ஆதி சேடன். தானமீ அரசே - இத்தாளத்தில் உறைகின்ற அரசே. வைநதேயன் - விநதை புதல்வனான கருடன்.

''மீனெலாம் உனது பற்கள் மின்னுன தகத்தின் காந்தி
ஈனமி லத்தி கற்கள் இருசுடர் விழிக ளாகும்
வானவ ரோடு சீவர் வாழ்ந்திட வாஞ்சை யோடு
கூனலில் விராட்டு ரூபங் கொண்டவன் நீயே யன்றோ? 644

''சந்ததம் மண்மி திக்கச் சாருதல் அல்லால் ஒன்றும்
நந்தலில் ஆலயத்தை நாடுதற் கிசையத் தாளும்
பந்தமாய் மட்கலங்கள் படைப்பதல் லாது பூசைக்
கந்தமா மலர்கள் கொய்யாக் கரமுற்ற கொடிய பாவி. 645

''பாண்டநற் செட்டுத் தன்னிற் பழுதுரை மொழிவ தில்லால்
நீண்டநின் நாமந்தன்னை நிகழ்த்திடா வாக்கு முள்ளுங்
காண்தகப் பாரில் வாழுங் கசடன்மே லன்பு கூர்ந்தே
ஆண்டிட வந்த உன்றன் அருள்தன்மை மதிக்க வற்றோ. 746

''பத்தியுட் கொண்டுன் தாளில் பணிசெயத் துணியாப் பாவி
சித்திசே ருனது நாமஞ் செப்புதற் கிசையாப் பாவி
நித்திய வீடுண் டென்று நினைவுறாப் பாவி தன்பால்
எத்திறச் செயல றிந்திங் கீண்டினாய் அருளோ டெந்தாய். 647

''செம்மையாய் உனது தொண்டு செய்வதற் கிசையுந் தாசர்
தம்மையும் அன்பி னோடு சார்வுற நினையாப் பாவி
இம்மையில் உனது நாமம் எள்ளள வெண்ணா நாயேன்
மும்மையில் எத்த வத்தை முற்றினேன் நின்னைக் காண. 648

''ஆதிசென் மத்தில் உன்தாள் ஆவலாய்ப் பணிந்து ளேனேல்
பூதியார் குலத்தில் தோன்றிப் போற்றிட வலவ னாவேன்
சாதியில் ஈனனாய சக்கரிக் குலமுற் றோன்முன்
சோதியாய் உருவு கொண்டு தோன்றிய கருணை யாதோ? 649

644. மீன் - நட்சத்திரம். மின் - மின்னல். விராட்டு - பிரபஞ்சமே வடிவமாகிய இறை வடிவம்.

645. தான் மண் மிதிக்குமேயன்றி-உன் ஆலயம் நாடாது. கரம் - கை. கை மலர்கள் கொய்யாது, மட்கலம் மட்டுமே படைக்கும்.

646. பாண்டம் - மட்கலம்.

647. வீமன் இத்தகையபாவி என்று தன்னை இழித்துரைத்துக் கொள்ளுகிறான்.

648. தாசர் - உனது அடியவர். மும்மை - முற்பிறவிகள்.

649. பூதி - செல்வம். வலவன் - வல்லவன். சக்கரி - சக்கரம் சுழற்றுகின்ற.

''பலவிதத் தந்தி யற்றிப் பரிவுடன் தனத்தைத் தேடித்
துலமிலா நினது கொண்டு தொடங்கியான் செலவி டாமற்
கலனணி பெண்டிர் மக்கள் காப்பர்என் றெண்ணி இந்த
நலனிலா என்னைத் தேடி நண்ணஎத் தவஞ்செய் தேனோ. 650

''மதியினில் விளக்க மில்லா மடையன் என்றறிந்தி ருந்து
கதிதர இரக்க முற்ற கடவுளே பாரிற் கங்கை
நதியுறச் செய்து காத்த நல்லருள் வெளிப்ப டுத்த
ததியிது எனநி னைந்தோ பாவியேன் முன்னர்ச் சார்ந்தாய். 651

''விண்ணெனத் திகழ்வோன் நீயே விண்மணி காந்தி நீயே
மண்ணென ஒளிர்வோன் நீயே மருவிய அசரம் நீயே
எண்ணிலா உயிரும் நீயே இன்பமாஞ் சாட்சி நீயே
அண்ணலே நின்னை யன்றி அவனியிற் பிறிதும் உண்டோ. 652

''அகத்திடைக் கருவம் பூண்டோர்க் கருள் செய்யாய் என்ற சொல்லை
இகத்திடை உணர்ந்தி ருந்தும் ஈனமா மதியி னோர்கள்
செகத்திடை நீரில் தோய்ந்து செய்திடுங் கருமங் கொண்டே
மகத்துவம் அடைந்தோம் என்பர் மதியிலா மடையர் எந்தாய்.''

தோத்திரம் மிகவே செய்த தொண்டன்மே லன்பு கூர்ந்து
நேத்திர மார நோக்கி நின்றவன் தன்னைப் பின்னைப்
''பாத்திரமான இந்தப் பந்தன்யார்''எனவி னுவ
மாத்திரந் தனிலே பக்கி மன்னனை நோக்கி மாதோ. 654

''தீதிலான் தன்னைச் சேரச் சென்று நீ கொணர்வாய்''என்று
கோதிலான் விடைகொ டுக்கக் குறுகியே குயவன் சொல்வான்
''ஆதியே என்றன் இல்லை அடைந்திட விதுரன் துய்ய
சோதியாம் பிரகலாதன் துலங்கிய சபரி யல்லன். 655

''அச்சுதா, என்றன் இல்லில் அரும்பொரு ளில்லாத் துனை
நிச்சய மாக உன்தாள் நினைத்திடக் கருத்தும் இல்லேன்
துச்சமாங் குயக்கு லத்தில் தோன்றிய என்னைத் தேடி
எச்செயல் அறிந்து வந்தாய்''என்றெடுத்தியம்பு காலை. 656

650. தனம் - செல்வம். துலம் - சமானம்.
651. ததி - தருணம்.
652. அசரம் - இயங்காதது. உயிர் - இயங்குவது.
653. மகத்துவம் - மேன்மை.
654. நேத்திரம் - கண்; கடாட்சம் செய்து நின்றவன் வேங்கடேசன் - வினவுவான் அரசன்.
655. நான், விதுரன் பிரகலாதன் சபரி ஆகியோருடைய பக்திக்கு இணையான பக்தி உடையவன் அல்லன்.
656. இவ்வாறு குயவன் சொல்லுகிறான்.

சாதுவாங் குலாலன் இல்லாள் தமாலினி என்பாள் சற்றுஞ்
சூதிலான் அன்பினோடு தோத்திரஞ் செய்து சொல்வாள்;
'மூதுணர் வில்லாள் செய்த முதிரையோ டிருங்கு லன்னம்
போதுத லொடுங் கொள்க'' என்று புனிதனைப் போற்றி
செய்தாள். 657

பின்னையின் வதனம் நோக்கிப் பிரியமாய் முறுவல் பூத்து
வன்னமாங் கடவுள் மிக்க வாஞ்சையாக் கொள்ளு வேனென்று
அன்னையினோடும் ஐயன் அன்புடன் ருசித்த பின்னர்
உன்னதமான வீட்டை உவப்புடன் ஈந்தா னன்றே. 658

திசைமுகனோடு தேவர் செறிந்து துந்துபி முழக்கி
வசையிலாக் கற்பகத்தின் மலர் மழை மாரி தூவி
இசையுறு விமான மீதில் இல்லவ ளோடும் ஏற்றி
நசையுடன் மோட்ச மென்னும் நாட்டினிற் கொடுபோய்ச்
சேர்ந்தான். 659

மண்ணரியானுக் குற்ற மகிமையை நோக்கி மன்னன்
அண்ணல்தன் திருத்தாள் தன்னில் அன்புடன் வணங்கி யேங்கி
எண்ணலில் துயரத் தோடும் ''என் கதி யாதோ'' என்ன
விண்ணவர் துதிக்கும் ஐயன்வேந்தனை நோக்கிக் கூறும். 660

''இந்தநல் உருவை நீக்கீ எழிலுரு வேறு கொண்டு
நந்தலில் வேங்கடத்தை நண்ணிநின் கருவந் தீரச்
சந்ததம் பூசை செய்து சாரூப்பிய பதவி தன்னை
விந்தையாய் அடைவாய்'' என்ன வேந்தன் நல்லாவ லோடும்.

நடந்து கோனேரி தன்னை நண்ணியே முழுகி யுற்ற
சடந்தனை விட்டு மற்றோர் காயத்தைத் தாங்கிக் கொண்டு
திடந்திகழ் சீநி வாசன் சேவடி பூசித் தேத்தித்
தடந்திகழ் வாகு மன்னன் சாரூப்பிய பதவி யுற்றான். 662

657. இல்லாள் ஆகிய மான். முதிரை இருங்கு - காட்டுத் தானியங்கள். போதுதல் - நீ இங்கு வருதல். ருசித்த - உண்ட. வீடு - பரமபதம்.

660. தேவர் இவ்விருவரையும் மோட்சலோகம் கொண்டு செல்கிறார்கள்.

661. மண்ணரியான்- குயவன். சாரூப்பிய பதவி - இளவுலகர் உலகில் அவனை யொத்த வடிவோடு இருத்தல்.

662. கடந்தனை - இவ்வுருவத்தை. காயம் - உடல்.

''இவ்விதம் வேங்கடத்தில் இன்பமாய்த் திருவி னோடும்
செவ்வியோ டமரர் கூட்டந் தினந்தினம் பூசித் தேத்தக்
கெளவையில் பசனை செய்து கழல்பணி தொண்டர் தங்கள்
வெவ்வினை தீர்ப்பேன்''என்று விருது பூண்டிருக்கின் றானால் 663

ஐயஇச் சரிதை தன்னை அன்பொடு கேட்டோர் சொன்னோர்
வையகத் தோர் கள் தத்தம் மனைவிபுத் திரர்கள் சூழச்
செய்யவாய் வாழ்ந்து பின்னர்ச் சேர்ந்து நல்வீட்டி லென்றும்
வெய்யவன் ஒளியை யொத்து விளங்குவர் களிப்பின் மன்னோ. 664

சனகன்நீள் துயரந்தீரச் சதானந்த முனி புகன்ற
கனமிகு சரித முற்றுங் காதலாய்ச் சவுனகாதி
முனிவர்தம் உளங்களிக்க முறைநெறி வழுவா வண்ணம்
நினைவொடு மொழிந்தான் ஆன்ற நிறைமதிச் சூதன் மாதோ.

வாழ்த்து

பாரிடைச் சராசரத்தைப் படைத்தவை காப்பா னெண்ணி
நேரினல் லன்பு பூண்டு நீண்ட வேங் கடத்தின் நாப்பண்
சீருறும் ஆவலோடு சேவடித் தொண்டர்க் கென்றும்
சூருடன் செனனப் பீடை துடைப்பவன் கருணை வாழி. 666

பத்தருண் மாயை யென்னும் படலத்தான் மறைந்தி டாமல்
நித்தமும் ஆவலோடு நின்றவர் உளம் விளக்கிச்
சத்துவ குணத்தை ஈந்து தாசியம் என்றுங் கொள்ளும்
உத்தமக் கமல மேலாய் ஒளிர்திரு வடிகள் வாழ்க. 667

## கதைச் சுருக்கம்

மன்னன், இறந்த அந்தணன் மனைவி மக்களை மீட்டுத் தந்த கடவுளுக்கு என்ன பணி புரியலாம் என்று கேட்க ஆங்கீரஸ முனிவர் ஆயிரந்துளவு அர்ச்சனை செய் என்றார். அவன் மூன்று மாதம் அவ்வாறு செய்தான். பின்னர் அவன் திருமாலைத் துதிக்கும் போது உன்னைப் போல்அருளும் தெய்வமும் இல்லை,

663. கெளவையில் - குற்றமற்ற. பசனை - பஜனை.
664. ஐய - பெருமையுடைய. வெய்யவன் - சூரியன்.
665. கனம் - பெருமை. நிறைமதி - அறிவு நிறைந்த.
666. நாப்பண் - இடையில்.
667. தாசியம் - அடிமைத்திறம்.

என்னைப் போல் பணிபுரியும் தொண்டரும் இல்லை, என்று கூற பெருமான் அவனை பீமதாசன் என்னும் குயவனுடைய பக்தியின் பெருக்கை எடுத்துரைக்கிறார். அரசன் பீமதாசன் இல்லம் சென்று அவனை வணங்கிய போது, அவன் தனக்குப் பூசை முறை ஏதும் தெரியாது என்று சொல்லி அளவளாவி இருந்த காலை, திருமால் தரிசனம் கொடுக்கிறார். பீமதாசன் தன்னுடைய அறிவின்மையைப் பலவாறு எடுத்துக் கூறித் துதிக்கிறான். பீமதாசன் மனைவி தான் செய்த இருங்கு அன்னத்தை உண்ணும் படி வேண்டப் பெருமான் அதை உண்டு அவ்விருவருக்கும் பரம பதம் அளிக்கிறார். பின்னர் மன்னன் துதிக்க திருமால் அவனைத் திருவேங்கடம் சென்று வழிபடுமாறு பணிக்கிறார்.

இவ்வாறு சனகன் துயரம் தீர, சதானந்த முனிவர் சொன்னார் என்று சூதமுனிவர் ஸ்ரீவேங்கடேச மகத்துவத்தைச் சொல்லி முடிக்கிறார்.

# சிறப்புப் பாயிரங்கள்

இந்த நூலின் முதற் பதிப்பு 1867 பிரபவ வருஷம் வைகாசி மாதம் அச்சாயிற்று. அதன் முகப் பேட்டில் அமைந்த பொருள் பின் வருவது:

''ஸ்ரீமன் வேங்கடேச மகத்துவம். இது தஞ்சை மாநகரத்தி லிருக்கும் ம-௱-௱-ஸ்ரீ பெரிய அண்ணாவென்று நாமமுடைய வேங்கடேச தாசரால் வடமொழிக்கேற்பத் தமிழில் மொழி பெயர்த்து விருத்தப் பாவினமாக வியற்றப் பட்டதை தஞ்சை மாநகரம் மகாவித்துவானாகிய ம-௱-௱-ஸ்ரீ மதுரை முத்து உபாத் தியாயரவர்களால் பரிசோதிக்கப்பட்டு ஷை தாசர் சிஷ்யராகிய ச. ஈகோஜி ராவு அவர்களால் சென்னை கலாநிதி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. பிரபவ வருஷம், வைகாசி மாதம்:

சாற்றுக்கவி அளித்தோர் பட்டியலில் மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையின் பெயரும் உண்டு. இதனால் அக்காலத்து நூலாசிரியருக்கிருந்த மதிப்பு புலனாகும். சாற்றுக் கவி அளித்தார் விசாகப் பெருமாளையர், மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தில்லையம்பூர் சந்திரசேகர கவிராஜ பண்டிதர், நாராயணசாமி நாயகர், தஞ்சை அண்ணாப் பிள்ளை, தாசில்தார் வீராசாமி நாயகர், உபாத்தியாயர் வீராசாமி நாயகர், பொன்னு சாமிப் பிள்ளை, பெரியசாமிப் பிள்ளை, முத்துவீரியம் செய்த முத்துவீருபாத்தியாயர், இராமகிருஷ்ணப்பிள்ளை, கோவிந்த சாமிப் பிள்ளை, அண்ணாசாமிப் பிள்ளை, கோதண்டராமப் பிள்ளை, ஈகோஜி ராவ், சீனிவாசய்யங்கார். முத்துசாமி உபாத்தி யாயர் சிறப்புப் பாயிரம் நீண்ட ஆசிரியப்பாவும் (70 அடிகள் கொண்டது) இரு ஆசிரிய விருத்தங்களுமுடையது.

இத்தனைச் சிறப்புப் பாயிரப் பாடல்களையும் இங்குத் தருவது, இக்காலத்துப் பயன்படாத தாகையால், மகாவித்துவான் பிள்ளையவர்கள் சிறப்புப் பாயிரப் பாடல்கள் இரண்டை மட்டும் கீழே தந்துள்ளோம்,

பார்பூத்த பல்வளமும் பரவு தஞ்சைப் பதிபுரந்த
பதியாயுள்ளான்
நேர்பூத்த மாலை மாற்றணி பொருவச் சிவாசியெனும்
இயற்பேர் பூண்டு
சீர்பூத்த மன்னர் குல திலகனமைச் சருண் மிகவுஞ்
சிறப்பு மேவி
நார்பூத்த கலைமுதன்மூ வகைப்புகழும் பெரும்புவனம்
நயப்ப வாய்ந்தோன்.

மன்னியவண் பெருங்குணத்தான் யோகமே யென்றெவரும்
மதித்து நாளும்
பன்னியவாய் பெரியண்ணா வென்னும்வேங் கடதாசன்
பலவற் றுள்ளும்
மின்னியவான் தமிழ் நிலத்துக் கெல்லையாம் வேங்கடத்தின்
மிக்க சீரைத்
துன்னியவண் தமிழின்மொழி பெயர்த்துரைத்தான் பாகவதர்
துதிக்கத் தானே.

## பொருள் அகராதி


அஞ்சனாத்திரி 52-59
அந்தணன் பூணூலும் குடுமியும் அழித்தல் 110
அலர்மேல் மங்கை என்ற பெயர் 211
அலர்மேல் மங்கையின் வருணனை 219-234
இடபகிரி 50- 51
கணவனோடு மனைவி உயிர்நீத்தல் 512
கபிலை தீர்த்தம் 114
கரவீரச் சேத்திரம் 151
கணவனை யின்றி உண்டோ கற்புடையார்க்குத் தெய்வம் 78
காளத்தி 71
குதிரையின் கதி 119
குமார தீர்த்தம் 399
குந்தவை 92
குயிலைப் பழித்தல் 277
குலசேகரர் தந்தை திடவிரதன் 5
குறத்தி குறி கூறுதல் 298
குறத்தியாக வேங்கடவன் வருதல் 291
சந்த விருத்தம் 86, 93, 125-135, 184-194, 219-234
சந்திரோபாலம்பனம் 273
சாமி தீர்த்தம் 116
சாமுத்திரிகா லட்சணம்
ஆண் 328
பெண் 336
சீநிவாசன் ஐவர் 588-589
சேடாத்திரி 60-69
சூரிய உதயம், அஸ்தமனம் 405-407, 428-429, 435-437
சொர்ணமுகியின் வருணனை 23-36
தாம்பூலம், சந்தம் தட்சணை 451
தாழையில் முள்ளிருந்தும், மணத்திற்காகச் சார்வர் 9
திருமங்கையாழ்வார் நீலனருள் மைந்தர் 6
திருமண் காப்பு அணிவோர் கடையவராயினும்வணங்கத் தக்கார் 7
திருமண் காப்பு ஈராறு 7
திருமழிசையாழ்வார், பிருகு முனி அரமகளைச் சேர வந்தவர் 5
திருவிழா பத்து நாளுக்குமுரிய வாகனம் 590-591
திருவேங்கடமலை யுகந்தோறும் நான்கு வேறு பெயர் கொள்ளும் 41
துதிப் பாடல்கள் 643-650
தென்றலைப் பழித்தல் 275
நாக கன்னி சோழனை மணந்தது 154
நாரதன் பூதிபூசி அரியின் நாமம் செபிக்கிறான் 214
நாரியர் மோகந்தன்னை வெல்லுவார் எவர் சொல் 246
நீர் விளையாட்டு 493-499
பகுளை பணி செய்தல் 177
பசித்தவர் தங்கட்கன்னம் படைத்திடல் தருமம் 244
பதும தீர்த்தம் 424
பவிடோத்திர புராணத்தில் இக்கதை உள்ளது 10
பிருங்கிருடியின் செயல்கள் 128-135
பெண்களின் அங்கங்களைப் பழித்தல் 91-103
மணத்தில் குலதெய்வ வழிபாடு 398
மணமகன் தாளை விளக்கி அந்நீரை உச்சி மேற் கொள்ளுதல் 459
மணியைச் சாணையில் கடைய ஒளிதரும் 4
மலர் கொய்து விளையாடல் 481-492
மன்ம தோபாலம்பனம் 279
மா, புல்லுக்காகக் கிணற்றில் விழுதல் 172
வாகனங்கள் 90-91
வேங்கடாத்திரி 70
வேங்கடேசன் அபிடேகம் 312
வேதவதி வரலாறு 254-262

# அருஞ் சொல் அகராதி

அங்கவத்திரம் 620
அதிரிசம்—அதிருச்யம் 441
அபயர்—வீரர் 534
அனாய்—அன்னாய் 361
ஆசுகன்—வாயு 387
ஆட்டி—பெண்டாட்டி 484
ஈனல்—ஏனல் 415
உதக்கு—வடக்கு 138
உதாசனன் 255
உரசு—வேகம் 594
எணற்க—எண்ணற்க 303
ஓயிலின்—ஓயிலாக 465
கடிகா—பூசனை 468
கண்டக—கொடிய 254
கதுமை—விரைவு 548
கலிங்கம்—குருவி 420
காமிதம்—விரும்பியது 147
காருதல்—சினம் 68
கிஞ்சமும்—கிஞ்சித்தும், கொஞ்சமும் 42
குக்கி—குட்சி, வயிறு 104
குஞ்சராசனம்—அரசமரம் 50
குட்டன்—புதல்வன் 210
சதாகதி—வாயு 69
கம்பீரம்—எலுமிச்சை 101
சனனி—தாய் 250
சாரம்—நடை 489
சிக்கம்—குடுமி 110
சிரத்தை—அன்பு 556
சிவை—உமாதேவி 130
சுப்பிரஅன்னம்—வெள் ளன்னம் 14
சுமனம்—மலர் 176
சூரன்—சூரியன்
சோந்தை—விரோதம் 516
தக்கணை—தட்சணை 409
தாசியம்—அடிமைத்திறம் 667
திருமுவன்—திரும்புவன் 603
தீச்சை—தீக்கை 480
துதிப்பு—துதி 553
துலம்—ஒப்பு 11
நங்கு—தாழ்வு 124
நவியம்—கோடரி 162
நேமம் —நியமித்தல் 3 77
பசனை—பஜனை 464
பாதபத்தி—திருவடிக்கன்பு 175
பிப்பிலம்—அரசு 150
பிரமை—பிரமரம் தேனீ 418
பிருந்தம்—கூட்டம் 455
புட்டம்—சாகம்குயில் 33
மனன்—மன்னன் 282
மனோக்கியம் — மனத்துக்கு இனிமை 345
மாப்பிளை 395
மாளி—மாளிகை 431
மினாள்—மின்னாள் 85
முளரி - ஆசிரமம் 544
மூய்வு—முடிவு 579
மேரை—பெருமை 92
மோதம்—மகிழ்வு 385, 5
வகுளி—ஒலி 418
வானதனு - வானவில் 25
விரசு—விரைவு 166
விருக்கம்—விருட்சம் 400
வேங்கடம்—வெம்மையைக் கடத்துவது 119

## செய்யுள் முதற்குறிப்பு அகராதி

[எண் — செய்யுள் எண்]


அக்காலை 132
அக்கிரி 58
அகங்கை 333
அகத்திடை 653
அகத்திய 138
அகமலர் 60
அகமுறு 17
அங்கத்தி 621
அங்குலி 332
அச்சுதா 656
அஞ்சநிச் 491
அடியர்தம் 637
அடுகளந் 534
அண்டகோடி 552
அண்டர்கள்த 181
அண்டர்கள்து 507
அண்டர் பூ 38
அண்டை 540
அண்ணல் த 316
அண்ணல் தூ 500
அண்ணலவ் 630
அண்ணன் 497
அணங்கிற் 212
அணைமிசை 271
அத்திரி 279
அத்தியை எ 620
அத்தியைக் 238
அத்தினம் 509
அத்தினமு 160
அதிபன் 478
அதிபனாண் 323
அதிமகிழ் 566
அந்தணர் அ 474
அந்தணர் த 208
அந்தணன் அ 613
அந்தணன் உ 426
அந்தணன்பு 609
அந்தணரே 391
அந்தநல்லா 54
அந்தநல்லி 574
அந்தநல்லு 21
அந்தநின் 304
அந்த மாம 606
அந்த மாமுனி 541
அந்தமா மொ 523
அந்தமில் 97
அந்தியங் 436
அந்த வெவ் 262
அந்த வேலை 189
அந்நகரி 433
அப்புனல் 387
அப்பெரு...த் 14
அப்பெரு...ந் 382
அப்பெரும் 632
அம்மலையி 139
அரக்கர் 256
அரசனது 351
அரசனாந் 594
அரசனுத் 166
அரத்த 342
அரியிடை 247
அரீவை 274
அருந்ததி 455
அருவி 145
அருள்வசு 152
அருளினா 174
அரைமதி 338
அலகிலா 429
அலங்கமீ 186
அலங்கரி 398
அவ்விடை 480
அவையக 165
அவையிற் 130
அழலின் 554
அளவிலி 365
அறிவிலே 425
அறிவினிற் 76
அறிவினிற் 353
அன்புறு 402
அன்பொடு 153
அன்றவர் 350
அன்னகா 82

அன்னமோ 164
அன்னமா 562
அன்னவன் 635
அன்னிய 95
அன்னைதே 312
அன்னைமிக 466
அன்னையங் 122
அன்னையோ 488
ஆகையால் 66
ஆங்கோ 81
ஆடல் 131
ஆண்டிர 609
ஆதிசென்ம 649
ஆதியம் 258
ஆதியாம் 37
ஆதியில் அர 149
ஆதியில் அரி 16
ஆதியிற் 383
ஆரணம் புக 543
ஆரணம் புக 524
ஆரணமும் 289
ஆரண முழ 413
ஆரணவிதி 629
ஆவிநேர 487
ஆவியை 109
ஆவின்பால் 340
ஆழிநன் 577
ஆற்றல் 405
ஆறெறு 591
ஆனதாகா 600
ஆனதால் அ 505
ஆனதால் எ 107
ஆனதால்வி 263
ஆனபேர 423
ஆனிரை 8
இச்சிரத்தை 556
இத்தகைய 467
இத்தல 572
இந்தநம் 661
இந்திர 47
இந்துதன் 242
இந்துவை 236
இரவியை 106
இருந்த 370
இருப்பில் 248
இருவரும் அ 642
இருவரும் சு 198
இருவிழி 331
இல்லவள் 508
இலங்குறு 330
இவ்வண்ண 290
இவ்வணமி 111
இவ்விதச் 449
இவ்விதம் மொ 309
இவ்விதம் வே 663
இவ்விதமாக 377
இவ்விருசுர 521
இவ்விருசிக 558
இழிவிலா 272
இழைத்த 283
இழைமேவு 226
இளமை 98
இறையவன் 440
இன்றுதா 460
இன்னணம் 20
இன்னநதி 36
இன்னமும் 378
இன்னண437
இனத்தொடு கூ 159
இனத்தொடு 444
இனிமை 57
இனியநா 375
இன்னன 515
இனியவாம் 182
ஈங்குறு 41
ஈண்டிய 538
உகமது 121
உச்சிதத் 512
உச்சித 142
உடலினுயர் 463
உணர்ந்த 170
உணவினு 615
உத்தம அர 157
உத்தமப் 276
உத்தமமாம் 636
உத்தமவிழா 588
உத்தம வேலை 395
உதயத்தில் 120
உதாசனன் 255
உதிக்குமுன் 430
உயர்ந்த 343
உரகமன் 140
உரமிகும் 627
உரமீது 133
உருகுமன 638
உள்ளத்தி 252

உள்ளிலங்கு 550
உளங்களி 148
உற்றமா 597
உறைதரு 348
உன்னரும் 297
ஊடிய 570
ஊண்இடை 172
ஊனிலை 80
எக்காலை 287
எங்களதம் 19
எட்டநின் 495
எண்ணில் 235
எண்ணுறு 560
எந்தகை 18
எந்தையுன் 373
எம்பிஎன் 257
எம்பிரான் 45
எல்லியும் 273
எழுந்து 537
எள்ளிட 424
என்குல 241
என்றஎன் 564
என்றடி 204
என்றவள் 313
என்றவர் 335
என்றுகூறி 363
என்றுபொன் 320
என்றுரைத் 294
என்னையா 253
என்னைவாழ் 156
எனஅந்நிலை 128
ஏசில் 392
ஏதமில் 427
ஏதமுட 285
ஏந்தல் 450
ஏர்திரட்டு 79
ஏர்பெற 339
ஏர்மிகு 249
ஏருமுத 284
ஏழையர் 296
ஐயகிச் 664
ஐயதாய் 96
ஐயநின் 171
ஐயநின் 384
ஐயவென் 580
ஐயன் 482
ஐயனது 264
ஐயனும் 50
ஒத்தமா 146
ஒப்பில் 93
ஒப்பிலா 150
ஒருசத்திர 126
ஒருமூவர் 135
ஒலிகிளர் 39
ஒளிகிளர் 443
ஒளிதர 259
ஒளிமிகு 213
ஒங்கிய 144
ஒங்குவை 428
ஒடுவார் 484
கங்கைதன் 218
கங்கையின் 124
கட்டிடமெ 573
கஞ்சமிசை 233
கடல் திகழ் 470
கடவுள்தன் 44
கடவுள்தன் 628
கடவுள்நின் 175
கடவுளின் 409
கடிமா 28
கடிமலர் 442
கடிமேவு 224
கடினமா 101
கடுத்த 24
கடையிடை 61
கடையர் 583
கண்டகாலை 193
கண்டகாலை 503
கண்ணினீர் 602
கணக்கர் 589
கணிதநூல் 326
கதிமிகு 268
கந்தமம 35
கந்தமூல 324
கமலமா 206
கமலவீ 176
கரந்தனில் 216
கரியடைந்த 192
கரியதன் 71
கருடனோர் 479
கருத்துற 6 5
கல்லகம் 165
கல்லடி. நொ 270
கல்லடி...வே 246
கலங்கும் 127
கலியிடை 11

கலியுக 579
கலைமக 393
கலையுணர் 119
கலையொடு 456
களித்த 207
களிப்பு 472
கற்புடை 78
கற்புடை 626
கற்றவர் 221
கறங்கலை 230
கன்னல் 33
கன்னிகை 245
கன்னியர் 278
கன்னியா 585
கன்னியிற் 168
கனிவுடன் 567
காண்டகந் 477
காதமிசை 220
காதலி 307
காதலியோ 544
காமமாய் 422
காமனெழில் 229
காமனை 414
காமிதம் 147
கார் திகழு 462
கார் நிசர் 499
கார்பூத்த 1
காரிகை 195
காவலன் 352
காவலன்தன் 641
காவலனு 22
காவெலா 493
கானக 415
கானவர் 419
கிஞ்சமும் 42
கிரிநின் 30
கிரியின் 191
கீதவேத 575
குஞ்சரம் 194
குட்டன் 210
குடதிசை 435
குடவர் 416
குணதிசை 578
குணவதி 75
குமர நீ 243
குரன்மிக 64
குருமொழி 288
குவிதலோ 99
குழல்தலை 336
குழவிதன் 202
குறையுறும்இ 55
குறையுறும் 73
குன்றுநின்ற 185
கூடிய கா 445
கூடிஅன் 364
கூடுறு 344
கேசரி 52
கேட்டஅச் 123
கேட்ட நா 504
கொங்குயிர் 89
கொடியஅம் 167
கொடிகுடை 412
கொடியன 105
சக்கர வடிவில் 345
சடந்தனி 214
சடமதிற் 103
சத்துவ 546
சந்ததம் நி 232
சந்ததம் ம 645
சமானமில் 267
சனகன் 665
சாதுவாய் 657
சாந்தநற் 200
சாமிபுட் 571
சித்திர 62
சித்திரை 525
சிற்றிடை 520
சினத்துட 303
சீதநீர்க் 388
சீதையாம் 275
சீர்பொறை 59
சீர்மிகு 311
சீரிலாப் 535
சுகமுனி 354
சுகமுனி 327
சுண்ணஞ் 494
சுத்தப்பிர 23
சுத்தமா 183
சுரர்குரு 318
சுழல் தரு 4
சூரியனு 408
சூலியும் 471
செகத்தி 379
செண்டு 190
செப்பிய 51
செம்மையா 648
செய்யநல் 633
செயவிசய 63
செவ்விதா 155

சென்றதோ 201
சென்றவன் 614
சென்றவன் 639
சேட்டமாம் 302
சேணின் 26
சேருபாய் 187
சேற்றொடு 3
சேனையி 527
சொன்னதோர் 319
சோடச 514
சோதி 549
சோலையினி 4 8
சோலைவாய் 95
தசைகொடு 346
தசைமிகு 341
தசையுடன் 100
தண்டிகை 536
தண்ணந் 494
தந்திகொ 88
தந்தைதன் 317
தந்தைதாய் 522
தந்தையின் 598
தரிப்புறு 223
தரையிடை 532
தலைவிதன் 315
தழுவிய 67
தன்னிடை 407
தளம்பல 452
தாங்கிய எ196
தாங்கியநவி 162
தாங்கியே 310
தானம் 643
திங்கள் தன் 197
திங்கள்மா 371
திசைமுகன் 389
திசைமுகன் 372
திசைமுகன்வி 513
திசைமுகன் 116
திசைமுகனு 586
திசைமுகனொ 659
திருத்தமா 349
திருமகள் 151
திருமலி 211
திருமிகு 519
திருமுகன் 366
திருமுக 356
தினந்தொறும் 161
தீதிலா 277
தீதிலான் 655
துங்கமா 483
துப்பிலா 49
தும்பியென் 192
துளங்கிய 141
தூசிமீ 237
தேங்கமழ் 361
தேசுறு 582
தேர்தனை 592
தேர்முதல் 581
தேவதுந்தி 478
தேவர்கிம் 410
தேவர்தந் 180
தேவர் மா 92
தேவனாற் 511
தேனுலாவு 184
தையலிற் 217
தொட்டதோர் 300
தொடைதிக7
தொண்டநாட் 438
தொண்டமான் 530
தொந்தமா 561
தோகை 286
தோத்திரம் 654
தோன்றிய 137
நகரில் 441
நசைமிகு 341
நடந்தவே 604
நடந்துகோ 662
நடந்தெதிர் 239
நடையாரும் 292
நந்தலில் 625
நந்துசக் 169
நம்புமவர் 228
நலமலி 215
நளிர்கஞ்ச 222
நறுமை 557
நாகந்தோ 526
நாகலோக 154
நாகுபழி 234
நாடொடு 542
நாதனாம் 385
நாரணபுரி 118
நாரணாச் 314
நிலைமருவு 2
நிறைவுற 334
நீதிநூல் 199
நீதிவாழ 605
நீரிடை 568

நீளநேர் 203
நீனிறமு 397
நீனிறமே 337
நெஞ்சிடை 56
நெறியார் 129
நேயமாம் 158
நேருநுங் 84
நோகத் 29
பகைமேற் 359
பகையவர் 406
பசித்தவர் 244
பட்டணமு 448
படிபெறும் 87
படுக்கை 251
படுக்கையி 510
பண்டிய 108
பண்டுயான் 254
பத்தரின் 631
பத்தருக் 539
மத்தருள் 667
பத்தியுட் 647
பத்தினி 596
பதமை 548
பரிதிஆதி 40
பரிதிதன் 143
பருமா 31
பலவா ம் 27
பலவித க் 458
பலவித த் 650
பலவித ப் 12
பலவிதம் 281
பலவிதவ 476
பலவிதவி 401
பலவுடுக் 464
பவமலி 70
பழுதில் 485
பழுதுரை 173
பன்னக ச 545
பன்னக த 420
பனிமொழி 584
பனியடர் 86
பாக்கிய 104
பாகஞ்செய் 179
பாகுலந் 595
பாங்கிமார் 490
பாங்குறு 114
பாண்டநற் 646
பாதக 43
பாதமே 517
பாதமேல் 616
பாரிடைக் 666
பாரிடைப் 506
பாரினோர் 178
பாருறு 261
பாவகன் 603
பாவவிப் 117
பானுமிக 231
பிரிவாற்றா 34
பிருருமா 136
பிள்ளையின் 658
பின்னையும் 411
பீதஅக் 469
புகழ்பவி 10
புங்கமா 482
புண்ணிய 386
புத்தமுத 225
புத்திரகா 205
புத்திரன் 209
புதல்வன் 611
புரிசை 533
புரைதபு 328
புரோகிதன் 454
பூதலந் 607
பூரணம 358
பெற்ற 555
பேடியாம் 280
பொங்கிய 9
பொய்கை 5
பொன்னவா 492
போதுகொ 481
போர்செயும் 528
போனதோர் 612
மகள்தனை 618
மகிமையா 69
மகிழ்வு 576
மங்கை 32
மட்டின் 396
மடமாதர் 295
மண்ணரி 660
மணமலர் 459
மதிமிக 518
மதியினில் 651
மயன்தொ 434
மருத்தன 367
மல்லெடுத் 188
மலர்தனை 306
மலர்பினர் 569

மலரடி 322
மலைகளின் 13
மலைபுரை 432
மறிதிரை 439
மறைநான் 640
மறையொ 360
மறையவர் 15
மறையவர் 72
மறையவன் 94
மறையவன்ம 624
மறையினீ 553
மன்னநின் 622
மன்னவன் 461
மன்னவன் 559
மன்னிய 240
மனமொன் 134
மனைவியுரை 282
மனைவியோ 601
மாசிலான் 587
மாசுறா 91
மாதர்க 394
மாதரிற் 83
மாதவன் 451
மாமன் 599
மாமனார் 77
மிஞ்சிய 250
மித்திர 355
மிதமறு 102
மின்னை 486
மீனெலா 644
முக்குண 634
முகமலர் 610
முத்தணி 422
முத்தர்கள் 502
முத்தியில் 329
முத்தினை 299
முந்திய 590
முறத்தினை 298
முன்னம் 498
முன்னவர் 551
முனிவர் 362
மெய்யிடை 617
மெய்யினை 305
மேதினி 177
மேருவும் 68
மேலான 291
மையலால் 301
விசையிலா 623
வடதிசை 112
வடதிசை 403
வணங்கி 369
வந்த அம் 308
வந்த பூ 468
வந்தபோ 593
வரந் தர 48
வரம்பிலா 457
வரிசை 90
வரைமேவு 219
வலிமை 1[illegible]0
வணமை 547
வன்னிநற் 399
வன்னியால் 260
வாகியல் 347
வாங்குறு 376
வாசவன் 374
வாசிகள் 531
வார்முரசு 431
வானதனு 25
வானநாட் 447
விட்டதோர் 357
விட்டஅக் 529
விட்டவன் 269
விண்டலத் 4[illegible]6
விண்ணுலக 465
விண்ணென 652
விதிபுகழ் 325
விதியோன் 125
விதியெலாம் 115
விந்தையாக 496
விந்தையாம் 400
விந்தையாய் 453
விந்தையார் 266
விமலை 475
வில்விபுத்தூர் 6
வின்மலை 227
வீசிய 163
வீதிதொறு 293
வெம்பிய 53
வெம்மை 113
வெள்ளமே 368
வேகமாய் 565
வேகமாய் 619
வேகமாயே 381
வேங்கட 563
வேட்டல 417
வேட்டலுக் 501
வேதபார 74
வேதனது 380
வேதியர் 404
வேந்தன் 516
வேந்தனல் 321
வைத்தவன் 46
வையகம் 390

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 17 | மதினி | மேதினி |
| 10 | 8 | சநொந்தனன் | நொந்தனன் |
| 16 | 7 | டதவர்கள் | தவர்கள் |
| | 11 | பிரிந்தொடு | பிரிந்தொரு |
| 19 | 14 | அஞ்சனராத்திரி | அஞ்சனாத்திரி |
| 27 | 11 | துதற்கிணை | நுதற்கிணை |
| 53 | 30 | கரி | அரி |
| 78 | 9 | வேங்கடவள் | வேங்கடவன் |
| 80 | 3 | மாமழை | மாழை |
| | 23 | தொகுதிநீ | தொருதிநீ |
| 93 | 13 | திகுத்தமாந் | திருத்தமாந் |
| 98 | 26 | கருடன்-கருடன் | கலுழன்-கருடன் |
| 119 | 5 | வெங்கடேசனை | வேங்கடேசனை |
| 122 | 24 | வசுக்கள் | பசுக்கள் |
| 136 | 18 | சேருடன் | சேடுடன் |
| 139 | 6 | மன்னவர் | மன்னர் |
| 141 | 14 | அவள் | அவன் |